# நவ முஸ்லிம் வழிகாட்டி

புதிய முஸ்லிம்களினது வாழ்வின் சகல துறைகளுக்குமான இலகுவானதும் மிக முக்கிய விளக்கங்களைக் கொண்டதுமான இஸ்லாமிய சட்டங்கள்

பஹ்த் இப்னு ஸாலிம் பாஹம்மாம்



NEW MUSLIM GUIDE

# நவ முஸ்லிம் வழிகாட்டி

புதிய முஸ்லிம்களினது வாழ்வின் சகல துறைகளுக்குமான இலகுவானதும் மிக முக்கிய விளக்கங்களைக் கொண்டதுமான இஸ்லாமிய சட்டங்கள்

பஹ்த் இப்னு ஸாலிம் பாஹம்மாம்

دليل المسلم الجديد

تاميلي

ح فهد سالم عمر باهمام، ١٤٣٥هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

باهمام، فهد سالم عمر

دليل المسلم الجديد - تاميلي / فهد سالم عمر باهمام - الرياض،

١٤٣٥هـ

٢٩٢ص ، ١٦,٧×٢٣,٧ سم

ردمك: ٤-٦٣٩٨-٠١-٦٠٣-٩٧٨

١- الإسلام - مجموعات ٢- الموعظ و الإرشاد أ. العنوان

ديوي ٢١٠,٨ ١٤٣٥/٨٨٦٩

رقم الإيداع : ١٤٣٥/٨٨٦٩

ردمك: ٤-٦٣٩٨-٠١-٦٠٣-٩٧٨

முதலாம் பதிப்பு

2019-1440

முழுப் பதிப்புரிமை,பிறமொழியாக்கம் மற்றும் இலத்திரனியல் பதிப்பு:

நவீன வழிகாட்டல்

நிறுவனத்திற்கே உரித்துடையதாகும்.

நன்கொடையாக

அச்சிட்டு,விநியோகிக்க விரும்புவோர்

பின்வரும் விலாசம் மற்றும்

இலக்கங்களோடு

தொடர்புகொள்ளவும்

நவீனவழிகாட்டல் நிறுவனம்

சவுதி அறேபியா- ரியாத்

தொலைபேசி: 966114486000

பெக்ஸ் : 966114482181

بسم الله الرحمن الرحيم

| | |
|---|---|
| நூலாக்கம் | பஹ்த் ஸாலிம் பாஹம்மாம் |
| திட்டமிடற் பணிப்பாளர் | ஹாலித் அஹ்மதுல் அஹ்மதீ |
| மொழியாக்கம் | எம். எம். முஹம்மத் றிஸ்வான் (மீஸானி) |
| மேற்பார்வை | ஏ. கலீலுர் றஹ்மான் (ரியாதி) |
| படப்பிடிப்பு | DPI STUDIO |
| வடிவமைப்பு மற்றும் வழிகாட்டல் | தகவல் தொழிநுட்பத் துறைக்கான நவீனவழிகாட்டல் நிறுவனம் |
| வெளியீடு மற்றும் விநியோகம் | வெளியீட்டுக்கும் விநியோகத்திற்குமான "தாறு ஸமா அல்குதுப்" நிறுவனம் |
| இலத்திரனியல் வெளியீடு | தகவல் தொழிநுட்பத் துறைக்கான நவீனவழிகாட்டல் நிறுவனம் |

# பிரசுரிப்பாளர் உரை

நாளாந்தம் இந்த மார்க்கத்தைத் தழுவுபவர்களின் எண்ணிக்கை, அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளும் முறை, அவர்களின் வாழ்வை இது மாற்றியமைக்கும் விதம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரவியல் ஆய்வுகள் அனைத்தும் உலகில் மிக வேகமாகப் பரவி வரும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மாத்திரமே என்ற கருத்தினை வெளியிட்டுள்ளன.

உண்மையில், இஸ்லாம் மனிதனின் அறிவு, ஆன்மா மற்றும் இயல்பு நிலை என்பவற்றுடன் இணங்கிச் செல்கின்ற இறைவனின் நிலையான மார்க்கமாக இருப்பது இதற்கான காரணமாகும்.

உலகின் சகல பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் அல்லாதவர்களை பல்வேறு வித்தியாசமான நவீன அறிவியல் அணுகுமுறைகளின் உதவியோடு இஸ்லாத்தின் பால் அழைப்புக் விடுக்கக்கூடிய தஃவாத் துறையில் நிபுணத்துவம் பெற்ற தாயிகள் மற்றும் இஸ்லாமிய நிலையங்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபார முயற்சிகளும் கூட இதற்கான மற்றுமொரு காரணமாகும்.

எனினும், இப்பாரிய முயற்சிகளுள் அதிகமானவை மக்களை இஸ்லாத்தின் பால் அழைப்பதில் மாத்திரமே சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளன.

ஆனால், கலிமதுஷ் ஷஹாதாவை உச்சாடணம் செய்து ஆரம்பித்து வைத்த, நேர்வழியெனும் இந்த பயணத்தில் அவர்களை ஆற்றுகைப்படுத்துவதற்காக அவர்களின் இலக்குகளை மிகத்தெளிவாக முன்வைக்கும் எழுத்து மூலமான எந்தவொரு தகவல் மூலங்களையும் முன்வைக்கவில்லை.

முழு வாழ்விலும் நேர்வழியைப் பெற்றுக்கொள்வதற்காக, கற்றுக்கொள்ள வேண்டியதும் நம்பிக்கை கொள்ள வேண்டியதும் வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதுமென இஸ்லாத்தின் பல்வேறு போதனைகளை அறியவேண்டும் என்ற நிலையில் இன்னும் அவர்கள் உள்ளனர்.

”நவ முஸ்லிம் வழிகாட்டி” எனும் புத்தகத்தை அறிமுகப்படுத்துவதில் தாறு ஸமா அல்குதுப் நிறுவனம் பெருமிதம் அடைகின்றது.

இந்தப் புத்தகம் நம்பகமான அறிவு சார் தகவல்களையும் செயன்முறை சார் (வெளியீட்டையும்) விடயங்களையும் ஒருங்கே கொண்டமைந்த பல்வேறு தரமான ஆக்கங்களுள் ஒன்றெனக் கருதப்படும் கன்னித் தொகுப்பாகும்.

மேலும், இது உலகில் பல்வேறு நாடுகளிலுமுள்ள புதிய முஸ்லிம்களுக்கென்று வாழும் அனைத்து மொழிகளிலும் முன்வைக்கப்படும் ஒரு நூலாகும்.

வாசகர்களுக்கு நாம் வழங்கும் இந்த நூலானது, இதனோடு தொடர்புடைய இணையத்தளம், சமூக வலைப்பின்னல் சேவைகள், கல்விசார் ஒளிப்பதிவுத் துணுக்குகள், ஆக்கபூர்வமான தொலைபேசி நிகழ்ச்சிகள் போன்ற அனைத்து வெளியீட்டு மூலங்களுக்கும் அடிப்படையாகும்.

ஓட்டுமொத்தத்தில், இவை அனைத்துமே உலகின் நாற் திசைகளிலும் இஸ்லாத்தைத் தழுவிய புதிய முஸ்லிம்களுக்குப் பணி செய்வதையே நோக்காகக் கொண்டுள்ளன.


எமது பேச்சு மற்றும் செயல்கள் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனுக்காகவே அமைத்துக் கொள்ள அல்லாஹ்வை நாம் பிரார்த்திக்கின்றோம்.



பிரசுரிப்பாளர்

# உள்ளடக்கங்களுக்கான விவரத் திரட்டு

## உள்ளடக்கம்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| உலகில் உள்ள மிகப் பெரும் அருட்கொடை. | 22 |
| நாம் வாழ்வதற்கான நோக்கம். | 24 |
| இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம்நு | 24 |
| அல்லாஹ்விற்கும் அவனது அடியார்களுக்குமிடையே இடைத்தரகர் எவரும் கிடையாது | 26 |
| இஸ்லாம் ஒரு வாழ்வியல் மார்க்கம் | 28 |
| பூமியை வளப்படுத்தல | 28 |
| சமூக உறவுகளைப் பேணுதல் | 29 |
| அறிவின் மார்க்கம் | 29 |
| இஸ்லாத்தின் சட்டங்களைக் கற்றுக்கொள்ளல் | 30 |
| இஸ்லாமியச் சட்டங்கள் | 31 |
| இஸ்லாத்தின் ஐந்து தூன்கள் | 32 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| இஸ்லாமியச் சட்டங்களை அறிந்துகொள்வது எவ்வாறு ? | 34 |
| இஸ்லாம் ஒரு நடுநிலை மார்க்கம் | 35 |
| மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதொரு மார்க்கமே இஸ்லாம் | 36 |
| ,இஸ்லாம் அளவிடப்பட வேண்டியது அதன் கொள்கைகளை வைத்தே அன்றி சில முஸ்லிம்களின் பிழையான நடத்தைகளைக் கொண்டல்ல. | 37 |
| ஐம் பெரும் முக்கிய தேவைகள் | 38 |
| மார்க்கம | 39 |
| உயிா | 39 |
| அறிவு | 39 |
| சந்ததி | 40 |
| சொத்து | 41 |

# 1 எமது நம்பிக்கை




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| நம்பிக்கைச் சாட்சியங்கள்: கருத்துக்களும் அவை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களும். | 44 |
| ஏன் இந்த "லா இலாஹ இல்லல்லாஹ்"? | 44 |
| " ல ா இ ல ா ஹ இல்லல்லாஹ்"என்பதன் கருத்து. | 44 |
| «லாஇலாஹ இல்லல்லாஹ்» என்பதன் கூறுகள்: | 45 |
| முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி கூறுதல | 46 |
| நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிந்துகொள்ளல் | 46 |
| பிறப்பு | 46 |
| வாழ்வும் வளர்ச்சியும | 46 |
| தூதுப் பண | 47 |
| ஆரம்பக் கட்டப் பிரசாரம | 47 |
| புலப்பெயர்வு (ஹிஜ்ரத்) | 48 |
| இஸ்லாத்தைப் பரப்புவதற்கான அவரது முயற்சிகள | 48 |
| மரணம | 49 |
| "முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்" என்று சாட்சி கூறுதல் என்பதன் கருத்து | 50 |
| நபியவர்கள் கூறிய அனைத்து அம்சங்களையும் உண்மையென நம்புதல். | 50 |
| இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது: | |
| அவர்கள் பணித்த விடயங்களைச் செய்தலும் தடைவிதித்த விடயங்களை தவிர்த்துக்கொள்ளலும். | 51 |
| நபி (ஸல்) அவர்கள் வழங்கிய வழிகாட்டலுக்கேற்பவே அல்லாஹ்வை நாம் வணங்க வேண்டும். | 51 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| ஈமானின் ஆறு தூண்கள் | 53 |
| "அல்லாஹ்வை நம்புதல்" என்பதன் கருத்து | 53 |
| "அல்லாஹ் இருக்கின்றான்" என்று நம்புதல | 53 |
| "அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகன்» என்று நம்புதல்:- | 54 |
| "அல்லாஹ் தெய்வீகப் பண்புகளைக் கொண்டவன்» என்பதை நம்புதல். | 57 |
| வணக்கம் (இபாதா) என்பதன் பொருள் என்ன? | 59 |
| "வணக்கம்" என்பது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவியதாகும். | 59 |
| மனித இனமும் ஜின்களும் படைக்கப்பட்டதற்கான ஒரே பின்னணி வணக்கம் செய்வதாகும். | 60 |
| வணக்கத்திற்கான தூண்கள் (அடிப்படைகள்): | 60 |
| வணக்கத்திற்கான நிபந்தனைகள் | 61 |
| அல்லாஹ்விற்கு இணைவைத்தல் (ஷிர்க்) | 62 |
| பெரிய ஷிர்க | 63 |
| சிறிய ஷிர்க | 63 |
| மனிதர்களிடம் கேட்பது ஷ ிர்க்கெனக் கருதப்படுமா? | 64 |
| அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் அவனது பண்புகளை நம்புதல். | 66 |
| அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் பண்புகள் என்பனவற்றை நம்புவதனால் ஏற்படும் நல்ல விளைவுகள் | 67 |

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஈமானின் (நம்பிக்கை) மிக உயர்ந்த நிலை | 68 |
| அல்லாஹ்வை நம்புவதன் மூலம் ஏற்படும் பயன்கள் :- | 69 |
| மலக்குமார்களை நம்புதல். | 70 |
| "மலக்குமார்களை நம்புதல்" என்பதன் பொருள் :: | 70 |
| "மலக்குமார்களை நம்புதல்» என்பது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது? | 70 |
| மலக்குமார்களை நம்புவதன் மூலம் விளையும் நன்மைகள்: | 71 |
| இறை வேதங்களை நம்புதல். | 73 |
| "இறை வேதங்களை நம்புவது" என்பதன் பொருள்: | 73 |
| வேதங்களை நம்புவதானது எவ்வாறான விடயங்களைக் கொண்டுள்ளது ? | 73 |
| அல் குர்ஆன் கொண்டிருக்கும் தனித்துவங்களும் சிறப்பியல்புகளும்: | 73 |
| அல்குர்ஆனின் பால் எமக்குள்ள கடமைகள் யாது ? | 75 |
| முன்னைய வேதங்களில் காணப்படும் உள்ளடக்கங்கள் பற்றிய எமது நிலைப்பாடு யாது ? | 76 |
| இறைவேதங்களை நம்புவதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் | 78 |
| இறைத்தூதர்களை நம்புதல். | 79 |
| மானிட சமூகத்திற்கான இறைத்தூதின் தேவை | 79 |
| இது ஈமானின் தூண்களுள் ஒன்றாகும் | 80 |
| "இறைத்தூதர்களை நம்புவது" என்பதன் பொருள் | 80 |
| "இறைத்தூதர்களை நம்புதல்" எனும் அம்சம் எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது? | 81 |
| இறைத்தூதர்களின் நற்பண்புகள் | 82 |

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| இறைத்தூதர்களின் அடையாளங்களும் அற்புதங்களும் | 83 |
| ஈஸா (அலை) அவர்கள் பற்றிய ஒரு முஸ்லிமின் கொள்கை | 84 |
| நபி (ஸல்) அவர்களை ஒரு நபியாகவும் இறைத்தூதராகவும் நம்புதல். | 87 |
| முஹம்மத் (ஸல்) அவர்களது இறைத்தூதின் சிறப்பம்சங்கள் | 88 |
| இறைத்தூதர்களை நம்புவதன் மூலம் அடையப்பெறும் நன்மைகள் | 90 |
| இறுதி நாளை நம்புதல் | 91 |
| "இறுதி நாளை நம்புதல்" என்பதன் பொருள் | 91 |
| இறுதி நாளை நம்பவேண்டுமென்று அல் குர்ஆன் வலியுறுத்துவது ஏன் ? | 91 |
| "இறுதி நாளை நம்புதல்" என்பது எவ்வாறான விடயங்களைக் கொண்டிருக்கின்றது ? | 92 |
| "இறுதி நாள் உண்டு" என்பதை நம்புவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் | 97 |
| விதியை நம்புதல். | 98 |
| "விதியை நம்புதல்" என்பதன் பொருள் : | 98 |
| "விதியை நம்புதல்" என்பது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது | 99 |
| மனிதனுக்கு செயல் சுதந்திரம், சுய விருப்பம் மற்றும் அவன் நாடியதை மேற்கொள்வதற்கான ஆற்றல் என்பன உண்டு. | 100 |
| பாவத்தில் ஈடுபடுவதற்கு விதியே காரணமெனக் கூறுதல் | 101 |
| விதி பற்றிய நம்பிக்கையின் மூலம் உருவாகும் நன்மைகள் | 102 |

# 2 எமது சுத்தம்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| "சுத்தம் செய்தல்" என்பதன் பொருள் | 106 |
| தொழுகையை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்பட வேண்டுமெனக் கூறப்படும் சுத்தம் என்ன ? | 106 |
| நஜீஸிலிருந்து சுத்தம் செய்தல் | 107 |
| நஜீஸ் எனக் கருதப்படும் பொருட்கள் | 107 |
| நஜாஸாக்களை சுத்தப்படுத்தல்: | 107 |
| மலசலம் கழிப்பதற்கான ஒழுக்கங்கள் | 108 |
| தொடக்கு | 109 |
| சிறு தொடக்கும் வுழுச் செய்தலும்: | 109 |
| வுழுச் செய்வது எவ்வாறு ? | 110 |
| பெருந் தொடக்கும் குளிப்பும். | 112 |
| குளிப்பை விதியாக்கக்கூடிய விடயங்கள் | 112 |
| பெருந் தொடக்கு மற்றும் "ஜனாபத்" என்பவற்றிலிருந்து ஒரு முஸ்லிம் தன்னை சுத்தப்படுத்திக் கொள்வது எவ்வாறு ? | 114 |
| காலுறை மீது - "மஸ்ஹு" செய்தல் - தண்ணீரால் தடவுதல். | 114 |


# 3 எமது தொழுகை





| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| தொழுகையின் அந்தஸ்தும் அதன் மகிமைகளும் | 119 |
| தொழுகைக்கான சிறப்புகள் | 120 |
| தொழுகை யார் மீது கடமையாகும் ? | 121 |
| தொழுகையை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகள் யாது ? | 122 |
| பர்ளான ஐவேளைத் தொழுகைகளும் அதற்கான நேரங்களும் | 124 |
| தொழுகைக்கான இடம் | 125 |
| தொழுவதற்கான இடத்தில் அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன. உதாரணமாக | 126 |
| தொழுகைக்கான இடம் | 127 |
| தொழுகையை நிறைவேற்றுவதற்கான முறை | 128 |
| சூரதுல் பாதிஹா மற்றும் தொழுகையில் ஓதப்பட வேண்டிய ஏனைய விடயங்களைத் தெரியாதவர்கள் செய்ய வேண்டியது என்ன ? | 130 |
| சூரதுல் பாதிஹாவின் பொருள் வருமாறு: | 131 |
| எவ்வாறு தொழுவது? (நிலை - ருகூஃ - சுஜூது) | 136 |
| தொழுகைக்கான அர்கான்களும் (தூண்களும்) அதற்கான வாஜிபுகளும். | 140 |
| தொழுகையை செல்லுபடி அற்றதாக மாற்றும் செயல்கள்: | 142 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| தொழுகையில் செய்யக்கூடாது என வெறுக்கப்பட்ட (மக்ரூஹான) செயற்பாடுகள் | 142 |
| முஸ்தஹப்பான தொழுகைகள் என்றால் என்ன ? | 143 |
| உபரியான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு தடைசெய்யப்பட்ட நேரங்கள் | 145 |
| கூட்டுத் தொழுகை | 146 |
| இமாமைப் பின்பற்றுதல் என்பதன் பொருள் | 146 |
| தொழுகையை நடாத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியவர் யார் ? | 147 |
| இமாமும் ம.்.மூம் எங்கே இருக்க வேண்டும் ? | 147 |
| இமாமுடன் இணைந்தவாறு தொழுவதற்குத் தவறிய ரக்அத்துக்களை எவ்வாறு தொழ வேண்டும் ? | 147 |
| தொழுகைக்கான அழைப்பு (அல் அதான்) | 149 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| அதான் மற்றும் இகாமத் சொல்வதற்கான முறை: | 149 |
| அதானுக்குப் பதில் கூறுதல் | 150 |
| தொழுகையில் உள்ளச்சம் | 151 |
| தொழுகையில் உள்ளச்சத்தை உருவாக்கிக்கொள்வதற்கு துணை நிற்கும் காரணிகள் ∴ வழிமுறைகள் | 152 |
| ஜும்ஆத் தொழுகை | 154 |
| வெள்ளிக்கிழமை தினத்தின் மகிமை: | 154 |
| ஜும்ஆத் தொழுகையை (கட்டாயம்) நிறைவேற்ற வேண்டியவர்கள் யாவர்? | 155 |
| ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்படும் முறையும் அதற்கான சட்டவிதிகளும்: | 155 |
| நோயாளியின் தொழுகை | 159 |
| பயணத் தொழுகை | 159 |


# 4 எமது நோன்பு




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| ரமழானில் நோன்பு நோற்றல் | 162 |
| றமழான் மாதத்தின் மகிமைகள் | 162 |
| நோன்பு விதியாக்கப்பட்டமைக்கான பின்னணி | 163 |
| நோன்பின் சிறப்புகள் | 164 |
| நோன்பை முறித்து விடும் அம்சங்கள் | 165 |
| நோன்பை நோற்காதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | 166 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| சுன்னத்தான நோன்புகள் | 167 |
| நோன்புப் பெருநாள் | 168 |
| இஸ்லாத்தின் பார்வையில் பெருநாள் | 168 |
| நோன்புப் பெருநாள் | 169 |
| பெருநாளில் செய்யவேண்டியவைகள் என்ன ? | 169 |
| தக்பீர் கூறும் முறை | 171 |

# 5 எமது ஸகாத்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| ஸகாதின் இலக்குகள் | 174 |
| ஸகாத் விதியாகும் சொத்துக்கள்? | 174 |
| தங்கம் வெள்ளி | 175 |
| அனைத்து வகை நாணயங்கள். | 175 |
| வியாபாரப் பொருட்கள் | 176 |
| பழங்கள் தானியங்கள் போன்ற விளை பொருட்கள் | 176 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால் நடைகள் | 176 |
| ஸகாத் பெறத்தகுதியானவர்கள் யார்? | 177 |
| பின்வருவோர் ஸகாத்தைப் பெறத் தகுதியுடையோராவர் | 177 |


# 6 எமது ஹஜ்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| மக்கா மற்றும் மஸ்ஜிதுல் ஹராம் என்பனவற்றின் மகிமைகள் | 180 |
| "ஹஜ்" என்பதன் பொருள் | 182 |
| "ஹஜ்" கடமையை நிறைவேற்றுவதற்கான இயலுமையும் அதற்குரிய வித்தியாசமான சூழ்நிலைகளும் | 183 |
| ஒரு பெண், தனது ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு மஹ்ரமான ஆணின் துணை வேண்டும். | 184 |
| ஹஜ்ஜின் சிறப்புகள் | 184 |
| ஹஜ்ஜுக்கான இலக்குகள் | 185 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| உம்ரா | 187 |
| ஹஜ்ஜுப் பெருநாள் | 188 |
| "ஹஜ்ஜுப் பெருநாள்» தினத்தன்று நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் என்ன ? | 188 |
| உழ்ஹிய்யாவிற்கான மிருகங்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்: | 189 |
| அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களை என்ன செய்ய வேண்டும்? | 189 |
| புனித மதீனாவில் தரிசிக்கப்படவேண்டிய இடங்கள் | 190 |

# 7 எமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| «அனைத்து விதமான கொடுக்கல் வாங்கல்களும் அனுமதிக்கப்பட்டுள்ளவையே» என்பது தான் இஸ்லாத்தின் பொது விதி. | 194 |
| இயல்பு நிலை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள் | 195 |
| பொருளீட்டும் முறை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள் | 195 |
| வட்டி | 195 |
| "றிபத் தய்ன்" | 195 |
| "றிபல் கர்ழ்" | 196 |
| வட்டி தொடர்பான இஸ்லாமியச் சட்டம் | 196 |
| வட்டிக்கான தண்டனைகள் | 196 |
| வட்டியின் மூலம் ஏற்படும் தனிமனித மற்றும் சமூகப் பாதிப்புக்கள் | 198 |
| வட்டி சார்ந்த ஒப்பந்தங்களோடு தொடர்பினைக் கொண்டிருக்கும் நிலையில் இஸ்லாத்தை தழுவிய ஒருவர் தொடர்பான சட்டம் என்ன? | 199 |
| நிச்சயமற்ற நிலையும் தெளிவின்மையும் | 200 |
| தெளிவின்மை மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் கொண்ட வியாபார முறைகளுக்கான உதாரணங்கள் | 200 |
| தெளிவின்மை என்பது ஒப்பந்தத்தை எப்போது பாதிக்கும்? | 200 |
| அநியாயம் செய்தலும் பிறர் சொத்துக்களை அபகரித்தலும் | 201 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| பலவந்தப்படுத்துதல் | 201 |
| மக்களை ஏமாற்றுதல் | 201 |
| எவ்வித உரிமையுமின்றி அநியாயமாக பிறரின் சொத்துக்களை அபகரித்துக்கொள்வதற்காக சட்டங்களைக் கையாளுதல். | 202 |
| இலஞ்சம்: | 202 |
| இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னர் பிறர் சொத்துக்களை அபகரித்துக்கொண்டவர் தொடர்பான சட்டம் என்ன? | 203 |
| சூதாடுதல் | 203 |
| "சூதாடுதல்" என்பதன் பொருள் என்ன? | 203 |
| "சூதாடுதல்" தொடர்பான இஸ்லாத்தின் சட்டம் | 203 |
| «சூதாடுதல்» எனும் செயலானது சமூகம் மற்றும் தனிமனிதர்கள் மீது ஏற்படுத்தும் பாதக விளைவுகள் | 204 |
| சூதாட்ட வகைகள் | 205 |
| கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது கடைபிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்க நெறிகள் | 206 |
| நேர்மை | 206 |
| உண்மை ∴ வாய்மை | 207 |
| வேலைகளை நேர்த்தியாகவும் அழகாகவும் செய்தல | 207 |

# 8 எமது உணவு




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| உணவு தொடர்பான அடிப்படை பொது விதி | 210 |
| பழங்களும் பயிர்களும் | 210 |
| மதுபான வகைகள் | 211 |
| சிந்தனையைப் பாதுகாத்தல் | 211 |
| மதுபானம் தொடர்பான சட்டம் | 211 |
| போதைப் பொருட்கள் | 212 |
| கடல் உணவுகள் | 213 |
| தரை வாழ் உயிரினங்கள் | 213 |
| உணவாகக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உயிரினங்கள் எவை? | 213 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்ட மிருக வகைகள் | 214 |
| இஸ்லாமிய அறுப்பு முறை | 215 |
| இஸ்லாமிய விதிமுறைகளுக்கமைவாக வேட்டையாடுதல். | 216 |
| உண்ணும் போதும் குடிக்கும் போதும் பேணவேண்டிய ஒழுங்குகள் | 217 |


# 9 எமது ஆடை




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| இஸ்லாத்தின் பார்வையில் ஆடை | 222 |
| ஆடைகள் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்கின்றன: | 222 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| ஆடை தொடர்பான பொது விதி | 223 |
| ஹராமான ஆடைகள் | 224 |

# 10 எமது குடும்பம்




| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| இஸ்லாத்தின் பார்வையில் குடும்பம் | 228 |
| குடும்பத்தை அமைப்பதற்கு அடிப்படையாக விளங்கும் திருமணம் எனும் விடயத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மேலும், அதனை இறைத்தூதர்களின் வழிமுறைகளுள் ஒன்றாகவும் மிகவும் உயர்ந்ததொரு செயலாகவும் ஆக்கியுள்ளது. | 228 |
| குடும்ப அங்கத்தவர்கள் (அவர்கள் ஆணாயினும் பெண்ணாயினும்) அனைவருக்கும் இஸ்லாம் முழுமையான கௌரவத்தை வழங்கியுள்ளது. | 229 |
| பெற்றோர்களுக்கு உரிய கௌரவத்தினை பிள்ளைகள் வழங்கவேண்டுமென்று இஸ்லாம் தூண்டுகின்றது. | 229 |
| பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், செலவு செய்கின்ற போதும் ஏனைய வெளிப்படையான விடயங்களைக் கையாள்கின்ற சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கிடையில் நீதமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் பெற்றோர்களைப் பணிக்கின்றது. | 229 |
| இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து | 230 |
| மிகக் கரிசணையோடு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என இஸ்லாம் வலியுறுத்தும் பெண்கள் | 231 |
| தாய் | 231 |
| மகள் | 231 |

| உள்ளடக்கம | பக்கம |
|---|---|
| மனைவி | 231 |
| ஆண்களும் பெண்களும் மோதிக்கொள்வதற்கான எந்தவொரு இடமுமில்லை | 232 |
| ஓர் ஆணைப்பொறுத்த வரையில் பெண்ணின் வகைகள் | 232 |
| ஆணின் மனைவியாக பெண் இருத்தல்: | 232 |
| அவள் அவனுக்குரிய மஹ்ரமியப் பெண்ணாக இருத்தல் வேண்டும். | 233 |
| பெண், அவருக்கு "அஜ்னபி"யான ஒருவராக இருத்தல். | 235 |
| ஆண்களுக்கும் அந்நிய பெண்களுக்குமிடையிலான தொடர்புகளின் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய வரையறைகள் | 235 |
| பார்வையைத் தாழ்த்துதல் | 235 |
| ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்துகொள்ளல் | 236 |
| அந்நிய பெண்ணோடு தனிமையில் இருப்பதைத் தவிர்த்தல் | 236 |
| "ஹிஜாப்" அணிதல் | 237 |
| இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் | 238 |
| மனைவி தொடர்பான இஸ்லாத்தின் நிபந்தனைகள் | 238 |
| கணவன் தொடர்பான இஸ்லாத்தின் நிபந்தனைகள் | 239 |
| கணவன் மற்றும் மனைவிக்கான உரிமைகள் | 239 |
| மனைவிக்கான உரிமைகள் | 240 |
| கணவனுக்கான உரிமைகள் | 244 |
| பலதார மணம் | 245 |
| சமத்துவம் | 245 |


# 11 எமது பண்பாடுகள்




| உள்ளடக்கம | பக்கம |
| --- | --- |
| இஸ்லாத்தின் பார்வையில் பண்பாடுகள் | 254 |
| நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்டதற்கான பிரதான இலக்குகளுள் இதுவும் ஒன்றாகும். | 254 |
| நற்பண்புகள் ஈமான் மற்றும் கொள்கை சார்ந்த மிகவும் உறுதிமிக்கதொரு பகுதியாகும் | 254 |
| நற்பண்புகள் அனைத்துவித வணக்க வழிபாடுகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளன | 255 |
| இது தொடர்பிலான சான்றுகள், அல் குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் அதிகளவில் காணப்படுகின்றன. அவைகளுட் சில வருமாறு | 255 |
| இஸ்லாத்தின் பார்வையில், பண்பாடுகளின் சிறப்பியல்புகள் | 257 |
| பண்பாடாக நடந்துகொள்வதானது, மனிதர்களுள் குறித்ததொரு சாராருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. | 257 |

| உள்ளடக்கம | பக்கம |
| --- | --- |
| பண்பாடாக நடத்தல், மனித சமூகத்தோடு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. | 257 |
| வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பண்பாடு பேணப்படல் வேண்டும்: | 259 |
| அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போதும் பண்பாடாக நடந்து கொள்ளல் வேண்டும்: | 260 |
| யுத்தத்தின் போது பேண வேண்டிய இஸ்லாமிய பண்புநெறிகள் ∴ யுத்த தருமங்கள் : | 261 |
| நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் முறைகளும் பண்பாடுகளும் | 262 |
| பணிவு | 262 |
| கருணை | 263 |
| சிறுவர்களுடனான அன்பு | 263 |
| பெண்கள் மீதான கருணை | 264 |
| நலிவுற்றோா் மீதான அன்பு | 264 |
| மிருகங்கள் மீதான அன்பு | 265 |
| நீதம் | 266 |
| உதவுதலும் தாராளத் தன்மையும் | 266 |

# 12 எமது புதிய வாழ்வு




| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| இஸ்லாத்தைத் தழுவுவது எவ்வாறு ? | 270 |
| "கலிமதுஷ் ஷஹாதா" வின் பொருளை அறிந்தவனாக அதனை நம்பி ஏற்று, அதன் விடயங்களுக்குக் கட்டுப்பட்ட நிலையில் மொழிவதன் மூலம், ஒருவன் இஸ்லாத்தில் நுழைந்துவிடுகின்றான். | 270 |
| குளித்தல் | 270 |
| பாவமன்னிப்புக் கோருதல். | 271 |
| உண்மையான தௌபாவிற்குரிய நிபந்தனைகள் என்ன? | 271 |
| பாவத்தை விட்டு விலகுதல். | 271 |
| செய்த பாவங்களை எண்ணி வருந்துதல். | 271 |
| மறுபடியும் பாவங்கள் செய்வதில்லையென திடசங்கற்பம் பூணுதல். | 271 |
| மனஉறுதியை பெறுவதற்கான வழிமுறைகள் | 271 |
| தௌபாவின் பின்னர் நடப்பது என்ன ? | 272 |
| ஈமானின் சுவை | 273 |
| தௌபா மற்றும் நேர்வழி போன்ற அருட்கொடைகளைப் பெற்றதற்காக நன்றி செலுத்துதல். | 273 |
| மார்க்கத்தைப் பின்பற்றல் மற்றும் அதன் போது, ஏற்படும் துன்ப துயரங்களை சகித்துக் கொள்ளல். | 273 |
| அறிவு பூர்வமாகவும் அழகிய உபதேசங்களாலும் இஸ்லாத்தின் பால் மக்களை அழைக்க முயற்சித்தல். | 274 |
| இஸ்லாத்தின் பால் மக்களை அழைத்தல் | 275 |
| அழைப்புப் பணியின் மகிமைகள் | 275 |
| அழைப்புப் பணியின் பண்புகள் | 276 |
| இஸ்லாத்தின் பால் குடும்பத்தினரை அழைத்தல் | 278 |

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| எமது சூழலும் குடும்பமும் | 279 |
| இஸ்லாத்தில் நுழைந்ததன் பின்னரான குடும்ப வாழ்வு | 279 |
| கணவனும் மனைவியும் ஒன்றாக இஸ்லாத்தை தழுவுதல் | 279 |
| மனைவி இஸ்லாத்தை ஏற்காத நிலையில், கணவன் மாத்திரம் இஸ்லாத்தை தழுவிக்கொண்டால், அதற்கான சட்டவிதிகள் யாது? | 280 |
| தலாக் விடப்பட்ட பெண்ணுக்கான இத்தா | 281 |
| கணவன் இஸ்லாத்தை ஏற்காத நிலையில் மனைவி இஸ்லாத்தைத் தழுவினால், அதற்கான சட்ட விதிகள் யாது? | 283 |
| சிறுவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதல்: | 284 |
| இறைநிராகரிப்பாளர்களது குழந்தைகள் இவ்வுலகில் வாழும் போது, முஸ்லிம்கள் தான் என்பதை எப்போது நாம் தீர்மானிக்கலாம்? | 284 |
| இஸ்லாத்தை தழுவியதன் பின்னர் பெயர் மாற்றம் செய்வது விரும்பத்தக்கதா? | 286 |
| பின்வரும் சந்தர்ப்பங்களின் போது பெயர் மாற்றம் செய்யப்படல் வேண்டும் | 286 |
| பெயர் மாற்றம் செய்வது விரும்பத்தக்கது | 287 |
| ஸுனனுல் பித்ரா (இயற்கை வழிமுறைகள்) | 288 |
| "ஸுனனுல் பித்ரா" எனும் சொற்றொடரின் பொருள் யாது ? | 288 |

# முகவுரை

இஸ்லாம் எனும் உயர்ந்த இந்த மார்க்கத்தைத் தழுவி, அறியாமை எனும் இருளிலிருந்து வெளியேறி நம்பிக்கை எனும் ஒளியின் பால் சென்று அல்லாஹ்வின் அருளால் நேர்வழியைப் பெற்றுக்கொண்ட உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

உயர்ந்த இந்த மார்க்கத்தில் நுழைந்ததன் மூலம் உமது வாழ்வின் மிக முக்கியமானதொரு தீர்மானத்தை எடுக்கத்தூண்டிய உமது அந்த தைரியம் மற்றும் சத்தியத்தைத் தேடுவதில் இருந்த திடஉறுதி என்பவற்றுக்காக உங்களுக்கு மீண்டும் எமது நல்வாழ்த்துக்கள்.

புதியதொரு கருவியை கொள்வனவு செய்த ஒருவன், மேலும் ஒரு கழகத்தில் அல்லது ஓர் அணியில், அல்லது ஒரு நிறுவனத்தில் இணைந்து கொண்ட ஒருவன், அவன் அவனுக்குள்ள உரிமைகள் மற்றும் கடமைகள் என்ன? மேலும் அந்த புதிய சூழ்நிலையில் தான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியெல்லாம் வாசித்து அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பான்.

அவ்வாறாயின், நேர்வழி எனும் இஸ்லாத்தின் பால் வழிகாட்டப்பட்டு அறியாமை எனும் இருளிலிருந்து வெளியேற்றி நம்பிக்கை எனும் ஒளிக்கு அல்லாஹ்வின் அருளால் வழிகாட்டப்பட்ட ஒருவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

உண்மையில், அவன் அறிவுத் தெளிவின் அடிப்படையில் அல்லாஹ்வை வணங்குவதற்கும் அவனைச் சூழவுள்ள அனைத்துவித மாற்றங்களுடனும் இஸ்லாத்தின் போதனைகளுக்கிணங்க நடந்து கொள்வதற்கும் அவனது மார்க்கச் சட்டங்களைப் பற்றிப் படிப்பதில் பேரார்வம் கொண்டவனாக இருப்பான் என்பதில் எதுவித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை.

நீர் அறிவைப் படிக்கின்ற வேளை உமக்கு நபியவர்களின் நற்செய்தி உண்டு : நீர் படிக்கின்ற தகவல்கள் அனைத்துமே நபிமார்கள் மற்றும் இறைத்தூதர்களின் பரம்பரைச் சொத்துக்களாகும். ஏனெனில், நபிமார்கள் தங்களது பிதுர்ராஜ்ஜிதச் சொத்துக்களாக காசு பணங்களை விட்டுச்செல்லாது மார்க்கம் பற்றிய அறிவைத் தான் விட்டுச் சென்றார்கள்.

"யார் இந்த அறிவைப் படிக்கின்றாரோ, அவர் நபிமார்களின் பரம்பரைச் சொத்துக்களிலிருந்து பெரியதொரு பங்கினை நிரப்பமாகப் பெற்றுக்கொண்டார்."

(அபூ தாவூத் : 88)

இந்த வழிகாட்டல் நூலானது, (மனித இனத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த அருட்கொடையான) இந்த மார்க்கத்தைப் பற்றிக் கற்பதற்கான பூர்வாங்க வாய்ப்பினை உமக்கு வழங்குகின்றது.

இது உமது வாழ்வின் அநேகமான துறைகளுக்கு வழிகாட்டுகின்றது. அவசரமான உமது கேள்விகளுக்கான பதில்களையும் இதில் பெற்றுக் கொள்ளலாம்.

## நூலாசிரியர்

எம்மைச் சூழவுள்ள மக்களோடு யதார்த்தபூர்வமாக நாம் நடந்துகொள்வதற்கு எமக்கு உதவுவதோடு, அல் குர்ஆன், அஸ் ஸுன்னாவிலிருந்து பெறப்பட்ட நம்பகமான உறுதிமிக்க தகவல்களைத் தெளிவாகவும் இலகுவாகவும் முன்வைக்கின்றது.

இந்தப் புத்தகம் வாசிப்பதற்கும் படிப்பதற்கும் சுவையானதும் விரிவான தகவல்கள் அடங்கிய வழிகாட்டல் நூலாகவும் இருக்கின்றது. எமக்கொரு மார்க்கப் பிரச்சினை அல்லது ஒரு சர்ச்சை தொடர்பாக அல்லாஹ்வின் தீர்வு பற்றி அறிய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டால், மிக இலகுவாக இந்த நூலில் குறித்த பிரச்சினை தொடர்பான விரிவான தகவல்களை சென்று பார்ப்பதற்கான உஷாத்துணை நூலாகக் கூட இது காணப்படுகின்றது.

எமக்கு அல்லாஹ் அதிகமான நேர்வழியையும் உதவியையும் தரவேண்டுமென்றும் அவனது மார்க்கத்திற்கு எமது உள்ளம் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் நாம் எங்கிருந்தாலும் அருள்பாலிக்கப்பட்டவர்களாக எம்மை அவன் ஆக்க வேண்டுமென்றும் அல்லாஹ்வை நாம் பிரார்த்திக்கின்றோம்.


எம்மனைவரையும் அவனது மேலான சுவனத்தில் நபிமார்களுடனும் இறைத்தூதர்களுடனும் ஒன்று சேர்த்தருள்வானாக

நூலாசிரியர்





# உள்ளடக்கம்



## உள்ளடக்கம்


- உலகில் உள்ள மிகப் பெரும் அருட்கொடை.
- நாம் வாழ்வதற்கான நோக்கம்.
- இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம்.
- அல்லாஹ்விற்கும் அவனது அடியார்களுக்குமிடையே இடைத்தரகர் எவரும் கிடையாது.
- இஸ்லாம் ஒரு வாழ்வியல் மார்க்கம்.
- இஸ்லாமியச் சட்டங்களைக் கற்றுக்கொள்ளல்.
- இஸ்லாமியச் சட்டங்கள்.
- இஸ்லாமியச் சட்டங்களை அறிந்துகொள்வது எவ்வாறு ?
- இஸ்லாம் ஒரு நடு நிலை மார்க்கம்.
- மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதொரு மார்க்கமே இஸ்லாம்.
- இஸ்லாம் அளவிடப்பட வேண்டியது அதன் கொள்கைகளை வைத்தே அன்றி சில முஸ்லிம்களின் பிழையான நடத்தைகளைக் கொண்டல்ல.
- ஐம் பெரும் தேவைகள்.

## > உலகில் உள்ள மிகப் பெரும் அருட்கொடை.

அல்லாஹ் மனிதனுக்கு மட்டில்லா அருட்கொடைகளை வழங்கியுள்ளான்.

நாம் அனைவரும் அவனின் அருட்கொடைகள் மற்றும் செல்வங்களில் புரண்டு கொண்டிருக்கின்றோம்.

செவிப்புலன், கட்புலன், சிந்தனா சக்தி, உடல் ஆரோக்கியம், செல்வம், குடும்பம் போன்ற மனிதர்களுட் பலர் பெற்றிராத கிடைப்பதற்கரிய பல அருட்கொடைகளை அல்லாஹ் எமக்கு அருளியிருக்கின்றான்.

இவை மட்டுமல்லாது, உலகிலுள்ள சூரியன், வானம், பூமி, அதிலுள்ள படைப்புக்கள் உள்ளிட்ட முழுப் பிரபஞ்சத்தையும் அவன் எமக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான்.

இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

மேலும், அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் எண்ணுவீர்களாயின், அதனை நீங்கள் (கணக்கிட்டு எண்ணி) வரையறுத்துவிடமாட்டீர்கள்.

(அன் நஹ்ல் : 18)

எனினும், இந்த அருட்கொடைகள் அனைத்தும் எமது குறுகிய கால வாழ்வு நிறைவுறுவதோடு முடிந்து போகும்.

இஸ்லாமியனாக வாழுதல் எனும் அருளைப் பொறுத்தவரையில் அது மாத்திரமே உலகிலும் மறுமையிலும் நிலையான சந்தோஷத்தையும், சுபீட்சத்தையும் தரவல்லதாகும்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கிய அருட்கொடைகளுல் இதுவே மிகப் பெரிய அருட்கொடை ஆகும்.

இதன் காரணமாகவே, ஏனைய அருட்கொடைகளை விட இந்த அருட்கொடையை மேன்மைப்படுத்தும் நோக்கோடு தனது அருட்கொடை என இதனை தன்னோடு இணைத்து அல்லாஹ் பேசுகின்றான் :

இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை



> இஸ்லாம், உலகில் காணப்படுகின்றமிகப் பெரும் அருட்கொடையாகும்.

பரிபூரணமாக்கி வைத்து விட்டேன்; என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையுமாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன். என அல்லாஹ் கூறியிருக்கிறான். (அல் மாஇதா : 3)

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கும் அருட்கொடைகள் எத்துணை மகத்தானது!

மனிதனை அல்லாஹ் (அறியாமை) எனும் இருளிலிருந்து வெளியேற்றி (நம்பிக்கை) எனும் ஒளியின் பால் செலுத்தியிருக்கின்றான்.

மேலும் அல்லாஹ், தான் ஏற்று அங்கீகரித்த சத்திய மார்க்கத்தின் பால் அவனுக்கு வழிகாட்டியிருக்கின்றான்.

இது மனிதன் படைக்கப்பட்ட நோக்கமான அல்லாஹ்வை வணங்குதல் எனும் இலக்கை அடைந்து, உலகினது சுபீட்சத்தையும் மறுமையின் நற்கூலியையும் பெற்றுக்கொள்ள துணை நிற்கும்.

அல்லாஹ் எமக்குச் செய்திருக்கும் அனுகூலங்களும் செல்வங்களும் எத்துணை மகத்தானது!

நபிமார்கள் அனைவருக்கும் அல்லாஹ் கொடுத்தனுப்பிய தூதான லா இலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாவைச் சுமந்து செல்வதற்கு அவன் எங்களைத் தெரிவு செய்து, மனித நலனுக்காக வெளிக்கொணரப்பட்ட சிறந்த சமூகத்தவர்களாக எம்மை ஆக்கியிருக்கின்றான்.

சில அறிவீனர்கள், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டமையானது நபியவர்களுக்கு செய்த உதவியென நினைத்து, அதனைச் சொல்லிக்காட்டத் துவங்கிய போது, அல்லாஹ்வே அவர்களுக்கு இஸ்லாத்தின் பால் வழிகாட்டி உதவினான். (அவர்கள் எந்த உதவியையும் அவன் தூதருக்குச் செய்யவில்லை) என்பதை அல்லாஹ் அவர்களுக்கு நினைவுபடுத்தினான்.

இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

(நபியே!) அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததன் காரணமாக, உமக்கு உபகாரம் செய்து விட்டதாக அவர்கள் கருதுகின்றனர்; (நபியே!) நீர் கூறும்: நீங்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததனால் என் மீது உபகாரம் செய்து விட்டதாகக் கருதாதீர்கள்; எனினும், விசுவாசம் கொள்ள வாய்ப்பளித்து உங்களை நேர் வழியில் செலுத்தியதனால் அல்லாஹ் தான் உங்கள் மீது உபகாரம் செய்திருக்கின்றான்; நீங்கள் (உங்கள் விசுவாசத்தில்) உண்மையாளர்களாக இருந்தால் (இதனை நன்கறிந்து கொள்வீர்கள்). (அல் ஹுஜுராத் : 17)

அல்லாஹ்வின் அருட்கொடைகள் ஏராளம். ஆனாலும், எங்களின் மீது அருள்பாலித்ததாக அவன் பிரஸ்தாபிக்கும் ஒரே அருள் இஸ்லாமும் அவனை வணங்குவது மற்றும் ஒருமைப்படுத்துவது என்பவற்றின்பால் எமக்கு வழிகாட்டியிருப்பதுமே ஆகும்.

எனவே, இந்த அருள் நிலைத்திருக்க வேண்டுமானால், நாம் இதற்கு நன்றி செலுத்த வேண்டும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நீங்கள் நன்றி செலுத்தினால், உங்களுக்கு நான் அதிகப்படுத்துவேன். (இப்றாஹீம் : 7)

இந்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவது எவ்வாறு ?

பின்வரும் இரண்டு அம்சங்களினால் இதனைச் செய்ய முடியும்.

1. தீனைப் பின்பற்றுதலும் அதன் போது ஏற்படும் துயரங்களை சகித்துக் கொள்ளலும்.

2. ஏனையவர்களுக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்தி, அதன் பால் அவர்களை அறிவுபூர்வமாகவும் நிதானமாகவும் அழைத்தல்.

## > நாம் வாழ்வதற்கான நோக்கம்.

எமது வாழ்வு தொடர்பான இம்முக்கிய வினாவிற்கு விடையளிக்கும் போது படித்தவர்கள், பாமரர்கள் என்ற வேறுபாடின்றி பலரும் தடுமாறுகின்றனர்.

நாம் ஏன் வாழ்கின்றோம் ?

எமது வாழ்வின் இலக்கு யாது ?

இவ்வுலகில் மனித வாழ்வின் இலக்கு பற்றி மிகத்தெளிவாகவும், நுணுக்கமாகவும் அல்-குர்ஆன் பின்வரும் வசனத்தில் விவரித்துள்ளது. :

ஜின் இனத்தையும், மனித வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்கேயன்றி வேறு எதற்கும் படைக்கவில்லை (அத் தாரியாத்: 56)

பூமியிலே நாம் வாழ்வதற்கான ஒரே நோக்கம் அல்லாஹ்வை வணங்குவதாகும். அவையல்லாத ஏனையவைகள் அவ்விலக்கை முழுமைப்படுத்தவும் அவற்றுக்கு துணை நிற்பதற்குமாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் இபாதா என்பது துறவறமோ, அல்லது இவ்வுலக வாழ்வின் இன்ப, சுகங்களைத் துண்டித்து தூர விலகி வாழ்வதாகவோ இல்லை.

மாறாக, அது தொழுகை, நோன்பு, ஸகாத் முதற்கொண்டு விளையாடுதல், மனைவியோடு சுகம் அனுபவித்தல் உள்ளிட்ட அனைத்து மனித செயற்பாடுளையும் உள்ளடக்குகின்றது.

இவைகள் அல்லாஹ்விற்காக என்ற நல்லெண்ணத்தோடு செயற்படுத்தப்படல் வேண்டும்.

இதனையே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உங்களது மனைவியோடு நீங்கள் உங்களது ஆசையை பூர்த்தி செய்துகொள்வது கூட ஸ தகாவாகும். (முஸ்லிம் : 1006)

அதாவது, ஒரு முஸ்லிம் தனது மனைவியோடு உறவுகொள்வதன் மூலமும் நன்மையைப் பெறுகின்றான்.

இந்த வகையில், இபாதா என்பது மனித வாழ்வின் பிரதான இலக்காக இருப்பதற்கப்பால், அது வாழ்வின் சாராம்சமாகவும் மாறுகின்றது.

எனவே, ஒரு முஸ்லிம் தனது நாளாந்த செயற்பாடுகளை பல்வேறு வகையான வணக்க வழிபாடுகளாக மாற்றிக்கொள்கின்றான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நபியே! நீர் கூறும் எனது தொழுகை, நான் அறுத்துப்பலியிடுவது, எனது வாழ்வு, எனது மரணம் ஆகிய அனைத்தும் அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே (அல் அன்ஆம் : 162)

## > இஸ்லாம் ஓர் உலகளாவ-ிய மார்க்கம்

இஸ்லாமிய மார்க்கமானது மக்கள் மத்தியில் காணப்படும் இன, கலாசார, வழக்காறு, வாழ்விடம் போன்ற வேறுபாடுகளை நோக்காது அவர்கள் அனைவருக்கும் அருளாகவும் வழிகாட்டியாகவும் வந்துள்ளது.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

உங்களை உலக மக்களுக்கு அருளாகவே நாம் அனுப்பினோம். (அல் அன்பியா∴ : 107)

இதன் காரணமாகவே, இஸ்லாம் மனித சமூகத்தின் அனைத்து விதமான வழக்காறுகளையும், சம்பிரதாயங்களையும் மதிக்கின்றது.

புதியதொரு முஸ்லிமை அவனது சம்பிரதாயங்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முரண்படாத போது அவைகளை மாற்றிக்கொள்ளுமாறு இஸ்லாம் அவனைக் கேட்டுக்கொள்ளவில்லை.

அவ்வாறு அவைகள் இஸ்லாத்தின் போதனைகளுடன் முரண்படுகின்ற போது அவைகளை மாற்றிக்கொண்டு இஸ்லாத்திற்குப் பொருத்தமானவைகளால் அவற்றை நிரப்ப வேண்டும்.

ஏனெனில், மிகவும் அறிந்தவனும் அதிக அனுபவம் பெற்றவனுமான அல்லாஹ்வே சில விடயங்களை ஏவியும் மற்றும் சில விடயங்களை தடுத்தும் உள்ளான்.

நாம் அவனை நம்பி இருப்பது அவனுடைய சட்டங்களுக்கு இசைவாக நடக்க வேண்டுமென்பதனையே சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இஸ்லாத்துடனோ, அதன் சட்டவரையறைகளுடனோ எவ்விதத் தொடர்புமற்ற முஸ்லிம்களுடைய சில சம்பிரதாயங்களை புதியதொரு முஸ்லிம் பின்பற்றவோ, கடைப்பிடிக்குமாறோ அவனைப் பணிக்கவில்லை என்பதை இஸ்லாம் போதிக்கின்றது.

உண்மையாகவே அவைகள், சில மனிதர்களால் பின்பற்றப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட ஒரு வகைச் சம்பிரதாய அம்சங்களே ஆகும்.

பூமி முழுவதும் அல்லாஹ்வை வணங்கும் தளமாகும்

மனிதன் வாழ்வதற்கும், அல்லாஹ்வை வணங்குவதற்கும் பொருத்தமான இடமாக முழுப் பூமியையும் இஸ்லாம் கருதுகின்றது.

முஸ்லிம்கள் கட்டாயம் ஹிஜ்ரத்(புலம் பெயருதல்) செய்து, இங்கு தான் வாழ வேண்டுமென்ற குறிப்பான ஓர் இடமோ அல்லது ஒரு நாடோ உலகில் கிடையாது.

இங்கு, கருத்திற்கொள்ள வேண்டிய அம்சம் யாதெனில், நாம் வாழுமிடத்தில் அல்லாஹ்வை வணங்குவதற்குரிய சுதந்திரம் உள்ளதா? என்பதே ஆகும்.

ஒரு முஸ்லிம் பிற இடமொன்றிற்கு ஹிஜ்ரத் செய்து வாழ வேண்டுமென்ற அவசியமில்லை. அல்லாஹ்வை வணங்குவதிலிருந்து ஒருவர் தடுக்கப்படும் போது மாத்திரமே அவனை வணங்குவதற்கு முடியுமான ஓர் இடத்தை நோக்கி அவர் செல்ல வேண்டும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

ஈமான் கொண்ட எனது அடியார்களே! நிச்சயமாக எனது பூமி விசாலமானது. எனவே, நீங்கள் என்னையே வணங்குங்கள் (அல் அன்கபூத் : 56)



## > அல்லாஹ்விற்கும் அவனது அடியார்களுக்குமிடையே இடைத்தரகர் எவரும் கிடையாது

பல்வேறு சமயங்கள் தமது சமயத்தை பின்பற்றும் அனைத்து மக்களுக்கும் வழங்காத சமய ரீதியிலான சில சிறப்புச் சலுகைகளை அல்லது உரிமைகளை குறிப்பிட்ட சில தனிநபர்களுக்கு மாத்திரம் வழங்கியுள்ளது.

மக்களின் வணக்கங்கள் மற்றும் அவர்களின் நம்பிக்கைகள் என்பன அவ்வாறான தனிநபர்களின் பொருத்தப்பாட்டோடும் இணக்கப்பாட்டோடும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. (அவர்களின் சமய நம்பிக்கையின் படி) அவர்களே மக்களுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள இடைத்தரகர்கள் என்றும், அவர்களே மக்களுக்கு பாவமன்னிப்பு வழங்குகின்றனர் என்றும், இன்னும் சில வேளைகளில் அவர்கள் மறைமுகமானவற்றைக் கூட அறிந்துகொள்கின்றனர் என்றும், அவர்களுக்கு மாற்றம் செய்வதானது வாழ்வில் தோல்வி ஏற்பட காரணமாய் அமையும் என்பன போன்ற பல்வேறு அம்சங்களை (அவர்களின் பிழையான கொள்கைக்கேற்ப) அவர்கள் பிழையாகக் கூறுகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இஸ்லாமிய சமயமானது உலகில் தோன்றி, மனிதனை கௌரவப்படுத்தி அவனது அந்தஸ்த்தை உயர்த்தியது.

மேலும், மனிதர்களின் வெற்றி, பாவமீட்சி, வணக்கம் போன்ற அம்சங்கள் உயர்ந்த சில மனிதர்களோடு தொடர்புபடுத்தப்பட வேண்டுமென்ற அவர்களது பிழையான சிந்தனைகளைத் தகர்த்தெறிந்தது.

ஒரு முஸ்லிமுடைய வணக்க வழிபாடுகள் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு எந்தவொரு மனிதனுடைய உதவியோ துணையோ தேவையற்றதாகும்.

ஏனெனில், அல்லாஹ் தனது அடியானாகிய மனிதனுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து அவனது வேண்டுதலுக்கு செவிவாய்த்து விடையளிக்கின்றான்.



மேலும் மனிதனது தொழுகை மற்றும் ஏனைய வணக்கங்கள் என்பவற்றைப் பார்த்து அவைகளுக்கு கூலியும் வழங்குகின்றான்.

பாவ மீட்சி வழங்குவதற்கான அதிகாரம் எந்தவொரு மனிதனுக்கும் உரித்துடையதன்று. எந்தவொரு அடியான் தனது பாவத்திற்காக மனத்தூய்மையோடு அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோரினாலும் அல்லாஹ் அவனை மன்னித்து விடுகின்றான்.

இயற்கைக்குப் புறம்பான பிரபஞ்சத்தை நகர்த்துகின்ற தெய்வீக சக்திகள் எந்தவொரு மனிதனுக்கும் கிடையாது. அதிகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் கையிலேயே இருக்கின்றன.

இஸ்லாம் ஒரு முஸ்லிமுக்குச் சிந்திக்கும் சுதந்திரத்தை வழங்கியிருப்பதோடு, கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது அல் குர்ஆனையும் நபியவர்களின் சொல், செயல்களில் ஆதாரபூர்வமானவைகளை அடிப்படையாக வைத்து, ஆழமாகச் சிந்தித்து முடிவுகளை எடுப்பதற்கும் தூண்டியுள்ளது.


அல்லாஹ்வுடைய மார்க்க விடயத்தில் முடிவெடுக்கும் தனிச்சிறப்புரிமை அல்லாஹ்வுடைய தூதரைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது.

ஏனெனில், அவர் தனது மனோ இச்சையின் பிரகாரம் பேசுபவரல்லர். மாறாக அவர் அல்லாஹ்வின் வஹி மற்றும் அவனது வழிகாட்டல் மூலமே பேசுவார்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : அவர் தன் மன இச்சையின் படி (எதையும்) பேசுவதுமில்லை. இது அறிவிக்கப்படும் (வஹீயாகிய) அறிவிப்பே தவிர (வேறு) இல்லை. (அந் நஜ்ம் : 3-4)

இந்த மார்க்கத்தை அல்லாஹ் எமக்குத் தந்து அவன் எம் மீது செய்த அருள் எத்துணை மகத்தானது!

இது இதயங்களின் இயல்பு நிலையை ஒத்ததும், மனிதர்களை மேன்மைப்படுத்தி, இறைவனல்லாத வேறு சக்திகளுக்கு கட்டுப்பட்டும் அடிமைப்பட்டும் வாழும் இழிநிலையிலிருந்து மனிதனை விடுவித்த உயர்ந்ததொரு மார்க்கமாகும்.



## > இஸ்லாம் ஒரு வாழ்வியல் மார்க்கம்

இஸ்லாம் உலக மற்றும் மறுமை வாழ்க்கைகளுக்கிடையில் சமத்துவத்தைப் பேணுகின்ற ஒரு மார்க்கமாகும்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் உலகம் என்பது ஒரு விளைநிலமாகும். அதிலே ஒரு முஸ்லிம் தனது வாழ்வின் சகல நிலைகளிலும் நற்செயல்கள் எனும் விதைகளை நட்டி உலகிலும் மறுமையிலும் அதற்குரிய கூலிகளை தனது உழைப்பின் அறுவடையாகப் பெறுகின்றான்.

இவ்வாறான பயிரிடுதலை மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்பு, மனஉறுதி, அதீதஈடுபாடு, தன்நம்பிக்கை போன்ற மனப்பாங்குகளே அவசியமாகும்.

இவைகள் பின்வரும் அம்சங்களில் வெளிப்படுகின்றன:


### பூமியை வளப்படுத்தல்:

அல்லாஹ் கூறுகின்றான்:

பூமியிலிருந்தே உங்களை அவன் உருவாக்கினான். மேலும், அந்த பூமியை வளப்படுத்துமாறு உங்களை அவனே பணித்தான். (ஹூத் : 61)

அல்லாஹ் எம்மை இப்பூமியிலே படைத்து, அதனை வளப்படுத்துவதன் மூலம் மனித சமூகத்தின் நலனுக்காக உழைக்க வேண்டுமென அவன் எம்மை பணித்துள்ளான்.

இது இஸ்லாத்தின் போதனைகளுக்கு முரணானது அல்ல. மாறாக பூமியை வளப்படுத்துவதும், விருத்திசெய்வதும் மனிதன் படைக்கப்பட்ட இலக்குகளுள் ஒன்றாகவும் மறுமை நாள் போன்ற குழப்பம் நிறைந்த கடினமான சூழ்நிலைகளில் கூட மேற்கொள்ளப்பட வேண்டிய வணக்க வழிபாடுகளுள் ஒன்றாகவும் இஸ்லாம் இதனை அடையாளப்படுத்துகின்றது.



> வேறுசமயங்களில் காணப்பட்டதுபோல இஸ்லாத்திற்கும் அறிவியலுக்குமிடையில் எதுவிதமோதலும் இருக்கவில்லை.

இதனால் தான் நபியவர்கள் முஸ்லிம் சமூகத்தை நோக்கி இவ்வாறு உபதேசித்தார்கள்:

மறுமை நாள் சம்பவிக்கப்போகும் நிலையில் கூட ஒரு முஸ்லிம் ஒரு பயிரை நடுவதற்கு தயாராக இருப்பின்,அவரால் முடிந்தால் அதனை அவர் நடட்டும். அது அவருக்கு

ஸதகாவாக மாறும். (அல் முஸ்னத் : 2712)

## சமூக உறவுகளைப் பேணுதல் :

சமூகத்தை கட்டியெழுப்பவும் சமூகப் புனரமைப்பில் ஈடுபடவும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உறவாடவும் தங்களுக்கிடையிலான சமய மற்றும் கலாசார வேறுபாடுகளுக்கப்பால் உயர்ந்த பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் நடத்தைகளின் அடிப்படையில் இஸ்லாம் தனது ஆதரவாளர்களை தங்களைச் சூழவுள்ள மக்களோடு ஒன்றிணைந்து சமூக உறவைப் பேணி வாழ்வதற்கும் அழைப்பு விடுக்கின்றது.

மக்களை விட்டு தனித்து,

தூரவிலகி வாழ்வது தாயிகளினதோ (இஸ்லாமிய அழைப்பாளர்கள்) சீர்திருத்தவாதிகளினதோ வழிமுறையல்ல.

எனவேதான், நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

மனிதர்களை விட்டும் தூரவிலகி ஒதுங்கி வாழும் ஒருவனை விட மனிதர்களோடு இணைந்து உறவாடி அதன் போது அவர்களினால் ஏற்படும் தவறுகள் துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் ஒருவனே சிறந்தவன் (இப்னு மாஜாஹ் : 4032)

## அறிவின் மார்க்கம் :

நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கிய அல்-குர்ஆனின் முதல் சொல்லான இக்ர.ஃ (படி) என்பது எதேச்சையாக நடந்த நிகழ்வொன்றல்ல.

உண்மையாக, மனித இனத்திற்கு அறிவின் பல்வேறு பலன்களை இஸ்லாம் அழுத்திக் கூறிய நிகழ்வாகும்.

ஒரு முஸ்லிம் அறிவைத் தேடிச் செல்வதை சுவனத்தை நோக்கிச் செல்லும் பாதையாக இஸ்லாம் கருதுகின்றது.

இதனை நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

யார் அறிவு தேடி ஒரு வழியில் பயணிக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்திற்கான பாதையை இலகுபடுத்துகிறான் (இப்னு ஹிப்பான்: 84)

வேறு சமயங்களில் காணப்பட்டது போல இஸ்லாத்திற்கும் அறிவியலுக்குமிடையில் எதுவித மோதலும் இருக்கவில்லை.

மாற்றமாக இஸ்லாம் அறிவுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக இருந்துள்ளதோடு மட்டுமல்லாமல் அறிவுக்கு அது எப்போதும் துணை நிற்கின்றது.

மேலும், அது (அறிவு) மனித இனத்துக்கு பயன்களைக்கொடுக்கும் காலமெல்லாம் இஸ்லாமியர்கள் அதனை கற்கவும் கற்பிக்கவும் அவர்களை இஸ்லாம் தூ ண்டுகின்றது.

மனிதர்களுக்கு நல்ல விடயங்களைக் கற்றுக்கொடுக்கும் அறிஞரை இஸ்லாம் கௌரவப்படுத்தியுள்ளதோடு அவர்களை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்து நோக்குகின்றது.

எனவே தான் நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

மக்களுக்கு நல்ல விடயங்களை கற்பிக்கின்ற அறிஞருக்கு அனைத்துப் படைப்பினங்களும் பிரார்த்திக்கின்றன (அத் திர்மிதி : 2685)

## › இஸ்லாத்தின் சட்டங்களைக் கற்றுக்கொள்ளல்

ஒரு முஸ்லிம் தனது கடமைகளை மிகச் சரியாகவும் பரந்த விளக்கத்தோடும் நிறைவேற்றுவதற்கு வணக்க வழிபாடுகள், சமூக உறவுகள் மற்றும் ஏனைய தொடர்புகள் போன்ற அவனது வாழ்வின் சகல துறை அம்சங்களோடும் தொடர்பான இஸ்லாமிய சட்டங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் கொண்டிருத்தல் வேண்டும்.

இதனையே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

யாருக்கு அல்லாஹ் நலனை நாடுகின்றானோ, அவருக்கு அவன் மார்க்கத்தில் விளக்கத்தைக் கொடுக்கின்றான் (அல் புகாரி : 71, முஸ்லிம் : 1037)

தொழும் முறை, சுத்தம் செய்தல், உணவு மற்றும் குடிபான வகைகளுள் அனுமதிக்கப்பட டவைகள்,அனுமதிக்கப்படாதவைகள் போன்ற வாஜிபான சட்டங்களை (கட்டாயம் படிக்க வேண்டும் என்ற நிலையிலுள்ள சட்டங்கள்) ஒரு முஸ்லிம் கற்றுக்கொள்வது கட்டாயக் கடமையாகும்.

படிக்குமாறு ஊக்கப்படுத்தப்பட்ட இஸ்லாத்தின் வேறு சில சட்டங்களை அவர் கற்றுக்கொள்வது விரும்பத்தக்கதாகும். ஆனால் அது கட்டாயமானது அல்ல.



## இஸ்லாமியச் சட்டங்கள்

மனிதனின் சொல், செயல், ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் பின்வரும் ஐந்து இஸ்லாமிய சட்டப் பெறுமான நிலைகளுள் ஏதேனுமொரு நிலையை வகிக்கும் :

| | |
|---|---|
| அல் வாஜிப் (கட்டாயக்கடமை) | ஒரு முஸ்லிம் அவசியம் செய்ய வேண்டுமென அல்லாஹ்வினால் உத்தரவிடப்பட்ட அம்சங்களையே இது குறிக்கும்.<br>இவைகளைச் செய்த ஒருவர் கூலி வழங்கப்படுவார். செய்யத் தவறியவர் தண்டிக்கப்படுவார்.<br>உதாரணமாக, பர்ளான ஐந்து நேரத் தொழுகைகள், றமழான் மாதத்தில் நோன்பு நோற்றல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். |
| அல் ஹறாம் (தடுக்கப்பட்டவைகள்) | அல்லாஹ் தடை செய்த அம்சங்களையே இது குறிக்கும். இவைகளை விட்டு விலகிக் கொண்டவர் கூலி வழங்கப்படுவார். செய்தவர் தண்டிக்கப்படுவார்.<br>உதாரணமாக, விபச்சாரம் செய்தல், மதுபானம் அருந்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். |
| ஸுன்னா வல் முஸ்தஹப் (விரும்பத்தக்கது) | வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் ஊக்கமளித்த விடயங்களையே இது குறிக்கும்.<br>இவைகளைச் செய்பவர் கூலி வழங்கப்படுவதோடு செய்யாது தன்னை விலக்கிக் கொண்டவர் தண்டிக்கப்படவும் மாட்டார்.<br>உதாரணமாக, மனிதர்களைப் பார்த்து புன்னகை செய்தல், அவர்களைச் சந்திக்கும் வேளையில் இஸ்லாமிய முகமனைக் கூறுவதில் முந்திக்கொள்ளல், பாதையிலுள்ள அழுக்குகள் மற்றும் இடர் தரும் பொருட்களை அகற்றுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். |
| அல் மக்றூஹ் (வெறுக்கத்தக்கது) | இஸ்லாம், செய்யக்கூடாதென ஊக்கப்படுத்திய விடயங்களையே இது குறிக்கும்.<br>இவைகளைச் செய்யாது தன்னை விலக்கிக் கொண்டவர் கூலி வழங்கப்படுவதோடு, செய்பவர் தண்டிக்கப்படவும் மாட்டார்.<br>உதாரணமாக, தொழுகையின் போது விரல்களால் விளையாடுவது போன்ற செயல்களைக் குறிப்பிடலாம். |
| அல் முபாஹ் (ஆகுமாக்கப்பட்டவை) | அல்லாஹ்வின் ஏவலோ, விலக்கலோ சம்பந்தப்படாத ஓர் அம்சத்தை செய்தலும் செய்யாது விடுதலும்.<br>உதாரணமாக, வியாபாரம் செய்தல், பயணம் செய்தல், பேசுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். |

## > இஸ்லாத்தின் ஐந்து தூன்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாம் ஐந்து (தூண்கள்) மீது நிறுவப்பட்டுள்ளது :-

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லையென்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது தூதரென்றும் சாட்சி கூறுதல், தொழுகையை நிலை நாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் கடமையை நிறைவேற்றுதல், றமழான் மாதம் நோன்பு நோற்றல். (அல் புகாரி : 8, முஸ்லிம் : 16)

இந்த ஐந்து அம்சங்களும் இஸ்லாத்தின் அடிப்படையான பிரதான தூண்களாகும். அடுத்து இடம் பெறும் பாடங்களில் இவைகளையும் இவைகளுக்கான சட்டங்களையும் விரிவாக விளக்குவோம்.

இவற்றுள் முதலாவது நம்பிக்கையும் ஏகத்துவமுமாகும். இது (எமது நம்பிக்கை) எனும் தலைப்பில் அடுத்து இடம்பெறும்.

அடுத்து, வணக்கங்களுள் மிகவும் மகத்தானதும் சிறந்ததுமான தொழுகையைப் பற்றிய பாடம் இடம்பெறும்.

இஸ்லாத்தின் தூண் தொழுகை என்று நபியவர்கள் கூறினார்கள். (அத் திர்மிதி 2749)

அதாவது இஸ்லாம் இதன் மீதே நிறுவப்பட்டுள்ளது. இந்தத் தொழுகை இல்லையேல் இஸ்லாமே இல்லை.

எவ்வாறாயினும், தொழுகை நிறைவேறுவதற்கு ஒரு முஸ்லிம் தன்னை தூய்மைப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

இதனால், (எமது நம்பிக்கை) எனும் தலைப்பானது (எமது சுத்தம்) பின்னர் (எமது தொழுகை) எனும் தலைப்புக்களுக்கு முன்னரே இடம்பெற்றுள்ளது.

இஸ்லாத்தின் தூண்கள் :



1

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவன் தூதர் என்றும் சாட்சி கூறுதல்.

2

தொழுகையை நிலை நாட்டுதல்.

3

ஸகாத் கொடுத்தல்.

4

றமழான் மாதம் நோன்பு நோற்றல்.

5

ஹஜ்ஜை நிறைவேற்றுதல்.

| இஸ்லாத்தின் தூண்கள் | |
|---|---|
| 1 | அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவன் தூதர் என்றும் சாட்சி கூறுதல். |
| 2 | தொழுகையை நிலை நாட்டுதல். |
| 3 | ஸகாத் கொடுத்தல். |
| 4 | றமழான் மாதம் நோன்பு நோற்றல். |
| 5 | ஹஜ்ஜை நிறைவேற்றுதல். |

## > இஸ்லாமியச் சட்டங்களை அறிந்துகொள்வது எவ்வாறு ?

ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டு, சிகிச்சை பெற விரும்பினால், பயன் நிறைந்த சிகிச்சையைப் பெறும் நோக்கில் அவன் நன்கு கைதேர்ந்த திறமைமிகு வைத்தியரொருவரை தேடுவான். அவனுக்கு அவனது உயிர் மிகப்பெறுமதி வாய்ந்த ஒன்றாக இருப்பதனால், எந்த மருத்துவரிடமிருந்து எவ்வகையிலான மருந்துச் சீட்டைப் பெற்றாகிலும் நோயை குணப்படுத்துவதில் அவன் அசிரத்தையாக இருக்கப்போவதில்லை.
மனிதனின் மார்க்கம் அவனது வாழ்வில் மிகப் பெறுமதியானது.
எனவே, அவன் தனது மார்க்கத்தைப் பற்றி கற்றுக்கொள்வதிலும் அதிலே தெரியாத விடயங்களை கற்றறிந்த நம்பிக்கையான அறிஞர்களை அணுகி க்கேட்டுப் படித்துக் கொள்வதிலும் தன்னால் முடிந்த முயற்சியை மேற்கொள்வது அவனின் பொறுப்பாகும்.
இந்த புத்தகத்தை நீங்கள் வாசிப்பது இஸ்லாத்தின் போதனைகளைத் தெரிந்து கொள்வதற்கான ஒரு வழியாகும்.
ஏனெனில், இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களையும் உங்களது சந்தேகங்களுக்கான அவர்களின் பதில்களையும் இது கொண்டுள்ளது.
அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:
ஆகவே, நீங்கள் (அதனைப் பற்றி) அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டு (த்தெரிந்து) க்கொள்ளுங்கள். (அந் நஹ்ல் : 43)
மார்க்க விடயங்களுள் சந்தேகங்கள் ஏதும் ஏற்பட்டால் வேறு சில வழிமுறைகளையும் நீங்கள் கைக்கொள்ளல் வேண்டும்.
அதாவது, உங்களுக்கு அருகிலுள்ள இஸ்லாமிய நிலையங்கள், பள்ளிவாயில்களோடு தொடர்புகொண்டு மேற்படி உங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.
இவ்வாறான இடங்கள் மற்றும் அதன் தொடர்பிலக்கங்கள் என்பனவற்றை பின்வரும் இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

www.newmuslimguide.com
www.guide-muslim.com



புதியதொரு முஸ்லிம், தனக்கு அருகிலுள்ள இஸ்லாமிய நிலையங்களோடு தொடர்பினைக் கொண்டிருப்பதோடு, நம்பகமான புத்தகங்கள் மற்றும் இணையத்தளங்களை பார்வையிட வேண்டும்.

## › இஸ்லாம் ஒரு நடுநிலை மார்க்கம்

இஸ்லாம், மார்க்க விடயங்களை செயற்படுத்தும் போது தீவிரப் போக்கையோ அல்லது கவனயீனப்போக்கையோ கைக்கொள்ளாது நடுநிலைக் கொள்கையை கடைபிடிக்கின்ற மிதமான மார்க்கமாகும்.

இந்த நடுநிலைப் போக்கானது இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்திலும் வியாபித்துக் காணப்படுகின்றது.

இதன் காரணமாகவே, இறைத்தூதர், அவர்களின் தோழர்கள் மற்றும் மு:.மின்கள் அனைவரும் நடுநிலையை கடைபிடிக்க வேண்டுமென அல்லாஹ் தனது பலமான கட்டளையைப் பிறப்பித்துள்ளான்.

இது, பின்வரும் இரண்டு விடயங்களைச் செய்வதன் மூலம் இடம்பெறும்.

1. மார்க்கத்தில் மிதமிஞ்சிய போக்கினைக் கைக்கொள்வதைத் தவிர்த்தல்.
2. மார்க்கத்தை நிலையாக பின்பற்றலும் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களை மதித்தலும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: (நபியே!) உமக்கேவப்பட்ட பிரகாரம் நீரும், உம்முடன் பச்சாதாபப் பட்டோரும், (நேரான வழியில்) உறுதியாக இருங்கள்; (இதில்) நீங்கள் வரம்பு மீறியும் விடாதீர்கள்; நிச்சயமாக, அவன் நீங்கள் செய்பவற்றைப் பார்க்கிறவன். (ஹூத் : 112)

சத்தியத்தைப் பின்பற்றுவதில் தீவிரப் போக்கை கைக்கொள்ளாது மார்க்கத்தில் நிலைத்திருப்பதோடு அதிலே கூடிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையே இந்த வசனம் உணர்த்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு ஹஜ்ஜுக் கிரியைகளைப் போதித்துக்கொண்டிக்கும் போது மார்க்கத்தில் மிதமிஞ்சியப் போக்கை கடைபிடிப்பது பற்றி அவர்களுக்கு பின்வருமாறு எச்சரித்ததோடு முன்னைய சமூகங்கள் அழிக்கப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது என்றும் விளக்கினார்கள். மார்க்கத்தில் மிதமிஞ்சி நடப்பதை உங்களுக்கு நான் எச்சரிக்கின்றேன். இவ்வாறு நடந்துகொண்டமையினால் உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமூகங்கள் அழிந்து போயினர். (இப்னு மாஜாஹ் 3029)

இதன் காரணமாகவே, நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்: வணக்க வழிபாடுகளுள் உங்களுக்கு முடியுமானதைச் செய்யுங்கள். (புகாரி 1100)

நபி (ஸல்) அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட இறைத் தூதின் யதார்த்த நிலை பற்றித் தெளிவுபடுத்தும் போது, இது மக்களின் இயலுமைக்கு மேலாக அவர்களுக்கு சுமைகளை ஏற்படுத்தாது மார்க்கத்தை அறிவுபூர்வமாகவும் இலகுவாகவும் கற்றுக்கொடுக்கவே வந்துள்ளது என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் என்னை குரூரமானவனாகவோ அல்லது கடின விடயங்களைப் போதிப்பவனாகவோ அல்லாமல் இலகு அம்சங்களைப் போதிக்கும் ஓர் ஆசிரியனாகவே அனுப்பியுள்ளான்.

(முஸ்லிம்: 1478)



## > மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியதொரு மார்க்கமே இஸ்லாம்

பள்ளிவாயில்களில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படுகின்ற தொழுகை, பிரார்த்தனை போன்ற ஆன்மீகத் தேவைகள் மாத்திரமல்ல இஸ்லாம்.

இதனைப் பின்பற்றுபவர்களால் மட்டும் நம்பப்படுகின்ற வெற்றுக் கருத்துக்களாகவோ நம்பிக்கைகளாகவோ ஆகாது.

வெறுமனே இதுவொரு பரந்த பொருளாதார முறைமையாகவுமில்லை.

சமூகக் கட்டமைப்பையும் ஒழுங்கையும் உருவாக்குவதற்கான சட்டவிதிமுறைகளோ கொள்கைத் தொகுப்புக்களோ அல்ல.

பிறமக்களோடு உறவாடவேண்டிய ஒழுக்க பண்பாட்டு அம்சங்கள் அடங்கியதொரு தொகுப்பு மாத்திரமல்ல.

மாறாக, இது மனித வாழ்வின் சகல துறைகளுக்குமான முழுமைபெற்றதொரு வாழ்க்கைத் திட்டமாகும். இது மட்டுமல்ல, இதுவல்லாத வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

முழுமைபெற்ற இந்த அருட்கொடையை முஸ்லிம்களுக்கு அவன் பொருந்தி ஏற்றுக் கொண்ட மார்க்கமாகவும் ஆக்கியிருக்கின்றான். இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை பரிபூரணமாக்கி வைத்து விட்டேன்; என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது முழுமையுமாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக்கொண்டேன். (அல் மாஇதா : 3)

இணைவைப்பவர்களுள் ஒருவர் நபித்தோழர் ஸல்மான் அல் பாரிஸி (றழி) அவர்களைப் பார்த்து பரிகாசமாக உங்களது தோழர் (நபியவர்கள்) மலசலம் கழிப்பதற்கான ஒழுக்கங்கள் உட்பட அனைத்து விடயங்களையுமே உங்களுக்கு கற்றுத் தருகின்றாரே" என்று கூறிய போது நபித் தோழர் அவர்கள் பெருமையோடு பின்வருமாறு பதிலளித்தார்கள்: "ஆம், உண்மையாகவே அவர் எமக்கு அனைத்தையும் கற்றுத்தருகின்றார்" என்று கூறிவிட்டு, மலசலம் கழிப்பதற்கான இஸ்லாத்தின் ஒழுங்கு விதிகளை அவருக்கு விளக்கப்படுத்திக் காட்டினார்.(முஸ்லிம்: 262)



> இஸ்லாம் மனித வாழ்வின் சகல துறைகளுக்குமான முழுமையான வழிகாட்டலை வழங்கும் ஒரு மார்க்கமாகும்.

> இஸ்லாம் அளவிடப்பட வேண்டியது அதன் கொள்கைகளை வைத்தே அன்றி சில முஸ்லிம்களின் பிழையான நடத்தைகளைக் கொண்டல்ல.

உடல் நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ சிகிச்சையை மேற்கொள்கின்ற ஒரு மருத்துவரையோ அல்லது மோசமான பண்பியல்புகளோடு மக்களுடன் பழகுகின்ற ஒரு ஆசிரியரையோ நீங்கள் பார்த்தால், (உண்மையில், இவர்கள் பெற்றிருக்கும் அறிவிற்கும் சமூக அந்தஸ்த்திற்கும் இச்செயற்பாடுகள் முரணானது என்பதை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்வதோடு வியந்துபோய் எதிர்க்கவும் செய்வீர்கள்.)

ஆனால், இது மனித இனத்திற்கு மருத்துவக் கலை எவ்வளவு தூரம் முக்கியமானது என்ற உங்கள் மனதில் இருக்கின்ற சிந்தனையையோ அல்லது சமூகத்திலும் மனித நாகரீகத்திலும் அறிவு எனும் அம்சம் பெற்றிருக்கும் உயர் அந்தஸ்த்து பற்றியதான எண்ணக்கருவையோ எந்த வகையிலும் மாற்றிவிடுவதில்லை. குறித்த அந்த மருத்துவர் அல்லது ஆசிரியர் அவர் பெற்றிருக்கும் தொழில் அல்லது தகைமை என்பவற்றை பிழையாகப் பிரதிநிதிப்படுத்துகின்றார் என்ற முடிவுக்குத் தான் இறுதியில் வருவீர்கள்.

இவ்வாறே, மோசமாக நடந்துகொள்கின்ற சில முஸ்லிம்களைப் நாம் பார்க்கின்றோம். இவர்களின் இந்நடத்தைகள் இஸ்லாத்தின் உண்மையான தூய கொள்கைகளைப் பிரதிபலிப்பவைகள் அல்ல. இவைகள் இஸ்லாத்தோடு எவ்வகையிலும் தொடர்பில்லாத பிழையான வழக்காறுகள், பண்பாடுகள், மனிதப் பலவீனங்கள் என்பவற்றின் வெளிப்பாடுகளாகும். எப்படி அந்த மருத்துவர் அல்லது ஆசிரியரின் மோசமான நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மருத்துவத்தை அல்லது கல்வித்துறையை பிழையாகக் கருதவில்லையோ அவ்வாறே முஸ்லிம்களின் சில மோசமான செயற்பாடுகளை வைத்துக் கொண்டு இஸ்லாத்தையும் குறைத்து மதிப்பிடக் கூடாது.



## > ஐம் பெரும் முக்கிய தேவைகள்

மனிதன் இவ்வுலகில் கௌரவமானதொரு வாழ்க்கையை மேற்கொள்வதற்கு இன்றியமையாதவைகளாக கருதப்படுகின்ற பெரும் நலன்களையே இவைகள் குறிக்கின்றன. தெய்வீகம் சார்ந்த அனைத்து மார்க்கங்களும் இவைகளைப் பாதுகாக்குமாறு உத்தரவிட்ட அதேவேளை, இவைகளுக்கெதிரான சக்திகளை தடுத்தும் இருக்கின்றன.

ஒரு முஸ்லிம் இவ்வுலகில் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்து ஈருலக நலனுக்காக உழைப்பதற்கும்,

ஒன்றை மற்றுமொன்று பலப்படுத்தும் கட்டடத்தைப் போன்றும், ஓர் உறுப்பு வேதனைப்படுகின்ற போது ஏனைய உறுப்புக்கள் அனைத்தும் கண்விழித்து, காய்ச்சலினால் வேதனையைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் உடலைப் போன்றும் முஸ்லிம் சமூகம் ஒற்றுமையுடன் ஒரே சமூகமாக வாழ்வதற்கும் இஸ்லாம் இந்நலன்களை பாதுகாத்திருக்கின்றது. பின் வரும் இரண்டு விடயங்களைச் செய்வதன் மூலம் இந்த ஐம்பெரும் தேவைகளைப் பாதுகாப்பது சாத்தியமாகும்.

1. இவைகளை நிலைநாட்டலும் பாதுகாத்தலும்
2. இவைகளுள் குறைகள் ஏற்படாதவாறு பாதுகாத்தல்



> அல்லாஹ் தடைசெய்தவைகளுள் ஒன்றைச் செய்தாவது மனித உயிரைப் பாதுகாக்குமாறு அல்லாஹ் பணித்திருக்கின்றான்.

1 மார்க்கம்:

இதற்காகவே அல்லாஹ் மனிதனைப் படைத்தான். மேலும் இதனை பாதுகாக்கவும் இது பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் இறைத்தூதர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவ்வாறானதொரு பாரிய விடயமே இது. இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூ தரை அனுப்பியிருக்கிறோம்; (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்,) அல்லாஹ்வையே வணங்குங்கள்; (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்.(என்று கூறினார்கள்) (அந் நஹ்ல் : 36)

மார்க்கத்தில் களங்கம் ஏற்படுத்தி அதன் தூய்மையில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற இணைகற்பித்தல், குருட்டு நம்பிக்கைகள், பாவங்கள், தடைசெய்யப்பட்டவைகள் போன்ற அம்சங்களிலிருந்து அதனைப் பாதுகாப்பதில் இஸ்லாம் கவனம் செலுத்தியிருக்கின்றது.




2 உயிர்:

தடுக்கப்பட்ட ஒரு பாவத்தைச் செய்தாவது மனித உயிரை பாதுகாக்குமாறு அல்லாஹ் பணித்துள்ளான். ஏனெனில், இது நிர்ப்பந்த நிலையின் போது மன்னிக்கப்படுகின்றது. இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : ஆகவே எவரேனும் பாவம் செய்யும் நோக்கமில்லாமலும் வரம்பு மீறாமலும் இருந்து, (இவற்றைப் புசிக்க) நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டால் அவர் மீது குற்றமாகாது நிச்சயமாக அல்லாஹ், மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்." (அல் பகறா : 173)

ஓர் ஆன்மாவை துன்புறுத்துவது அல்லது கொலை செய்வதை அல்லாஹ் தடைசெய்திருக்கின்றான். இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :(உங்களை நீங்களே ஆபத்திற்குள்ளாக்கிக் கொண்டு) உங்களது கரங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள். (அல் பகார : 195)

ஒருவன் எந்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும்,அவனை எதுவித நியாயமுமின்றித் தாக்குவதிலிருந்து தடுப்பதற்கான வரையறைகளையும் தண்டனை முறைகளையும் இஸ்லாம் சட்டமாக்கியிருக்கின்றது. அல்லாஹ் இதனையே இவ்வாறு குறிப்பிடுகின்றான்: விசுவாசங் கொண்டோரே! கொலையுண்டவர்கள் விஷயத்தில் (பகரமாக) பழி வாங்குவது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது.

(அல் பகறா : 178)

3 அறிவு:

அறிவு அல்லது சிந்தனையைப் பாதிக்கின்ற அனைத்து விடயங்களையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஏனெனில், இது எமக்கு வழங்கப்பட்ட அல்லாஹ்வின் மிகப்பெரும் அருட்கொடைகளுள் ஒன்றாகும். மனிதனின் கௌரவம் இதிலே தங்கியிருப்பதோடு, இவனை வேறு படைப்புக்களிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும் தனித்துவமானதொரு அம்சமாகவும் உள்ளது. இதன் காரணமாகவே,

மனிதன் உலகிலும் மறுமையிலும் தனது செயற்பாடுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவனாக உள்ளான்.

இதனால், அல்லாஹ் அனைத்து விதமான மதுசாரங்கள், போதைப் பொருட்களையெல்லாம் ஹராமாக்கியதோடு அவைகளை ஷைத்தானின் அசுத்தமான செயலாகவும் ஆக்கியிருக்கின்றான். இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: விசுவாசுங்கொண்டோரே! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், (வணக்கத்திற்காக) நடப்பட்டுள்ளவை (களானசிலை)களும், குறிபார்கும் (சூதாட்ட) அம்புகளும் (ஆகிய இவையாவும்) ஷைத்தானுடைய செயலிலுள்ள அருவருக்கத்தக்கவையாகும் ஆகவே, இவைகளைத் தவிர்ந்துக் கொள்ளுங்கள்; (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள். (அல் மாஇதா : 90)

4 சந்ததி:

சந்ததிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று இஸ்லாம் பலமான அழுத்தத்தைக் கொடுப்பதோடு அதிலே அதிகூடிய கரிசனையையும் காட்டுகின்றது. பண்பாடுகளைக் கொண்ட பரம்பரையினர் வாழும் உயர் குடும்பங்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தியுள்ளது. இது பின்வருவன போன்ற பல்வேறு சட்டங்களிலிருந்து தெரியவருகின்றது.

திருமணம் செய்வதையும் அதனை அதிகூடிய செலவுகளின்றி எளிமையாக மேற்கொள்வதையும் இஸ்லாம் தூ ண்டுகின்றது. இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: உங்களில் வாழ்க்கைத் துணையில்லாதவருக்கு திருமணம் செய்து வையுங்கள்; (அந் நூ ர் : 32)

பாவமானதும் முறைகேடானதுமான அனைத்துவித உறவுகளையும் அவைகளுக்கு இட்டுச்செல்கின்ற வழிகளையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்: (விசுவாசங் கொண்டோரே!) நீங்கள் விபச்சாரத்தையும்



நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது, மானக்கேடானதாக இருக்கிறது. இன்னும், அது (மனித குலத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும்) வழியால் மிகக் கெட்டது. (அல் இஸ்ரா.: : 32)

ஒருவர், மனிதர்களின் பரம்பரை மூலம் குறித்து சந்தேகிப்பதை இஸ்லாம் தடைசெய்திருப்பதோடு அதனைப் பெரும் பாவங்களுள் ஒன்றாகவும் கருதுகின்றது. இப்பாவத்திற்கான வேதனையை மறுமையில் அனுபவிப்பதற்கப்பால் இவ்வுலகிலும் குறிப்பிட்டதொரு தண்டனை வழங்கப்படுமெனவும் அல்லாஹ் எச்சரித்துள்ளான்.

மனிதர்களது கௌரவத்தை அவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் அவர்களைப் பணிக்கின்றான். ஒருவர், தனது மானத்தையோ அல்லது குடும்ப கௌரவத்தையோ பாதுகாக்கப்போராடி கொலைசெய்யப்பட்டுவிட்டால், அவர் அல்லாஹ்வின் பாதையில் போராடி உயிர்த்தியாகம் செய்த ஷஹீதாக் கணிப்படுகின்றார்.


## 5 சொத்து:

சொத்துக்களைத் திரட்டுவதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் முனைப்புக்காட்ட வேண்டுமென்று இஸ்லாம் வலியுறுத்தும் அதேவேளை கொடுக்கல் வாங்கல், பணப்பரிமாற்றங்கள் போன்ற வர்த்தக நடவடிக்கைகளை அனுமதிக்கப்பட்ட ஒழுங்கில் மேற்கொள்ளுமாறும் கூறுகின்றது.


சொத்துக்களைப் பாதுகாக்கும் முகமாக வட்டி, களவு, மோசடி, நம்பிக்கைத்துரோகம், பிழையான வழியில் மக்களின் சொத்துக்களைச் சூறையாடுதல் போன்ற அனைத்து தீய வழிகளையும் இஸ்லாம் ஹராமாக்கியிருக்கின்றது. இப்பாதக செயல்களில் ஈடுபடுவோருக்கு மிகவும் கடினமான தண்டனைகள் உண்டெனவும் அல்-குர்ஆன் எச்சரிக்கின்றது.



> ஒருவரின் கௌரவம் மற்றும் பரம்பரை என்பவற்றைப் பாதுகாத்தல் இஸ்லாமியச் சட்டங்களின் மிக உன்னத இலக்குகளுள் ஒன்றாகும்.



# எமது நம்பிக்கை



# 1

நபிமார்கள் அவரவர் சமூகங்களுக்கு கொண்டு வந்த இறைத்தூதுகள் அனைத்தும் அல்லாஹ்விற்கு இணைகற்பிக்காது அவன் ஒருவனையே வணங்க வேண்டும் மேலும், அவனல்லாத ஏனையவைகளை வணங்காது நிராகரிக்க வேண்டும் என்ற ஒரே கருத்தினையே முன்வைத்தன.

உண்மையில் "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்" என்பதன் கருத்தும் இதுவே. இதனை மொழிவதன் மூலமே ஒருவன் இஸ்லாத்தில் நுழைய முடியும்.

## உள்ளடக்கம்


- நம்பிக்கைச் சாட்சியங்கள்: கருத்துக்களும் அவை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களும்.
  - ஏன் இந்த "லா இலாஹ இல்லல்லாஹ்" ?
  - "லாஇலாஹ இல்லல்லாஹ்"என்பதன் கருத்து.
  - லாஇலாஹ இல்லல்லாஹ்வின் கூறுகள்.
- முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி கூறுதல்.
  - நபி (ஸல்) அவர்களைப் பற்றித் அறிந்துகொள்ளல்.
  - முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி கூறுதல்.
- ஈமானின் ஆறு தூண்கள்
- வணக்கம் (இபாதா) என்பதன் பொருள் என்ன?
- அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் (ஷிர்க்)
- அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் அவனது பண்புகளை நம்புதல்.
- மலக்குமார்களை நம்புதல்.
- இறை வேதங்களை நம்புதல்.
- இறைத்தூதர்களை நம்புதல்.
- இறுதி நாளை நம்புதல்.
- விதியை நம்புதல்.

## > நம்பிக்கைச் சாட்சியங்கள்: கருத்துக்களும் அவை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களும்.

*அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்துக்குரிய (இறைவ)ன் யாரும் இல்லையென்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் ஆவார் என்றும் சாட்சி கூறுகின்றேன்.*

### ஏன் இந்த "லா இலாஹ இல்லல்லாஹ்" ?

இதுவே ஒரு முஸ்லிமின் முதற் கடமை. இஸ்லாத்தில் நுழையவிரும்பும் ஒருவர், இதனை நம்பி வாயினால் மொழிதல் வேண்டும்.

ஏனெனில், ஒருவர் நம்பிக்கை கொண்ட நிலையில் அல்லாஹ்வின் பொருத்தத்தை மாத்திரம் எதிர்பார்த்து இதனைக் கூறினால், அவரை நரகிலிருந்து பாதுகாப்பதற்கு இதுவே காரணமாய் அமைந்துவிடுகின்றது.

இதனையே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடிய நிலையில் ஒருவர் இக்கலிமாவைக் கூறினால், அவருக்கு அல்லாஹ் நரகை ஹராமாக்கிவிடுவான்." (அல் புகாரி : 415)

மேலும், ஒருவர் இக்கலிமாவை நம்பிய நிலையில் இதனை மொழிந்தவாறு மரணித்தால், அவர் சுவனவாதிகளுள் ஒருவராக கணிக்கப்படுவார்.

இதனை நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாருமில்லை என்பதை அறிந்த நிலையில் ஒருவர் மரணித்தால், அவர் சுவனம் நுழைவார்." (அஹ்மத் : 464)

எனவே, இதனைப் பற்றி அறிந்துகொள்வது ஒரு முஸ்லிமின் மீதுள்ள மிகப்பெரிய முக்கியமான கடமையாகும்.

### "லாஇலாஹ இல்லல்லாஹ்"என்பதன் கருத்து.

வணங்கப்படுவதற்குரிய உண்மையான இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவரும் இல்லையென்பதே இதன் அர்த்தமாகும்.

இவ்வாறு சொல்வதானது, தெய்வீகப் பண்புகளை அல்லாஹ்வைத் தவிர வேறெவருக்கும் வழங்க முடியாது. மேலும், இணையேதும் கற்பிக்காத நிலையில் இவைகளை முழுமையாக அல்லாஹ்விற்கு மாத்திரமே உறுதியாக வழங்குதல் வேண்டும் என்பதையே உணர்த்துகின்றது.

"இலாஹ்" என்ற அறபுப் பதமானது, "வணங்கப்படும் இறைவன்"எனும் பொருளைக் குறிப்பதற்குப் பயண்படுத்தப்படும்.

எனவே, ஒருவன் ஏதாவது ஒன்றை வணங்கினால், அவன் அல்லாஹ்வை விடுத்து அதனையே கடவுளாக எடுத்துக் கொண்டான் என்றே கருதப்படும்.

"அல்லாஹ்" என்ற உண்மையானதோர் இறைவனைத் தவிரவுள்ள அனைத்துக் கடவுள்களும் போலியானவைகளே.

ஆகவே, வணங்குவதற்குத் தகுதியானவன் அவன் மாத்திரமே. மனித உள்ளங்கள் அன்போடும், கௌரவத்தோடும், பணிந்தும், பயந்தும் அவனை மாத்திரமே வணங்குகின்றன.

அவன் மீது நம்பிக்கை கொண்டு அவன் மாத்திரமே உதவிக்கு அழைக்கப்படுவதோடு, காரியங்கள் அனைத்தும் அவனிடமே ஒப்படைக்கப்பட்டு அவனுக்கே தொழுகைகளும் நேர்ச்சைகளும் செய்யப்படுகின்றன.

எனவே, அவனுக்கு மாத்திரமே மனத் தூய்மையோடு வணக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"இன்னும், அல்லாஹ்வை அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக, (அனைத்து தீயவழிகளை விட்டும் நீங்கி இஸ்லாத்தின் பால்) சாய்ந்தவர்களாக" (அல் பையினா : 5)

"லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற திருக்கலிமாவின் அர்த்தத்தை கவனத்திற்கொண்டவராக, மனத்தூய்மையோடு ஒருவர் அல்லாஹ்வை வணங்கினால் அவர் மணமான, கௌரவமான, சுபீட்சமான, சந்தோஷகரமானதொரு வாழ்வைப் பெற முடியும்.

அல்லாஹ் ஒருவனை மாத்திரம் வணங்குவதன் மூலமே மனித உள்ளங்கள் அமைதியையும், சந்தோஷத்தையும், மன ஆறுதலையும் பெறுகின்றன.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"ஆண் அல்லது பெண் அவர் விசுவாசங்கொண்டவராக இருக்க, யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம்." (அந் நஹ்ல் 97)

## "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதன் கூறுகள்:

உயர்ந்த இத்திருக்கலிமாவானது, இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது. இதன் கருத்துக்களையும் இது கொண்டிருக்க வேண்டிய அம்சங்களையும் புரிந்துகொள்வதற்கு இவ்விரு கூறுகளையும் அவசியம் தெரிந்து கொள்ளல் வேண்டும் :

1. முதற் பகுதி: "லாஇலாஹ" : ( எந்தவொரு இறைவனும் இல்லை) என்பதாகும். அல்லாஹ் அல்லாதவைகளை வணங்குவதனை இது மறுத்துரைப்பதோடு,அவனுக்கு இணை கற்பிப்பதனையும் தகர்த்தெறிகின்றது. மேலும், வேறு கடவுள்களுக்கு வணக்கங்கள் மேற்கொள்வதனை நிராகரிக்குமாறும் வலியுறுத்துகின்றது.அந்தக் கடவுள் மனிதனாகவோ, மிருகமாகவோ, சிலையாகவோ, கோளாகவோ அல்லது வேறேதும் ஒன்றாகவோ இருக்கலாம்.

2. இரண்டாம் பகுதி: "இல்லல்லாஹ்" (அல்லாஹ்வைத் தவிர) என்பதாகும். தொழுகை, பிரார்த்தனை, பரம்சாட்டுதல் போன்ற அனைத்து வகை வணக்கங்ளையும் அல்லாஹ்வுக்காக மாத்திரம் நிறைவேற்றல்.

அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காத நிலையில்,அனைத்து வகை வணக்கங்களையும் அவன் ஒருவனுக்காக மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒருவர் அந்த வணக்கங்களுள் ஒன்றை வேறொருவருக்காகச் செய்தால், அல்லாஹ்வுக்கு அவர் இணை கற்பித்துவிட்டார்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"மேலும், (நபியே) எவன் அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரிய நாயனை அழைக்கின்றானோ அவனுக்கு, அதைப் பற்றி யாதொரு சான்றும் இல்லை. அவனுடைய கணக்கெல்லாம் அவனுடைய இரட்சனிடத்தில்தான்(உண்டு) நிச்சயமாக நிராகரிக்கக்கூடியவர்கள் வெற்றிபெற மாட்டார்கள்." (அல் மு.்.மினூன் 117)

அல்லாஹ்வின் பின்வரும் வசனங்களில் "லா இலாஹ இல்லல்லாஹ்" எனும் திருக்கலிமாவின் கருத்தும் அதன் கூறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

"ஆகவே, எவர் தாகூத்தை (ஷைத்தானை)நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ அவர்,திட்டமாக அறுந்து போகாத பலமான கயிற்றைப் பற்றிப்பிடித்துக்கொண்டார்." (அல் பகறா : 256)

அல்லாஹ்வின் கூற்றாகிய (فمن يكفر بالطاغوت) என்பது கலிமாவின் முதற்கூறான "லா இலாஹ" என்பதன் கருத்தையும் (يؤمن بالله) என்ற அல்லாஹ்வின் கூற்றானது கலிமாவின் இரண்டாம் கூறான "இல்லல்லாஹ்" என்பதன் கருத்தையும் கொடுக்கின்றது.

## நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிந்துகொள்ளல்



### 1 பிறப்பு :

கி.பி. 570 ஆம் ஆண்டு மக்காவில் தந்தையை இழந்த ஓர் அநாதையாக நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

சிறு வயதினில் தாயை இழந்த இவர்கள் தனது பாட்டனார் அப்துல் முத்தலிபின் பராமரிப்பில் வாழ்ந்தார்கள். அவரின் மரணத்தை அடுத்து அவரின் பெரிய தந்தை அபூ தாலிபிடம் வாலிப வயது வரை வளர்ந்தார்கள்.



### 2 வாழ்வும் வளர்ச்சியும் :

நுபுவ்வத்திற்கு முன்னர் (கி.பி. 570 - 610) நாற்பது வருடங்களாக அவருடைய குறைஷ் வம்சத்தாரிடையே வாழ்ந்து வந்தார்கள். அக்காலப் பகுதியில் அவர் பண்பாட்டுக்கும் தனித்துவத்திற்கும் உதாரணப் புருஷராகத் திகழ்ந்தார்கள்.

அம்மக்களிடையே இவர்கள் "உண்மையாளர்", "நம்பிக்கையாளர்" என்ற சிறப்புப் பெயர்கள் கொண்டு மிகவும் பிரபல்யமாக அழைக்கப்பட்டார்கள்.

அப்போது இவர்கள் ஆடுகளை மேய்க்கும் இடையராகவும் பின்னர் ஒரு வர்த்தகராகவும் தொழிற்புரிந்து வந்தார்கள்.

இஸ்லாத்திற்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் இப்றாஹீம் நபியின் மார்க்கத்தின் அடிப்படையில் தூய முறையில் அல்லாஹ்வை வணங்கி வந்ததோடு, சிலை வணக்கம் மற்றும் அது சார்ந்த ஆசாரங்கள் என்பனவற்றை மறுதலித்தும் வந்தார்கள்.


**எமது நபியின் பெயர் :**

முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அப்தில் முத்தலிப் இப்னு ஹாஷிம் அல் குறைஷி. நபி (ஸல்) அவர்கள் அறபியர்களுள் மிகச் சிறந்த பரம்பரையைச் சார்ந்தவர்கள்.

**மனித சமூகம் அனைத்திற்குமான அல்லாஹ்வின் ஒரு தூதர் :**

அல்லாஹ் எமது நபி (ஸல்) அவர்களை அனைத்து நிற, இன மக்கள் எல்லோருக்கும் தூதராக அனுப்பியிருக்கின்றான். அவருக்கு கட்டுப்பட்டு நடப்பதை மனிதர்கள் அனைவரினதும் கடமையெனவும் அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான்.
அல்லாஹ் கூறுகின்றான்:
"மக்களே! நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன் என நபியே நீங்கள் கூறுங்கள்." (அல் அ.்.றாப் : 158)

## 3 தூதுப் பணி :



நபி (ஸல்) அவர்கள் தனது நாற்பதாவது வயதினை நிறைவுசெய்த பின்னர், "ஜபலுன் நூர்" (மக்காவிற்கு அண்மையிலுள்ள ஒரு மலை) எனுமிடத்திலுள்ள "ஹிறா" குகையில் தனிமையிலிருந்துகொண்டு சமூகத்தைப் பற்றி ஆழமாக சிந்தித்து வந்ததோடு, அல்லாஹ்வை வணங்கியும் வந்தார்கள்.

இந்நேரமே, அல்லாஹ்விடமிருந்து வஹீ இறங்க ஆரம்பித்ததோடு, அல்குர்ஆனின் பின்வரும் முதலாவது இறைவசனம் அவருக்கு இறக்கியருளப்பட்டது. "படைத்த உங்கள் இறைவன் பெயரால் ஓதுவீராக"

இந்தத் தூது ஆரம்பித்தது முதற் கொண்டு மனித இனத்திற்கான அறிவொளி, இறைவழிகாட்டல் என்ற அம்சங்களைக் கொண்ட புதியதொரு யுகம் தோன்றிவிட்டதாக இவ்வசனம் இங்கு பிரகடனப்படுத்துகின்றது.

பிறகு, அல்குர்ஆன் நபியவர்கள் மீது 23 ஆண்டுகளாக தொடர்ந்தேர்ச்சையாக இறக்கியருளப்பட்டது.

## 4 ஆரம்பக் கட்டப் பிரசாரம் :

நபி (ஸல்) அவர்கள் தமது பிரசாரத்தை மூன்று வருடங்களாக இரகசியமாகவே மேற்கொண்டார்கள். பின்னர் அதனை பத்து வருடங்களாக பகிரங்கமாக முன்வைத்தார்கள்.

இக்காலப் பகுதியில் நபியவர்களும் அவர் தோழர்களும் அவரது கோத்திரமான குறைஷி களால் இழைக்கப்பட்ட பல்வேறு வகையான அநியாயம் மற்றும் கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

இந்நிலையில், ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவிற்கு வரும் மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு மதீனாவிலிருந்து வந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதோடு,மக்காவிலுள்ள முஸ்லிம்களும் மதீனாவை நோக்கி சிறுகச் சிறுக இடம்பெயர்ந்துசெல்ல ஆரம்பித்தனர்.

### நபியவர்கள் மீது அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது :

அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அல் குர்ஆன் எனும் தனது உன்னத வேதத்தை இறக்கியருளினான். இதில் எந்தவொரு இடத்திலும் பிழைகள் இடம்பெறவில்லை.

### முஹம்மத் (ஸல்) அவர்கள் நபிமார்கள் மற்றும் றஸூல்மார்களுள் இறுதியானவர் :

முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ் நபிமார்களில் இறுதியானவராக அனுப்பி வைத்தான். அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுவது போன்று இவருக்குப் பின்னர் எந்தவொரு நபியும் வரமுடியாது.

"எனினும் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களின் முத்திரையுமாவார்" (அல் அஹ்ஸாப் 40)




## 5 புலப்பெயர்வு (ஹிஜ்ரத்):

நபியவர்கள் தமது 53 வது வயதினில், அன்று "யத்ரிப்" என்று அழைக்கப்பட்டு வந்த "மதீனா" எனும் நகருக்கு நபியவர்கள் கி.பி 622 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்றார்கள்.

நபியவர்களின் பிரச்சாரத்தை எதிர்த்த குறைஷித் தலைவர்கள் சதி தெய்து இவரைக் கொலை செய்ய முயற்சித்த பிறகு தான் நபியவர்கள் மதீனா நோக்கிய இப்பயணத்தை மேற்கொண்டார்கள்.

அங்கு, நபியவர்கள் பத்து வருடங்கள் வாழ்ந்தார்கள். அக்காலப் பகுதியில் இவர்கள் மக்களை இஸ்லாத்தின் பால் அழைத்ததோடு, தொழுகை மற்றும் ஸகாத் உள்ளிட்ட இஸ்லாத்தின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுமாறும் முஸ்லிம்களைப் பணித்தார்கள்.




## 6 இஸ்லாத்தைப் பரப்புவதற்கான அவரது முயற்சிகள் :

நபி (ஸல்) அவர்கள் "ஹிஜ்ரத்" செய்த பிறகு (622 - 632) மதீனாவில் இஸ்லாமிய நாகரிகத்திற்கான அடித்தளமிட்டார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் சிறப்பம்சங்களை அவர்களிடையே நிலைநிறுத்தி, வர்க்கப் பகைமையினை இல்லாமற் செய்து அறிவொளியைப் பரப்பியதோடு, நீதி, நியாயம், சகோதரத்துவம், ஒத்துழைப்பு, ஒழுங்கமைப்பு என்ற அடிப்படையான சமூகக் கோட்பாடுகளையும் நிறுவினார்கள்.

சில வர்க்கத்தினர் இஸ்லாத்தை தீர்த்துக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர். இதன் விளைவாக பல்வேறு கைகலப்புக்களும் யுத்தங்களும் இடம்பெற்றன.

ஆனால் அல்லாஹ் அவனது மார்க்கத்திற்கும் அவன் தூதருக்கும் உதவிசெய்தான். பிறகு உயர்ந்த இம்மார்க்கத்தை மனப்பூர்வமாக ஏற்றுத் தெரிவுசெய்து, மக்காவிலும் இன்னும் பல நகரங்களிலும் வாழ்ந்த மக்களும் அறபுத்தீபகற்பத்தில் இருந்த பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களும் பாரிய அளவில் இஸ்லாத்தில் தொடராக இணைய ஆரம்பித்தார்கள்.



## 7 மரணம் :

நபியவர்கள் தமது தூதினை மக்களுக்கு எடுத்துரைத்து, தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பினையும் நிறைவேற்றி, இந்த மார்க்கம் எனும் அருட்கொடையை அவர்கள் மீது அல்லாஹ் முழுமைப்படுத்திய பிறகு ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு "ஸபர்" மாதம், அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள்.

இதன் விளைவாக ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு றபீஉல் அவ்வல் மாதம் திங்கள் பகல் (கி.பி.632/06/08 ஆம் திகதி) இறையடி எய்தினார்கள். அப்போது அவரின் வயது 63 ஆகும். மஸ்ஜிதுன் நபவிக்குப் பக்கத்திலுள்ள ஆயிஷா (றழி) அவர்களின் வீட்டிலேயே அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

## "முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்" என்று சாட்சி கூறுதல் என்பதன் கருத்து :

அவர் கூறிய செய்திகளை உண்மைப்படுத்தி, அவரால் ஏவப்பட்ட விடயங்களை செய்வதோடு, விலக்கப்பட்ட விடயங்களை செய்யாது தவிர்ந்து கொள்ளல்.

மேலும், அவர் எமக்கு கற்பித்த முறைப்படி அல்லாஹ்வை நாம் வணங்குதல் போன்ற அம்சங்களே இதன் பொருளாகக்கொள்ளப்படுகின்றது.

## "முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்" என்ற எமது நம்பிக்கை எவ்வாறான விடயங்ளை உள்ளடக்கியுள்ளது?

### 1 நபியவர்கள் கூறிய அனைத்து அம்சங்களையும் உண்மையென நம்புதல்.

இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

- மறுமை நாள், சுவனம் மற்றும் அதன் சுகங்கள், நரகம் மற்றும் அதன் தண்டனைகள். மேலும், ஏனைய மறைவான விடயங்கள்.
- மறுமை நாளில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் மற்றும் அதன் அடையாளங்கள். மேலும், இறுதி நாளின் போது நடக்கவிருக்கும் நிகழ்வுகள்.
- முன்னைய சமூகங்கள் பற்றிய செய்திகள், நபிமார்கள் மற்றும் அவர்களது சமூகங்களுக்கு மத்தியில் நடைபெற்ற நிகழ்வுகள்.



நபியவர்களின் சுன்னாவில் காணப்படும் உண்மையென உறுதிசெய்யப்பட்ட விடயங்களை நம்பி ஏற்றுக்கொள்வதானது, ஒரு முஸ்லிம் மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

**2** அவர்கள் பணித்த விடயங்களைச் செய்தலும் தடைவிதித்த விடயங்களை தவிர்த்துக்கொள்ளலும்.

இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கொள்கின்றது :

- நபி (ஸல்) அவர்கள் பணித்த விடயங்களை நடைமுறைப்படுத்தல்.

  மேலும், அல்லாஹ்விடமிருந்து பெற்றுக்கொண்ட "வஹீ" மூலமே அன்றி மனோ இச்சைப் படி எதனையும் அவர் பேச மாட்டார் என்று நம்புதல்.

  அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

  "எவர் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கீழ்படிந்து நடக்கின்றாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே கீழ்படிந்து விட்டார்." (அந் நிஸா 80)

- தீய பண்புகள் மற்றும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடத்தைகள் போன்ற அல்லாஹ் எமக்கு தடைசெய்த விடயங்களை விட்டு விலகிக் கொள்ளல்.

  இவ்வாறான (ஹராமான) அம்சங்களை அல்லாஹ் தடைசெய்திருப்பதற்கான பின்னணி, அவன் விரும்பும் தெய்வீக ஞானம் சார்ந்ததொரு காரணியாகவோ அல்லது எமது நலன் சார்ந்ததொரு காரணியாகவோ இருக்கலாம் என்று நாம் முழுமையாக நம்புதல் வேண்டும். எமக்கெனவுள்ள இந்நலன்கள் சில வேளைகளில் எமக்குப் புரியாத விடயங்களாகக் கூட இருக்கலாம்.

- அவருடைய உத்தரவுகளை செயற்படுத்துவதும் அவர் தடுத்தவைகளை விட்டு விலகி வாழ்வதும் ஈருலகிலும் எமக்கு நன்மையையும் சந்தோஷத்தையும் கொண்டு வந்து தரும் என்று உறுதியாக நாம் நம்புதல் வேண்டும்.

  இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

  "அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் கீழ்படியுங்கள் (அதனால்) நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்குள்ளாக்கப்படுவீர்கள்." (ஆலு இம்ரான் 132)

- ஒருவர் நபியவர்களின் உத்தரவிற்கு புறம்பாக நடந்தால், அவர் அல்லாஹ்வின் கடுமையான வேதனைக்கு உள்ளாகுவார் என்றும் நாம் உறுதியாக நம்ப வேண்டும்.

  இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

  "ஆகவே, (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்துவிடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்துவிடுவதையோ பயந்து கொண்டிருக்கவும்." (அந் நூர் 63)

**3** நபி (ஸல்) அவர்கள் வழங்கிய வழிகாட்டலுக்கேற்பவே அல்லாஹ்வை நாம் வணங்க வேண்டும்.

இது கட்டாயம் உறுதிசெய்து கொள்ளவேண்டிய போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

- அவரைப் பின்பற்றுதல்:-

  நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் உள்ளிட்ட முழு வாழ்வும் வழிகாட்டலும் எமது வாழ்வின் சகல துறைகளுக்குமான முன்மாதிரியாகும்.

  நபியவர்களது ஸுன்னாவை ஓர் அடியான் அதிகமாக பின்பற்றுமளவு அவன் அல்லாஹ்வின் நெருக்கத்தையும் உயர் அந்தஸ்த்துக்களையும் பெறுகின்றான்.

  இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

  (நபியே! மனிதர்களிடம்,) நீர் கூறுவீராக : "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னை நீங்கள் பின்பற்றுங்கள்; (அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அல்லாஹ் நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான்; அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; மிகக் கிருபையுடையவன்." (ஆலு இம்ரான் 31)

- இஸ்லாம் முழுமையானது :

  இஸ்லாத்தையும் அதன் சட்டங்களையும் எதுவிதக் குறையுமின்றி முழுமையாகவே நபியவர்கள் போதித்தார்கள்.

எனவே, நபி (ஸல்) அவர்கள் எமக்கு அறிமுகப்படுத்தாத எந்தவொரு வணக்கத்தையும் புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு எந்தவொரு மனிதனுக்கும் அனுமதி கிடையாது.

- **இஸ்லாம் எக்காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் பொருத்தமானது:-**

குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ள இஸ்லாத்தின் சட்டங்கள் மற்றும் போதனைகள் எக்காலங்களுக்கும் அனைத்து இடங்களுக்கும் பொருத்தமானதாகும்.

இல்லாமையிலிருந்து மனிதனை படைத்து, உருவாக்கிய அல்லாஹ்வை விட மனித நலன்களை வேறு எவரும் அறிய முடியாது.

- **நபியவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றுதல்:-**

வணக்கவழிபாடுகள் அல்லாஹ்வால் ஏற்று அங்கீகரிக்கப்படுவதற்கு, அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்தோடு நபியவர்கள் வழிகாட்டிய விதத்தில் அவைகள் செய்யப்படல் வேண்டும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கின்றாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும்; தன் இரட்சகனின் வணக்கத்தில், அவர் எவரையும் இணையாக்க வேண்டாம்."

(அல் கஹ்ப் : 110)

இந்த வசனத்திலுள்ள "صالحا" என்ற சொற்பிரயோகத்தின் கருத்து "நபியவர்களின் ஸுன்னாவை ஒத்ததாக இருத்தல்" வேண்டும் என்பதாகும்.

- **மார்க்க விடயங்களில் புதுமைகளைப் புகுத்துதல் ஹராமாகும்:-**

அல்லாஹ்வை வழிபடும் நோக்கில், நபியவர்களுடைய ஸுன்னாவில் இல்லாத ஒரு வணக்கத்தை புதிதாக உருவாக்கினால், அது மார்க்கத்திற்கு முரணானது. மேலும்,அதனைச் செய்பவர் பாவியாகக் கருதப்படுவதோடு அவரது அவ்வணக்கமானது மறுக்கப்பட்டு விடும். இதற்கு உதாரணமாக, மார்க்கம் அனுமதிக்காத விதத்தில் தொழுவதைக் குறிப்பிடலாம்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"ஆகவே, (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்துவிடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்துவிடுவதையோ பயந்து கொண்டிருக்கவும்." (அந் நூர் : 63)

"யாராவது இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்கினால், அது அல்லாஹ்வால் மறுக்கப்பட்டு விடும்." என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

(அல் புகாரி: 2550, முஸ்லிம்: 1718)




மார்க்கத்திலுள்ள வணக்க வழிபாடுகளில் கூட்டுதல், குறைத்தல் புதுமைகளைப் புகுத்துதல் போன்றவற்றை இந்த மார்க்கம் மிகக் கடுமையாக தடைசெய்திருப்பதற்குரிய நோக்கம், திரிவுபடுத்தல், மனிதர்களின் மனோ இச்சைகளுக்கு உட்படுதல் போன்ற அபாயங்களிலிருந்து இந்த மார்க்கத்தை பாதுகாப்பதாகும். இதற்கப்பால், இந்த மார்க்கம் மனித சமூகத்திற்கு பணி செய்து அதன் நிகழ்கால, எதிர்கால நிலைகளை வளர்க்கும் நோக்கில் இந்த பிரபஞ்சத்தில் புதுமைகளை ஏற்படுத்தி அதன் இரகசியங்களை கண்டுபிடிப்பதற்கு மனித உள்ளங்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

"அல்லாஹ்வை நம்புதல்" என்பதன் கருத்து :

அல்லாஹ் இருக்கின்றான் என்று உறுதியாக நம்புதல்.

மேலும், அவன் படைத்து, பரிபாலிப்பவன் என்றும் அவனுக்கு தெய்வீக நிலை, மற்றும் அழகிய திருநாமங்கள், நற்பண்புகள் என்பன உண்டு என்றும் ஏற்றுக்கொள்ளுதல்.

இந் நான்கு விடயங்கள் தொடர்பாகவும் பின்வருமாறு நாங்கள் விரிவாக கலந்துரையாடுவோம் :

## 1 "அல்லாஹ் இருக்கின்றான்" என்று நம்புதல் :

"அல்லாஹ் இருக்கின்றான்" என்று ஏற்றுக்கொள்வது மனிதனில் காணப்படுகின்ற இயல்பானதொரு பண்பாகும்.

இதனை நிறுவுவதற்கு எந்தவொரு ஆதாரமும் தேவையில்லை. இதன் காரணமாகவே மனிதர்களுள் பலர் அவர்களது சமய, கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால், அல்லாஹ் இருக்கின்றான் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.

எனவே, அவன் இருக்கின்றான் என்பதை எமது ஆழ்மனதினால் நாம் உணர்கின்றோம். இவ்வாறான எமது இயல்பான நம்பிக்கை மற்றும் மனித உள்ளங்களில் காணப்படுகின்ற அவனை வணங்கி வழிபட வேண்டுமென்ற இயல்பான மனோ நிலை என்பவற்றின் காரணமாக கஷ்டங்கள் மற்றும் ஆபத்துக்கள் ஏற்படுகின்ற போது அவனிடமே தஞ்சமடைகின்றோம். இவ்வுணர்வுகளை சில மனிதர்கள் அசட்டை செய்யவும் அகற்றி விடவும் முயற்சிக்கின்றனர்.

பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, கேட்பவர்களின் தேவைகள் பூர்த்செய்யப்படுகின்றன, நிர்க்கதிக்குள்ளானவர்களின் வேண்டுதல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன போன்ற பல்வேறு நிகழ்வுகளை நாங்கள் கண்டும் பார்த்தும் வருகின்றோம்.



"அல்லாஹ் இருக்கின்றான்" என்பதற்கான மிகப்பெரும் ஆதாரங்களுள் ஒன்று மனிதனே ஆவான்.
அல்லாஹ் மனிதனுக்கு தானமாக வழங்கியிருக்கும் மூளை, நுணுக்கம் நிறைந்த புலன்கள்,முழுமையும் ஒழுங்கும் நிறைந்த ஏனைய உறுப்புக்கள் (படைப்புக்கள்) என்பனவற்றை அறிவுக் கண்ணோடு ஆழமாக சிந்திப்பவர்கள் இவ்வுண்மையைப் புரிந்துகொள்வர்.
இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:
"மேலும்,உறுதியாகவிசுவாசம்கொண்டவர்களுக்கு,பூமியில் அத்தாட்சிகள் இருக்கின்றன. உங்களுக்குள்ளேயும் (பலஅத்தாட்சிள் இருக்கின்றன.அவைகளை) நீங்கள் (கவனித்து)பார்க்கமாட்டீர்களா"
(அத் தாரியாத் : 20 - 21)

இவைகள் அனைத்தும் அல்லாஹ் இருக்கின்றான் என்பதை பலமாக உறுதிப்படுத்துகின்ற சான்றுகளாகும்.

**அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கான இச்சான்றுகள் மிகத் தெளிவானதும் கணக்கிட முடியாததும் ஆகும்.**

**அவைகளுள் சில வருமாறு:-**

- ஒரு பொருள் இருக்கிறது எனில், நிச்சயம் அதை உருவாக்கிய ஒருவன் இருக்க வேண்டுமென்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே.

  சதாவும் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் பல்வகைப் படைப்புக்களான இவ்வுலகிலுள்ள அனைத்தையும் உருவாக்கிய ஒரு படைப்பாளன் நிச்சயம் இருக்கவே செய்கின்றான். சந்தேகமின்றி அவனே அந்த அல்லாஹ்.

  ஆகவே, ஒரு பொருள் எவ்வாறு தன்னை தானே உருவாக்கிக்கொள்ள முடியாதோ அவ்வாறே ஒரு படைப்பானதும், ஓர் படைப்பாளன் இன்றி உருவாக முடியாது.

  இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

  "அல்லது, அவர்கள் எப்பொருளுமின்றி (தாமாகவே) படைக்கப்பட்டுவிட்டனரா ? அல்லது அவர்கள் தான் படைக்கின்றவர்களா ?" (அத் தூர் : 35)

  படைப்பாளன் ஒருவனின்றி அவர்கள் படைக்கப்படவோ அல்லது தங்களை தாங்களே அவர்கள் படைத்துக்கொள்ளவோ இல்லை. மாறாக, அல்லாஹ் ஒருவனே அவர்களைப் படைத்தான் என்பதே இந்த வசனத்தின் கருத்தாகும்.

- வானம், பூமி, நட்சத்திரங்கள், மரஞ்செடிகொடிகள் உள்ளிட்ட படைப்புக்களைக் கொண்டு திட்டமிடப்பட்ட ஒழுங்கில் அமைக்கப்பட்டுள்ள இப்பிரபஞ்சமானது, படைப்பாளனாகிய அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதற்கு மிகப் பலமானதொரு சான்றாகும்.

  இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

  "ஒவ்வொரு பொருளையும் (படைத்து,) உறுதியாக ஒழுங்குபடுத்திய, அல்லாஹ்வுடைய (கலைத்திறன் நிறைந்த) செயலாக (அவ்வாறு நடைபெறும்)."

  (அந் நம்ல் : 88)

இந்த கோள்களும் நட்சத்திரங்களும் அவைகளுக்குரிய ஓடுபாதைகளிலிருந்து சற்றும் விலகாது, நிலையனதொரு ஒழுங்கில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

"சூரியன் அதற்குச் சந்திரனை (அணுகி)ப்பிடிக்க முடியாது; இரவு, பகலை முந்தவும் முடியாது. (இவ்வாறே கிரகங்கள், நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் (தனது) வட்டத்துக்குள் நீந்திச் செல்கின்றன." (யாசீன் : 40)

## 2 "அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகன்" என்று நம்புதல்:-

**"அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகனாக இருக்கின்றான்" என்று நம்புவதன் கருத்து:-**

அல்லாஹ் அனைத்தையும் படைத்து, பரிபாலித்து, உணவளிக்கும் இரட்சகனாகவும், அவைகளின் சொந்தக்காரனாகவும் இருக்கின்றான்.

மேலும், உயிர்கொடுப்பவனும் மரணத்தை ஏற்படுத்துபவனும் அவனே. சகல அதிகாரங்களும் அவனுக்கே உரியது. நலன்கள் அனைத்தும் அவன் கையிலேயே இருக்கின்றன. அனைத்தின் மீதும் அவன் ஆற்றலுள்ளவன். இவைகளைச் செய்வதற்கு அவனுக்கு எந்தவொரு துணையும் தேவையில்லை என்ற மேற்படி அம்சங்களை உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்ளுதல்.

அவ்வாறாயின், அல்லாஹ் அவனது செயற்பாடுகள் அனைத்திலும் தனித்துவமானவன் என்பதாகும்.

எனவே, ஒரு முஸ்லிம் பின்வருவனவற்றை நம்புதல் வேண்டும்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் படைத்தவன், அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. அவனை அன்றி வேறு படைப்பாளன் யாருமில்லை என்று நம்புதல்.
இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :
"அல்லாஹ் (வே) ஒவ்வொரு பொருளையும் படைக்கிறவன்." (அஸ் ஸுமர் : 62)

மனிதன் உருவாக்குவது என்பது, ஒரு பொருளை ஒரு நிலையிலிருந்து மற்றுமொரு நிலைக்கு மாற்றுதல் அல்லது ஒன்றுதிரட்டுதல், நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிக்குமே அல்லாமல் ஆரம்பமாகப் படைத்தலையோ இல்லாமையிலிருந்து உருவாக்குவதனையோ அல்லது மரணித்த பிறகு உயிர்கொடுப்பதனையோ குறிக்காது.
அவன் ஒருவனே, அவனது அனைத்துப் படைப்பினங்களுக்கும் உணவளிப்பவன், அவனையன்றி வேறெவரும் இதனைச் செய்ய முடியாது என்று நம்புதல். இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்: "பூமியிலுள்ள எந்த ஊர்வனமும் அவற்றின் உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்தே தவிர இல்லை." (ஹூத் : 6)



உலகிலுள்ள அனைத்திற்கும் உண்மையான சொந்தக்காரன் அவன் மாத்திரமே. அவனல்லாத வேறு யாரும் உண்மையான சொந்தக்காரர்கள் அல்லர் என்று நம்புதல்.
இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :
"வானங்களுடைய, மற்றும் பூமியுடைய இன்னும் இவைகளிலுள்ள யாவற்றினுடையவும் ஆட்சி, அல்லாஹ்வுக்கே உரியது." (அல் மாஇதா : 120)
அனைத்தையும் நிர்வகிப்பவன் அவன் மாத்திரமே அவனையன்றி வேறொரு நிர்வாகி கிடையாது என்று நம்புதல்.
இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்: "வானத்திலிருந்து பூமிவரை உள்ள காரியத்தை அவன் நிர்வகிக்கின்றான்." (அஸ் ஸஜதா : 5)
மனிதன், தனது வாழ்வு மற்றும் அவனது சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதானது, அவனுக்குச் சொந்தமான முடியுமான அவன் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களோடு மாத்திரம் வரையறுக்கப்படுகின்றது. அது சிலவேளைகளில் வெற்றி அடையலாம் அல்லது தோல்வியைச் சந்திக்கலாம். ஆனால், படைப்பாளனாகிய அல்லாஹ்வின் நிர்வாகம் முழுமையானது தங்கு தடையின்றி செயற்படக்கூடியது அதனோடு எதுவும் முரண்படமுடியாது.
இந்நிருவாகத்தின் பிடியிலிருந்து எதுவும் வெளிநடப்புச் செய்யமுடியாது.
இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :
"படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியதெனத் தெரிந்து கொள்ளுங்கள்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகிவிட்டான்." (அல் அஃறாப் : 54)

அவன் ஒருவனே அவனது அனைத்துப் படைப்பினங்களுக்கும் உணவளிப்பவன், அவனையன்றி வேறெவரும் இதனைச் செய்ய முடியாது என்று நம்புதல்.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"பூமியிலுள்ள எந்த ஊர்வனமும் அவற்றின் உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்ததே தவிர இல்லை." (அல் ஹூத் 6)

நபியவர்களது கால அறபு இணைவைப்பாளர்கள் அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகன் என்பதை நம்பியிருந்தனர்.

அனைத்தையும் படைத்து, நிர்வகிக்கின்ற எஜமான் அல்லாஹ் ஒருவனே என்று நபியவர்களது காலத்தில் வாழ்ந்த இறைநிராகரிப்பாளர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். இதனை ஏற்றுக் கொள்வது மாத்திரம் அவர்களை இஸ்லாத்தில் நுழையச் செய்யவில்லை.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"மேலும் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவன் யார் ? என்று (நபியே!) நீர் அவர்களைக் கேட்பீராயின் அ(தற்க)வர்கள், "அல்லாஹ்" என்று நிச்சயமாக கூறுவார்கள்." (லுக்மான் : 25)

அகிலத்தவர்களின் இரட்சகனாகிய அல்லாஹ் ஒருவன் மாத்திரமே படைத்துப் போஷிக்கின்ற, எஜமானன் என்று ஒருவர் ஏற்றுக் கொண்டால் அவனுக்கு இணையேதும் கற்பிக்காத நிலையில் வணக்கவழிபாடுகளை அவனுக்காக மாத்திரம் மேற்கொள்வது அவர் மீது கடமையாகும்.

அல்லாஹ் ஒருவனே அனைத்தையும் படைத்தவன் என்றும், அவனே இந்தப் பிரபஞ்சத்தை நிருவகிப்பவன், மேலும் உயிர்கொடுப்பவனும் மரணிக்கச் செய்பவனும் அவனே என்றும் ஏற்றுக் கொண்ட மனிதன் அவனல்லாத வேறொருவனுக்கு வணக்கம் செய்வதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

இதுவே மிகவும் மோசமான அநியாயமும் மிகப் பெரும் பாவமும் ஆகும். எனவேதான் லுக்மான் (அலை) அவர்கள் தனது மகனுக்கு இவ்வாறு உபதேசித்து வழிகாட்டினார். "என் அருமை மைந்தனே! நீ அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே! நிச்சயமாக, இணைவைத்தல் மிகப் பெரிய அநியாயமாகும் என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)." (லுக்மான் 13)

"அல்லாஹ்வின் பார்வையில் மிகப்பெரிய பாவம் எது? என நபியவர்களிடம் வினவப்பட்ட போது "அல்லாஹ் உன்னைப் படைத்திருக்கின்ற போது நீ அவனுக்கு இணையை ஏற்படுத்துவதாகும்" எனப் பதிலளித்தார்கள்."

(அல் புகாரி : 4207, முஸ்லிம் : 86)

அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகன் என்று நம்புவதானது, மனித உள்ளங்களுக்கு அமைதியைக் கொடுக்கும்.

எந்தவொரு படைப்பும் அல்லாஹ்வினுடைய ஏற்பாட்டை விட்டு விலகிச் செல்ல முடியாது. இதனை ஒருவன் உண்மையாகவே அறிந்துகொண்டால், அவனுடைய உள்ளம் அல்லாஹ்வோடு மாத்திரமே தொடர்பினைக் கொண்டிருக்கும். தனக்குத் தேவையான அனைத்தையும் அவனிடமே கேட்பான். அவனுடைய வாழ்வின் சகல விவகாரங்களிலும் அந்த அல்லாஹ்வையே நம்பி வாழ்வான். வாழ்க்கையிலே ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்களின் போது மனஉறுதியோடும் துணிவோடும் அமைதியாக நடந்துகொள்வான்.

இவ்வாறான நிலையிலுள்ள ஒருவன் தனது வாழ்வில் ஒரு விடயத்தை சாதிக்க விளைகின்ற போது தன்னால் முடியுமான முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான உதவிகளை அல்லாஹ்விடம் கேட்பதோடு

தனது கடமைகளையும் சரிவரச் செய்வான். அப்போது அவனது உள்ளம் பிறரிடமுள்ளவைகளை பார்த்து ஆசை கொள்ளாது அமைதியடைகின்றது.

எனவே, அந்த அல்லாஹ்வின் கையிலேயே அனைத்து அதிகாரங்களும் உள்ளன. அவன், தான் விரும்புகின்றவற்றைப் படைப்பதோடு மனிதனுக்குத் தேவையானவைகளை அவனே தெரிவுசெய்கின்றான்.



> அல்லாஹ் பரிபாலிக்கும் இரட்சகன் என்று நம்புவதானது மனித உள்ளங்களில் அமைதியை ஏற்படுத்தும்.

## "அல்லாஹ் தெய்வீகப் பண்புகளைக் கொண்ட 3 என்பதை நம்புதல்.

### "அல்லாஹ் தெய்வீகப் பண்புகளைக் கெண்டவன்" என்று நம்புவதன் கருத்து :

அந்தரங்கமான மற்றும் வெளிப்படையான அனைத்து வணக்கவழிபாடுகளுக்கும் அல்லாஹ் மாத்திரமே தகுதியானவன் என்று உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்வதனையே இது குறிக்கும்.

மேலும், பிரார்த்தனை, பயப்படுதல். பரம்சாட்டுதல், உதவிகோருதல், தொழுகை, ஸகாத், நோன்பு, போன்ற அனைத்துவகை வணக்கங்களையும் அல்லாஹ்வுக்காக மட்டுமே நாம் நிறைவேற்றுவோம்.

எனவே, அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படுகின்ற வேறு கடவுள் யாருமில்லை.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"(மனிதர்களே!) மேலும், உங்கள் (வணக்கத்திற்குரிய) நாயன் ஓரே ஒரு (வணக்கத்திற்குரிய) நாயன் தான்; அளவற்ற அருளும், நிகரற்ற அன்பும் உடைய அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் (வேறு) இல்லை." (அல் பகறா 163)

"இறைவன் ஒருவனே" என்று அல்லாஹ் இங்கு குறிப்பிடுகின்றான். அதாவது, வணங்கப்படவேண்டியவன் அவன் ஒருவனே. அவனல்லாத வேறொருவனை இறைவனாக ஏற்பதோ, வணக்கம் செய்வதோ கூடாது.



> அல்லாஹ் ஏகன் என்பதை ஏற்று, அவனுக்காக மாத்திரமே வணக்கங்களை மேற்கொள்வது தான் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதன் உண்மையான கருத்தாகும்.

### "அல்லாஹ் தெய்வீகப் பண்புகளைக் கொண்டவன்" என்று நம்புவதன் முக்கியத்துவம்.

பின்வரும் பல்வேறு வழிமுறைகளின் மூலம் இதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படுகின்றது.

1 அல்லாஹ்விற்கு இணைவைக்காத நிலையில் அவனை மாத்திரம் வணங்குவதே மனிதர்களும் ஜின்களும் படைக்கப்பட்டமைக்கான இறுதி இலக்காகும். அல்லாஹ் குறிப்பிடுகின்றான் :

"மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காவே படைத்துள்ளேன்." (அத் தாரியாத் : 56)

2 றஸூல்மார்கள் அனுப்பப்பட்டமை மற்றும் இறைவேதங்கள் இறக்கியருளப்பட்டமை என்பவற்றிற்கான பின்னனி அல்லாஹ்வை வணங்க வேண்டுமென்பதாகும்.

எனவே,உண்மையாக வணங்கப்படவேண்டியவன் அல்லாஹ் மாத்திரமே என்றும் அவனல்லாத வேறு கடவுள்கள் வணங்கப்படுவதை நிராகரிக்கப்படல் வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்வது இதன் நோக்கமாகும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம்; (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்,) அல்லாஹ்வையே வணங்குங்கள்; (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்." (அன் நஹ்ல் : 36)

3 அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டும் என்பதே மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய முதற் கடமையாகும்.

"யமன் நாட்டிற்கு முஆத் இப்னு ஜபல் (றழி) அவர்களை அனுப்பி வைக்கும் போது இதனையே அவருக்குத் தனது உபதேசமாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "வேதக்கார சமூகமொன்றுக்கு நீங்கள் செல்கின்றீர்கள். எனவே, நீங்கள் அவர்களை அழைக்கும் முதல் அம்சமாக "லா இலாஹ இல்லல்லாஹ்" என்று சாட்சி சொல்வதாக இருக்கட்டும். (அல் புகாரி : 1389, முஸ்லிம் 19)

அதாவது, அனைத்து விதமான வணக்க வழிபாடுகளையும் அல்லாஹ் ஒருவனுக்காக மாத்திரமே செய்யவேண்டுமென்று அவர்களை நோக்கி அழைப்புக் கொடுங்கள் என்பதே இதன் கருத்தாகும்.

4 "லா இலாஹ இல்லல்லாஹ்" என்பதன் மிகச் சரியான கருத்து, அல்லாஹ்விற்காக மாத்திரமே வணக்கங்கள் செய்யப்படல் வேண்டுமென நம்புவதாகும்.

"இலாஹ்" எனும் அறபுப் பதமானது வணங்கப்படும் அனைத்தையும் பொதுவாகவே குறிக்கும் "கடவுள்" எனும் பொருளைக் கொடுக்கும் ஒரு சொல்லாகும்.

எனவே தான் இதற்கு "உண்மையாக வணங்கப்படுபவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை" என்று பொருள் வழங்கப்படுவதோடு, அவனல்லாத வேறொருவருக்கு எந்தவொரு வணக்கங்களையும் நாம் செய்துவிடக் கூடாது என்பதையும் இது உணர்த்தி நிற்கின்றது.

5 அல்லாஹ் ஒருவனே படைத்து, அனைத்து விவகாரங்களையும் கையாள்கின்ற, அரசன் என்று நம்புவதற்குரிய தர்க்கரீதியான ஒரே விளைவு, வணக்கவழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ்வுக்காக மாத்திரமே நிறைவேற்றப்படல் வேண்டுமென நம்புவதாகும்.

## > வணக்கம் (இபாதா) என்பதன் பொருள் என்ன?

அல்லாஹ் விரும்பி ஏற்றுக் கொள்கின்ற அவனால் பணிக்கப்பட்ட சொல் மற்றும் செயல் சார்ந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதோர் அறுப் பதமே"இபாதா" என்பதாகும்.

இது தொழுகை, ஸகாத், ஹஜ் போன்ற வெளிப்படையான வணக்கங்களாகவோ அல்லது அல்லாஹ்வையும் அவன் தூ தரையும் நேசித்தல், அல்லாஹ்வை அஞ்சுதல், அனைத்துவித மனித முயற்சிகளினது விளைவையும் அல்லாஹ்விடமிருந்து மாத்திரம் எதிர்பார்த்தல், அவனிடமே உதவி கோருதல் போன்ற இன்னோரன்ன உள்ரங்கமான உள்ளம் சார்ந்த வணக்கங்களாகவோ இருக்கலாம்.



> நல்லெண்ணத்தோடு செய்யப்படுகின்ற அனைத்து மனித செயற்பாடுகளும் அவனுக்கு கூலியை (நன்மை)ப் பெற்றுக்கொடுக்கின்ற வணக்கங்களாகவே கருதப்படுகின்றன.

**"வணக்கம்" என்பது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவியதாகும்.**

"வணக்கம்" (இபாதா) என்பது அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் எண்ணத்தோடு செய்யப்படுகின்ற ஒரு மு∴மினுடைய அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கியதொரு சொற்பிரயோகமாகும்.

எனவே, இஸ்லாத்திலே "வணக்கம்" என்பது வெறுமனே தொழுகை, நோன்பு போன்ற சடங்குகளோடு மாத்திரம் வரையறுக்கப்பட்டதொன்றல்ல. மாறாக நல்லெண்ணத்தோடு செய்யப்படுகின்ற பயனுள்ள அனைத்து செயல்களும் வணக்கங்களாகக் கருதப்படுவதோடு, அவைகளுக்காக கூலியும் வழங்கப்படுகின்றன.

அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடப்பதற்குத் தேவையான பலத்தைப் பெறும் நோக்கில், ஒரு முஸ்லிம் சாப்பிட்டால் அல்லது குடித்தால் அல்லது தூங்கினால் கூட அதற்காகவும் அல்லாஹ் அவனுக்கு நன்மையை வழங்குகின்றான்.

எனவே, அவன் ஜீவிக்கின்ற முழு வாழ்வும் அல்லாஹ்வுக்குரியது. அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு தேவையான சக்தியைப் பெறும் நோக்கில சாப்பிடுவது, தகாத உறவுகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக திருமணம் செய்து கொள்வது, இவ்வாறான நல்லண்ணத்தோடு வியாபாரம் செய்வது, தொழில் புரிவது, சம்பாதிப்பது, கல்வி கற்பது அதற்கான சான்றிதழ்களைப் பெறுவது, அறிவுசார்ந்த ஆய்வுகள், கண்டு பிடிப்புக்களை மேற் கொள்வது, ஒரு பெண் தனது வீடு, கணவன், பிள்ளைகள் ஆகியோரை சிரத்தையோடு கவனித்துக் கொள்வது போன்ற அனைத்தும் வணக்கங்களாகவே கருதப்படுகின்றன.

ஆகவே, நல்லெண்ணத்தோடு கூடிய மனித வாழ்வின் அனைத்துத் துறைகளும் அவர்களது பயனுள்ள அனைத்துச் செயற்பாடுகளும் வணக்கங்களாகும்.

மனித இனமும் ஜின்களும் படைக்கப்பட்டதற்கான ஒரே பின்னணி வணக்கம் செய்வதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை. அவர்களிடத்தில் (என் படைப்புக்களுக்காக) நான் யாதொரு உணவையும் நாடவில்லை அன்றியும், எனக்கு அவர்கள் உணவளிப்பதையும் நான் நாடவில்லை. (நபியே! நீர் கூறுவீராக:) "நிச்சயமாக அல்லாஹ் அவன்தான் (யாவருக்கும்) மிக்க உணவளிப்பவன் பலமுடையவன் உறுதியானவன்" (அத் தாரியாத் : 56 - 58)

மனித இனமும் ஜின்களும் படைக்கப்பட்டதற்கான தத்துவம் அவர்கள் அவனை வணங்குவதாகும் என்று இந்த வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

அவர்கள் அவனை வணங்க வேண்டுமென்ற எந்தத் தேவையும் அல்லாஹ்விற்குக் கிடையாது. மாறாக, அவர்களுக்கே அவனை வணங்க வேண்டுமென்ற தேவை உண்டு. ஏனெனில், அவர்களே அவனிடம் முழுத் தேவையுடையவர்கள்.

மனிதன், இவ்வுலகில் வாழ்வதற்கான இறைத் தத்துவத்தை மறந்து, இலக்கை உதாசீனம் செய்து, உலக இன்ப சுகங்களில் மூழ்கிவிட்டால், எந்தத் தனித்துவமும் அற்ற ஏனைய படைப்புக்களைப் போன்று அவன் மாறிவிடுகின்றான். மிருகங்கள் கூட சாப்பிட்டு மகிழ்வுருகின்றன. ஆனால், மனிதர்களைப் போன்று அவைகள் மறுமையில் விசாரிக்கப்படுவதில்லை. அல்லாஹ் கூறுகின்றான் :

"இன்னும், நிராகரிக்கின்றார்களே அத்தகையவர்கள் (உலக) சுகத்தை அனுபவித்துக் கொண்டும், கால்நடைகள் தின்பதைப் போல் தின்று கொண்டும் இருக்கிறார்கள்; (நரக) நெருப்பே அவர்களின் ஒதுங்குமிடமாகும்." (முஹம்மத் : 12)

மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உதாசீனப்படுத்துகின்ற போது, அவன் இந்த மிருகங்களைப் போன்று ஆகிவிடுகின்றான்.

ஆனால், பகுத்தறிவு இல்லாத இம்மிருகங்களுக்கு மாற்றமாக, மனிதன், அவனது அசிரத்தைப் போக்கு காரணமாக தண்டிக்கப்படுவான். ஏனெனில், மிருகங்களுக்கு இல்லாத பகுத்தறிவும் புத்தியும் மனிதனுக்கு உண்டு. அதன் மூலம் நன்மைகளையும் தீமைகளையும் அவனால் புரிந்து கொள்ள முடியும்.

வணக்கத்திற்கான தூண்கள் (அடிப்படைகள்):

அல்லாஹ் விதியாக்கிய வணக்கமானது, இரு முக்கிய தூண்களில் அமைக்கப்பட்டுள்ளது.

முதற் தூண் : முழுமைபெற்ற தன்னடக்கம் மற்றும் பயம்.

இரண்டாவது தூண் : அல்லாஹ்வை முழுமையாக நேசித்தல்.

எனவே, அல்லாஹ் தனது அடியார்களுக்கு விதியாக்கிய வணக்கங்களோடு, பின்வரும் அம்சங்கள் இணைந்திருப்பது அவசியமாகும்.

அல்லாஹ்வுக்கு தனது முழுமையான பணிவையும் தன்னடக்கத்தையும் வெளிக்காட்டுவதோடு, அவன் குறித்த அச்சத்தையும் கொண்டிருத்தல்.

அல்லாஹ்வை உச்ச நிலையில் முழுமையாக நேசித்தல், அவனிடம் மன்றாடுதல், அவனிடமிருந்து நன்மைகளை எதிர்பார்த்தல் போன்ற நிலைகளைக் கொண்டிருத்தல்.

இதனடிப்படையில், அல்லாஹ் பற்றிய அச்சமோ, தன்னடக்கமோ இல்லாத நிலையில் அல்லாஹ்வை நேசித்தல் என்பது வணக்கமாக மாட்டாது. (இது உணவையும் சொத்தையும் நேசிப்பது போன்றது)

இது போன்றே, அல்லாஹ் மீது நேசம் கொள்ளாத நிலையிலுள்ள அல்லாஹ் பற்றிய அச்சமும் வணக்கமாகக் கருதப்படமாட்டாது. (இது மனிதனை வேட்டையாடும் மிருகங்களையோ அல்லது அநியாயக்கார ஆட்சியாளனையோ பயப்படுவதைப் போன்றதாகும்.)

ஒரு செயலைச் செய்கின்ற வேளை அல்லாஹ் பற்றிய பயமும், அவன் மீது நேசமும் ஒன்றரக் கலந்து விடுகின்ற போது தான் அது வணக்கமாக மாறும். வணக்கம் என்பது அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரமே செய்யப்படல் வேண்டும்.

### வணக்கத்திற்கான நிபந்தனைகள்

ஒரு வணக்கம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு :

1. அல்லாஹ்விற்கு இணைவைக்காத நிலையில், வணக்கத்தை அவன் ஒருவனுக்கு மாத்திரம் மனத்தூய்மையோடு செய்தல்.
2. அல்லாஹ்வின் தூதரது வழிகாட்டலைப் பின்பற்றிய நிலையில் செய்தல்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"ஆம்! எவர் தன் முகத்தை அவர் நன்மை செய்துகொண்டிருக்கிற நிலையில் அல்லாஹ்வுக்காக ஒப்படைக்கிறாரோ அவருடைய நற்கூலி அவருடைய இரட்சகனிடம் அவருக்குண்டு. (இத்தகையோர்) அவர்கள் மீது எத்தகைய பயமுமில்லை. அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்."


(அல் பகறா : 112)

(أسلم وجهه لله) என்ற வாசகத்தின் கருத்தாவது :- அல்லாஹ் ஏகன் என்பதைப் புரிந்து, அவனுக்கு மாத்திரம் மனத்தூய்மையோடு வணக்கத்தைச் செய்தவர் என்பதாகும்.

(وهو محسن) என்ற வார்த்தைகளின் பொருளாவது: அல்லாஹ்வின் சட்டத்தையும் அவன் தூதரின் வழிகாட்டலையும் பின்பற்றிய நிலையில் (வணக்கத்தை) நிறைவேற்றுபவர் என்பதாகும்.

நபியவர்களது வழிகாட்டலைப் பின்பற்றுவதானது, தொழுகை, நோன்பு, அல்லாஹ்வை தியானித்தல் போன்ற தூய்மையான வணக்கங்களுக்கு மாத்திரமே நிபந்தனையாகும்.

"இபாதா" எனும் பொதுவான கருத்தில் பயன்படுத்தப்படுகின்ற, அல்லாஹ்விடமிருந்து நன்மையை எதிர்பார்த்து நல்லெண்ணத்தோடு மேற்கொள்ளப்படுகின்ற மனிதனின் வழக்கமான செயற்பாடுகளுக்கு (உதாரணமாக, அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடப்பதற்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்ளும் எண்ணத்தோடு உடற்பயிற்சியில் ஈடுபடுதல், தனது குடும்பத்திற்கு செலவு செய்யும் எண்ணத்தோடு வர்த்தகத்தில் ஈடுபடுதல்) நபியவர்களின் வழிகாட்டலை பின்பற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனை அவசியம் கிடையாது. அங்கு நபியவர்களது போதனைகள் மீறப்படாமல் "ஹராமான" செயல்கள் தவிர்க்கப்படுவது மாத்திரமே போதுமானது.



## > அல்லாஹ்விற்கு இணைவைத்தல் (ஷிர்க்)

• அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் (ஷிர்க்) என்பது "அல்லாஹ்விற்கு மாத்திரமே தெய்வீகப் பண்புகள் உண்டு" என்ற நம்பிக்கைக்கு முரணானதாகும்.

தெய்வீகப் பண்புகள் அல்லாஹ்விற்கு மாத்திரமே உண்டு என்று நம்புவதும், வணக்கங்கள் அனைத்தும் அவனுக்கு மாத்திரமே செய்யப்படல் வேண்டுமென்பதும் மிகப் பெரியதும் மிகவும் முக்கியமானதுமான கடமைகளாக இருக்குமெனில், "ஷிர்க்" என்பது அல்லாஹ்வின் பார்வையில் மிகப்பெரிய பாவமாகவே கருதப்படும்.

"தௌபா" இன்றி அல்லாஹ் மன்னிக்காத ஒரே பாவம் இதுவாகும். இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க(வே) மாட்டான் இதனைத் தவிர (மற்ற) எதனையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான்." (அன்நிஸா : 48)

நபி (ஸல்) அவர்களிடம் பாவங்களில் மிகப் பெரியது எது எனக் கேட்கப்பட்டபோது அல்லாஹ் உம்மைப் படைத்த நிலையில் நீ அவனுக்கு இணைவைப்பதாகும் என்று கூறினார்கள்.

(அல் புகாரி : 4207, முஸ்லிம் 86)

• "ஷிர்க்" வணக்க வழிபாடுகளை செல்லுபடி அற்றதாகவும் பெறுமானம் அற்றதாகவும் ஆக்கிவிடுகின்றது.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"இன்னும், அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணை வைத்திருந்தால், அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான)வைகள் (யாவும்) அவர்களை விட்டு அழிந்துவிடும்." (அல் அன்ஆம் : 88)

"ஷிர்க்" ஆனது இணை (ஷிர்க்) வைத்தவனை நரகத்தில் நிலையாக இருக்க வைத்து விடும் ஒரு பாவமாகும்.

இதனை அல்லாஹ் இங்கு இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

"நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றாரோ அவர்மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியைத் தடுத்துவிடுகின்றான் மேலும், அவர் தங்குமிடம் நரகம்தான்." (அல் மாஇதா: 72)



> (இபாதா) வணக்கம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, அவை அல்லாஹ்விற்காக மாத்திரமே செய்யப்படுகின்றது என்ற மனத்தூய்மையும் நபியவர்களின் வழிகாட்டலை பின்பற்றிய நிலையில் செய்யப்படுவதும் நிபந்தனைகளாகும்.

## ஷிர்க் என்பது இரு வகைப்படும் : பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க்.



### 1 பெரிய ஷிர்க் :

ஒருவர், வணக்கங்களுள் ஒன்றை அல்லாஹ் அல்லாத ஒருவனுக்குச் செய்வதனையே இது குறிக்கும்.

அல்லாஹ் விரும்புகின்ற செயல்களையோ அல்லது சொல், சார்ந்த விடயங்களையோ அல்லாஹ்வுக்காகச் செய்வதானது, அவனை ஏகத்துவப்படுத்துவதாகவும் உண்மையான நம்பிக்கையாகவும் கருதப்படும்.

இவைகளை பிறருக்காகச் செய்வதானது, "ஷிர்க்" ஆகவும் இறைநிராகரிப்பாகவும் நோக்கப்படும்.

இவ்வகைச் ஷிர்க்குக்கான உதாரணங்கள்:

ஒருவர், தனது நோயை குணப்படுத்துமாறோ அல்லது சொத்துசெல்வங்களை விஸ்தரித்துத் தருமாறோ அல்லாஹ் அல்லாத வேறொருவரிடம் கேட்டல், அல்லது அல்லாஹ் அல்லாத வேறொருவரிடம் தனது காரியங்களை பரம்சாட்டுதல் அல்லது அவனல்லாத வேறொருவருக்கு "ஸுஜூது" செய்தல்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"இன்னும், உங்களுடைய இரட்சகன் கூறுகிறான் : "நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி) யுங்கள்." (ஙாபிர் : 60)

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் விசுவாசிகளாக இருந்தால், (உங்கள் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வையுங்கள் என்று கூறினார்கள். (அல் மாஇதா : 23)

மேலும்,அல்லாஹ் கூறுகின்றான் :

"ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குச் சிரம் பணியுங்கள் மேலும் (அவனையே) வணங்குங்கள்." (அன் நஜ்ம் : 62)

எனவே, யாராவது ஒருவர் வணக்கங்களை பிறருக்காக மேற்கொண்டால், அவர் இணை வைத்தவராகவும் இறைநிராகரிப்பாளராகவும் மாறிவிடுகின்றார்.

### 2 சிறிய ஷிர்க் :

பெரிய ஷிர்க்கிற்கு வழிவகுக்குகின்ற அல்லது அதற்கு இட்டுச் செல்லுகின்ற அனைத்து விதமான சொல், செயல் சார்ந்த விடயங்களையே இது குறிக்கும்.

இவ்வகைச் ஷிர்க்குக்கான உதாரணங்கள் :

மனிதர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காக சிலவேளைகளில் தொழுகைகளை நீட்டுதல், அவர்கள் பார்த்துப் புகழ வேண்டுமென்பதற்காக சிலவேளைகளில் குர்ஆன் ஓதுவதையோ அல்லது அல்லாஹ்வைத் துதி செய்வதையோ சப்தமிட்டுச் செய்தல்.

இதனையே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"உங்களிடையே சிறிய ஷிர்க் ஏற்படுவதனையே நான் அதிகம் பயப்படுகின்றேன். அப்போது,நபியே! "சிறிய ஷிர்க்" என்றால் என்ன? என்று நபித்தோழர்கள் வினவினர். அதற்கு நபியவர்கள் "முகஸ்துதி" எனப் பதில் கூறினார்கள்.

(அஹ்மத் : 23630)

எவ்வாறாயினும், ஒருவன் அடிப்படையான வணக்கங்களை மனிதர்களுக்காகச் செய்தால், அவன் தொழுதவனாகவோ அல்லது நோன்பு நோற்றவனாகவோ கருதப்படமாட்டான்.

இது உண்மையில் நயவஞ்சகர்களின் செயலாகும். இவ்வாறு செய்வது பெரிய ஷிர்க்காகும். இது இவனை இஸ்லாத்திலிருந்தே வெளியேற்றிவிடும் ஓர் அம்சமாகும்.

## மனிதர்களிடம் கேட்பது ஷிர்க்கெனக் கருதப்படுமா?

மாயை, மூடநம்பிக்கை, மற்றும் அல்லாஹ் அல்லாதவைகளுக்கு மனிதர்கள் தலைகுனிந்து நடத்தல் போன்றவற்றிலிருந்து மனித உள்ளங்களை விடுவிப்பதை நோக்காகக்கொண்டே இஸ்லாம் தோன்றியது.

எனவே, இறந்துபோன பிணங்களிடம் அல்லது சடப்பொருட்களிடம் கேட்பதுவோ அல்லது அவைகளுக்கு தலைகுனிந்து பணிந்து நடப்பதுவோ கூடாது.

அவ்வாறு செய்வதானது மூடநம்பிக்கை மற்றும் ஷிர்க் சார்ந்த விடயமாகும்.

உயிர் வாழும் ஒருவரிடம் அவருக்கு முடியுமான விடயங்களைச் செய்து தருமாறு கேட்பதைப் பொறுத்தமட்டில், அது அனுமதிக்கப்பட்டதாகும்.

உதாரணமாக, ஒருவரிடம் தனக்கு உதவி செய்யுமாறோ அல்லது மூழ்கும் நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறோ அல்லது அல்லாஹ்விடம் தனக்காகப் பிரார்த்திக்குமாறோ கேட்டுக் கொள்வது பிழையாகாது.



> உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரிடம் அவருக்கு இயலுமான ஒன்றைச் செய்து தருமாறு கேட்பது, மனித உறவுகளுக்கானதொரு முறையாகவும் அனுமதிக்கப்பட்ட அன்றாட நடவடிக்கைகளுள் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

இறந்த ஒருவரிடமோ அல்லது சடப்பொருட்களிடமோ கேட்பது (பிரார்த்தனை புரிவது) அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

ஆம்

இல்லை

இது, இஸ்லாத்திற்கும் நம்பிக்கைக்கும் முரணானதொரு ஷிர்க்கான விடயமே ஆகும்.

ஏனெனில், இவைகளுக்கு எமது வேண்டுதலை (பிரார்த்தனையை) செவிமடுக்கவோ பதிலளிக்கவோ முடியாது.

பிராத்தனை என்பது ஒரு வணக்கமாகும். இதனை அல்லாஹ் அல்லாத ஒன்றுக்குச் செய்வது ஷிர்க் ஆகும். (இஸ்லாத்திற்கு முன்னர் வாழ்ந்த அறபிகளிடம் காணப்பட்ட ஷிர்க் யாதெனில் மரணித்தவர்களிடமும் சடப்பொருட்களிடமும் பிரார்த்திப்பது ஆகும்)

பேச்சை அல்லது வேண்டுதலை செவிமடுக்கும் உயிருள்ள ஒருவனிடம் நாம் கேட்க முடியும்.

இயலுமான விடயங்களில் உனக்கு உதவி செய்யுமாறு ஒருவர் கேட்கப்பட்டால், உனது வேண்டுகோளுக்கு அவர் பதிலளிக்க முடியுமானவரா ?

ஆம்

இல்லை

இது, அனுமதிக்கப்பட்டதாகும். அத்தோடு நாளாந்த நடவடிக்கைகளின் போது மனிதர்களோடு உறவாடுவதற்கும் தொடர்பு கொள்வதற்குமான பொதுவான ஒரு முறையாகும்.

உயிரோடு உள்ள ஒரு மனிதரிடம் அவருக்கு இயலாத ஒரு விடயத்தைச் செய்து தருமாறு அவரிடம் கேட்பது, இஸ்லாத்திற்கு முரணான பெரிய ஷிர்க் ஆகும்.

ஏனெனில், இது அல்லாஹ் அல்லாத ஒருவரிடம் பிரார்த்திப்பதாகும்.

மலட்டுத்தன்மை கொண்ட ஒருவர் நல்ல பிள்ளைகளைத் தனக்குத் தருமாறு உயிரோடுள்ள ஒருவரிடம் கேட்பது இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

## > *அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் அவனது பண்புகளை நம்புதல்.*

அல்லாஹ், அவனது வேதத்திலும் நபியவர்கள் தங்களது சுன்னாவிலும் உறுதியாகக் குறிப்பிட்டிருக்கும் அவனுக்குரிய திருநாமங்கள் மற்றும் அவன் தகுதிக்குத் தக்கதான பண்புகள் என்பனவற்றை நம்புவதனையே இது குறிக்கும்.

அல்லாஹ்வுக்கு மிக அழகிய திருநாமங்களும் முழுமைபெற்ற பண்புகளும் இருக்கின்றன.

அவனது இந்தத் திருநாமங்களும் பண்புகளும் தனித்துவமானவை. இவைகளில் அவனுக்கு நிகரானது எதுவுமில்லை.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"அவனைப் போன்று எப்பொருளும் இல்லை அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன் பார்க்கிறவன்." (அஷ் ஷூறா : 11)



எனவே, அவனது எந்தவொரு படைப்புக்களும் அல்லாஹ்வுக்குரிய இந்த திருநாமங்கள் மற்றும் பண்புகளுக்கு நிகரான நாமங்களையோ அல்லது பண்புகளையோ கொண்டிருக்க முடியாது.

அவ்வாறான நிலையிலிருந்து அல்லாஹ் தூய்மையானவனாக இருக்கின்றான்.

அல்லாஹ்வினுடைய சில திருநாமங்கள் வருமாறு :-

அல்லாஹ் கூறுகின்றான் :

"அனைத்துப் புகழும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது." (அல் பாதிஹா : 3)

அல்லாஹ் கூறுகின்றான் :

"அவனே (யாவற்றையும்) செவியேற்கிறவன் பார்க்கிறவன்." (அஷ் ஷூறா : 11)

அல்லாஹ் கூறுகின்றான் :

"அவனோ (யாவரையும்) மிகைத்தோன் தீர்க்கமான அறிவுடையோன்." (லுக்மான் : 9)

அல்லாஹ் கூறுகின்றான் :

"அல்லாஹ் (எத்தகையவனென்றால்) அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு நாயன் ) இல்லை." (அல் பகறா : 255)

அல்லாஹ் கூறுகின்றான் :

"அனைத்துப் புகழும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது." (அல் பாதிஹா : 2)

## அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் பண்புகள் என்பனவற்றை நம்புவதனால் ஏற்படும் நல்ல விளைவுகள் :-

1 அல்லாஹ்வை நன்கு அறிந்து கொள்ளல்.

ஒருவர் அல்லாஹ்வின் திருநாமங்கள் மற்றும் பண்புகள் என்பவற்றை நம்புவதானது அல்லாஹ் பற்றிய அவரின் அறிவை அதிகரிக்கச் செய்யும்.

இதன் விளைவாக, அல்லாஹ் மீதுள்ள அவரின் நம்பிக்கை அதிகரிக்கும் அதே வேளை, அவர் அல்லாஹ்வை ஏகத்துவப்படுத்தும் நிலையையும் பலப்படுத்தும்.

அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் பண்புகளை அறிந்து கொள்ளும் ஒருவரின் உள்ளம் அல்லாஹ்வின் மகோன்னத நிலை, அவன் மீதுள்ள அன்பு, அவனுக்கு மாத்திரமே முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் உணர்வு என்பவற்றால் நிரம்பி வழியும்.

2 அல்லாஹ்வுடைய அழகிய திருநாமங்களைப் பயன்படுத்தி புகழுதல்.

இது அல்லாஹ்வை நினைவு படுத்துவதற்கான மிகச் சிறந்த முறைகளுள் ஒன்றாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"விசுவாசிகளே! அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள்."(அல் அஹ்ஸாப் : 41)

3 அல்லாஹ்வினது திருநாமங்கள் மற்றும் பண்புகளைக் கூறி பிராரத்தித்தல்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"இன்னும், அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன. ஆகவே, அவற்றைக் கொண்டே நீங்கள் அழையுங்கள்." (அல் அஃராப் : 180)

பின்வருமாறு பிரார்த்திப்பதனை இதற்கான சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிடலாம்:

அதிகம் ஆகாரம் அளிப்பவனே ! எமக்கு ஆகாரம் அளிப்பாயாக.

அதிகம் மன்னிப்பவனே ! எம்மை மன்னித்து விடுவாயாக.

அதிக அன்பு கொண்டவனே ! எமக்கு இரக்கம் காட்டுவாயாக.



## ஈமானின் (நம்பிக்கை) மிக உயர்ந்த நிலை

ஈமான் வித்தியாசமான பல்வேறு தராதரங்களைக் கொண்டது.

ஒரு முஸ்லிம், அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அலட்சியப்படுத்தும் போது அல்லது பாவங்களைச் செய்யும் போது அவரது ஈமானின் அளவு குறைவடைகின்றது.

வணக்கங்கள் செய்தல், அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு அஞ்சி வாழும் நிலை என்பன அதிகரிக்கும் போது அவரது ஈமானும் அதிகரிக்கின்றது.

இஸ்லாம் கூறும் "இஹ்ஸான்" எனும் நிலையே ஈமானின் மிக உயர்ந்த நிலையாகும்.

இதனையே நபியவர்கள் பின்வருமாறு அறிமுகப்படுத்தினார்கள்.

"அல்லாஹ்வை நீர் பார்ப்பது போன்று, அவனை நீர் வணங்குவது. அல்லாஹ்வை நீர் பார்க்கா விட்டாலும் அவன் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்". (அல் புகாரி : 50, முஸ்லிம் : 8)


எனவே,நீ உட்காருவது, எழுந்து நிற்பது, ஆபத்தான மற்றும் வேடிக்கையான நிலைகளில் இருப்பது போன்ற எல்லா நேரங்களிலும் அல்லாஹ் உன்னை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றான் என்று நீ நினைத்துக் கொள்ள வேண்டும்.

எந்நேரமும் உன்னை அவன் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் என்பதை நீ அறிந்தால், அவனுக்கு மாறு செய்ய மாட்டாய்.

அல்லாஹ் எப்போதும் உன்னுடன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொண்டால், பயமோ, நிராசையோ உன்னை ஆட் கொள்ளாது.

தொழுகை மற்றும் பிராத்தனை என்பவற்றின் மூலம் அல்லாஹ்வோடு சம்பாஷனை செய்து கொண்டிருக்கும் போது நீ எவ்வாறு தனிமையின் வெருட்சியை உணர முடியும் ? வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ செய்யும் அனைத்தையும் அவன் அறிந்து கொண்டிருக்கின்றான் என்பதை மிக உறுதியாக நம்பி வாழும் நீ எவ்வாறு ஒரு பாவத்தை செய்ய முடியும் ?

எப்படியோ, நீ ஒரு பாவத்தைச் செய்துவிட்டு, அதிலிருந்து மீண்டு அதற்காக பாவமன்னிப்புக் கோரினால், உண்மையில் அல்லாஹ் உன்னை மன்னிப்பான்.



## அல்லாஹ்வை நம்புவதன் மூலம் ஏற்படும் பயன்கள் :-

1 அனைத்து விதமான துன்ப துயரங்களிலிருந்தும், எதிரிகளின் சதிகளிலிருந்தும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களைப் பாதுகாப்பான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"நிச்சயமாக அல்லாஹ் விசுவாசங் கொண்டவர்களை (நிராகரிப்போரின் தீங்கு அவர்களை அணுகாது) தடுத்துக் கொள்கிறான்." (அல் ஹஜ் : 38)

2 அல்லாஹ்வை நம்புவதானது, மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த மணமானதொரு வாழ்க்கையைப் பெறுவதற்குத் காரணமாக அமையும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"ஆண் அல்லது பெண் அவர் விசுவாசங்கொண்டவராக இருக்க, யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை மணமான வாழ்க்கையாக வாழச் செய்வோம்." (அன் நஹ்ல் : 97)

3 அல்லாஹ்வை நம்புவதானது, மனித உள்ளங்களைமூடநம்பிக்கைகளிலிருந்து தூய்மைப் படுத்தும்.

உண்மையில் அல்லாஹ்வை ஒருவர் நம்பினால், அவரது அனைத்து விவகாரங்களையும் அகிலத்தவரின் இரட்சகனான அல்லாஹ்விடமே முழுமையாக ஒப்படைத்து விடுவார்.

அந்த அல்லாஹ்வே உண்மையான இறைவன், அவனின்றி வேறு இறைவன் கிடையாது.

இந்நம்பிக்கையின் விளைவாக, அவர் யாருக்கும் அஞ்ச மாட்டார். மனிதர்களுள் யாருக்கும் அவருடைய உள்ளத்தை அர்பணிக்க மாட்டார்.

இவ்வாறான இந்நினைவு, அனைத்து விதமான மூட நம்பிக்கைகள் மற்றும் தவறான எண்ணங்களிலிருந்து அவரை விடுவிக்கும்.

4 அல்லாஹ்வை நம்புவதன் மிக உன்னத விளைவு :

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறல், சுவனம் நுழைதல், நிலையான இன்பத்தையும் அல்லாஹ்வின் எல்லையற்ற அன்பையும் பெறல்.

## > மலக்குமார்களை நம்புதல்.

"மலக்குமார்களை நம்புதல்" என்பதன் பொருள் ::

மலக்குகள் இருக்கின்றனர். மேலும், அவர்கள் மனிதர்களும் ஜின்களும் வாழும் உலகமல்லாத கண்ணுக்குப் புலப்படாத ஓர் உலகில் இருப்பவர்கள், அவர்கள் கௌரவமும் தூய்மையும் மிக்கவர்கள், வணக்கத்திற்கு தகுதியான அல்லாஹ்வை வணங்குபவர்கள், அல்லாஹ்வின் உத்தரவினை ஒரு போதும் மீறாது, அவைகளை எப்போதும் செயற்படுத்துபவர்கள் என்ற அம்சங்களை உறுதியாக நம்புவதையே இது குறிக்கும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் : "(அவர்கள் அவனுடைய) கண்ணியமிக்க அடியார்கள். சொல்லைக் கொண்டு அவனை அவர்கள் முந்தமாட்டார்கள் அவர்களோ அவனின் கட்டளையைக் கொண்டு செயல்படுவார்கள்." (அல் அன்பியா : 26 - 27)

அவர்களை நம்புவது ஈமானின் ஆறு பெரும் தூண்களுள் ஒன்றாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"(நம்முடைய) தூதர், தம் இரட்சகனிடமிருந்து தமக்கு இறக்கிவைக்கப்பட்ட (வேதத்)தை விசுவாசிக்கின்றனர் (அவ்வாறே மற்ற) விசுவாசிகளும் (விசுவாசிக்கின்றனர் இவர்கள்) ஒவ்வொருவரும், அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் விசுவாசிக்கின்றனர்." (அல் பகறா : 285)

ஈமானைப் பற்றி நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"அல்லாஹ்வையும் அவனது வானவர்கள், வேதங்கள், தூதர்கள் மற்றும் மறுமை நாள், நல்லது, கெட்டது உள்ளிட்ட விதியின் அனைத்து அம்சங்களையும் நீ நம்புதல்" (முஸ்லிம் : 8)

"மலக்குமார்களை நம்புதல்" என்பது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது ?

**1** அவர்கள் இருக்கின்றனர் என்று நம்புதல் அவர்கள் அல்லாஹ்வுக்குரிய படைப்புக்கள், உண்மையில் அவர்கள் வாழ்கின்றனர், அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்தான், அவனை வணங்குவதற்கும் வழிப்படுவதற்குமான இயல்பான உணர்வுடன் அவர்களை அல்லாஹ் படைத்துள்ளான் என்பன போன்ற அவர்கள் தொடர்பான பல்வேறு செய்திகளை நாம் நம்புகின்றோம்.

**2** அவர்களுள் பெயர் தெரிந்தவர்களை நம்புதல்: உதாரணமாக, ஜிப்ரீல் (அலை) அவர்கள்.

பொதுவாக அவர்களுள், எமக்குப் பெயர் தெரியாத மலக்குகளையும் கூட நாம் நம்புகின்றோம்.

**3** அவர்களின் பண்புகளில் எமக்குத் தெரிந்தவைகளை நம்புதல்.

பின்வருவன அவர்களின் பண்புகளுள் சிலதாகும்:

- அவர்கள் மறைவான உலகத்தைச் சார்தவர்கள், அல்லாஹ்வை வணங்குவதற்காக படைக்கப்பட்டவாகள். தெய்வீக, இறைத்துவ பண்புகளுள் எதுவும் அவர்களிடம் கிடையாது,

  அல்லாஹ்விற்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் அவனின் அடியார்கள்.

  இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :"அல்லாஹ்விற்கு அவன் அவர்களை ஏவியவற்றில் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள். (இரட்சகனிடமிருந்து) அவர்களுக்குக் கட்டளையிடப்படுவதைச் செய்வார்கள்." (அத் தஹ்ரீம் : 6)

- அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள்.
  நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள் : "மலக்குகள் ஒளியினால் படைக்கப்பட்டுள்ளனர்." (முஸ்லிம் : 2996)

- அவர்கள் இறக்கைகள் கொண்டவர்கள். அவர்களுக்கு வித்தியாசமான பல்வேறு இறக்கைகளை தான் வழங்கியிருப்பதாக அல்லாஹ் கூறுகின்றான் : "அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் அவன் வானங்களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன் இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கைகளுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன் அவன் நாடியதை(த்தன்) படைப்பில் (பின்னும்) அதிகப்படுத்துவான் நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையோன்." (பாதிர் : 1)

## 4 அல்லாஹ்வின் உத்தரவிற்கு இணங்க, அவர்கள் செய்கின்ற அவர்களின் பணிகளுள் நாம் அறிந்தவற்றை நம்புதல்.

பின்வருவன அவர்களின் பணிகளுள் சிலதாகும்:

- அல்லாஹ்விடமிருந்து அவனது தூதர்களுக்கு (வஹியை) இறைத்தூதை கொண்டு செல்வதற்குப் பொறுப்பானவர்.
  அவரின் பெயர் ஜிப்ரீல் என்பதாகும்.

- உயிர்களைக் கைப்பற்றுவதற்குப் பொறுப்பானவர்.
  இது "மரணிக்கச் செய்வதற்கான மலக்கையும் அவரின் உதவியாளர்களையும் குறிக்கும்.

- மனிதர்களின் நல்லதும் தீயதுமான செயல்களைப் பதிவு செய்து பாதுகாப்பதற்குப் பொறுப்பானவர்கள்.
  அவர்களே சங்கையான எழுத்தாளர்கள் ஆவர்.

## மலக்குமார்களை நம்புவதன் மூலம் விளையும் நன்மைகள்:

1 அல்லாஹ்வின் மகோன்னத நிலை, அவனது பலம், அவனது முழுமையான ஆற்றல் என்பனவற்றை அறிதல் :
மலக்குகள் எனும் இந்தப் பெரும் படைப்பானவர்கள் அவர்களைப் படைத்தவனான அல்லாஹ்வின் பெருந்தன்மையை எடுத்துக்காட்டுகின்றனர்.
அல்லாஹ் இறக்கைகள் கொண்ட இந்த மலக்குகளை ஒளியினால் படைத்திருப்பதானது, அவனின் மீது ஒரு மு.்.மினுக்குள்ள நன்றியுணர்வையும் மதிப்பையும் அதிகரிக்கச் செய்கின்றது.

2 அல்லாஹ்வை வணங்கும் நிலையில் நிலைத்திருக்கும் பண்பைப் பெறல் :
தனது செயல்கள் அனைத்தையும் மலக்குகள் பதிவு செய்து கொள்கின்றனர் என ஒருவர் நம்புவதானது, அவர் அல்லாஹ் மீது அச்சம் கொண்டு, வெளிப்படையாகவோ, இரகசியமாகவோ அவனுக்கு மாறுசெய்யாது வாழ்வதற்கு அவரைத் தூண்டுகின்றது.

3 அல்லாஹ்வை வணங்கும் போது பொறுமையைக் கைக்கொள்ளும் நிலையைப் பெறல் :
விசாலமான இந்தப் பிரபஞ்சத்தில் தன்னோடு ஆயிரக்கணக்கான மலக்குகள் எந்நேரமும் அல்லாஹ்வை மிக ஆழகாகவும் நேர்த்தியாகவும் வணங்கிக் கொண்டிருக்கின்றனர் என்று ஒரு மு.்.மின் உறுதியாக நம்புகின்ற போது அவர் மனஅமைதியையும் சந்தோஷத்தையும் உணர்கின்றார்.

4 அல்லாஹ்விற்கு நன்றிசெலுத்தும் உணர்வைப் பெறல் :
அல்லாஹ் சில மலக்குகளை மனிதர்களுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகப் படைத்திருப்பதானது, அல்லாஹ் மனிதர்கள் மீது கொண்டுள்ள கரிசனையைக் காட்டுகின்றது.
இது அல்லாஹ் மீது மனிதன் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டுமென்பதை உணர்த்துகின்றது.



> "வானம் அங்குள்ளவர்களால் நிரம்பி வழிகின்றது. அங்கு (வானத்தில்) ஒரு சான் அளவு கூட மலக்குகள் இன்றி காலியாக இல்லை. அங்கு எல்லா இடங்களிலும் அவர்கள் நின்று கொண்டும், ருகூஉ செய்து கொண்டும்,சுஜூது செய்து கொண்டும் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்கின்றனர்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## > இறை வேதங்களை நம்புதல்.


### "இறை வேதங்களை நம்புவது" என்பதன் பொருள்:

அல்லாஹ் தனது அடியார்களுக்காக அவனது தூதர்கள் மீது சில வேதங்களை இறக்கியருளியிருக்கின்றான் என்றும் உண்மையாக, அவனது தகுதிக்கேற்ற வகையில் அவன் பேசிய பேச்சுக்களையே இவைகள் கொண்டிருக்கின்றன என்றும் இந்த வேதங்களில் சத்திய ஒளியும் மனிதனின் ஈருலக வாழ்விற்குமான வழிகாட்டலுமே இருக்கின்றன என்றும் உறுதியாக நம்புவதனையே இது குறிக்கும்.

இந்த வேதங்களை நம்புவதானது, ஈமானின் ஆறு தூண்களுள் ஒன்றாகும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"விசுவாசங் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்னுடைய (இத்) தூதர் மீது இறக்கிவைத்த இவ்வேதத்தையும், (இதற்கு) முன்னர் அவன் இறக்கிய வேதங்களையும் விசுவாசியுங்கள்." (அந் நிஸா : 136)



> எழுத்தணிக் கலையின் மிகப் பலமான வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு மிகவும் நுட்பமாக புனித அல் குர்ஆன் எழுதி முடிக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நபியவர்கள் மீது அவன் இறக்கியருளிய குர்ஆன் எனும் வேதத்தையும் அவ்வாறே இதற்கு முன்னர் இறக்கியருளப்பட்ட அனைத்து வேதங்களையும் நம்புமாறு அல்லாஹ் இவ்வசனத்தில் பணிக்கின்றான்.

ஈமானைப் பற்றி நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"அல்லாஹ், அவனது மலக்குகள், வேதங்கள், தூதர்கள் மற்றும் மறுமை நாள், நல்லது கெட்டது உள்ளிட்ட அவனது விதி என்பவற்றை நீ நம்புவதாகும்"

(முஸ்லிம் : 8)

### வேதங்களை நம்புவதானது எவ்வாறான விடயங்களைக் கொண்டுள்ளது ?

1. வேதங்கள் உண்மையாக அல்லாஹ்விடமிருந்துஇறக்கியருளப்பட்டன என்று நம்புதல்.
2. வேதங்கள் அல்லாஹ்வினது பேச்சுக்கள் என்று நம்புதல்.
3. பின்வருவன போன்ற அல்லாஹ் பெயர் குறித்து குறிப்பிடும் வேதங்களை நம்புதல்.
   முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட வேதம் அல் குர்ஆன்
   மூஸா (அலை) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட வேதம் தவ்ராத்
   ஈஸா (அலை) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட வேதம் இன்ஜீல்
4. இவ்வேதங்களில் இடம்பெற்றுள்ள நம்பகமான செய்திகளை நம்புதல் (உண்மைப்படுத்தல்)

### அல் குர்ஆன் கொண்டிருக்கும் தனித்துவங்களும் சிறப்பியல்புகளும்:

குர்ஆன் என்பது, எமது நபியும் முன்மாதிரியுமான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட அல்லாஹ்வின் வார்த்தைகளாகும்.

எனவே, இதனை ஒரு முஸ்லிம் மதிக்க வேண்டும். இதன் சட்டங்களை கடைப்பிடித்து நடக்க முயற்சிப்பதோடு இதனை ஓதவும் இதன் கருத்துக்களை ஆழமாகச் சிந்தித்துணரவும் வேண்டும்.

உலகில் எமது வழிகாட்டியாகவும் மறுமையில் எமது வெற்றிக்குக் காரணியாகவும் இந்த அல்குர்ஆன் இருக்கின்றமையானது, இதன் மகிமைக்குப் போதுமான எடுத்துக்காட்டாகும்.

முன்னைய இறை வேதங்களுக்கு இல்லாத பல்வேறு தனித்துவங்களும் சிறப்பியல்புகளும் அல் குர்ஆனுக்கு உண்டு.

அவைகளுள் சில பின்வருமாறு :

1 புனித அல்குர்ஆன் இறைச் சட்டங்களின் சுருக்கத்தினைக் கொண்டுள்ளது.

மேலும் இது, முன்னைய வேதங்களில் இடம்பெற்றுள்ள "அல்லாஹ்வை மாத்திரமே வணங்கவேண்டும்" என்ற இறைவனின் உத்தரவுகள் என்பன போன்ற விடயங்களை உண்மைபடுத்தி,உறுதிப்படுத்தவதாகவே அமைந்துள்ளது.

அல் குர்ஆன் கூறுகின்றது :

"மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கிவைத்தோம் இது வேதத்திலிருந்து தனக்கு முன்னுள்ளவற்றை உண்மையாக்கி வைக்கக்கூடியதாகவும், அவற்றைப் பாதுகாப்பதாகவுமிருக்கிறது." (அல் மாஇதா : 48)

(مصدقا لما بين يديه من الكتاب) என்ற வாசகங்களின் கருத்து :

முன்னைய வேதங்களில் இடம்பெற்றுள்ள நம்பிக்கைகள் மற்றும் உண்மைச் செய்திகள் என்பவற்றோடு இது (அல் குர்ஆன்) உடன்படுகின்றது என்பதாகும்.

(ومهيمنا عليه) எனும் வாசகத்தின் கருத்து: முன்னைய வேதங்களுக்கு இது சான்றாக இருக்கின்றது என்பதாகும்.

2 இன, மொழி வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களும் இதனைப் பின்பற்றி, இதன் போதனைகளைச் செயற்படுத்துவது கட்டாயமாகும்.

அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட காலத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் வாழுகின்ற எந்தவொரு சமூகமாக இருந்தாலும் கூட இதனையே அவர்கள் பின்பற்ற வேண்டும்.

ஆனால், முன்னைய வேதங்கள் இவ்வாறானது அல்ல. அவைகள் குறித்ததொரு காலத்தில் வாழுகின்ற குறித்ததொரு சமூகத்திற்கென்று மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான் :

இன்னும் இந்தக் குர்ஆனைக் கொண்டு உங்களுக்கும், (இது) சென்றடைந்தவர்களுக்கும், நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவே இது எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அல் அன்ஆம் : 19)

3 புனித அல்குர்ஆனை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் அவனிடமே வைத்துள்ளான்.

எனவே, இதில் முன்னரோ, பின்னரோ எந்தவொரு மாற்றங்களும் இடம்பெற முடியாது.

அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக நாம்தான (திக்ரு என்னும் இவ்) வேதத்தை (உம்மீது) இறக்கிவைத்தோம் நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்பவர்கள்." (அல் ஹிஜ்ர் : 9)

எனவே, இதன் அனைத்துச் செய்திகளும் நம்பகமானதும் அவசியம் உண்மைபடுத்தப்படவேண்டியதுமாகும்.

## அல்குர்ஆனின் பால் எமக்குள்ள கடமைகள் யாது ?

- இது அல்லாஹ்வின் மிக உண்மையானதும் மிகச் சிறந்ததுமான பேச்சுக்களின் தொகுப்பாக இருப்பதனால், இந்த அல்குர்ஆனை நேசிப்பதும் அதன் கௌரவத்திற்கு உரிய மதிப்பை வழங்குவதும் கட்டாயக் கடமைகள் ஆகும்.

- அல் குர்ஆனின் அத்தியாயங்கள் மற்றும் வசனங்கள் என்பவற்றின் கருத்துக்களை ஆழ்ந்து சிந்திப்பதுடன் அவற்றை ஓதிப் பாராயணம் செய்தல் வேண்டும்.

  மேலும், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்காக அல்குர்ஆனின் போதனைகள்,உண்மைச் செய்திகள் மற்றும் கதைகள் பற்றி சிந்தித்து அவற்றிற்கு முன்னால் எமது வாழ்வை முன்நிறுத்திப் பார்க்க வேண்டும்.

- அல்குர்ஆனினது சட்டங்களை பின்பற்றுவதும் அவற்றின் ஆணைகள் மற்றும் ஒழுக்க நெறிகளுக்குக் கட்டுப்பட்டு அவைகளை எமது வாழ்வியல் முறைகளாக மாற்றிக் கொள்வதும் அவசியமாகும்.

நபியவர்களது குணவியல்புகள் பற்றி ஆயிஷா (றழி) அவர்களிடம் வினவப்பட்ட போது அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்

“அவர்களது குணம் அல் குர்ஆனாகவே இருந்தது” (அஹ்மத் : 24601, முஸ்லிம் : 746)


இதன் கருத்து :

நபியவர்களின் வாழ்வும் செயற்பாடுகளும் அல்குர்ஆனினது சட்டங்கள் மற்றும் அதன் போதனைகளுக்கான செயல்முறை வடிவங்களாகவே இருந்தன.

எனவே, நபியவர்கள் அல் குர்ஆனின் வழிகாட்டலை முழுமையாகப் பின்பற்றிய சிறந்ததோர் உதாரணப் புருஷராக வாழ்ந்துள்ளார்கள்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகினறான்:

“(உங்களில்) அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவு கூறுபவராக இருப்பவருக்கு, அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.” (அல் அஹ்ஸாப் : 21)




> தௌராத்தும் இன்ஜீலும் அல்லாஹ்விடமிருந்தே இறக்கியருளப்பட்டன. எனினும், அவைகளில் பல்வேறு மாற்றங்களும் திரிவுபடுத்தல்களும் இடம்பெற்றுள்ளன என்று ஒரு முஸ்லிம் நம்புகின்றார். எனவே, அவைகள் கொண்டிருக்கும் செய்திகளுள் எது அல் குர்ஆனுக்கும் அஸ் ஸுன்னாவிற்கும் உடன்படுகின்றதோ அதை மாத்திரமே அவர் நம்புவார்.

## முன்னைய வேதங்களில் காணப்படும் உள்ளடக்கங்கள் பற்றிய எமது நிலைப்பாடு யாது ?

மூஸா (அலை) அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட தௌராத்தும் ஈஸா (அலை) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட இன்ஜீலும் அல்லாஹ்விடமிருந்து வந்த உண்மையான வேதங்கள் என்றும் சட்டதிட்டங்கள், போதனைகள், மனிதனின் ஈருலக வாழ்விற்குமான ஒளிபொருந்திய வழிகாட்டல்களைக் கொண்ட செய்திகள் என்பனவற்றை அவ்விரண்டும் கொண்டிருக்கின்றன என்றும் ஒரு முஸ்லிம் நம்புகின்றான்.

எனினும், வேதக்காரர்களான யஹூதிகளும் கிறிஸ்தவர்களும் அவர்களது வேதங்களில் உள்ள சில விடயங்களைக் குறைத்தும் மற்றும் சில விடயங்களை கூட்டியும் திரிவுபடுத்தியும் விட்டதாக அல்லாஹ் அல்குர்ஆனில் எமக்கு கூறிக்காட்டுகின்றான்.

எனவே, அல்லாஹ் இறக்கியருளியது போன்று நம்பகமான நிலையில் அவைகள் தற்போது இல்லை.

இப்போது இருக்கின்ற இந்த தௌராதானது, நபி மூஸா (அலை) அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட தௌராத் வேதம் அல்ல.

ஏனெனில், யஹூதிகள் அதனை திரிவுபடுத்தி விட்டனர்.

மேலும் அதன் பல்வேறு சட்ட திட்டங்களில் அவர்களின் திருவிளையாடலைக் காட்டிவிட்டனர்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"யூதர்களில் சிலர், (வேத) வசனங்களை அதற்குரிய இடங்களிலிருந்து (அவற்றின் கருத்து வேறுபடும்படியான விதத்தில்) புரட்டுகின்றனர்." (அந் நிஸா : 46)

இவ்வாறே, தற்போதுள்ள இன்ஜீலும் நபி ஈஸா (அலை) அவர்கள் மீது இறக்கியருளப்பட்ட இன்ஜீல் வேதம் அல்ல.

இதனையும், இதன் பல்வேறு சட்டங்களையும் கிறிஸ்தவர்கள் மாற்றி திரிவுபடுத்தி விட்டனர்.

இக்கிறிஸ்தவர்கள் குறித்தே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"நிச்சயமாக அவர்களில் ஒரு பிரிவினர் அவர்கள் வேதத்தைக் கொண்டு (ஓதும்போது அத்துடன் பல வாக்கியங்களைக் கலந்து) அதுவும் வேதத்திலுள்ளதுதான் என நீங்கள் எண்ணிக்கொள்ளும் பொருட்டு தங்கள் நாவுகளைச் சாய்த்துக் கொள்கின்றனர் அது வேதத்தில் உள்ளதும் அல்ல. அன்றியும் அவர்கள், "அது அல்லாஹ்விடமிருந்துள்ளது" என்றும் கூறுகின்றனர் அது அல்லாஹ்விடமிருந்துள்ளதும் அல்ல. இன்னும் அவர்கள் நன்கறிந்தவர்களாக, அல்லாஹ்வின் மீது (இவ்வாறு) பொய்யைக் கூறுகின்றனர்." (ஆலு இம்ரான் : 78)

மேலும், அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

"அன்றியும் தங்களை, "நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்கள்" எனக் கூறுகின்றார்களே, அத்தகையோரிடமிருந்து அவர்களின் உறுதிமொழியை நாம் வாங்கியிருக்கின்றோம் (ஆனாலும்) அவர்கள் எதைக் கொண்டு உபதேசிக்கப்பட்டனரோ அதிலிருந்து ஒரு பாகத்தை (இந்நபியைப் பற்றி, தங்கள் வேதத்தில் தங்களுக்கு நினைவுபடுத்தப்பட்டதை) மறந்துவிட்டார்கள் ஆதலால், அவர்களிடையே விரோதத்தையும், குரோதத்தையும் மறுமைநாள் வரையில் (நீங்காதிருக்கும்படி) நாம் மூட்டிவிட்டோம் (இவ்வுலகில்) அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களென்பதையும் (மறுமையில்) அல்லாஹ் அவர்களுக்குத் தெரிவிப்பான்." (அல் மாஇதா : 14)

இன்று பரிசுத்த வேதங்கள் என அழைக்கப்படும் வேதக்காரர்களின் கரங்களிலுள்ள தௌராத் மற்றும் இன்ஜீல் என்பன பிழையான பல்வேறு நம்பிக்கைகளையும், போலியான தகவல்களையும் உண்மைக்குப்புறம்பான கதைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

இந்த வேதங்களில் இடம்பெற்றுள்ள செய்திகளுள் எதனை அல்குர்ஆன் அல்லது தூய சுன்னா உண்மையெனக் குறிப்பிட்டிருக்கின்றதோ அதனை மாத்திரம் உண்மையென நாம் ஏற்றுக் கொள்வோம்.

இவற்றுள் அல்குர்ஆன் அல்லது தூ ய சுன்னா எதனைப் பொய்யெனக் குறிப்பிட்டுள்ளதோ அதனை நாமும் பொய்யெனக் கூறுவோம்.

இவ்விரண்டு நிலைகளிலும் இல்லாத ஏனைய விடயங்களை நாம் உண்மைபடுத்தவோ பொய்யெனக் கூறவோ மாட்டோம்.

இவ்வாறான நிலையிலும் கூட, ஒரு முஸ்லிம் இந்த வேதங்களை மதிக்க வேண்டும்.இழிவு படுத்தவோ குறைத்து மதிப்பிடவோ கூடாது.

ஏனெனில் இவைகளில் திரிவுபடுத்தப்படாத நிலையில் அல்லாஹ்வின் சில வாசகங்கள் சிலவேளைகளில் இன்னும் அப்படியே இருக்கலாம்.



## இறைவேதங்களை நம்புவதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் :-

இறைவேதங்களை நம்புவதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் அதிகம் உண்டு.

அவைகளுள் சில:

1 ஒவ்வொரு சமூகத்திற்கும் வேதங்களைக் கொடுத்து,அவர்களை நேர்வழிபடுத்தியுள்ளமை மற்றும் ஈருலகிலும் அவர்களுக்கு சுபீட்சமான வாழ்வை வழங்கி இருக்கின்றமை என்பன அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்டுள்ள நிறைவான அன்பையும் அவன் அவர்கள் மீது கொண்டுள்ள விஷேட கரிசனையும் எடுத்துக்காட்டுவதை உணர்த்துகின்றது.

2 அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்களது ஆளுமைகள் மற்றும் வாழ்வியல் சூழ்நிலைகள் என்பனவற்றுக்கு பொருத்தமான சட்டங்களை வழங்கி வழிகாட்டி இருப்பதன் மூலம் சட்டமியற்றுவதில் அவனுக்குள்ள ஆழ்ந்த புலமை இங்கு எடுத்துக் காட்டப்படுவதனை அறிந்து கொள்ளலாம்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"உங்களில் ஒவ்வொரு வ(குப்பா)ருக்கும் மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஆக்கினோம்." (அல் மாஇதா : 48)

3 ஈருலகிற்குமான ஒளிபொருந்தியதொரு வழிகாட்டலைக் கொண்டுள்ள இவ்வேதங்களை மனித இனத்திற்கு இறக்கி அருளியமைக்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற உணர்வைப்பெற முடியும்.

எனவே, அல்லாஹ்வின் உயர்ந்த இந்த அருட்கொடையை பெற்றமைக்காக நாம் அந்த அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவது எமது கடமையாகும்.

## > இறைத்தூதர்களை நம்புதல்.

### மானிட சமூகத்திற்கான இறைத்தூதின் தேவை

இறைத் தூதானது, அல்லாஹ்வின் சட்டங்களைப் பற்றி மனிதர்களுக்கு புரியவைத்து, அவர்களை நேர்வழியின் பால் இட்டுச்செல்வதற்கான மிக முக்கியமானதோர் அம்சமாகும்.

இதுவே, உலகின் ஆத்ம சக்தியாகவும் ஒளியாகவும் உயிராகவும் திகழ்கின்றது. உலகின் உயிராகக் கருதப்படும் இந்த இறைத்தூதை இழந்த நிலையில் இப்பிரபஞ்சம் காணப்படுமானால், இது பயனற்ற வெறும் சட உலகாகத்தானே இருக்க வேண்டும்? எனவே தான், அல்லாஹ் இந்த தூதை உயிரென அழைக்கின்றான். உயிர் இல்லையேல் வாழ்வே இல்லாது போய்விடும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"(நபியே!) இவ்வாறே உமக்கு நம்முடைய கட்டளையில் (குர்ஆனாகிய) உயிரானதை வஹி மூலமாக அறிவிக்கின்றோம் (இதற்கு முன்னர்) நீர் வேதம் என்றால் என்ன, இன்னும் விசுவாசம் என்றால் என்ன என்பதை அறிந்தவராக இருக்கவில்லை. ஆயினும், (இவ்வேதத்தை உமக்கு வஹி மூலம் அறிவித்து) இதனைப் பிரகாசமாகவும் ஆக்கி, நம் அடியார்களில் நாம் நாடியவர்களுக்கு இதனைக்கொண்டு நாம் நேர்வழி செலுத்துகின்றோம்." (அஷ் ஷூறா : 52)

பொதுவாகவே, எமது அறிவுத்திறனால் நல்லவற்றையும் தீயவற்றையும் வேறுபடுத்தி புரிந்து கொள்ள முடியுமாக இருந்தாலும் கூட அவைகளை முழுமையாகவும் விரிவாகவும் விளங்கிக் கொள்ளவோ, வணக்க வழிபாடுகள் மற்றும் அவைகளுக்கான முறைகளைப் பற்றி புரிந்து கொள்ளவோ முடியாது.



> இறைத் தூதுதான் இவ்வுலகின் ஆன்மாவாகவும் அதன் ஒளியாகவும் காணப்படுகின்றது.

வஹி மற்றும் இறைத்தூது எனும் வழிமுறையினூடாக மாத்திரமே இவைகளை அறிந்து கொள்ள முடியும்.

எனவே,இறைத்தூதர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் மூலமே ஈருலகிலும் வெற்றியையும் சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நல்லதையும் கெட்டதையும் மிக நுணுக்கமாக புரிந்துகொள்வதற்கு அவர்களுடைய வழிமுறையைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த இறைத்தூதை யாராவது புறக்கணித்து நடந்தால், அவர்கள் அதனைப் புறக்கணிக்குமளவு அவர்களது வாழ்வில் கவலையும் திண்டாட்டமும் துரதிஷ்ட நிலையும் ஏற்படும்.

### இது ஈமானின் தூண்களுள் ஒன்றாகும் :

இறைத்தூதை நம்புவதானது, ஈமானின் ஆறு

தூண்களுள் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

"(நம்முடைய) தூதர், தம் இரட்சகனிடமிருந்து தமக்கு இறக்கிவைக்கப்பட்ட (வேதத்)தை விசுவாசிக்கின்றார். (அவ்வாறே மற்ற) விசுவாசிகளும் (விசுவாசிக்கின்றனர் இவர்கள்) ஒவ்வொருவரும், அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய

தூதர்களையும் விசுவாசிக்கின்றனர் "அவனுடைய தூதர்களில் எவருக்கிடையிலும் நாங்கள் வேற்றுமைப்படுத்திவிடமாட்டோம்" (என்றும்,) கூறுகின்றார்கள்."(அல் பகறா : 285)

இறைத்தூதர்கள் அனைவரையும் எதுவித வித்தியாச வேறுபாடுகளும் இன்றி நாம் கட்டாயம் நம்ப வேண்டுமென இந்த வசனம் எடுத்துக் கூறுகின்றது.

எனவே, நாம் யஹூதிகளையும் கிறிஸ்தவர்களையும் போன்று இறைத்தூதர்களுள் சிலரை நம்பி ஈமான் கொண்டு மற்றும் சிலரை நிராகரிக்க மாட்டோம்.

நபியவர்கள் ஈமானைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

"அல்லாஹ், அவனது மலக்குகள், வேதங்கள், தூதர்கள் மற்றும் மறுமை நாள், நல்லது கெட்டது உள்ளிட்ட அவனது விதி என்பவற்றை நீ நம்புவதாகும்." (முஸ்லிம் : 8)

### "இறைத்தூதர்களை நம்புவது" என்பதன் பொருள் :

ஒவ்வொரு சமூகத்திற்கும் அந்தந்த சமூகத்திலிருந்தே இறைத்தூதர் ஒருவரை அல்லாஹ் அனுப்பி வைத்தான்.

அல்லாஹ்விற்கு இணைவைக்காத நிலையில் அவனை மாத்திரமே வணங்க வேண்டுமென்று அந்த சமூகத்தவர்களை நோக்கி அவர்கள் அழைப்புக் கொடுத்தனர்.

அவர்கள் அனைவரும் உண்மையாளர்களாகவும் இறையச்சமுள்ள



நம்பிக்கையாளர்களாகவும் நேர்வழி பெற்ற வழிகாட்டிகளாகவும் இருந்ததோடு, அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த அவனின் இறைத்தூதை மாற்றாமலும் கூட்டாமலும் குறைக்காமலும் முழுமையாக மக்களுக்குப் போதித்தனர் என்பது போன்ற மேற்படி அம்சங்களை உறுதியாக நம்புவதையே இது குறிக்கின்றது.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"(நம் தூதைத்) தெளிவாக எத்திவைப்பதைத் தவிர (வேறு எதுவும் நம்) தூதர்களின் மீது உண்டா ?" (அந் நஹ்ல் : 35)

### "இறைத்தூதர்களை நம்புதல்" எனும் அம்சம் எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது ?

1. அவர்களின் இறைத்தூதுகள் உண்மையாகவே அல்லாஹ்விடமிருந்து வந்தவைகள் என்றும் "அல்லாஹ்விற்கு இணைவைக்காது, அவன் ஒருவனையே வணங்கவேண்டும்" என்ற ஒரே விடயத்தினையே ஏகமனதாக அவர்களது தூதுகள் அனைத்தும் முன்வைத்தன என்றும் நம்புதல்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கின்றோம் (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்,) அல்லாஹ்வையே வணங்குங்கள் (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்." (அந் நஹ்ல் : 36)

ஹலால், ஹராம் போன்ற கிளை அம்சங்கள் தொடர்பாக நபிமார்கள் முன்வைத்த சட்டங்கள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டே இருந்தன.
எனினும், அவைகள் அந்தந்த சமூகத்தைச் சார்ந்தமக்களுக்குப் பொருத்தமானவைகளாகவே காணப்பட்டன.

இதனையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"உங்களில் ஒவ்வொரு வ(குப்பா)ருக்கும் மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஆக்கினோம்." (அல் மாஇதா : 48)

2. அனைத்து இறைத்தூதர்களையும் நபிமார்களையும் நம்புதல்.

அல்லாஹ் பெயர் குறித்துக் கூறிய நபிமார்களை நாம் நம்புவோம்.
உதாரணமாக, முஹம்மத், இப்றாஹீம், மூஸா, ஈஸா (அலை) ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அவ்வாறே, அவர்களுள் பெயர் குறிப்பிடப்படாதவர்களையும் பொதுவாகவே நாம் நம்பவேண்டும்.

அவர்களுள் ஒருவரினது இறைத்தூதை ஒருவர் நிராகரித்தாற் கூட, அவர் அனைத்து நபிமார்களையும் நிராகரித்தவர் போன்றாவார்.

3. அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ள இறைத்தூதர்கள் தொடர்பான நம்பகமான செய்திகள் மற்றும் அவர்களது அற்புதங்களை நம்புதல். உதாரணமாக, மூஸா (அலை) அவர்கள் கடலைப் பிளந்து பயணித்த கதையைக் குறிப்பிடலாம்.

4. எமக்குத் தூதராக அனுப்பப்பட்டவரும் நபிமார்களுள் சிறந்தவரும் இறுதியானவருமான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படல்.

## இறைத்தூதர்களின் நற்பண்புகள்

அவர்களும் மனிதர்களே.

1 ஆனால்,வஹியைப்பெறுவதற்காகவும்,அவனது இறைத்தூதைச் சுமந்து சென்று, போதனை செய்வதற்காகவும் அல்லாஹ் அவர்களை விஷேடமாக தெரிவுசெய்திருப்பதானது,அவர்களுக்கும் ஏனையோருக்குமிடையிலான பிரதான வேறுபாடாகக் கொள்ளப்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் :

"மேலும், (நபியே!) உமக்கு முன்னரும் (மனிதர்களிலிருந்து) ஆடவர்களையே அன்றி, வேறெவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை (உமக்கு அறிவிக்கிற பிரகாரமே) அவர்களுக்கும் நாம் வஹி அறிவித்தோம்." (அல் அன்பியா: 7)

எனவே, அவர்களுக்கு எந்தவொரு தெய்வீகப் பண்புகளும் கிடையாது. ஏனெனில், அவர்கள் வெளித்தோற்றத்திலும் குண இயல்புகளிலும் முழுமை பெற்ற மனிதர்களாவர்.

மேலும், அவர்கள் மனிதர்களுள் மிகச் சிறந்தவர்களாய் இருந்ததோடு, இறைத்தூது எனும் பொறுப்பை சுமப்பதற்கும் நபித்துவத்தின் சுமைகளை சகித்துக் கொள்வதற்கும் தேவையான தகைமைகள் எனக் கருதப்படும் சிறந்த அறிவாற்றலும் தெளிந்த நாவன்மையும் அவர்களுக்கு இருந்தன.

இறைத்தூதர்கள் மக்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென்பதற்காக அவர்களை மனித இனத்திலிருந்தே அல்லாஹ் தெரிவுசெய்தான்.

எனவே தான், மக்களுக்கு இறைத்தூதர்களைப் பின்பற்றுவது மிகச் சுலபமானதொரு விடயமாக இருந்தது.

வஹி மற்றும் இறைத்தூது என்பவற்றுக்காக, ஏனைய மனிதர்களை விட இவர்களை அல்லாஹ் விஷேடமாக தெரிவு செய்திருக்கின்றான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான:

"(நபியே!) நீர் கூறுவீராக : "நிச்சயமாக, நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்படுகிறது." (அல் கஹ்ப்:110)

2 எனவே, இறைத்தூதும் நபித்துவமும் மனித அறிவினாலோ, தூய்மையான ஆன்மீகப் பலத்தினாலோ அல்லது அறிவுசார்ந்த தத்துவத்தினாலோ பெறப்பட முடியாது.

உண்மையாகவே, இவைகள் இறைவிருப்பம் எனும் விஷேட தெரிவின் மூலமே பெற முடியும்.

மனிதர்களிலிருந்து அல்லாஹ், தான் விரும்பியோரை மாத்திரமே இறைத்தூதர்களாக தேர்வு செய்கின்றான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"அல்லாஹ் தன்னுடைய தூதுத்துவத்தை எங்கு (எவருக்கு) ஆக்குவது என்பதை மிக்க அறிந்தவன்." (அல் அன்ஆம் : 124)

அவர்கள் பாவம் செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள்.

3 இறைத்தூதை மக்களுக்கு போதிக்கின்ற போதோ அல்லது அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற போதோ அவர்கள் தவறுகள் இழைக்கமாட்டார்கள்.

4 உண்மை:

இறைத்தூதர்கள் பேசுகின்ற போதும் செயலாற்றுகின்ற போதும் உண்மையாகவே நடந்து கொள்வர்.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

(அதற்கு மலக்குகள் அவர்களிடம்)" அர்ரஹ்மான் (உங்களுக்கு) வாக்களித்ததும், தூதர்கள் (உங்களுக்கு) உண்மை (என எடுத்துக்) கூறியதும் இது தான்" (என்று கூறுவார்கள்). (யாசீன் : 52)

5 பொறுமை:

எச்சரித்தும் சுபச் செய்திகள் கூறியும் அல்லாஹ்வினது மார்க்கத்தின் பால் மனிதர்களை இறைத்தூதர்கள் அழைத்தனர்.

இதன் போது இவர்கள் பல்வேறு வகையான துன்ப துயரங்களுக்குஆளாகினர்.

அல்லாஹ்வின் திருக்கலிமா மேலோங்க வேண்டுமென்பதற்காக இறைத்தூதர்கள் இவைகளை சகித்துக் கொண்டதோடு பொறுமையாகவும் இருந்தனர்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"(நபியே! நம்முடைய) தூதர்களிலுள்ள உறுதிமிக்கவர்கள், (கஷ்டங்களை) பொறுத்துக்கொண்டிருந்த பிரகாரமே, நீரும் பொறுமையாக இருப்பீராக!" (அல் அஹ்காப் : 35)

## இறைத்தூதர்களின் அடையாளங்களும் அற்புதங்களும்:

இறைத்தூதர்களையும் அவர்களது நபித்துவத்தையும் உண்மையென நிரூபிப்பதற்குத் தேவையான பல்வேறு அத்தாட்சிகளை வழங்கியதன் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்திருக்கின்றான்.

மனித சக்திக்கு உட்படாத வெளிப்படையான அற்புதங்கள் மற்றும் அத்தாட்சிகள் மூலம் இறைத்தூதர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தி உதவி செய்திருக்கின்றமையானது, இந்த வகையையே சாரும்.

அற்புதங்கள் என்பதன் பொருள் : மனிதனால் மேற்கொள்ள முடியாத, இயற்கைக்கு முரணான அம்சங்களையே இவைகள் குறிக்கும். தனது இறைத்தூதர்கள் மற்றும் நபிமார்களின் மூலமே இவைகளை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான்.

## சில அற்புதங்கள் :

- மூஸா (அலை) அவர்களின் கைத்தடி பாம்பாக மாற்றப்பட்டமை.
- ஈஸா (அலை) அவர்கள் தனது சமூகத்திற்கு அவர்கள் சாப்பிட்டவைகள் மற்றும் வீட்டிலே சேகரித்து வைத்துள்ள பொருட்கள் போன்றவற்றினை அறியப்படுத்தியமை.
- முஹம்மத் (ஸல்) அவர்கள் சந்திரனைப் பிளந்து காட்டியமை.

ஈஸா (அலை) அவர்கள் பற்றிய ஒரு முஸ்லிமின் கொள்கை:

1 அல்லாஹ்வின் மிக உயர்ந்த இறைத்தூதராகவும் "உலுல் அஸ்ம" எனப்படும் திட உறுதிமிக்க நபிமார்களுள் ஒருவராகவும் இவர் இருக்கின்றார்.

முஹம்மத், இப்ராஹீம்,நூஹ், மூஸா, ஈஸா (அலை) ஆகிய இறைத்தூதர்களே "உலுல் அஸ்ம்" களாவர்.

இவர்களைப் பற்றி அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகின்றான்: மேலும் நபிமார்களிடமிருந்தும் உம்மிடமிருந்தும், நூஹிடமிருந்தும் இன்னும், இப்றாஹீம், மூஸ ா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடமிருந்தும் அவர்களின் உறுதிமொழியை நாம் எடுத்த சமயத்தில் அவர்களிடமிருந்து மிக்க உறுதியான உறுதிமொழியையே நாம் எடுத்தோம் (என்பதை இவர்களுக்கு நினைவு படுத்துவீராக!) (அல் அஹ்ஸ ாப்: 7)



> ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மிக உயர்ந்த இறைத்தூதர்களுள் ஒருவர். எனினும், அவருக்கு எந்தவொரு தெய்வீகப் பண்புகளும் கிடையாது.
மேலும், அவர் கொலை செய்யப்படவோ சிலுவையில் அறையப்படவோ இல்லை என்றே ஒரு முஸ்லிம் நம்புவார்.

2 எந்தவொரு தெய்வீகப் பண்புகளுமற்ற மிக உயர்ந்ததொரு மனிதரே இவர்.

அல்லாஹ் இவரை "பனூ இஸ்ராயீல்" சமூகத்திற்கு இறைத்தூதராக அனுப்பிவைத்து, பல்வேறு அற்புதங்களைக் கொடுத்து இவருக்கு உதவினான்.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

(ஈஸாவாகிய) அவர், (நம்முடைய) அடியாரே அன்றி (அவர் தெய்வம்) இல்லை; அவர் மீது நாம் அருள் புரிந்து, இஸ்ராயீலின் மக்களுக்கு அவரை ஓர் உதரணமாக்கினோம்.

(அஸ் ஸுஹ்ருப்: 59)

அல்லாஹ்வை விடுத்து தன்னையோ தனது தாயையோ கடவுள்களாக எடுத்துக் கொள்ளுமாறு ஈஸா (அலை) அவர்கள் தனது சமூகத்தை நோக்கி ஒருபோதும் உத்தரவிடவில்லை. மாறாக, அல்லாஹ் அவருக்கு ஏவிய விடயங்களைச் செய்யுமாறு மாத்திரமே அவர்களைப் பணித்தார்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"என்னுடைய இரட்சகனும், உங்களுடைய இரட்சகனுமான அல்லாஹ்வை வணங்குங்கள்" (அல் மாஇதா : 117)

3 இவர், மர்யம் (அலை) அவர்களின் மகனாவார்.

இவருடைய தாய் மர்யம் (அலை) அவர்கள் தூய்மையானவர், வாய்மைமிக்கவர், தனது இறைவனை வணங்கி வழிபடுகின்ற பேணுதலுடையவர்.

மேலும், ஈஸா (அலை) அவர்களை தந்தையின்றி அல்லாஹ்வினது அற்புதத்தின் மூலம் தனது கற்பத்தில் சுமந்து பெற்றெடுத்தவர்.

தாயும் தந்தையுமின்றி ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்தது போன்று ஈஸா (அலை) அவர்களையும்

அவனது நிலையானதோர் அற்புதத்தின் மூலம் படைத்தான்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நிச்சயமாக, அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம்: ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே! அவன், அவரை மண்ணால் படைத்துப்பின் அதற்கு (மனிதனாக) "ஆகுக" என்று கூறினான்; அவர் (அவ்வாறு) ஆகிவிட்டார். (ஆலு இம்ரான் : 59)

4 இவருக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குமிடையில் எந்தவொரு இறைத்தூதரும் வரவில்லை.

இவருக்குப் பின்னர், முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியாக வருவார்களென்ற சுப செய்தியை ஈஸா (அலை) அவர்கள் முன்னறிவிப்புச்செய்தார்கள்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: மேலும் மர்யமின் புதல்வர் ஈஸா "இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்தியவனாகவும், எனக்கு பின்னர் அஹ்மது எனும் பெயருள்ள ஒரு தூதர் வருவார் என நன்மாராயம் கூறுபவனாகவும் நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக நான் இருக்கிறேன்" என்று கூறியதை (நபியே நீர் நினைவு கூருவீராக) பின்னர், (அவர் கூறியவாறு) தெளிவான அத்தாட்சிகளுடன் அவர்களிடம் (அத்தூதராகிய) அவர் வந்த பொழுது, இது தெளிவான சூனியம்" என்று அவர்கள் கூறினர். (அஸ் ஸப் : 6)

5 அல்லாஹ்வுடைய உத்தரவிற்கிணங்க இவர் மேற்கொண்ட அற்புதங்களை நாங்கள் நம்புகின்றோம்.

உதாரணமாக, குஷ்டரோகிகள் மற்றும் பிறவிக்குருடர்களைக் குணப்படுத்தியமை, இறந்தவர்களை உயிர் கொடுத்து எழுப்பியமை, மனிதர்கள் சாப்பிட்டவைகள் மற்றும் அவர்களது வீடுகளில் சேகரித்து வைத்த பொருட்களைப் பற்றிக் கூறியமை போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

இவைகள் அனைத்தும் அல்லாஹ்வின் உத்தரவிற்கிணங்கவே செய்யப்பட்டன. இவருடைய தூதையும் நபித்துவத்தையும் உண்மைப்படுத்துவதற்கான தெளிவான சான்றுகளாகவே அல்லாஹ் இந்த அற்புதங்களை ஆக்கியுள்ளான்.

6 ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவன் தூதரும் என்று ஒருவர் நம்பாவிட்டால், அவரின் ஈமான் முழுமை அடையாது.

இவர் தொடர்பாக, யஹூதிகள் கொண்டிருக்கும் பிழையானதும் மிக மோசமானதுமான கருத்துக்களை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

அவ்வாறே, ஈஸா (அலை) அவர்களின் யதார்த்த நிலை பற்றி தவறாகப் புரிந்துகொண்ட கிறிஸ்தவர்களின் கொள்கையையும் நாம் புறக்கணிக்க வேண்டும்.

இவர் தொடர்பான கிறிஸ்தவர்களின் பிழையான கொள்கைகள்:

- அல்லாஹ்வை விடுத்து, இவரையும் இவரது தாயையும் கடவுள்களாக எடுத்துக் கொண்டமை.
- சிலர், "அல்லாஹ்வின் குமாரர்" என்று கூறுகின்றமை.
- சிலர், "திருத்துவக் கொள்கையான" மூன்று கடவுள்களுள் இவர் மூன்றாமவர் என்று நம்புகின்றமை.

இவர்கள் கூறும் இப்பிழையான கருத்துக்களை விட்டு அல்லாஹ் மிக உயர்ந்தவன்.

7 இவர் கொலைசெய்யப்படவுமில்லை, சிலுவையில் அறையப்படவுமில்லை. மாறாக, இவர் அல்லாஹ்வால் விண்ணுலகிற்கு உயர்த்தப்பப்பட்டார்.

யஹூதிகள் இவரை கொலை செய்ய எண்ணிய போது, வேறொருவனை இவர் போன்று அல்லாஹ் மாற்றிவிட்டான்.

இவனையே இவர்கள் கொலை செய்து, சிலுவையில் அறைந்துவிட்டு, இவன் தான் ஈஸா (அலை) அவர்கள் என்று பிழையாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: இன்னும் "அல்லாஹ்வுடைய தூதர் மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை, நிச்சயமாக நாங்கள் கொலை செய்து விட்டோம்", என்று அவர்கள் கூறியதன் காரணமாகவும் (அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான்) அவரை அவர்கள் கொல்லவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை; எனினும் அவர்களுக்கு (ஈஸாவின் தோற்றத்தைப் பெற்ற) ஒருவனை ஒப்பா(க்கி காண்பிக்)கப்பட்டது. இன்னும் நிச்சயமாக இ(வ்விஷயத்)தில், கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களே அத்தகையோர், அது பற்றி சந்தேகத்திலேயே உள்ளனர்; வெறும் யூகத்தை பின்பற்றுவதைத் தவிர, அதில் அவர்களுக்கு உண்மையான அறிவு (ஆதாரம்) கிடையாது; மேலும், உறுதியாக அவர்கள் அவரை கொலை செய்யவே இல்லை.

மாறாக, அல்லாஹ் அவரைத்தான் அளவில் உயர்த்திக் கொண்டான்; இன்னும் அல்லாஹ் (யாரையும்) மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கிறான்.

வேதத்தையுடையவர்களிலிருந்து எவரும் அவர் இருப்பதற்கு முன்னதாக, திட்டமாக அவரை விசுவாசிக்காமல் இருப்பதில்லை; இன்னும், மறுமை நாளில், அவர்களுக்கு அவர் பாதகமான சாட்சியாளனாக இருப்பார்.
(அந் நிஸா : 157 - 159)

இந்த வகையில், அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களைப் பாதுகாத்து வானத்திற்கு உயர்த்திக் கொண்டான்.

உலக முடிவின் போது இவர் பூமிக்கு இறங்கி, நபி (ஸல்) அவர்களது மார்க்கச் சட்டங்களின் அடிப்படையில் ஆட்சி செய்வார். பின்னர் இப்பூமியிலேயே இறந்து இங்கேயே அடக்கம் செய்யப்படுவார்.

இறுதியில், இவரும் ஏனையோரைப் போன்று இப்பூமியிலிருந்தே எழுப்பப்படுவார்

அல்லாஹ் கூறுகின்றான்:

(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம்; பின்னர், அதிலேயே நாம் உங்களை மீளவைப்போம்; மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்" (என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்).
(தாஹா : 55)

## நபி (ஸல்) அவர்களை ஒரு நபியாகவும் இறைத்தூதராகவும் நம்புதல்.

• முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் இறைத்தூதருமாவார். முழு மனித குலத்திற்கும் இவரே தலைவர். நபிமார்களுள் இறுதியானவர்.

எனவே இவருக்குப் பின்னர் எந்தவொரு நபியும் வரமாட்டார். மேலும், இவர் இறைத்தூதை எடுத்துரைத்து, தனது பொறுப்பை நிறைவேற்றியதோடு, இந்த சமூகத்திற்கு உபதேசித்து அல்லாஹ்வின் பாதையில் உண்மையாகவே போராடியவர் என்பன போன்ற இவர் தொடர்பான பல்வேறு அம்சங்களை நாங்கள் நம்புகின்றோம்.

• இவர் கூறிய விடயங்களை நாங்கள் உண்மையென நம்புகின்றோம்.

இவரது உத்தரவுகளுக்கு கட்டுப்படுவதோடு, எச்சரித்து தடுத்த விடயங்களை தவிர்த்துக் கொள்கின்றோம். இவரது "ஸ "ன்னா" எனும் வழிகாட்டலுக்கேற்பவே அல்லாஹ்வை வணங்குகின்றோம். இவரை மாத்திரமே எமது முன்மாதிரியாகக் கொண்டிருக்கின்றோம்.


அல்லாஹ் கூறுகின்றான்:

(உங்களில்) அல்லாஹ்வையும், மறுமை நளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவு கூருபவராக இருப்பவருக்கு, அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது. (அல் அஹ்ஸாப் : 21)

• எமது பெற்றோர்கள், பிள்ளைகள், முழு மனிதர்களை விடவும் நபி (ஸல்) அவர்களை நாம் நேசித்தல் வேண்டும்.

இதைப் பற்றி நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உங்களுள் ஒருவருக்கு நான் அவரது தந்தை, பிள்ளை,மக்கள் அனைவரை விடவும் அதிக நேசத்திற்குரியவனாய் மாறாத வரையில் அவர் உண்மை விசுவாசியாக மாட்டார் (அல் புகாரி : 15, முஸ்லிம் : 44)



நபியவர்களை நேசிப்பதற்கான உண்மையான அடையாளம் அவரது "ஸ "ன்னா" எனும் அழகிய வழிகாட்டலைப் பின்பற்றுவதாகும்.

உண்மையான சந்தோஷத்தையும் முழுமையான வழிகாட்டலையும் நபியவர்களுக்கு கட்டுப்படுவதன் மூலமே அடையப்பெற முடியும். இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

மேலும், நீங்கள் அவருக்குக் கீழ்படிந்து நடந்தால் நீங்கள் நேர் வழியை அடைந்து விடுவீர்கள்; (நம் தூதைத்) தெளிவாக எத்திவைப்பதைத் தவிர, (வேறோன்றும் நம்) தூதர் மீது (கடமை) இல்லை. (அந் நூர் : 54)

- அல்லாஹ்விடமிருந்து நபியவர்கள் கொண்டுவந்த அனைத்து விடயங்களையும் நாம் ஏற்றுக்கொள்வதோடு, அவரது ஸுன்னாவையும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

மேலும், அவரது வழிகாட்டலை உயர் இடத்தில் வைத்து நோக்குதல் வேண்டும்.

இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

ஆனால், உமதிரட்சகன் மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக ஆக்கி, நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனங்களில் எத்தகைய அதிருப்தியையும் பெறாமல் முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வரையில், அவர்கள் விசுவாசிகளாக மாட்டார்கள் (அந் நிஸா : 65)

- இவருடைய கட்டளைகளுக்கு மாறுசெய்யாது நாம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

ஏனெனில், இவரது உத்தரவிற்கு கட்டுப்படாது நடப்பதானது பிரச்சினைகள், வழிகேடுகள் மற்றும் கடுமையான தண்டனைகள் என்பன கிடைப்பதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

அல்லாஹ் கூறுகின்றான்:
ஆகவே, (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்து விடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொண்டிருக்கவும். (அந் நூர் : 63)

## முஹம்மத் (ஸல்) அவர்களது இறைத்தூதின் சிறப்பம்சங்கள்:

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கான இறைத்தூதானது, முன்னைய இறைத்தூதுகள் கொண்டிராத பல்வேறு தனித்துவங்களையும் சிறப்பியல்புகளையும் கொண்டிருக்கின்றது.

அவைகளுள் சில பின்வருமாறு:

- இறைத்தூதுகளுள் இறுதியானது. அல்லாஹ் கூறுகின்றான்:

உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மது, தகப்பனாக இருக்கவில்லை; எனினும், அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு(க் கடைசி) முத்திரையாகவும், (இறுதி நபியாகவும்) இருக்கிறார்; (அல் அஹ்ஸாப் : 40)

- முன்னைய இறைத்தூதுகள் அனைத்தையும் இரத்துச் செய்துவிட்டது.

எனவே, நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்ததன் பின்னர் அவரது வழிமுறையைப் பின்பற்றுவதன் மூலமே சுவன இன்பத்தை ஒருவரால் பெற முடியும்.

இவர் இறைத்தூதர்களுள் மிக கௌரவமானவர். இவரது சமூகமே மானிடச் சமூகங்களுள் மிகச் சிறந்த சமூகம் இறைசட்டங்களுள் இவர் கொண்டு வந்த சட்டங்களே முழுமை பெற்றவை.

அல்லாஹ் குறிப்பிடுகின்றான்:

"இன்னும் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக
எவராவது தேடினால், அப்பொழுது அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது; மேலும்
மறுமையில், அவர் நஷ்டமடைந்தோரில் இருப்பார்".

(ஆலு இம்ரான்: 85)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனது உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக இந்த சமுதாயத்திலுள்ள யூதனோ அல்லது கிறிஸ்தவனோ யாராக இருப்பினும் அவன் என்னைப் பற்றி கேள்விப்பட்டு, எனக்கு வழங்கப்பட்ட



இறைத் தூதினை நம்பாத நிலையில் மரணித்து விட்டால், நரகவாதிகளுள் ஒரு-வனாக அவன் மாறிவிடுகின்றான் (முஸ்லிம் : 153, அஹ்மத் : 8609)

- ஜின் மற்றும் மனித சமூகங்களுக்குப் பொதுவானது.

இஸ்லாத்தை தழுவிய சில ஜின்கள் தெரிவித்த சில கருத்துக்களைப் பற்றி விபரிக்கின்ற போது அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான். எங்களுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு நீங்கள் பதில் கூறுங்கள்; (அல் அஹ்காப் : 31)

மேலும் கூறுகின்றான் மேலும், (நபியே!) உம்மை மனிதர்கள் அனைவருக்கும் நன்மாராயம்
கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி நாம் அனுப்பவில்லை.
(ஸபஃ : 28)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பின்வரும் ஆறு விடங்கள் எனக்கு வழங்கபட்டதன் மூலம் ஏனைய நபிமார்களை விட நான் கௌரவிக்கப்பட்டுள்ளேன்.

- சொற்சுருக்கமும் கருத்துச்செறிவும் கொண்ட பேச்சுத்திறன் எனக்கு வழங்கப்பட்டுள்ளமை.
- (எதிரிகளின் உள்ளத்தில் என்னைப் பற்றி இறைவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும்) அச்சத்தின் மூலம் எனக்கு உதவி செய்யப்பட்டுள்ளமை.
- போரில் கைப்பற்றப்படும் எத-ிரிகளின் பொருட்கள் எனக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளமை.
- பூமி முழுவதும் எனக்காக சுத்தமானதாகவும் தொழுமிடமாகவும் ஆக்கப்பட்டுள்ளமை.
- சகல படைப்பினங்களுக்கும் நான் இறைத்தூதராக அனுப்பப்பட்டுள்ளமை.
- நபிமார்களின் வருகை என்னுடன் முற்றுப்பெற்றுள்ளமை.

(அல் புகாரி : 2815, முஸ்லிம் : 523)

## இறைத்தூதர்களை நம்புவதன் மூலம் அடையப்பெறும் நன்மைகள்:

1 அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்டிருக்கும் அன்பையும் கரிசனையையும் புரிந்து கொள்ள முடியும்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு நேர்வழியைக் காட்டுவதற்காகவும் அவர்கள் அவனை எவ்வாறு வணங்க வேண்டுமென்பதை தெளிவுபடுத்துவதற்காகவும் இறைத்தூதர்களை அவர்கள் பால் அனுப்பி வைத்தான்.

ஏனெனில், மேற்படி அம்சங்களை மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாது.

அல்லாஹ் நபியவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

(நபியே!) உம்மை அகிலத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்பவில்லை. (அல் அன்பியா: 107)

2 இப்பெரும் அருட்கொடையை அல்லாஹ் வழங்கியமைக்காக அவனுக்கு நன்றி செலுத்துதல்.

3 இறைத்தூதர்கள் தங்களது சமூகத்திற்கு அல்லாஹ்வின் தூதை பிரச்சாரம் செய்து,மக்களை நல்வழிப்படுத்தியதற்காக (உபதேசித்ததற்காக) அவர்களைப் புகழ்வதோடு, உயர்வாக மதித்து அவர்கள் மீது அன்பு கொள்ளுதல்.

4 இறைத்தூதர்கள் அல்லாஹ்விடமிருந்து கொண்டு வந்த இறைத்தூதான "அல்லாஹ்வுக்கு இணைவைக்காத நிலையில் அவன் ஒருவனையே வணங்குதல் வேண்டும்" எனும் மூல மந்திரத்தை பின்பற்றுவதோடு அவற்றை நடைமுறைப்படுத்தல். இது ஈருலகிலும் நம்பிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியையும் நேர்வழியையும் பெற்றுக் கொடுக்கும்.அல்லாஹ் கூறுகின்றான்: ஆகவே, என்னுடைய நேர்வழியை எவர் பின்பற்றுவாரோ, அவர் வழி தவறமாட்டார்; துர்பாக்கியவனாக ஆகவுமாட்டார்" என்று கூறினான். மேலும், "எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கின்றாரோ, நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது. (தாஹா : 123 - 124)



> "மஸ்ஜிதுல் அக்ஸா" விற்கு, முஸ்லிம்களுக்கு மத்தியில் பெரும் மதிப்பும் மரியாதையும் உண்டு. இது "மஸ்ஜிதுல் ஹராம்" எனும் பள்ளிவாயிலுக்குப் பின்னர் பூமியில் கட்டப்பட்ட இரண்டாவது பள்ளியாகும். இப்பள்ளிவாயிலில் நபி (ஸல்) அவர்கள் உள்ளிட்ட அனைத்து நபிமார்களும் தொழுதிருக்கின்றார்கள்.

## > இறுதி நாளை நம்புதல்

### "இறுதி நாளை நம்புதல்" என்பதன் பொருள்

மனிதர்களை மண்ணறைகளிலிருந்து அல்லாஹ் உயிர் கொடுத்து எழுப்புவான். பின்னர், அவர்களை விசாரனை செய்து அவர்களின் செயல்களுக்கு ஏற்ப கூலி வழங்குவதோடு, சுவனவாதிகள் சுவனத்திலும் நரகவாதிகள் நரகத்திலும் சென்று, தங்கி விடுவார்கள் என்பன போன்ற அம்சங்களை உறுதியாக நம்புவதனையே இது குறிக்கும்.

இறுதி நாளை நம்புவதானது ஈமானின் தூண்களுள் ஒன்றாகும்.

இதனை நம்பாவிடின் ஒருவரின் ஈமான் செல்லுபடியாகாது. அல்லாஹ் கூறுகின்றான்:

எனினும் நன்மை உடையவர், (எவரெனில் உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் விசுவாசித்தவராவார். (அல் பகறா : 177)

### இறுதி நாளை நம்பவேண்டுமென்று அல் குர்ஆன் வலியுறுத்துவது ஏன் ?

இறுதி நாளை நம்பவேண்டுமென்று அல் குர்ஆன் வலியுறுத்துவதோடு, அனைத்துச் சந்தர்ப்பங்களிலுமே எமது கவனத்தை இதன்பால் திருப்பத் தவறவில்லை.

இது உண்மையில் நிகழவிருக்கின்றது என்பதைப் பற்றி அறபு மொழியின் பல்வேறு பிரயோகங்களுக்கூடாக அல் குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது.

மேலும், இதனை நம்புவதானது, "அல்லாஹ்வை நம்புதல்" என்ற அம்சத்துடன் இணைத்தும் பல்வேறு இடங்களில் பேசப்பட்டுள்ளது.

ஏனெனில், இறுதிநாளை நம்புவதானது அல்லாஹ்வை நம்புதல் மற்றும் அவனது நீதத்தை எடுத்துகாட்டுதல் என்ற அம்சங்களின் மிகச் சரியானதொரு விளைவாகும்.

அல்லாஹ் அநீதி செய்வதை ஏற்றுக் கொள்ளவோ, அநியாயம் செய்பவர்களை தண்டிக்காமல் விட்டுவிடவோ மாட்டான்.



> ஏனையோருக்கு உதவி உபகாரங்கள் செய்வதன் ‰லம் நரகிலிருந்து எம்மை தூர விலக்கிக்கொள்ளுமாறு இஸ்லாம் எமக்கு வழிகாட்டுகின்றது. இந்த உபகாரமானது, ஓர் ஈத்தம் பழத்தின் அரைப்பகுதியை தானம் செய்வதாகக் கூட இருக்கலாம்.

அதேவேளை,அநியாயத்திற்குட்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்காமலோ அல்லது நல்லறன்கள் புரிவோருக்கு அதற்கான நன்மைகளை வழங்காமலோ விட்டு விடவும்மாட்டான்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்தவைகளுக்குரிய பிரதிபலன்களை வழங்கியே தீருவான்.

இந்த உலகத்தில் சிலர் அநியாயம் செய்தவர்களாக வாழ்ந்து அதற்கான தண்டனைகளைப் பெறாமலேயே மரணிக்கின்றனர். மற்றும் சிலர் அநியாயத்திற்கு உட்பட்டவர்களாகவே வாழ்ந்து அதற்கான எந்தவொரு நியாயத்தையும் பெற்றுக் கொள்ளாமல் அதே நிலையில் மரணித்து விடுவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அல்லாஹ் அநியாயத்தை ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறாயின், இவ்வாறு நடப்பதற்கான காரணம் என்ன ? மறுமை வாழ்வொன்று நிச்சயம் இருந்தாக வேண்டுமென்பதைத் தான் இது உணர்த்தி நிற்கின்றது. அங்கு தான் நல்லறம்கள் புரிந்தோர் அதற்கான அனுகூலங்களைப் பெறவும் தீமைகள் செய்தோர் அதற்கான தண்டனைகளைப் பெறவும் நிச்சயம் ஒரு வாய்ப்பு ஏற்படும்.

### "இறுதி நாளை நம்புதல்" என்பது எவ்வாறான விடயங்களைக் கொண்டிருக்கின்றது ?

**1** மக்கள் மீள உயிர்கொடுத்து எழுப்பப்படுவதையும் "மஹ்ஷர்" வெளியில் அவர்கள் ஒன்று திரட்டப்படுவதையும் நம்புதல் :

இது, மரணித்தோர் மண்ணறைகளிலிருந்து உயிர்கொடுத்து எழுப்பப்படுவதையும் பின்னர் அவர்கள் ஆரம்பமாக படைக்கப்பட்டது போன்று பாதணி அற்றவர்களாகவும், ஆடையற்றவர்களாகவும் ஒரே இடத்தில் ஒன்று திரண்டு இறுதித் தீர்ப்பை எதிர்பார்த்து அல்லாஹ்விற்கு முன்னால் நிற்பதையும் குறிக்கும்.

மீள உயிர்கொடுத்து எழுப்பப்படுவதை நம்ப வேண்டுமென்று குர்ஆன், ஸுன்னா, பகுத்தறிவு மற்றும் மனித இயல்பு என்பன உறுதிப்படுத்துகின்றன.

எனவே, அல்லாஹ் மரணித்தோரை மண்ணறைகளிலிருந்து உயிர் கொடுத்து எழுப்புவான் என்றும் மேலும், குறித்த உடல்களுக்கு ஆன்மாக்கள் மீளச் சென்றுவிடுவதோடு, அவர்கள் அனைவரும் இறுதித்தீர்ப்பை எதிர்பார்த்து அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்பார்கள் என்றும் நாங்கள் உறுதியாக நம்புவோம்.

அல்லாஹ் கூறுகின்றான்: (மனிதர்களே!) பின்னர், நிச்சயமாக நீங்கள் இறப்பெய்தக் கூடியவர்கள். பின்னர், மறுமை நாளின் போது நிச்சயமாக நீங்கள் (உயிர் கொடுத்து எழுப்பப்படுவீர்கள்.) (அல் மு:.மினூன் : 15 - 16)

இது நடக்குமென்பதை அனைத்து இறைவேதங்களும் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றன.

இறைதூதர்களுக்கூடாக மனிதர்கள் மீது கடமையாக்கப்பட்ட அம்சங்களை அவர்கள் செய்தமைக்காகவோ அல்லது விட்டமைக்காகவோ உரிய கூலிகளை வழங்குவதற்கென்று ஒரு தினத்தை அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கின்றமையானது, அவனின் அறிவு ஞானம் அவசியமெனக் கருதுகின்றதொரு விடயமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

உங்களை நாம் படைத்ததெல்லாம் வீணுக்காகத்தான் என்றும், நிச்சயமாக நீங்கள் நம்மிடம் மீட்டப்படமாட்டீர்கள் என்றும் நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?" (என்று கூறுவான்) (அல் மு:.மினூன் : 115)

### "உயிர்கொடுத்து மீள எழுப்பப்படுதல்" எனும் நிகழ்வை உறுதிப்படுத்துவதற்கான அல் குர்ஆனின் சில சான்றுகள்:

- மனிதனை ஆரம்பமாக படைத்த அல்லாஹ்விற்கு அவனது உயிரை மீள வழங்குவது, அவனுக்கு இயலாத விடயமல்ல.

அல்லாஹ் கூறுகின்றான்:

அவன் எத்தகையவனென்றால், படைப்பை (முன்மாதிரியின்றியே ஆரம்பமாக அவன் தொடங்குகின்றான்; பின்னர் அதை அவன் மீளவைக்கிறான்; (அர் ரூம் : 27)

எலும்புகள் உக்கிப்போன பிறகு அவைகளுக்கு உயிர் கொடுக்க முடியாது என்று கூறுவோரினது கருத்துக்களை மறுதளிக்குமாறு நபியவர்களை அல்லாஹ் இவ்வாறு பணிக்கின்றான்.

(நபியே! அதற்கு) நீர் கூறுவீராக: "முதன் முறையில் அதனைப்படைத்தானே அத்தகையவனே அதனை உயிர்ப்பிப்பான்; அவன் ஒவ்வொரு படைப்பைப் பற்றியும் நன்கறிகிறவன்." (யாசீன் : 79)

- பூமி சிலபோது பச்சைநிற மரஞ்செடிகொடிகள் ஏதுமின்றி செத்து வறண்டு போய் விடுகின்றது.

அப்போது, அல்லாஹ் அங்கு மழையை இறக்குகின்றான். பின்னர் அது மரங்கள் முளைத்து பசுமையாக காட்சியளிக்கின்றது.

பூமி செத்து வறண்டு போன பிறகு அதனை உயிர் பெறச்செய்து பசுமையாக்க முடிந்த அல்லாஹ்வுக்கு, இறந்த மனிதனுக்கு உயிர் கொடுக்கவும் முடியும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

வானத்திலிருந்து, மிக்க பாக்கியமுள்ள (மழை) நீரையும் நாம் இறக்கிவைத்தோம்; பின்னர், அதனைக்கொண்டு (பல) சோலைகளையும், அறுவடை செய்யப்படும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்தோம்.

அன்றியும், (அந்நீரைக் கொண்டு) நீண்டு வளர்ந்த பேரீச்ச மரங்களையும் (நாம் முளைப்பிக்கச் செய்தோம்) அவைகளுக்கு அடுக்கடுக்கான பாளைகளிருக்கின்றன.

(அதனை நாம்) அடியார்களுக்கு ஆகாரமாக (ஆக்கினோம்); இன்னும் அதைக் கொண்டு இறந்து கிடந்த ஊரை (வறண்ட பூமியை) நாம் உயிர்ப்பிக்கின்றோம்; இவ்வாறே, (மரணித்தோர் உயிர் பெற்று) வெளியேறுதலும் (நடந்தேறும்.) (காப்: 9-11)

- பாரிய கடினமானதொரு வேலையைச் செய்த ஒருவனுக்கு, அதனை விடச் சிறிய இலகுவானதொரு வேலையைச் செய்வது முடியுமான காரியம் என்பதை பகுத்தறிவுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இந்த வகையில் அல்லாஹ் வானங்கள், பூமிகள், கோள்கள் என்பவற்றை பாரிய அளவில் விசாலமாகவும் அற்புதமாகவும் படைத்திருக்கின்றான்.

இவ்வளவு தூரம் ஆற்றல் பெற்ற அல்லாஹ்வைப் பொறுத்த வரையில், உக்கிப்போன அற்பமான எலும்புகளுக்குஉயிர்கொடுப்பதென்பது, ஒரு பொருட்டே அல்ல. அதனை அவன் மிக இலகுவாகச் செய்து விட முடியும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

வானங்களையும், பூமியையும் படைத்தானே அத்தகையவன் அவர்களைப் போன்றதைப் படைக்கச் சக்தி பெற்றவனாக இல்லையா? ஏன் இல்லை? (அவனே ஆற்றலுடையவன்.) நிச்சயமாக, அவனே, மிகப் பெரும் படைப்பாளன், நன்கறிகிறவன்.

(யாசீன் : 81)

### 2 மறுமை நாள் விசாரணை மற்றும் நன்மை தீமைகளை எடை போடும் தராசு என்பனவற்றை நம்புதல் :

உலக வாழ்க்கையில் மனிதர்கள் செய்த அனைத்து விவகாரங்கள் பற்றியும் அல்லாஹ் அவர்களை விசாரணை செய்வான்.

யார் ஏகத்துவ வாதியாகவும் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டவராகவும் இருப்பாரோ அவருக்கான விசாரணை மிக இலகுவாக இருக்கும்.

ஒருவர் இணைவைப்பவராகவும் பாவியாகவும் இருக்கின்ற போது அவருக்கான விசாரணை கடினமாக அமையும்.

மனிதர்களின் செயல்கள் அனைத்தும் பாரியதொரு தராசில் எடை போடப்படும். இதில் நல்ல கருமங்களை ஒரு தட்டிலும் தீமைகளை மறுதட்டிலும் வைத்து நிறுக்கப்படும். யாருடைய நற்கருமங்களின் தட்டு மிகைத்து விடுமோ

அவர் சுவனவாதியாக மாறுவார். தீமைகளின் தட்டு மிகைத்து விட்டவர் நரகவாதியாக மாறுவார். அல்லாஹ் எந்தவொரு மனிதனுக்கும் அநியாயம் செய்ய மாட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

மேலும், மறுமை நாளில் நீதமான தராசுகளை நாம் வைப்போம்; எந்த ஓர் ஆத்மாவும், (எதையும் குறைத்தோ, கூட்டியோ) சிறிதளவும் அநியாயம் செய்யப்படமாட்டாது; (நன்மையோ,தீமையோ) ஒரு கடுகின் வித்தளவு அது இருந்தபோதிலும், அதனையும் (நிறுக்கக்) கொண்டு வருவோம்; கணக்கெடுப்பவர்களில் (நமக்கு) நாமே போதும்; (கணக்கெடுக்க மற்றவரின் உதவி நமக்குத் தேவையில்லை). (அல் அன்பியா: 47)

## 3 சுவனமும் நரகமும்

சுவனம் என்பது, அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கும் இறையச்சமும் நம்பிக்கையும் கொண்ட நல்லடியார்களுக்கென தயார்படுத்தப்பட்ட நிலையான இன்பங்கள் நிறைந்ததோர் இடமாகும். அங்கு, உள்ளங்கள் விரும்புகின்ற, கண்களைக் குளிரச்செய்கின்ற பல்வேறு நிலையான அனைத்து சுகங்களும் நிறைந்து காணப்படும்.

வானம் மற்றும் பூமியளவு விசாலமான சுவனத்தில் நுழைவதற்கும் அவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் பால் விரைந்து செயற்படுவதற்கும் மனிதர்களை தூண்டும் வகையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

உங்கள் இரட்சகனின் மன்னிப்பின் பாலும், சுவனபதியின் பாலும் விரைந்து கொள்ளுங்கள்; அதன் அகலமாகிறது வானங்களும், பூமியுமாகும்; அது பயபக்தியுடையவர்களுக்காக(வே) தயார் செய்யப்பட்டுள்ளது. (ஆலு இம்ரான் : 133)

அல்லாஹ்வை மறுத்து, அவனது தூதர்களுக்குக் கட்டுப்படாமல் நடக்கும் இறைமறுப்பாளர்களான பாவிகளுக்கென்று, அல்லாஹ் சித்தப்படுத்தி இருக்கும் நிலையான வேதனைகள் நிறைந்ததோர் இடமே நரகமாகும்.



கற்பனைக்கு எட்டாத பல்வேறு வகையான வேதனைகளும் கஷ்ட துன்பங்களும் இதிலே உண்டு.

இறை நிராகரிப்பாளர்களான பாவிகளுக்கென்று, தயார்படுத்தப்பட்ட இந்நரகம் குறித்து அல்லாஹ் தனது அடியார்களுக்கு இவ்வாறு எச்சரிக்கின்றான்.

ஆகவே மனிதர்களும், கல்லும் தனக்கு எரிபொருளாக்கப்படுகின்ற (நரக) நெருப்பைப் பயந்து கொள்ளுங்கள். (இந்த நெருப்பு) நிராகரித்துக் கொண்டிருப்போருக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. (அல் பகறா : 24)

அல்லாஹ்வே! சுவனத்தைத் தருமாறும் அதன் பால் எங்களை அண்மிக்கச் செய்கின்ற செயல்களைச் செய்யவும் அவ்வாறான வார்த்தைகளைப் பேசவும் எமக்கு உதவுமாறு உன்னிடம் நாங்கள் கேட்கின்றோம்.

மேலும், நரகிலிருந்தும் அதன் பால் எங்களை அண்மிக்கச் செய்கின்ற சொல், செயல்களிலிருந்தும் எங்களை நீ பாதுகாக்குமாறும் கேட்கின்றோம்.

## 4 மண்ணறை வேதனைகளும் அதன் சுகங்களும்:

மரணம் உண்மையானது என நாங்கள் நம்புகின்றோம்.

அல்லாஹ் கூறுகின்றான்:

ஆகவே (நபியே!) நீர் கூறுவீராக: உங்களுக்கென நியமனம் செய்யப்பட்டிருக்கும் மலக்குல் மவ்த் (ஆகிய வானவர் தான்) உங்களுடைய உயிரைக் கைப்பற்றுவார்; பின்னர் (மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு), உங்கள் இரட்சகனிடமே நீங்கள் திருப்பிக் கொண்டு வரப்படுவீர்கள். (அஸ் ஸஜதா : 11)

சந்தேகமின்றி சம்பவிக்கின்ற கண்கூடானதோர் அம்சமே இது.

ஒருவர், மரணித்தாலோ அல்லது வேறேதும் காரணத்தினால் கொலை செய்யப்பட்டாலோ இது அதற்குரிய குறித்த நேரத்திலேயே இடம்பெற்றுள்ளது என்றே நாங்கள் நம்புகின்றோம்.



அல்லாஹ் கூறுகின்றான்:

ஆகவே, அவர்களுடைய தவணை வந்துவிட்டால் ஒரு கணப்பொழுது பிந்தவும் மாட்டார்கள்; முந்தவும் மாட்டார்கள். (அல் அ.்.ராப் : 34)

- ஒருவர் மரணித்து விட்டால், அவர் மறுமை வாழ்விற்குச் சென்று விடுகின்றார் என்றே நாங்கள் நம்புகின்றோம்.

- இறை நிராகரிப்பாளர்கள் மற்றும் பாவிகளுக்கு மண்ணறையில் வேதனைகள் உண்டு என்றும் இறைவிசுவாசிகளுக்கும் நல்லடியார்களுக்கும் அதிலே இன்ப சுகங்கள் இருக்கின்றன என்றும் உறுதிப்படுத்தும் பல்வேறு ஹதீஸ்கள் நபியவர்களின் வாயிலாக இடம்பெற்றுள்ளன.

இதனை நாங்கள் நம்புவோம். ஆனால், இவைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பது தொடர்பாக ஆழமான ஆய்வுகளைச் செய்ய மாட்டோம்.

ஏனெனில், இவைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதையோ அல்லது இவைகளின் யதார்த்த நிலைகள் பற்றியோ மனித அறிவுத்திறனால் புரிந்து கொள்ள முடியாதது, மாத்திரமல்ல கண்ணுக்குப் புலப்படாத மறை உலகிலேயே இவைகள் இடம்பெறுகின்றன.

உதாரணமாக, சுவனம், நரகம் என்பது கண்ணுக்குத் தெரிகின்ற இவ்வுலகிலுள்ள விடயங்களல்ல. இவைகள் மறுஉலகோடு தொடர்பானவை.

மனிதனின் அறிவுத்திறனால், கண்ணுக்குப் புலப்படும் இவ்வுலகிலுள்ள சட்ட ஒழுங்குகள் மற்றும் மாதிரிகளை அடிப்படையாக வைத்து ஒப்பிடுவதன் மூலம் பகுப்பாய்வுகள் செய்து ஒரு முடிவுக்கு வர முடியுமே தவிர அதற்கப்பால் செல்ல முடியாது.

- மண்ணறை வாழ்விலே இடம்பெறும் நிகழ்வுகள் புலன்களால் உணரமுடியாத மறுஉலகு சார் விடயங்களாகும்.

அவ்வாறு இவைகள் புரியப்படுமாக இருந்தால், மறை உலகு தொடர்பான எமது நம்பிக்கை மற்றும் மார்க்கக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற செயற்பாடுகளுக்குப் பின்புலத்திலுள்ள அறிவுபூர்வமான நியாயம் அல்லது தத்துவம் அர்த்தமற்றுப் போய்விடுவதோடு, மனிதர்கள் அவர்களது இறந்த உடல்களை புதைக்கவும் மாட்டார்கள்.

நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உங்களுள் ஒருவர் மற்றவரை அடக்கம் செய்யாமல் விட்டு விடுவீர்கள் என்ற நிலை ஏற்படாது என்றிருந்தால், நான் செவியுறும் மண்ணறை வேதனைகளின் சப்தங்களை உங்களுக்கும் கேட்கச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திருப்பேன் (முஸ்லிம்: 2868, அந்நஸாயீ 2058)

மிருகங்கள் மார்க்கக் கடமைகளைச் செய்ய வேண்டுமென்ற நிலையிலிருந்து விதிவிலக்குச் செய்யப்பட்டதன் காரணமாக, அவைகளால் மண்ணறையில் இடம்பெறுகின்ற வேதனைகளின் சப்தங்களை கேட்கவும் உணரவும் முடிகின்றது.

### "இறுதி நாள் உண்டு" என்பதை நம்புவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் :

1 இறுதிநாளை நம்புவதானது, நற்காரியங்களில் ஈடுபடுதல். அல்லாஹ்வை அஞ்சுதல், தற்பெருமை மற்றும் முகஸ்துதி போன்றவற்றிலிருந்து தூர விலகிய நிலையில் வாழுதல் என்பனவற்றின் பால் மனிதர்களுக்கு வழிகாட்டுகின்றது.
எனவே தான், அல்குர்ஆன் அதிகமான சந்தர்ப்பங்களில் நற்காரியங்களில் ஈடுபடுவதனையும் இறுதி நாளை நம்புவதனையும் இணைத்துப் பேசியிருக்கின்றது.
இதனையே பின்வரும் இறைவசனங்கள் குறிப்பிடுகின்றன. (அத் தௌபா : 18)
அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனம் செய்கிறவரெல்லாம் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்தவர்களாவார்கள். (அல் அன்ஆம் : 92)

2 உலக அலுவல்களிலும் அதன் சுகபோகங்களிலும் முழுமையாக மூழ்கி, வணக்க வழிபாடுகளில் போட்டியிடுவதையும் அவைகளின் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக நேரங்களைப் பயன்படுத்துவதையும் மறந்து வாழும் மனிதர்களுக்கு, இவ்வுலக வாழ்வின் யதார்த்தம் மற்றும் அதன் நிலையில்லாத்தன்மை பற்றியும் மேலும், மறுமை வாழ்வு நிலையானது, நிரந்தரமானது என்பது பற்றியும் இது நினைவு படுத்தும்.
இறைத்தூதர்களை அல்லாஹ் அல் குர்ஆனில் புகழ்ந்து, அவர்களது நற்கருமங்கள் பற்றிப் பிரஸ்தாபித்த பிறகு, அவ்வாறான நற்கிரியைகளில் அவர்கள் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்திய காரணி பற்றியும் குறிப்பிடுகின்றான்.
அல்லாஹ் கூறுகின்றான்:
நிச்சயமாக (மறுமை) வீட்டை நினைவு கூருவதை நோக்கமாகக் கொண்டு (செயல்படுபவர்களாக) அவர்களை நாம் பிரத்தியேகப்படுத்தினோம். (ஸாத் : 46)
அவ்வாறான, இவர்களின் செயற்பாடுகளுக்கு பின்னணியாக இருந்த பிரதான காரணம், மறுமை வாழ்வு பற்றிய சிந்தனையோடு எந்நேரமும் அவர்கள் வாழ்ந்தமையாகும் என்பதனையே இது குறிக்கின்றது.
அல்லாஹ்விற்கும் அவன் தூதருக்கும் கட்டுப்படுவதில் சில முஸ்லிம்கள் அசமந்தப்போக்கை காட்டிய போது, அவர்களை விளித்து அல்லாஹ் இவ்வாறு கூறினான்.
மறுமையை விட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டு நீங்கள் திருப்தியடைந்து விட்டீர்களா? மறுமை(யின் வாழ்க்கை)க்கு முன்பாக இவ்வுலக வாழ்வின் இன்பம் வெகு சொற்பமே தவிர (வேறு) இல்லை. (அத் தௌபா : 38)
ஒருவர், இறுதிநாளை நம்புகின்ற போது இவ்வுலக இன்பங்களை மறுஉலக இன்பங்களோடு ஒப்பிடுவதோ அல்லது இதற்காக நரக வேதனையில் ஒரு தடவை அமிழ்த்தி எடுக்கப்படுவதோ சமமாக மாட்டாது என்பதையும் அதேவேளை, அல்லாஹ்வுக்காக இவ்வுலகில் அனுபவிக்கும் வேதனையானது மறுமையின் வேதனையோடு ஒப்பிடப்படவோ அல்லது இதற்காக ஒருமுறை சுவன இன்பத்தில் போட்டு எடுக்கப்படுவதோ ஈடாக மாட்டாது என்பதையும் அவர் உறுதியாக நம்புவார்.

3 மனிதனை முழுத் திருப்தியோடு சந்தோஷமாக வாழ வைக்க இது துணைநிற்கும்.
இவ்வுலக சுகங்களுள் ஒன்றை ஒருவன் இழந்தால், அதற்காக அவன் கவலைப்படவோ அல்லது கவலையால் தன்னை மாய்த்துக் கொள்ளவோ மாட்டான்.
மாறாக, அதனைப் பெறுவதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வதோடு, நல்லவிடயங்களுக்கான ஒருவரது முயற்சிகளை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்கிவிட மாட்டான் என்று நம்பித் திருப்தியடைவான்.
ஒருவரிடமிருந்து ஏதாவது ஒன்று அநியாயமாகவோ அல்லது மோசடியாகப் பறிக்கப்பட்டால், இதன் பால் அதிக தேவையுள்ள அந்த மறுமை நாளில் அவர் இதனைப் பெற்றுக் கொள்வார். இது அணுவின் அளவுகொண்ட அற்பமானதொரு பொருளாக இருப்பினும் சரியே. தன்னிடமிருந்து பறிபோனதொரு பொருள் மிகவும் ஆபத்தானதும் முக்கியமானதுமான இது போன்றதொரு நாளில் நிச்சயம் கிடைக்குமென நம்புகின்ற ஒருவர்,இதனையிட்டு எவ்வாறு கவலைப்பட முடியும் ?
தனக்கும் தனது எதிரிகளுக்குமிடையில் தீர்ப்பு வழங்குவதற்கு மிகச் சிறந்ததொரு நீதிபதியான அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதை விளங்கிக் கொண்ட ஒருவர், தனக்கு எதிரிகளால் இழைக்கப்பட்ட அநியாயம் குறித்து எவ்வாறு கவலை கொள்ள முடியும்?

## > விதியை நம்புதல்.

### "விதியை நம்புதல்" என்பதன் பொருள் :

நல்லது தீயது அனைத்தும் தான் நாடியதைச் செய்யும் அல்லாஹ்வின் ஏற்பாடு மற்றும் நிர்ணயத்தின் படியே நடக்கின்றன என்பதை உறுதியாக நம்புவதனையே இது குறிக்கும்.

அவனின் நாட்டமின்றி எதுவும் நடக்காது. உலகிலே இருக்கும் எந்தவொன்றும் அவனது நாட்டத்தையோ விருப்பத்தையோ அல்லது திட்டமிடலையோ விட்டு வெளியே சென்று செயற்படமுடியாது.

எப்படியோ, அல்லாஹ் தனது அடியார்களுக்கு சில விடயங்களைச் செய்யக்கூடாதெனத் தடுத்ததோடு,மற்றும் சில விடயங்களைச் செய்யுமாறு பணித்தும் உள்ளான்.

இருந்தாலும் கூட, இதைத் தான் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏதுமின்றி அவர்களுக்குச் செயற்சுதந்திரத்தையும் வழங்கியிருக்கின்றான். அவர்களின் சக்திக்கும் நாட்டத்திற்குமேற்பவே செயல்கள் நடக்கின்றன.

அல்லாஹ் தான், அவர்களையும் அவர்கள் ஒன்றைச் செய்வதற்கான சக்தியையும் படைத்தான். அவன், தான் நாடுபவர்களுக்கு தனது அன்பைக் கொண்டு நேர்வழி காட்டுகின்றான். தனது ஞானத்தைக் கொண்டு தான் நாடுபவர்களை வழிதவறவும் செய்கின்றான். அல்லாஹ் தான் செய்பவைகள் பற்றி எதுவும் வினவப்பட மாட்டான். ஆனால், மனிதர்கள் செய்வது பற்றி அவர்களே வினவப்படுவார்கள்.



> இப்பிரபஞ்சத்திலே உள்ள எதுவும் அல்லாஹ்வின் விதியை விட்டு வெளியே செல்ல முடியாது.

## "விதியை நம்புதல்" என்பது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

விதியை நம்புவது, பின்வரும் நான்கு விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

- அல்லாஹ் அனைத்து விவகாரங்களையும் சுருக்கமாகவும் விரிவாகவும் அறிந்திருக்கின்றான் என்பதை நம்புதல்.

மேலும், அவன் தனது அனைத்து படைப்புக்களையும் அவைகள் படைக்கப்படுவதற்கு முன்பிருந்தே அறிந்திருக்கின்றான் என்றும். இன்னும், அவைகளது உணவுகள், மரண வேளைகள், பேச்சுக்கள், செயல்கள், அனைத்துவித நகர்வுகள் மற்றும் அசைவுகள், அந்தரங்கமான மற்றும் வெளிப்படையான அம்சங்கள், மனிதர்களுள் சுவனம் செல்பவர்கள் யார்? நரகம் செல்பவர்கள் யார்? போன்ற அனைத்து விடயங்களையும் அறிந்திருக்கின்றான் என்றும் நம்புதல்.

அல்லாஹ் கூறுகின்றான்:

அவன்(தான்) அல்லாஹ் : அவன் எத்தகையவனென்றால் அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை (அவன்) மறைவானதையும் வெளிப்படையானதையும் நன்கறிகிறவன். (அல் ஹஷ்ர் : 22)

விதியை நம்புவதானது, ஈமானின் தூண்களுள் ஒன்றாகும். ஈமானைப் பற்றி நபியவர்களிடம் வினவப்பட்ட போது, அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: "அல்லாஹ், அவனது மலக்குகள், வேதங்கள், தூதர்கள் மற்றும் மறுமை நாள், நல்லது கெட்டது உள்ளிட்ட அவனது விதி என்பவற்றை நீ நம்புவதாகும்." (முஸ்லிம்: 8)

- உலகில் நிகழவிருக்கும் அனைத்தையும் அவனது முன்னறிவுக்கேற்ப "லவ்ஹ் மஹ்பூழ்" எனும் ஏட்டில் பதிவு செய்திருக்கின்றான் என்று நம்புதல்.

இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

எந்தத் துன்பமும் - அதனை நாம் சிருஷ்டிப்பதற்கு முன்னதாக, (லவ்ஹுல் மஹ்.:.பூள் என்னும்) புத்தகத்தில் (பதியப்பட்டு) இருந்தே தவிர - பூமியிலோ, அல்லது உங்களிலோ ஏற்படுவதில்லை; நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதாகும். (அல் ஹதீத் : 22)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வானங்கள் மற்றும் பூமி என்பனவற்றைப் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே படைப்பினங்கள் தொடர்பான நியதிகள் பற்றி எழுதி முடித்துவிட்டான். (முஸ்லிம் : 2653)

- ஈருலகிலும் அல்லாஹ்வின் விருப்பமே நடைபெறும். அதனை எந்தவொரு சக்தியாலும் நிறுத்த முடியாது என்று நம்புதல்.

எனவே, நடப்புக்கள் அனைத்தும் அவனது விருப்பத்திற்கும் சக்திக்கும் உட்பட்டே நடக்கின்றன. அவன் விரும்பியது மாத்திரமே நடைபெறும். அவன் விரும்பாதது எதுவும் நடைபெறாது.

அல்லாஹ் கூறுகின்றான்:

அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் நாடமாட்டீர்கள் (அத் தக்வீர் : 29)

- அல்லாஹ் தான்,அனைத்தையும் உருவாக்கியவன் என்று நம்புதல்.

மேலும், அவன் மாத்திரமே படைத்தவன். அவனல்லாத ஏனையவைகள் அனைத்தும் அவனது படைப்புக்களாகும். அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் மிக்கவன் என்ற அம்சங்களையும் நம்புதல்.

அல்லாஹ் கூறுகின்றான்:

அவனே ஒவ்வொரு பொருளையும் படைத்தான்; பிறகு அதனதன் முறைப்படி அதைச் சரியாக அமைத்தான். (அல் புர்கான்: 2)

## மனிதனுக்கு செயல் சுதந்திரம், சுய விருப்பம் மற்றும் அவன் நாடியதை மேற்கொள்வதற்கான ஆற்றல் என்பன உண்டு.

விதியை நம்புவதானது, செயல் சுதந்திரமும் தான் நாடியதைச் செய்வதற்கான ஆற்றலும் மனிதனுக்கு உண்டு எனும் விடயத்தோடு எந்த வகையிலும் முரணாகாது.

ஏனெனில், இதனை நிறுபிப்பதற்கு ஷரீஆ மற்றும் உலகின் நடைமுறைச் சான்றுகள் உள்ளன.

ஷரீஆ சார்ந்த சான்றினைப் பொறுத்த வரையில், நாட்டம் குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:
(அந்நிகழ்ச்சிகள் நடந்தேறும்) அது சத்தியமான நாளாகும்; எனவே, எவர் நாடுகிறாரோ அவர் தம் இரட்சகனிடம் மீளும் பாதையை எடுத்துக் கொள்வாராக. (அந் நப∴ : 39)

மேலும், மனித ஆற்றல் குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்கு மேல் சிரமப்படுத்த மாட்டான் அது சம்பாதித்துக் கொண்ட நன்மை அதற்கே (பயனளிக்கும் அவ்வாறே) அது சம்பாதித்துக் கொண்ட தீமை அதற்கே கேடாக அமையும். (அல் பகறா : 286)
"الوسع" எனும் வார்த்தை இங்கு ஆற்றல் எனும் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நடைமுறை உலகின் தெளிவான சான்றுகளாக இருக்கின்ற நிகழ்வுகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மனிதனும் தனக்கு சுயவிருப்பமும், செயல்களை மேற்கொள்வதற்கான ஆற்றலும் இருக்கின்றன என்பதை அறிந்தே இருக்கின்றான்.

இவ்விரண்டையும் அடிப்படையாக வைத்து, சில விடயங்களைச் செய்வதற்கும் மற்றும் சில விடயங்களைச் செய்யாமல் விடுவதற்கும் அவனுக்கு செயற் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சில விடயங்களை அவன் நாடிச் செய்யலாம். உதாரணமாக, "நடத்தல்" எனும் செயலைக் குறிப்பிடலாம். மற்றும் சில விடயங்கள் அவனது நாட்டத்திற்கு உட்படாத நிலையிலேயே நிகழலாம்.




> அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக நாம் அவனுக்கு (நல்லது தீயது பற்றிய) வழியைத் தெளிவுபடுத்தினோம் (அதைப்பின்பற்றி) அவன் ஒன்று நன்றியுள்ளவனாக இருக்கலாம் அல்லது (அதைப்பின்பற்றாது) நன்றியற்ற(நிராகரிப்ப)வனாக இருக்கலாம். (அல் இன்ஸான்: 3)

உதாரணமாக, "நடுங்குதல்" அல்லது "சடுதியாக சருக்கி விழுதல்" போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால், மனிதனின் சுயவிருப்பமும் ஆற்றலும் அல்லாஹ்வின் விருப்பம் மற்றும் அவனது ஆற்றல் என்பவற்றின் படியே இடம்பெறுகின்றன.

உங்களில் (நேர்வழியில்) நிலைத்திருக்க நாடுகிறவருக்கு (இது ஒரு அறிவுறையாகும்) இன்னும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் (நல்லறிவுபெற) நாடமாட்டீர்கள். (அத் தக்வீர் : 28 - 29)

மனிதன் தனது சுயவிருப்பின் பேரில் செயற்படும் உரிமையைப் பெற்றுள்ளான். இந்நிலையானது, அல்லாஹ்வின் விருப்பத்திற்கு உட்பட்டதாகவே இருக்கின்றது என்பதை அல்லாஹ் இங்கு உறுதிப்படுத்துகின்றான்.

ஏனெனில், இந்தப் பிரபஞ்சம் முழுவதினதும் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது.

அவனது அதிகாரத்திற்குட்பட்ட எந்தவொன்றும் அவனது அறிவு மற்றும் விருப்பத்திற்கு உட்படாத நிலையில் இருக்காது.

## பாவத்தில் ஈடுபடுவதற்கு விதியே காரணமெனக் கூறுதல் :

மார்க்கக் கடமைகளைச் செய்ய வேண்டுமென்ற பொறுப்பு மற்றும் அல்லாஹ்வினது ஏவல், விலக்கல் என்பன மனிதனது ஆற்றலோடும் அவனது செயற்சுதந்திரத்தோடும் தொடர்புபட்டே இருக்கின்றன.

நல்லவர் நேர்வழியைத் தேர்ந்தெடுத்தமைக்காக கூலி வழங்கப்படுகின்ற அதே வேளை, பாவியானவன் வழிகேட்டை தெரிவு செய்தமைக்காக தண்டிக்கவும் படுகின்றான்.

எமது சக்திக்கு உட்பட்ட இயலுமான விடயங்களை மாத்திரமே அல்லாஹ் எமக்கு மார்க்கக் கடமைகளாக ஆக்கியுள்ளான்.

இக்கடமைகளுள் ஒன்றை விதியைக் காரணம் கூறி விட்டுவிடுவதை அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான்.

இதற்கப்பால், ஒருவன் பாவத்தில் ஈடுபடுவதற்கு முன்னால் இது தொடர்பான அல்லாஹ்வின் நியதி எவ்வாறு இருக்கின்றது என்பது அவனுக்குத் தெரியாது.

அல்லாஹ் அவனுக்கு செயற்சுதந்திரம் மற்றும் செயற்படுவதற்கான ஆற்றல் என்பவற்றை வழங்கி, நல்லவைகள் மற்றும் தீயவைகளுக்கான வழிமுறைகளை மிகத்தெளிவாக காண்பித்திருக்கும் நிலையில், நல்லவைகளைச் செய்யாது பாவங்களைச் செய்தால், அவனே அப்பாவங்களைச் சுயவிருப்பின் பேரில் செய்திருக்கின்றான் எனக் கருதப்படுவதோடு அதற்கான தண்டனையையும் அவனே அனுபவிக்க வேண்டும்.

> ஒருவர் உங்களைத் திடீரென தாக்கி, துன்புறுத்தி உங்களது பணத்தை அபகரித்துவிட்டு, இது அல்லாஹ்வின் நிர்ணயப்படி அல்லது விதிப்படியே நடந்துள்ளது என்று கூறி அவரின் இப்பாதகச் செயலுக்கு நியாயம் கற்பித்தால், அபத்தமான இந்த நியாயத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவரை நீங்கள் தண்டித்து அவரிடமுள்ள உங்களது பணத்தைப் பறித்துக் கொள்ளலாம். ஏனெனில், அவர் தனது சுயவிருப்பம் மற்றும் தனக்குள்ள செயற்சுதந்திரத்தின் அடிப்படையிலேயே இந்தச் செயலை செய்திருக்கின்றார்.



## விதி பற்றிய நம்பிக்கையின் மூலம் உருவாகும் நன்மைகள் :

விதி பற்றிய நம்பிக்கையானது, மனித வாழ்வில் பல்வேறு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்.

அவைகளுள் சில:-

1 இவ்வுலக வாழ்வில், மனிதன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையில் செயலூக்கத்துடன் தொழிற்படுவதற்குத் தூண்டும் மிகப்பெரும் காரணிகளுள் ஒன்றாக இது கருதப்படுகின்றது
இறைவிசுவாசிகள் தமது விடயங்களை அல்லாஹ்விடம் முழுமையாகப் பொறுப்புச் சாட்டிய நிலையில், காரணகாரியங்ககளை கருத்திற்கொண்டு தங்களால் முடியுமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறே அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.
காரணகாரியங்களை மாத்திரம் நம்புவதானது, அல்லாஹ்வின் உத்தரவின்றி எந்தவொரு விளைவுகளையும் கொடுக்காது.
ஏனெனில், அல்லாஹ்தான் காரணகாரியங்களையும் அதனடியாக ஏற்படும் விளைவுகளையும் உருவாக்கினான்.
நபியவர்கள் கூறினார்கள்:
உனக்குப் பயனளிப்பவற்றை நீ மனவிருப்பத்தோடு செய், அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள் மேலும், மனம் தளர்ந்து விடாதே. இன்னும் உனக்கு ஏதும் துன்பங்கள் நேர்ந்து விட்டால், "நான் இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமே"என்று கூறாதே. மாறாக, "இதுவே அல்லாஹ்வின் நியதி.மேலும், அவன் நாடியதையே அவன் செய்தான்."என்று கூறு. ஏனெனில், "இவ்வாறு செய்திருந்தால்" என்று கூறுவதானது ஷைதானின் செயலைத் திறந்து விடும். (முஸ்லிம் : 2664)


2 ஒருவர் தனது நிலையைப் பற்றி புரிந்து கொள்ள உதவும்.
எனவே, அவர் பெருமை அடிக்கவோ கறுவம் கொள்ளவோ மாட்டார்.
ஏனெனில், தனக்கு அல்லாஹ்வால் நிர்ணயம் செய்யப்பட்டது எதுவென்றோ அல்லது எதிர்காலத்தில் நடக்கவிருப்பது யாது என்றோ அவரால் தெரிந்து கொள்ள முடியாது.
இதன் விளைவாக, அவர் தனது இயலாமையை ஏற்றுக்கொள்வதோடு, எப்போதும் தனக்கு அல்லாஹ்வின் பால் தேவையுள்ளது என்பதையும் புரிந்து கொள்வார்.
பொதுவாகவே, மனிதன் தனக்கு ஏதும் மகிழ்ச்சியானதொரு விடயம் நடந்துவிட்டால், கறுவம் கொண்டு தம்பட்டம் அடிக்க ஆரம்பித்து விடுவான். அதே வேளை தனக்கு ஏதும் துன்பமோ அல்லது சோதனையோ ஏற்பட்டுவிட்டால், கதிகலங்கி கவலையில் ஆழ்ந்துவிடுகின்றான்.
நடப்பவைகள் யாவும் அல்லாஹ்வின் விதிமுறைகளுக்கும் அவன் அறிவுக்கும் உட்பட்டே நடக்கின்றன என்ற விதி பற்றிய இந்நம்பிக்கை மாத்திரமே இவ்வாறான நிலையிலிருந்து மனிதனை காப்பாற்ற வல்லது.

3 பொறாமை எனும் தீய பழக்கத்தை இல்லாமற் செய்ய உதவுகின்றது.
ஒரு விசுவாசி, அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கிய அருட்கொடைகளான செல்வங்களைப் பார்த்து பொறாமை கொள்ள மாட்டார்.
அவர்களுக்கு அந்த செல்வங்களை வழங்கியது அல்லாஹ்தான் என்பதையும் பிறரைப் பார்த்து பொறாமை கொள்வது அல்லாஹ் நிர்ணயித்த விதியை எதிர்ப்பதாகவும் அமைந்து விடுகின்றது என்பதையும் அவர் அறிவார்.

4 சவால்களை எதிர்கொள்வதற்கான துணிவையும் பலமான மன உறுதிப்பாட்டையும் மனித உள்ளங்களில் ஏற்படுத்துகின்றது.
ஒருவரின் மரணத்திற்கான தவணைகள் மற்றும் வாழ்வாதார வசதிகள் என்பன அல்லாஹ்வின் விதிப்படி ஏலவே தீர்மானிக்கப்பட்டு விட்டன என்றும் அல்லாஹ் எழுதி வைத்ததைத் தவிர அவருக்கு வேறொன்றும் நடக்கப்போவதில்லை என்றும் அவர் உறுதியாக நம்புவார்.


5 ஈமானின் பல்வேறு உண்மைகளை ஓர் இறை விசுவாசியின் உள்ளத்தில் ஆழப் பதித்துவிடுகின்றது.
அவர் அல்லாஹ்விடம் எப்போதும் தனக்கு உதவி செய்யுமாறு கோருவார். ஒரு விடயத்தைச் சாதிப்பதற்காக காரணகாரியங்களை மேற்கொள்வதோடு, தனது விடயங்களை அல்லாஹ்விடமே முழுமையாக பொறுப்புச் சாட்டுவார்.
மேலும், நேரான பாதையில் நிலைத்து நிற்பதற்கு அல்லாஹ்விடம் உதவி கோருகின்ற அதேவேளை, அவன் பால் எப்போதும் அவர் தேவையுள்ளவராகவே இருப்பார்.

6 மனிதனில் உள அமைதியை உருவாக்கும்.
ஒரு விசுவாசி எது தனக்கு நடந்து விட்டதோ அது தவறுதலாக நடக்கவில்லை என்றும் எது தவறிவிட்டதோ அது அவருக்கு நடப்பதற்கு இருக்கவில்லை என்றும் நம்புவார்.





# எமது சுத்தம்



# 2

"ஷிர்க்" எனும் பாவத்திலிருந்தும் பொறாமை, பெருமை, குரோதம் போன்ற உள நோய்களிலிருந்தும் ஒரு முஸ்லிம் தனது அகத்தை தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அதே போன்று அசுத்தங்கள் அழுக்குகள் போன்றவற்றிலிருந்து அவர் தனது புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அல்லாஹ் அவரைப் பணித்திருக்கின்றான்.

அவ்வாறு, அதனைச் செய்தால், அவர் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுக் கொள்வார்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நிச்சயமாக பச்சாதாபப்பட்டு மீளுகிறவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்; தூய்மையாக இருப்பவர்களையும் அவன் நேசிக்கிறான்." (அல் பகறா : 222)

## உள்ளடக்கம்

- "சுத்தம் செய்தல்" என்பதன் பொருள்
- நஜீஸிலிருந்து சுத்தம் செய்தல்
  - நஜாஸாக்களை சுத்தப்படுத்தல்
  - மலசலம் கழிப்பதற்கான ஒழுக்கங்கள்
- தொடக்கு
  - சிறு தொடக்கும் வுழூச் செய்தலும்
- வுழூச் செய்வது எவ்வாறு ?
  - சிறு தொடக்கை நீக்குதல்
  - பெருந் தொடக்கும் குளிப்பும்.
  - பெருந் தொடக்கு மற்றும் "ஜனாபத்" என்பவற்றிலிருந்து ஒரு முஸ்லிம் தன்னை சுத்தப்படுத்திக் கொள்வது எவ்வாறு ?
  - காலுறை மீது - "மஸ்ஹு" செய்தல் - தண்ணீரால் தடவுதல்.
  - தண்ணீரைப் பயன்படுத்த முடியாத ஒருவர் செய்ய வேண்டியது என்ன ?

## > "சுத்தம் செய்தல்" என்பதன் பொருள்

"அத் தஹாரா" எனும் அறபுப் பதமானது, தூய்மைப் படுத்தல், சுத்தம் செய்தல் எனும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு முஸ்லிம் தனது அகம் மற்றும் புறம் என்பவற்றை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று அல்லாஹ் அவரைப் பணித்திருக்கின்றான்.

எனவே, அவர் வெளிப்படையான ஹராம்கள் மற்றும் தீமைகள், அழுக்குகள் போன்றவற்றிலிருந்து தனது புறத்தையும் ஷிர்க் மற்றும் பொறாமை, பெருமை, குரோதம் போன்ற உள நோய்களிலிருந்து தனது அகத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வார்.

அவர், அவ்வாறு அதனைச் செய்தால், அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுக் கொள்வார். இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நிச்சயமாக பச்சாதாபப்பட்டு மீளுகிறவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்; தூய்மையாக இருப்பவர்களையும் அவன் நேசிக்கிறான்."
(அல் பகறா : 222)

தொழுகைக்காக சுத்தம் செய்யுமாறும் அல்லாஹ் ஏவியிருக்கின்றான்.

ஏனெனில், தொழுகை என்பது இறைவனை சந்தித்து, அவனோடு சம்பாஷணை செய்து கொள்வதற்கானதொரு சந்தர்ப்பமாகும்.

ஒருவர் ஓர் அரசனை அல்லது ஒரு ஜனாதிபதியை சந்திக்கச் செல்வதாக இருந்தால், அவர் தன்னை முழுமையாக சுத்தம் செய்து கொண்டு, அவரிடமுள்ள மிக அழகியதோர் ஆடையை அணிந்து கொண்டே செல்வார்.

அவ்வாறாயின், அரசர்களுக்கெல்லாம் மிகப் பெரும் அரசனான அல்லாஹ்வைச் சந்திக்கச் செல்லும் ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும்?

### தொழுகையை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்பட வேண்டுமெனக் கூறப்படும் சுத்தம் என்ன ?

தொழுகையில் ஈடுபடுதல், குர்ஆனைத் தொடுதல், புனித க.்.பாவை வலம் வருதல் போன்ற கடமைகளைச் செய்ய விரும்பும் ஒரு முஸ்லிம் "வுழு" எனும் சுத்தத்தைக் கட்டாயம் செய்து கொள்ளவேண்டுமென அல்லாஹ் அவரைப் பணித்திருக்கின்றான்.

பின்வருவன போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் "வுழு"ச் செய்வதை விரும்பத்தக்கதொரு விடயமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான்.

அவைகளாவன : குர்ஆனைத் தொடாமல் அதனை ஓதுதல், பிராத்தனை செய்தல், உறங்குதல்.

எனவே, ஒரு முஸ்லிம் தொழுகையில் ஈடுபட விரும்பினால், பின்வரும் இரண்டு விடயங்களிலிருந்து அவரை சுத்தம் செய்து கொள்வது அவசியமாகும்.

1. நஜீஸ்
2. தொடக்கு



> 'ஷிர்க்' மற்றும் உளநோய்கள் போன்றவற்றிலிருந்தும் மேலும், ஹராம்கள், அழுக்குகள் போன்றவற்றிலிருந்தும் தனது அகம் மற்றும் புறம் என்பவற்றை ஒரு முஸ்லிம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் உத்தரவு பிறப்பித்துள்ளான்.

## › நஜீஸிலிருந்து சுத்தம் செய்தல்

- "நஜாஸா" எனும் அறுபுப்பதமானது, இஸ்லாம் சுத்தமற்றது எனக் கருதும் தொட்டுணர முடியுமான பொருட்களையே குறிக்கும்.
  வணக்க வழிபாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர், இவைகளைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் எம்மைப் பணித்துள்ளது.
- அனைத்துப் பொருட்களும் ஆகுமானவை, சுத்தமானவை என்பதே இஸ்லாமியச் சட்டத்தின் பொது விதியாகும்.
  "நஜாஸா" என்பது இவ்விதிக்கு உட்பட்டதல்ல. அவைகள் இடைநடுவே எதேச்சையாக நிகழும் ஒன்றாகும்.
  ஓர் ஆடை சுத்தமா ? இல்லையா ? என நாம் சந்தேகித்து, அதில் எந்தவொரு நஜீஸான பொருளும் இல்லையெனவும் உறுதியாகத் தெரியும் பட்சத்தில், மேற்சொன்ன பொதுவிதிக்கமைய அது சுத்தமானது என்றே கருதப்படும்.
- நாங்கள் தொழுவதற்கு நாடினால், எமது உடல், ஆடைகள்,தொழும் இடம் என்பவற்றிலுள்ள நஜீஸ்களை சுத்தம் செய்து கொள்வது எம்மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

### நஜீஸ் எனக் கருதப்படும் பொருட்கள்

| | |
|---|---|
| 1 | மனித மலமும் சிறுநீரும் |
| 2 | இரத்தம் - சிறியளவிலான இரத்தம் நஜீஸ ாகக் கருதப்படுவதில்லை |
| 3 | உணவாகக் கொள்வது ஹராமாக்கப்பட்ட மிருகங்களது சிறுநீர் மற்றும் அதன் விட்டைகள் |
| 4 | நாயும் பன்றியும் |
| 5 | இறந்த மிருகங்கள் (மனிதன் உணவாகக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்களாக இருந்து, அவைகள் இஸ்லாமிய ஷரீஆ நெறிமுறைகளுக்கு அமைவாக அறுக்கப்பட்டவைகள் தவிர்ந்த அனைத்து இறந்த மிருகங்களையும் இது குறிக்கும் |

### நஜாஸாக்களை சுத்தப்படுத்தல்:

உடம்பிலோ, ஆடையிலோ, தொழுமிடத்திலோ அல்லது வேறேதுமோர் இடத்திலோ இருக்கும் நஜீஸான பொருட்களை குறித்த அவ்விடத்திலிருந்து தண்ணீரை அல்லது வேறு ஏதாவது ஒன்றினைப் பயன்படுத்தி, ஏதோவொரு வழியில் அவைகளை அகற்றிவிடுவதானது, நஜீஸ்களைச் சுத்தம் செய்வதற்கான போதுமானதொரு வழிமுறையாகும்.

ஏனெனில், இஸ்லாம் அவைகளை அகற்றுமாறு பணிக்கிறதே தவிர, பல தடவைகள் அவற்றைக் கழுவ வேண்டுமென நிபந்தனை இடவில்லை.

ஆனால், பல தடவைகள் கழுவ வேண்டுமென்ற இந்நிபந்தனை நாயினது நஜீஸைச் சுத்தம் செய்கின்ற போது மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

நாயினது எச்சில், சிறுநீர் மற்றும் மலம் போன்ற நஜீஸ்களை ஏழு முறைகள் கழுவுவதோடு அவற்றுள் ஒரு தடவை மண்ணால் கழுவுதல் வேண்டுமென்பது நிபந்தனையாகும்.

ஏனைய நஜீஸ்களைப் பொறுத்த வரையில், அவைகளைக் கழுவி அவ்விடத்திலிருந்து அகற்றிவிடுவது மாத்திரம் போதுமானது.

அவ்வாறு செய்கின்ற போது, அங்கு குறித்த அந்நஜீஸ்களது வாடையோ அல்லது நிறமோ நீங்காது எஞ்சியிருப்பதானது, எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது.

மாதவிடாயினது இரத்தத்தை கழுவுவது தொடர்பாக ஒரு ஸஹாபிப் பெண்மனிக்கு நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "இரத்தத்தைக் கழுவி விடுவது போதுமானது. அதன் பிறகு எஞ்சியிருக்கும் அதன் கறைகள் எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது" (அபூ தாவூத் : 365)

## மலசலம் கழிப்பதற்கான ஒழுக்கங்கள் :

- மலசல கூடத்தினுள் ஒருவர் நுழைந்தால், அவர், தனது இடது காலை முன்வைத்து, பின்வரும் "துஆ" வைக் கூறுவது விரும்பத்தக்கதாகும்.

  "பிஸ்மில்லா, அல்லாஹும்ம இன்னி அஊதுபிக மினல் ஹுப்தி வல் ஹபாயிதி"

- இதிலிருந்து வெளியில் வரும் போது வலது காலை முன்வைத்து "குப்ரானக غفرانك" என்று கூறுவதும் விரும்பத்தக்கதாகும்.

- மலசலம் கழிக்கும் போது, மனிதர்களுடைய பார்வைக்குப் படாமல் ஒருவர், அவரது "அவ்ரத்" பகுதியை மறைத்துக் கொள்வது கட்டாயக் கடமையாகும்.

- ஒருவர், பாலைவனம் போன்ற திறந்த வெளிப் பகுதியில் மலசலம் கழிக்க வேண்டிய தேவை ஏற்படின், அவர் அதற்காகப் பொந்துகளைப் பயன்படுத்துவது "ஹராம்" ஆகும். அவைகளுக்குள் இவருக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது இவரது செயலால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்ற உயிரினங்கள் இருக்கலாம்.

- மலசலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவதோ அல்லது பின்னோக்குவதோ கூடாது.

  ஆனால், நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள குளியலறைகள் போன்ற கட்டடங்களில் இவ்வொழுங்கை மீறுவதில் பிரச்சினை ஏதும் கிடையாது.

  மறைந்து கொள்வதற்கு முடியாத திறந்த வெளிப்பகுதியில் மலசலத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், மேற்படி ஒழுங்குகளை கடைபிடிப்பது கட்டாயக் கடமையாகும்.

  இதனைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

  "மலசலம் கழிக்கச் சென்றால், நீங்கள் கிப்லாவை முன்னோக்கவோ அல்லது பின்னோக்கவோ வேண்டாம்."

  (அல் புகாரி : 386, முஸ்லிம் : 264)

- மலசலம் கழிக்கும் போது உடம்பிலோ அல்லது ஆடைகளிலோ நஜீஸ்கள் பட்டுவிடாது, கவனமாக இருப்பது கட்டாயமாகும். தவறுதலாக பட்டுவிடும் பட்சத்தில் அவற்றைக் கழுவிக் கொள்வதும் அவசியமாகும்.

- ஒருவர் மலசலம் கழித்து விட்டால், சுத்தம் செய்வதற்கு பின்வரும் இரண்டு வழிமுறைகளுள் ஒன்றை கையாள வேண்டும்.

| | | |
|---|---|---|
| மலசலப் பகுதிகளை நீரினால் சுத்தம் செய்தல்.<br>(இச்செயல் "அல் இஸ்தின்ஜா.்." என்று அறபு மொழியில் அழைக்கப்படும்) | அல்லது | உடலைச் சுத்தம் செய்வதற்கு முடியுமான மூன்று அல்லது அதை விட அதிகமான துணித்துண்டுகள் அல்லது கற்கள் போன்றவற்றைப் பயன்படுத்திச் சுத்தம் செய்தல்.<br>(இம்முறையானது "அல் இஸ்திஜ்மார்" என அறபு மொழியில் அழைக்கப்படும்) |

## > தொடக்கு

- "ஹதஸ்" (தொடக்கு) : எனும் அறுபுப்பதமானது, மனிதனுக்கு ஏற்படும் தொட்டுணர முடியாத தூய்மையற்றதொரு நிலையைக் குறிக்கும்.

  இதிலிருந்து சுத்தமாகுவதற்கு முன்னால் தொழுகையை நிறைவேற்ற முடியாது. மேலும், இது "நஜீஸை" ப் போன்று தொட்டுணர முடியுமானதொரு பொருளுமல்ல.

- வுழுச் செய்வது அல்லது சுத்தமான நீரைப் பயன்படுத்திக் குளிப்பது போன்றவற்றின் மூலமே இத்தொடக்கு அகற்றப்படும்.

  சுத்தமான தண்ணீர் :

  தண்ணீரின் நிறத்திலோ, சுவையிலோ அல்லது வாடையிலோ ஏதாவதொரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய நஜீஸான பொருட்கள் கலக்காத நீரையே இது குறிக்கும்.

தொடக்கு இரு வகைப்படும்:

சிறு தொடக்கு:
இது வுழுச் செய்வதன் மூலம் அகற்றப்படும்.

பெருந் தொடக்கு:
இது, முழு உடலும் நீரினால் நனையுமளவு குளிப்பதன் மூலமே அகற்றப்படும்.

### சிறு தொடக்கும் வுழுச் செய்தலும்:

பின்வரும் நிலைகளுள் ஏதேனும் ஒன்று இடம் பெறுவதன் மூலம் வுழு முறிந்துவிடும் :

**1** முன்பின் துவாரங்களினூடாக ஏதேனுமொன்று வெளியேறுதல்.

உதாரணமாக, மலசலம், காற்று போன்ற வுழுவை முறிக்கும் விடயங்கள் பற்றி விவரிக்கும் போது அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அல்லது உங்களில் ஒருவர் மலசலம் கழித்தால், (அந் நிஸா : 43)

தொழுகையிலே தனது வுழு முறிந்து விட்டதா? இல்லையா ? என்று சந்தேகத்துடன் இருந்த ஒருவரைப் பார்த்து நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"சப்தத்தை கேட்கும் வரை அல்லது வாடையை நுகரும் வரை ஒருவர் அவரது தொழுகையை விட்டு விட வேண்டாம்."(அல் புகாரி : 175, முஸ்லிம் : 361)

**2** பாலுறுப்பை திரை ஏதுமின்றி ஆசையோடு தொடுதல்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"யாராவது தனது பாலுறுப்பைத் தொட்டால், வுழுச் செய்து கொள்ளவும்" (அபூ தாவூத் : 181)

**3** ஒட்டக இறைச்சியை சாப்பிடுதல்.

நாங்கள் ஒட்டக இறைச்சியை சாப்பிட்ட பிறகு வுழுச் செய்ய வேண்டுமா ? என நபியவர்களிடம் நாம் கேட்ட போது, அவர் "ஆம்" எனப் பதிலளித்தார்கள்

(முஸ்லிம்: 360)

**4** தூக்கம் அல்லது பைத்தியம் அல்லது போதை என்பவை மூலம் சுய உணர்வை இழத்தல்.

## > வுழூச் செய்வது எவ்வாறு ?

வுழு அல்லது சுத்தம் செய்தல் என்பது உன்னதமானதொரு வணக்கமாகும்.

அல்லாஹ்விடமிருந்து நன்மையை எதிர்பார்த்து, உளத்தூய்மையோடு ஒருவர் இதைச் செய்தால், அவரது பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு முஸ்லிமான அடியான் வுளுச்செய்யும் சமயம் முகம் கழுவியதும் அவனது இரு கண்களால் செய்த பாவங்கள் தண்ணீருடன் சென்றுவிடுகின்றன, இரு கைகளையும் கழுவும்போது கைகளால் செய்த பாவங்கள் தண்ணீருடன் சென்றுவிடுகின்றன, அவன் இரு கால்களையும் கழுவும்போது கால்களால் செய்த பாவங்கள் தண்ணீருடன் சென்றுவிடுகின்றன பின்பு அவன் பாவங்களிலிருந்து பரிசுத்தமடைந்து விடுகின்றான். (முஸ்லிம்:44)

### வுழூச் செய்து, சிறுதொடக்கை நீக்குவது எவ்வாறு ?

ஒரு முஸ்லிம் வுழூச் செய்ய நாடினால், "சிறுதொடக்கை நீக்கிக் கொள்கின்றேன்" என்று மனதால் எண்ணிக் கொள்வது அவர் மீதுள்ள கடமையாகும்.



அனைத்து வணக்கங்களுக்கும் இஸ்லாத்தில் "நிய்யத்" என்பது நிபந்தனை ஆகும். இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"நிய்யத்துக்கள் மூலமே வணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன" (அல் புகாரி: 1, முஸ்லிம்: 1907)

பிறகு பின்வரும் ஒழுங்கில் ஒவ்வொரு செயல்களுக்குமிடையில் நீண்ட இடைவெளியின்றி தொடராக வுழுவைச் செய்வதற்கு ஆரம்பிப்பார் :

**1**

(பிஸ்மில்லாஹ்) என்று கூறுதல்.



**2**

தனது இரண்டு முன்னங்கைகளையும் மூன்று தடவைகள் நீரினால் கழுவுதல். இவ்வாறு செய்வது விரும்பத்தக்கதாகும்.




**3**

நீரினால், வாயைக் கொப்பளித்தல். இவ்வாறு ஒரு தடவை செய்வது கட்டாயம். ஆனால் மூன்று தடவைகள் செய்வது விரும்பத்தக்கது.



**4**

நாசிக்கு நீரைச் செலுத்திக் கழுவுதல். மூக்கினால் நீரை உள்ளே இழுத்து, பின்னர் அதிலிருந்து வெளியேறும் காற்றினால் நீரை வெளியே தள்ளுதல். பாதிப்பு ஏற்படாதவாறு, இதை ஆழ்ந்து செய்வது விரும்பத்தக்கது.
இவ்வாறு ஒரு முறை செய்வது கட்டாயக் கடமையாகும். ஆனால், மூன்று தடவைகள் செய்வது விரும்பத்தக்கது.



## 5

முகத்தைக் கழுவுதல்:
அதாவது, நெற்றியின் மேற்பகுதியான முடி முளைக்கும் இடத்திலிருந்து தாடையின் கீழ்ப் பகுதி வரை மேலும் ஒரு காதிலிருந்து மறுகாது வரைக் கழுவுதல் வேண்டும்.
ஆனால் இரண்டு காதுகளும் முகம் என்ற பகுதிக்குள் உட்படாது.
இவ்வாறு ஒரு முறை கழுவுவது கட்டாயம் மூன்று தடவைகள் கழுவுவது விரும்பத்தக்கது.



## 6

இரண்டு கைகளையும்(வலது பிறகு இடது) விரல்களின் நுனிப் பகுதிகளிலிருந்து மணிக்கட்டு உள்ளிட்ட பகுதிகள் வரை கழுவுதல்.
இவ்வாறு மூன்று தடவைகள் செய்வது விரும்பத்தக்கது.
ஒரு முறை செய்வது கட்டாயக் கடமையாகும்.



## 7

தலையை நீரினால் தடவுதல் :
அதாவது, இரண்டு கைகளையும் நீரிலே நனைத்து, தலையின் முன்பகுதி முதல் அதன் இறுதிப் பகுதி வரை இரு கைகளாலும் தடவுதல்.
இதனை இவ்வாறே தலையின் இறுதிப் பகுதியிலிருந்து முன்பகுதி வரை மீண்டும் ஒரு முறை தடவுவது "சுன்னத்" ஆகும்.
ஏனைய உறுப்புக்களில் செய்வது போன்று மூன்று தடவைகள் இங்கு இதனைச் செய்வது விரும்பத்தக்கது அல்ல.



## 8

இரண்டு காதுகளையும் நீரினால் தடவுதல்:
மேற்சொன்னவாறு தலையைத் தடவிய பிறகு, தனது இரண்டு ஆட்காட்டி விரல்களையும் காதுகளின் உட்பகுதியில் நுழைவித்து மற்ற இரண்டு பெருவிரல்களையும் காதுகளின் வெளிப்பகுதிகளில் வைத்து கீழிருந்து மேலாகத் தடவுதல்.



## 9

இரண்டு கால்களையும் கணுக்கால் உட்படக் கழுவுதல்.:
இவ்வாறு மூன்று தடவைகள் கழுவுவது விரும்பத்தக்கதாகும். ஆனால் ஒரு தடவை செய்வது கட்டாயக் கடமையாகும்.
காலுறை அணிந்தவராக இருந்தால், சில நிபந்தனைகளுக்கிணங்க அதன் மேற்பகுதி மீது நீரினால் தடவிக்கொள்ள முடியும்.
(பார்க்க பக்கம் : 111)



## பெருந் தொடக்கும் குளிப்பும்.

### குளிப்பை விதியாக்கக்கூடிய விடயங்கள் :

ஒரு முஸ்லிம் குறிப்பிட்ட சில விடயங்களை செய்தாலோ அல்லது அவை இயல்பாக நிகழ்ந்தாலோ தொழுகையயை நிறைவேற்றுதல் மற்றும் க.்பாவை வலம் வருதல் என்பன போன்ற வணக்கங்களைச் செய்வதற்கு முன்னால், குளிப்பது அவர் மீது

விதியாகும். குளிப்பதற்கு முன்னால் உள்ள இந்நிலையே "பெருந்தொடக்கு" என அழைக்கப்படும்.

பின்வரும் விடயங்கள் குளிப்பை விதியாக்கும்:

1 பாலியல் இன்பத்தின் காரணமாக

ஏதோவொரு வழியில் இந்திரியம் வெளியாகுதல்.

இது தூக்கத்திலோ அல்லது விழிப்பு நிலையிலோ நடக்கலாம்.

பாலியல் இச்சை மற்றும் இன்பம் என்பன உச்சத்தை அடைகின்ற போது, வெளியாகும் அடர்த்தியானதும் வெண்மையானதுமான ஒழுகும் தன்மைகொண்டதொரு நீர்மப் பொருளே இந்திரியமாகும்.



> கடமையான குளிப்பை ஒருவர் நிறைவேற்றுகின்ற போது, அவர் தனது உடலை முழுமையாக நீரினால் கழுவிக்கொள்வது போதுமானதாகும்.

2 உடலுறவு கொள்ளல்.

பெண் குறியில் ஆணுறுப்பை நுழைவித்தலையே இது குறிக்கும். இதன் மூலம் இந்திரியம் வெளிவராவிட்டாலும் சரியே.

ஆணுறுப்பின் மேற்பகுதியை பெண்குறியில் நுழைவிப்பதுவே குளிப்பை விதியாக்கிவிடும்.

அல்லாஹ் கூறுகின்றான்.

அன்றியும் நீங்கள் குளிக்கக் கடமைப் பட்டோராக இருந்தால் குளித்துப் பரிசுத்தமாகிக் கொள்ளுங்கள். (அல் மாஇதா : 6)

3 மாதவிடாய் மற்றும் மகப்பேறு காரணமாக இரத்தம் வெளிவரல்.

- "மாதவிடாய்" என்பது மாதாந்தம் பெண்குறியிலிருந்து இயற்கையாக வெளிவரும் இரத்தத்தையே குறிக்கும்.

  இது ஏழு நாட்களுக்கு தொடராக வந்துகொண்டிருக்கும். பெண்களின் வித்தியாசமான இயல்புகளுக்கு ஏற்ப இந்த ஏழு நாட்கள் கூடவோ குறையவோ செய்யலாம்.

- பிள்ளைப்பேற்றின் காரணமாக பெண்குறியிலிருந்து வெளிவரும் இரத்தமே "அந்நிபாஸ்" ஆகும்.

  இவ்வகை இரத்தம் பலநாட்களாக தொடர்ந்தும் வெளிவரலாம்.

மேற்படி இரத்தங்கள் வெளிவருகின்ற காலங்களில் தொழுகைகளை நிறைவேற்றுவதோ அல்லது நோன்புகளை நோற்பதோ பெண்கள் மீது

கடமையாகாது.

இவைகளிலிருந்து சுத்தமாகிய பிறகு நோன்பு "கழாச்" செய்யப்படல் வேண்டும். ஆனால், தொழுகை "கழாச்" செய்யப்பட வேண்டியதில்லை.

இந்த காலப்பகுதியில் உடலுறவில் ஈடுபடாது, கணவனும் மனைவியும் அவர்களது பாலியல் இன்பங்களை வேறு (ஆகுமான)வழிகளில் நிறைவு செய்துகொள்ளலாம்.

இரத்தம் வெளியேறி முடிந்த பிறகு, அவர்கள் குளிப்பை நிறைவேற்றுவது கடமையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான:

எனவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விட்டு விலகி இருங்கள்; மேலும், அவர்கள் (உதிரப்போக்கிலிருந்து) சுத்தமாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் சுத்தமாகி (குளித்து) விட்டால், அல்லாஹ் உங்களை ஏவிய முறைப்படி அவர்களிடம் வாருங்கள். (அல் பகறா : 222)

## பெருந் தொடக்கு மற்றும் "ஜனாபத்" என்பவற்றிலிருந்து ஒரு முஸ்லிம் தன்னை சுத்தப்படுத்திக் கொள்வது எவ்வாறு ?

இதற்கு, தன்னை சுத்தப்படுத்திக்கொள்ளும் எண்ணத்தோடு, ஒரு முஸ்லிம் தனது முழு-உடலையும் நீரினால் கழுவிக்கொள்வது போதுமானது.

- மலசலத் தேவைகளை நிறைவு செய்த பிறகு ஒருவர் எவ்வாறு சுத்தம் செய்வாரோ, அவ்வாறே இதன் பிறகும் சுத்தம் செய்தல், பின்னர் வுழுச் செய்து கொண்டு, முழு உடலின் மீதும் தண்ணீரை ஊற்றிக் கழுவுவதே பூரணத்துவமானதொரு முறையாகும்.

  ஏனெனில், இவ்வாறு செய்வதானது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு அமை-வாக இருப்பதனால், இது மகத்தான கூலியைப் பெற்றுத்தரும்.

- ஒருவர் குளித்து சுத்தமாகிவிட்டால், அவர் அதன் பிறகு வுழுச் செய்து கொள்ளவேண்டுமென்ற அவசியம் கிடையாது.

  நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவிற்கு இணங்க வுழுவோடு குளிப்பதே இந்தக் குளிப்பை நிறைவேற்றுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும்.





### காலுறை மீது - "மஸ்ஹு" செய்தல் - தண்ணீரால் தடவுதல்.

ஒரு முஸ்லிம் வுழுச் செய்கின்ற போது, தனது காலைக் கழுவுவதற்குப் பதிலாக பாதத்தை முழுமையாக மூடிய காலுறை அல்லது பாதணி என்பவற்றின் மேற்பகுதியின் மீது நீரில் நனைக்கப்பட்ட தனது கையினால் தடவிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது இஸ்லாத்தின் பெருந் தன்மை சார்ந்ததொரு விடயமாகும். வுழுச் செய்த நிலையில் இவைகளை அணிந்தவர் மாத்திரமே இச்சலுகையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஊரில் வசிப்பவராயின், 24 மணித்தியாளங்களுக்கும், பயணியாயின் 72 மணித்தியாளங்களுக்கும் மேற்படாத வகையிலேயே இச்சலுகையைப் பயன்படுத்த முடியும்.

ஜனாபத்துக்காக குளிக்கும் போது, எப்படியோ இரண்டு பாதங்களையும் கழுவுவது கட்டாயமாகும்.

### தண்ணீரைப் பயன்படுத்த முடியாத ஒருவர் செய்ய வேண்டியது என்ன ?

நோய் அல்லது தண்ணீர் இன்மை அல்லது இருக்கும் நீர் குடிப்பதற்கு மாத்திரம் போதுமான நிலையில் இருத்தல் போன்ற காரணங்களின் நிமித்தம், ஒரு முஸ்லிம் தண்ணீரைப் பயன்படுத்தி வுழுச் செய்யவோ அல்லது கட்டாயமான குளிப்பை நிறைவேற்றவோ இயலாது போனால், அவர் மண்ணினால் "தயம்மும்" செய்ய முடியும்.

போதுமான அளவு நீர் கிடைக்கும் வரையிலோ அல்லது தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு இயலுமானதொரு நிலை ஏற்படும் வரையிலோ இவ்வாறு "தயம்மும்" செய்வதைத் தொடர முடியும்.

#### "தயம்மும்"செய்வதற்கான முறை :

- தனது இரண்டு கைகளையும் மண்ணின் மீது ஒரு தடவை அடித்தல்.
- அவ்விரண்டு கைகளினாலும் முகத்தைத் தடவுதல்.
- வலது உள்ளங்கையினால் இடது முன்னங்கையின் மேற்பகுதியையும், இடது உள்ளங்கையினால் வலது முன்னங்கையின் மேற்பகுதியையும் தடவுதல்.





# எமது தொழுகை



# 3

தொழுகை இந்த மார்க்கத்தின் பிரதான தூணாகவும், இறைவனுக்கும் அவன் அடியானுக்கும் இடையிலுள்ள ஒரு தொடர்பு சாதனமாகவும் இருக்கின்றது.

அதனால், இது மிகவும் முக்கியமானதொரு மகத்தான வணக்கமாகும்.

ஒரு முஸ்லிம் ஊரில், பயணத்தில், நோயில், ஆரோக்கிய நிலையில் என்ற தனது எல்லா நிலைகளிலும் அதனை பேண வேண்டுமென அவனை அல்லாஹ் பணித்திருக்கிறான்.

## உள்ளடக்கம்


- தொழுகையின் அந்தஸ்தும் அதன் மகிமைகளும்
- தொழுகைக்கான சிறப்புகள்
- பர்ளான ஐவேளைத் தொழுகைகளும் அதற்கான நேரங்களும்
- தொழுகைக்கான இடம்
- தொழுகையை நிறைவேற்றுவதற்கான முறை
- தொழுவது எவ்வாறு ?
- தொழுகைக்கான அர்கான்களும் (தூண்களும்) அதற்கான வாஜிபுகளும்.
  - தொழுகையை செல்லுபடி அற்றதாக மாற்றும் செயல்கள்
  - தொழுகையில் செய்யக்கூடாது என வெறுக்கப்பட்ட (மக்ரூஹான) செயற்பாடுகள்
- முஸ்தஹப்பான தொழுகைகள் என்றால் என்ன ?
- கூட்டுத் தொழுகை
- தொழுகைக்கான அழைப்பு (அல் அதான்)
- தொழுகையில் உள்ளச்சம்
- ஜும்ஆத் தொழுகை
- நோயாளியின் தொழுகை
- பயணத் தொழுகை

# தொழுகை

“الصلاة” என்பதற்குரிய அடிப்படையான கருத்து “الدعاء” என்பதாகும்.

இது படைப்பாளனுக்கும் அவன் அடியானுக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்தும் தொடர்பூடகமாகும்.

இது, ஓர் அடியான் தனது அடிமைத்துவத்தினை நிரூபிப்பதற்கும் அல்லாஹ்விடம் சரணாகதியடைந்து அவன் உதவியைப் பெறுவதற்குமான மிகவும் உயர்ந்ததொரு வழியைக் கொண்டுள்ளது.

தொழுகையில் அவன் அல்லாஹ்வை அழைத்து,அவனோடு உரையாடி அவனை நினைவுபடுத்துவதன் மூலம் அவனது ஆன்மா

தூய்மையடைகின்றது.

அவன் தனது உண்மை நிலையையும் தான் வாழும் இந்த உலகின் யதார்த்த நிலையையும் நினைத்துப் பார்க்கின்றான்.

அத்தோடு அவன் தனது இறைவனின் மகோன்னதத் தன்மையையும் அல்லாஹ் அவன் மீது கொண்டுள்ள அன்பையும் உணர்கின்றான்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் இந்த தொழுகை அவனுக்கு அல்லாஹ்வின் மார்க்கத்தில் நிலைத்திருக்கவும் அநியாயம், தீயபண்புகள், பாவங்கள் போன்றவற்றிலிருந்து தூர விலகி வாழவும் வழிகாட்டுகின்றது.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

“நிச்சயமாக தொழுகை, (அதை நிறைவேற்றுபவரை) மானக்கேடான செயலிலிருந்தும், (மார்க்கத்தில்) வெறுக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும்.”
(அல் அன்கபூத் 45)



## > தொழுகையின் அந்தஸ்தும் அதன் மகிமைகளும்

உடல் சார்ந்த வணக்கங்களில் தொழுகை மகத்தானதும், மிக முக்கியமானதுமாகும். இது உள்ளம், மூளை, நாவு என்பனவற்றை உள்ளடக்கியதொரு வணக்கமாகும்.

தொழுகையின் முக்கியத்துவம் பல்வேறு விடயங்களின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

### தொழுகைக்கே மிக உயர் அந்தஸ்து உண்டு

1 இது இஸ்லாத்தின் பிரதான தூண்களுள் இரண்டாம் பெரும் தூணாகும்.

இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

"இஸ்லாம் ஐம்பெரும் தூண்களால் நிறுவப்பட்டுள்ளது:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறுயாருமில்லை என்றும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அவனது தூதராவார் என்றும் சாட்சி சொல்லுதல். மேலும், தொழுகையை நிலைநாட்டுதல்..." (அல் புகாரி 8, முஸ்லிம் 16)

ஒரு கட்டிடத்திற்கு அதன் தூணே அடிப்படையாகும். அதன் மீதே அக்கட்டிடம் எழுப்பப்படுகின்றது. அது இல்லையேல், கட்டிடமே இல்லை.

2 சன்மார்க்க ஆதாரங்கள், தொழுகையை நிலைநாட்டுதலை முஸ்லிம்களுக்கும் இறைநிராகரிப்பாளர்களுக்குமிடையிலுள்ள வேறுபாடாக ஆக்கியுள்ளன.

இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

"நிச்சயமாக தொழுகையை விடுவது, மனிதனை குப்ரு (இறை நிராகரிப்பு) ஷிர்க் (இறைவனுக்கு இணைகற்பித்தல்) வரை சேர்த்துவிடுகிறது" (முஸ்லிம் 82)

மேலும், கூறினார்கள் :

"எங்களுக்கும் அவர்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கை தொழுகையாகும் யார் அதனை விட்டாரோ, அவர் இறைவனை நிராகரித்து விட்டார்" (திர்மிதி 2621, அந்நஸாஈ 463)

3 ஊரிலோ, பயணத்திலோ, யுத்த நேரத்திலோ, சமாதான வேளையிலோ, ஆரோக்கியமாகவோ, நோயாளியாகவோ எந்நிலையிலிருந்தாலும் தொழுகையைப் பேணுதலாக நிறைவேற்ற வேண்டுமென அல்லாஹ் பணித்திருக்கின்றான்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"(ஐங்காலத்) தொழுகைகளையும் (விடாமல் தொழுது) பேணிக்கொள்ளுங்கள். (அல் பகறா : 238)

மேலும், அல்லாஹ் தனது அடியார்களை இவ்வாறு வர்ணிக்கின்றான்:

"இன்னும் அவர்கள் தங்களது தொழுகைகளைப் பேணுவார்கள்." (அல் மு..மினூன் : 9)

### தொழுகைக்கான சிறப்புகள்:

தொழுகையின் மகிமை குறித்து அல் குர்ஆனிலும், சுன்னாவிலும் நிறையவே வந்துள்ளன. அவற்றில் சில:

1 தொழுகை பாவங்களை போக்குகின்றது. இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"பெரும் பாவங்கள் செய்யப்படாமலிருக்கும் காலமெல்லாம், ஐந்து நேரத் தொழுகைகளும் ஒரு ஜும்ஆத் தொழுகை மறு ஜும்ஆத் தொழுகை வரை இவைகளுக்கு இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் அனைத்துப் பாவங்களுக்கும் பரிகாரமாகும்". (முஸ்லிம் 233, திர்மிதி 214)

2 தொழுகை ஒரு முஸ்லிமின் முழு வாழ்விற்கும் (வழிகாட்டும்) ஒளியூட்டும் பிரகாசமாகும்.

அது, அவனுக்கு நன்மை செய்ய உதவுவதோடு, அவனைப் பாவத்திலிருந்தும் தூரப்படுத்துகின்றது.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"நிச்சயமாக தொழுகை, (அதை நிறைவேற்றுபவரை) மானக்கேடான செயலிலிருந்தும், (மார்க்கத்தில்) வெறுக்கப்பட்டதிலிருந்தும் தடுக்கும்." (அல் அன்கபூத் : 45)

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தொழுகை ஒரு பிரகாசமாகும்" (முஸ்லிம் 223)

3 மறுமை நாளில், ஓர் அடியான் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகைப் பற்றித் தான்.

அது சரியாக இருந்து அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால், ஏனைய நற்கிரியைகளும் ஏற்று அங்கீகரிக்கப்படும். அது அல்லாஹ்வினால் புறக்கணிக்கப்பட்டால், ஏனைய நற்காரியங்களும் நிராகரிக்கப்படும்.

இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

"மறுமை நாளில் ஓர் அடியான் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகைப் பற்றித் தான். அது சீராக இருந்தால், அவனுடைய ஏனைய நற்கிரியைகள் சீராக இருக்கும். அது சீரில்லாது இருந்தால் அவனுடைய ஏனைய நற்கிரியைகளும் சீரற்றதாகவே இருக்கும்."
(அல் மு.ஃ.ஜமுல் அவ்ஸத் லித் தபரானி 1859)



> மனிதன் எதிர்கொள்கின்ற யுத்தங்கள், அனர்த்தங்கள் உள்ளிட்ட (எல்லா சந்தர்ப்பங்களிலும்) தொழுகையைப் பேணிவர வேண்டுமென அல்லாஹ் உத்தரவிட்டிருக்கின்றான்.

தொழுகையில் அல்லாஹ்வோடு உரையாடும் அந்தக் கணப்பொழுதுகளே, ஒரு முஃமினுக்குரிய மிகச் சுவையான நேரமாகும்.

எனவே, அவன் அந்நேரத்தில் (எங்குமில்லாத) உள அமைதி, சுகம் மற்றும் அல்லாஹ்வின் நெருக்கம் என்பனவற்றை உணர்கின்றான்.

தொழுகையில் நிற்பதே நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் சந்தோஷத்திற்குரிய சந்தர்ப்பமாகும்.

இதனையே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையிலே வைக்கப்பட்டிருக்கின்றது" (அந் நஸாஈ 3940)

தொழுகைக்கான நபியவர்களின் அழைப்பாளர் பிலால் (றழி) அவர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவார்கள் :

பிலாலே ! "தொழுகையின் மூலம் எங்களுக்கு சுகத்தை ஏற்படுத்துங்கள்." (அபூதாவூத் 4985)

நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டுவிட்டால், தொழுகைக்கு (விரைந்து) சென்று விடுவார்கள். (அபூதாவூத் 1319)

## தொழுகை யார் மீது கடமையாகும் ?

முஸ்லிமான, புத்தி சுவாதீனமான, பருவ வயதை அடைந்த, மாத விடாய் மற்றும் நிபாஸ் (மகப்பேறு) என்பனவற்றிலிருந்து தூய்மையான நிலையிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் தொழுகை கடமையாகும்.

மாத விடாய் மற்றும் நிபாஸ் (மகப்பேறு) காலங்களின் போது பெண்கள் தொழுகையை நிறைவேற்றவோ, சுத்தமான அல்லது இரத்தம் நின்ற பிறகு தொழுகையை "கழாச்" செய்ய வேண்டுமென்பதோ இல்லை.



"பருவ வயதினை" அடைதல் என்பது பின்வரும் அடையாளங்களுள் ஒன்று இருப்பதன் மூலமே தீர்மானிக்கப்படும்.

- பதினைந்து வயதினை அடைதல்.
- பாலுறுப்பு மற்றும் ஆசனப் பகுதிகளில் முடி அடர்த்தியாக வளருதல்.
- தூக்கத்தில் அல்லது விழிப்பு நிலையில் இருக்கும் போது இந்திரியம் வெளிவரல்.
- ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படல் அல்லது கர்ப்பமடைதல்.

## > தொழுகையை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகள் யாது?

1 தொடக்கு மற்றும் நஜீஸிலிருந்து சுத்தமாயிருத்தல். முற்பகுதியில் இது தொடர்பான விரிவான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. (பக்கம் பார்க்க - 107)

2 அவ்ரத்தை மறைத்தல்.

கட்டையாகவோ அல்லது மெல்லியதாகவோ இருப்பதனால், உடற்பாகங்களை மிகத்தெளிவாக வெளிக்காட்டாத விதத்தில் அமைந்த ஆடை மூலம் அவ்ரத்தை மறைப்பது நிபந்தனையாகும்.

அவ்ரத்துக்கள் மூன்று வகைப்படும்:

பெண்:

பருவ வயதை அடைந்த பெண் தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதி :

முகம், இரு மணிக்கட்டுகள் தவிர்ந்த முழு உடம்புமாகும்.

பிள்ளை :

சிறு பிள்ளையின் அவ்ரத் : பாலுறுப்பு மற்றும் ஆசனப் பகுதிகள் மாத்திரம்.

ஆண் :

பருவ வயதையடைந்த ஆணின் அவ்ரத் : தொப்புள் முதல் முழங்கால் வரை.

அல்லாஹ் கூறுகின்றான் :

“ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்களுடைய அலங்காரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.” (அல் அ.்.ராப் : 31)

“அவ்ரத்தை மறைத்தல்” என்பது அழகுக்கான மிகக் குறைந்த பகுதியை மறைத்தலாகும்.

”كل مسجد” என்பதன் கருத்து “அனைத்துத் தொழுகைகள்” என்பதாகும்.



> தொழுகையில் ஒரு முஸ்லிம் பெண் தனது முகம் மற்றும் மணிக்கட்டுக்கள் தவிர்ந்த ஏனைய முழு உடலையும் மறைப்பது கட்டாயமாகும்.

எமது தொழுகை

## 3 கிப்லாவை முன்னோக்குதல்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"ஆகவே, (நபியே!) எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழுகையின் போது புனிதப் பள்ளியாகிய) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கமே உம்முடைய முகத்தைத் திருப்புவீராக!" (அல் பகறா : 149)

- முஸ்லிம்களின் கிப்லா, நபிமார்களின் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்கள் கட்டி, பல நபிமார்களும் சென்று தரிசித்த புனித கஃபாவாகும்.

  இது மனிதனுக்கு எந்த நன்மைகளையோ தீமைகளையோ ஏற்படுத்தாத கற்கள் என்பதை நாங்கள் தெளிவாக அறிந்திருக்கின்றோம்.

  இருந்தாலும், முஸ்லிம்கள் அனைவரும் ஒரே திசையை முன்னோக்கி தொழும் ஒரே சமூகம் என்ற ஒற்றுமையைக் காட்டுவதற்காகவே, நாங்கள் அதனை முன்னோக்கித் தொழ வேண்டுமென அல்லாஹ் எங்களைப் பணித்திருக்கின்றான்.

  எனவே, நாங்கள் அதனை முன்னோக்குவதன் மூலம் அல்லாஹ்வையே வணங்குகின்றோம். (அதனை அல்ல)

- ஒரு முஸ்லிம் தனக்கு முன்னால் கஃபாவை காணுமளவு தூரத்தில் இருந்தால், அதனை முன்னோக்கித் தொழுவது அவன் மீது கட்டாயக் கடமையாகும்.

  தூரத்தில் இருக்கும் ஒருவர் மக்கா திசையை நோக்கித் தொழுவதே போதுமானதாகும்.

  இவ்வாறு அதனை நோக்குகின்ற போது சற்று சிறியளவில் விலகியிருப்பதானது, தொழுகையில் எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

  "கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடைபட்ட பகுதி கிப்லாவாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி :342)

- இயலாத நிலை வருகின்ற போது, அனைத்துக் கட்டாயக்கடமைகளும் கட்டாய நிலையிலிருந்து இல்லாமலாக்கப்படுவது போலவே நோய் அல்லது வேறு காரணங்களால், கஃபாவை முன்நோக்கித் தொழ முடியாத நிலை ஒருவருக்கு ஏற்பட்டால், அதனை முன்னோக்கித் தொழ வேண்டுமென்ற அந்த கட்டாயாக் கடமையும் இல்லாது போய்விடும்.
  இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:
  "ஆகவே, இயன்ற அளவிற்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" (அத்தகாபுன்: 16)

## 4 தொழுகைக்கான நேரம் நுழைதல்.

இது தொழுகையை நிறைவேற்றுவதற்கான ஒரு நிபந்தனையாகும்.

தொழுகையை அதற்கான நேரம் வருவதற்கு முன் நிறைவேற்றுவது கூடாது. தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றாது பிற்படுத்துவதும் ஹராமாகும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது" (அந் நிஸா : 103)

பல்வேறு காரணங்களை முன்னிட்டு, தொழுகைக்கான நேரம் நுழைவதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

- தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதே மிகச் சிறந்தது.
- தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது கட்டாயமாகும். மேலும், அதனை எந்தவொரு காரணத்திற்காகவேணும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றாது பிற்படுத்துவதும் ஹராமாகும்.
- தூக்கம் அல்லது மறதியின் காரணமாக தொழுகையை ஒருவர் நிறைவேற்ற தவறி விட்டால், அது நினைவிற்கு வந்த மாத்திரத்தில் உடனடியாக நிறைவேற்றுவது அவர் மீது கட்டாயமாகும்.

## > பர்ளான ஐவேளைத் தொழுகைகளும் அதற்கான நேரங்களும்

இரவிலும் பகலிலும் அல்லாஹ் ஒரு முஸ்லிமின் மீது ஐவேளைத் தொழுகைகளை கடமையாக்கியுள்ளான்.
அவைகள் இஸ்லாத்தின் தூண்களாகவும் முஸ்லிமின் மீது விதியாக்கப்பட்ட மிக முக்கியமான கடமைகளுள் ஒன்றாகவும் உள்ளன.
அவைகளை நிறைவேற்றுவதற்கென தெளிவான நேரங்களை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அவைகள் பின்வருமாறு :

சுபஹுத் தொழுகை :
இது இரண்டு ரக்அத்துக்கள் ஆகும்.
அடிவானில் ஆரம்பமாகத் தோன்றும் ஒளியானது இதன் ஆரம்ப நேரமாகவும் சூரிய உதயம் இதன் இறுதி வேளையாகவும் கருதப்படுகின்றது.





லுஹர்த் தொழுகை :
இது நான்கு ரக்அத்துக்கள் ஆகும்.
சூரியன் உச்சியிலிருந்து சாய்வது, இதன் ஆரம்ப வேளையாகும். ஒரு பொருளினது நிழல் அதன் நீளத்திற்கு சமமாக வருகின்ற போது, அதுவே இதன் இறுதி வேளையாகக் கொள்ளப்படும்.

அஸர்த் தொழுகை :
இது நான்கு ரக்அத்துக்கள் ஆகும்.
லுஹர் தொழுகைக்கான இறுதி நேரமே இதன் ஆரம்ப வேளையாகும். சூரியன் மறைவது இதன் இறுதி நேரமாகும்.
சூரியனின் ஒளிக் கதிர்கள் நீங்கி, அவைகளின் நிறம் மஞ்சலாக மாறுவதற்கு முன்னர் இதனை அவசரமாக ஒரு முஸ்லிம் தொழுது கொள்வது அவசியமாகும்.





ம.்.ரிப் தொழுகை :
இது மூன்று ரக்அத்துக்கள் ஆகும்.
சூரியன் மறைவதே இதன் ஆரம்ப நேரமாகும். அதாவது, அடிவானத்தில் சூரியன் மறையும் நேரத்தையே இது குறிக்கின்றது.
சூரியன் மறைந்ததன் பிறகு கிழக்கு அடிவானத்தில் தோன்றுகின்ற செந்நிறம் மறைவதே இதன் இறுதி வேளையாகும்.

இஷாத் தொழுகை :
இது நான்கு ரக்அத்துக்கள் ஆகும்.
செந்நிற மேகம் மறையும் நேரமே இதன் ஆரம்ப வேளையாகும். இரவின் நடுநிசியோடு இதன் நேரம் முடிவடைகின்றது.
நிர்ப்பந்தமான வேளைகளின் போது, இதனை வைகறை உதயமாகும் வரை தொழுது கொள்ள முடியும்.



தொழுகைநேரங்களை மிகத் துல்லியமாகக் காட்டக்கூடிய நேரஅட்டவனைகளை பயன்படுத்துவதன் மூலம் ஒரு முஸ்லிம் தொழுகை நேரங்களை அறிந்துகொள்ளமுடியும்.
இதற்கெனவேறுமுயற்சிகள் மேற்கொள்ளவேண்டியஅவசியம் கிடையாது.

## > தொழுகைக்கான இடம்



தொழுகை கூட்டாகவே நிறைவேற்றப்படல் வேண்டுமென இஸ்லாம் உத்தரவிடுகின்றது.

இன்னும், அது பள்ளியில் இடம் பெறவேண்டுமெனவும் ஊக்கப்படுத்தியுள்ளது.

ஏனெனில், இது முஸ்லிம்கள் ஒன்றுகூடும் பொதுமன்றமாக இருப்பதோடு இவ்வாறு தொழுவது முஸ்லிம்களுடைய சகோதரத்துவத்தையும் அன்பையும் அவர்களிடையே அதிகரிக்கச் செய்யும்.

எனவே, இவ்வாறு கூட்டாகத் தொழுவது ஒருவர் தனியாகத் தொழுவதனை விட பலமடங்குகள் சிறப்புக்குரியதாகும்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

ஒருவர் கூட்டாகதத் தொழுவதானது, தனித்துத் தொழுவதனை விட இருபத்தேழு மடங்குகள் சிறப்புக்குரியதாகும்.

(அல் புகாரி : 619, முஸ்லிம் : 650, அஹ்மத் : 5921)

எனினும், தொழுகையை அனைத்து இடங்களிலும் நிறைவேற்ற முடியும். இது அல்லாஹ் நம்மீது கொண்டிருக்கும் அன்பைக் காட்டும் ஓர் அம்சமாகும்.

இதனை நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பூமி எனக்காக தொழுமிடமாகவும் சுத்தமானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

எனவே,தொழுகைக்கான நேரம் வந்துவிட்டால் எனது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்

(எங்கு வேண்டுமானாலும் ) தொழுது கொள்ளட்டும்.

(அல் புகாரி : 328, முஸ்லிம் : 521)

### தொழும் இடத்திற்கான வரையறைகள் :

தொழுவதற்கான இடமானது சுத்தமாக இருக்க வேண்டுமென இஸ்லாம் நிபந்தனையிட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

இன்னும் (அவ்வீட்டைச்) சுற்றி வருபவர்களுக்கும், (அதில்) தங்கியிருப்பவர்களுக்கும், (குனிந்து) ருகூஉ (சிரம்பணிந்து) ஸுஜுது

செய்பவர்களுக்கும் என் வீட்டை நீங்கள் இருவரும் சுத்தமாக்கி வைப்பீர்களாக" என்று இப்றாஹீமிடமும், இஸ்மாயீலிடமும் நாம் வாக்குறுதி வாங்கினோம். (அல் பகறா : 125)

தொழ விரும்பும் ஓர் இடத்தில் நஜீஸ் ஏதும் இல்லையெனில், அவ்விடம் சுத்தமானது எனக் கருதுவதே பொது விதியாகும்.

எனவே, இவ்வாறானதோர் இடத்தில் எந்தவித விரிப்புக்களும் இன்றி தொழ முடியும்.

### தொழுவதற்கான இடத்தில் அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன. உதாரணமாக :

1. மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படும் இடங்களில் தொழக் கூடாது.

   உதாரணமாக, சனநெரிசலையும் அசௌகரிகங்களையும் ஏற்படுத்தும் சந்தடி நிறைந்த பொது இடங்கள், போக்குவரத்துப் பாதைகள், நிற்பதற்கோ அல்லது உட்காருவதற்கோ அனுமதிக்கப்படாத இடங்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

   மக்களுக்கு தொல்லைகளும் தொந்தரவுகளும் கொடுப்பதனை தடைசெய்யும் வகையில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

   தனக்கோ பிறருக்கோ தீங்கு செய்யக்கூடாது (இப்னு மாஜா : 2340, அஹ்மத் : 2865)

2. தொழுபவர்களின் கவனத்தை கலைக்கக்கூடியவைகள் எதுவும் அற்றதோர் இடமாக இருத்தல் வேண்டும்.

   உதாரணமாக, புகைப்படக்காட்சிகள், பாரிய சப்தங்கள், இசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. வணக்க வழிபாடுகள் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கப்படும் எனும் இடங்களில் தொழக் கூடாது.

   உதாரணமாக, குடிகாரர்கள் அல்லது மதவெறியர்கள் உள்ள இடங்களைக் குறிப்பிடலாம்.

   அறியாமை காரணமாக, இறைநிராகரிப்பாளர்கள் அல்லாஹ்வை ஏசும் நிலை உருவாகிவிடக் கூடாது என்பதற்காக அவர்களின் கடவுள்களை ஏசக் கூடாது என அல்லாஹ் தடைசெய்துள்ளான்.

   அல்லாஹ் கூறுகின்றான்: (விசுவாசிகளே!) அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைத்துக்கொண்டிருப்போரை நீங்கள் திட்டாதீர்கள்; அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக, விரோதத்தால் அல்லாஹ்வை திட்டுவார்கள்; (அல் அன்ஆம் : 108)

4. பாவகாரியங்களுக்கென்றே பிரத்தியேகமாக ஒழுங்குபடுத்தப்படுத்தப்பட்ட இடங்களில் தொழக் கூடாது.

   உதாரணமாக, நடன அரங்குகள், இரவுநேரக் கலியாட்ட விடுதிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## > தொழுகைக்கான இடம்



பள்ளி வாயிலில் நீங்கள் கூட்டாக தொழுகையை நிறைவேற்ற முடியுமா?

**ஆம்** → கட்டாயமாக ஓர் ஆண் தொழுகையை கூட்டாகவே நிறைவேற்ற வேண்டும்.
அதுவே அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானதும் உயர்ந்த வணக்கமாகவும் உள்ளது.
இவ்வாறு பள்ளியில் கூட்டாகத் தொழுவதற்கு பெண்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**இல்லை** ↓

அதனைப் பள்ளிவாயிலில் உங்களால் நிறைவேற்ற முடியாது போனால், ஏனைய இடங்கள் நஜீஸா?

**ஆம்** → நஜீஸான இடங்களில் தொழுவது ஹராமாகும்.
எனவே, அவ்வாறான இடங்களை சுத்தம் செய்யுமாறு அல்லாஹ் எம்மைப் பணித்துள்ளான்.

**இல்லை** ↓

தொழுமிடம் சுத்தமாக இருந்து, அவ்விடத்தில் தொழுவது மக்களுக்கு இடையூராக இருந்தால், உதாரணமாக, வீதியில் தொழுவது போன்றவை கூடுமா?

**ஆம்** → தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவது ஹராமாகும்.
எனவே, வேறொரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்தல் வேண்டும்.

**இல்லை** ↓

தொழுமிடத்தில் கவனத்தைக் கலைக்கும் அம்சங்கள் இருப்பின், அங்கு தொழ முடியுமா? உதாரணமாக, புகைப்படங்கள், பாரிய சப்தங்கள்

**ஆம்** → அவ்வாறான இடங்களிலிருந்து விலகிக் கொள்வது அவசியமாகும்.

**இல்லை** → பூமியில் எவ்விடத்திலாயினும் தொழுகையை நிறைவேற்ற முடியும்.
இது இந்த சமூகத்திற்கு வழங்கப்பட்ட தனித்துவங்களுள் ஒன்றாகவும் அல்லாஹ் வழங்கிய அருளாகவும் இருக்கின்றது.

## › தொழுகையை நிறைவேற்றுவதற்கான முறை

1 நிய்யத்து வைத்தல்.

"நிய்யத்து வைத்தல்" என்பது தொழுகையைநிறைவேற்றுவதற்கானதொரு நிபந்தனையாகும்.
"தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வை வணங்குகின்றேன்" என்று உள்ளத்தால் எண்ணுவதனையே இது குறிக்கின்றது.
இவ்வாறு நிய்யத் வைக்கும் போது, (உதாரணமாக, இது ம:.ரிப் தொழுகை அல்லது இஷாத் தொழுகை என்று) குறித்த இந்தத் தொழுகையைத்தான் நான் நிறைவேற்றுகின்றேன் என்று அறிந்து வைத்திருக்க வேண்டும்.
நிய்யத்தை நாவினால் மொழியாது, உள்ளத்தினால் நினைத்து கொள்வதனையே இஸ்லாம் விதியாக்கியுள்ளது. எனவே,இதனை நாவினால் மொழிவது தவறாகும்.
நபி (ஸல்) அவர்களோ அல்லது அவர்களின் தோழர்களோ நிய்யத்தை நாவினால் மொழிந்தார்கள் என்ற செய்தி எங்குமே இடம்பெற வில்லை.



2 அடுத்து தொழுகைக்காக எழுந்து நின்று "அல்லாஹு அக்பர்" என்று தக்பீரைக் கூறுதல்.
அதன் போது, ஒருவர் தனது இரண்டு கரங்களையும் தோற்புயங்கள் அளவோ அல்லது அவைகளை விட சற்று உயரமாகவோ உயர்த்துவார்.
அப்போது அவரின் கைகளது உட்புறம் "கிப்லா" திசையை நோக்கியதாக இருத்தல் வேண்டும்.
" الله أكبر" என்று மொழிவதன் மூலமே தக்பீர் ஏற்றுக் கொள்ளப்படும்.



மேன்மையும் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது என்பதே இதன் பொருள்.
எனவே, அல்லாஹ் அவனல்லாத அனைவரையும் விடப் பெரியவன். மேலும், அவன் உலகம் மற்றும் அதிலுள்ள இன்பங்கள் ஆசைகள் அனைத்தை விடவும் பெரியவன்.
ஆகவே, நாங்கள் தக்பீர் கூறிவிட்டால், இந்த இன்ப சுகங்கள் அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு, எமது உள்ளங்கள் மற்றும் சிந்தனைகளால் அவனைப் பயந்தவர்களாக உயர்ந்த அந்த அல்லாஹ்வின் பக்கம் எமது கவனத்தை முழுமையாக திருப்பிவிட வேண்டும்.

3 தக்பீரைக் கூறியதன் பின்னர் வலது கையை இடது கையின் மீது வைத்து, நெஞ்சின் மேல் தக்பீரைக் கட்டிக் கொள்ளல்.
நிலையில் நிற்கும் போதெல்லாம் இவ்வாறே கைகளை வைத்துக் கொள்ள வேண்டும்.

4 பின்னர் "துஆஉல் இப்திதாஹ்" என அழைக்கப்படும் பின்வரும் துஆவை ஓத வேண்டும். "சுப்ஹானகல்லாஹு*ம்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜித்துக வலா இலாஹ கைருக"
இவ்வாறு ஓதுவது முஸ்தஹப்பாகும்.

5 "அஊது பில்லாஹி மினஷ்ஷை தானிர் ரஜீம்" என்று கூறுதல்.
இது "இஸ்திஆதா" எனக் கூறப்படும்.
"எடுத்தெறியப்பட்ட ஷைத்தானின் தீங்கிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்" என்பதே இதன் பொருளாகும்.

6 "பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்" என்று கூறுதல்.
"அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உதவிகோரியவனாக ஆரம்பம் செய்கின்றேன்" என்பதே இதன் பொருளாகும்.

7 பின்னர் சூரதுல் பாதிஹாவை ஓதுதல். இதுவே குர்ஆனில் உள்ள மிக உயர்ந்த சூராவாகும்.

- இந்த சூராவை இறக்கி வைத்ததன் மூலம் தனது தூதரான நபி (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் அருள் புரிந்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:
(நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு திரும்பத்திரும்ப ஓதக் கூடிய ஏழு வசனங்களை (யுடைய அல் பாத்திஹா அத்தியாயத்தை)யும், இந்த மகத்தான குர்ஆனையும் தந்திருக்கிறோம். (அல் ஹிஜ்ர்: 87)
சூரதுல் பாதிஹாவையே இங்கு "அஸ்ஸபுஉல் மஸானி" எனக் குறிப்பிடப்படுகின்றது. ஏழு வசனங்களைக் கொண்டதாக இந்த சூரா இருப்பதுவே இவ்வாறு இது அழைக்கப்படுவதற்கான காரணமாகும்.

- ஒரு முஸ்லிம் இதனைக் கற்றுக் கொள்வது கட்டாயமாகும். ஏனெனில், தனித்தோ அல்லது இமாமுக்குப் பின்னாலோ (இது இமாம் சூராவை சப்தமிட்டு ஓதாத தொழுகைகளில்) எவ்வாறான நிலையில் ஒருவர் தொழுதாலும், அவர் இந்த சூராவை ஓதுவது அந்த தொழுகை நிறைவேறுவதற்கானதூ ண்களுள்(அடிப்படைகளுள்) ஒன்றாக இது கருதப்படுகின்றது.

8 சூரதுல் பாதிஹாவை ஓதிய பிறகு அல்லது இமாம் ஓதுவதை செவியுற்ற பிறகு "ஆமீன்" என்று கூறுதல்.
"அல்லாஹ்வே! எனது வேண்டுதலுக்குவிடையளிப்பாயாக" என்பதே இதன் பொருளாகும்.

9 முதல் இரண்டு ரக்அத்துக்களிலும் சூரதுல் பாதிஹாவை ஓதியதன் பின்னால், வேறொரு சூராவை அல்லது குர்ஆனின் வேறு சில வசனங்களை ஓதுதல்.
மூன்றாம் நான்காம் ரக்அத்துக்களில் சூரதுல் பாதிஹாவை மாத்திரமே ஓதுதல் வேண்டும்.

- சுப்ஹுத் தொழுகை மற்றும் ம.்.ரிப், இஷாத் தொழுகைகளின் ஆரம்ப இரண்டு ரக்அத்துக்களிலும் சூரதுல் பாதிஹாவையும் ஏனைய குர்ஆனிய சில வசனங்களையும் சப்தமிட்டு ஓதப்படும். லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளில் சப்தமின்றியே ஓதப்படும்.

- தொழுகையில் ஓதப்படுகின்ற ஏனைய அம்சங்களைப் பொறுத்தவரையில், அவைகள் சப்தமின்றியே ஓதப்படும்.

### சூரதுல் பாதிஹா மற்றும் தொழுகையில் ஓதப்பட வேண்டிய ஏனைய விடயங்களைத் தெரியாதவர்கள் செய்ய வேண்டியது என்ன ?

புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஒருவருக்கு சூரதுல் பாதிஹா மற்றும் தொழுகையில் ஓதப்பட வேண்டிய துஆக்கள் தெரியாது போனால், அவர் பின்வரும் விடயங்களைச் செய்ய வேண்டும்.

- அறபு மொழியில் ஓதப்பட்டால் மாத்திரம் அங்கீகரிக்கப்படும் என்ற நிலையிலுள்ள

தொழுகையில் கட்டாயம் ஓதப்படவேண்டியவைகளான பின்வருவன போன்ற விடயங்களை அவர் மனனமிடுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

அவைகளாவன:-

சூரதுல் பாதிஹா, தக்பீர் கூறுதல், சுப்ஹான றப்பியல் அழீம், ஸமியல்லாஹு லிமன் ஹமிதஹ்,றப்பனா லகல் ஹம்த், சுப்ஹான றப்பியல் அ.்லா,அத்தஹிய்யாத்தும் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுதலும், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று

ஸலாம் கூறுதல்.

- இவைகளை மனனமிட்டு முடிப்பதற்கு முன்னர் தனக்குத் தெரிந்த தக்பீர்கள், தஹ்மீதுகள், தஸ்பீஹுகள் மற்றும் மனனமிட்ட வசனங்கள் என்பவற்றை தொழுகைகளின் போது, அவர் திரும்பத்திரும்ப ஓதிக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

ஆகவே, இயன்ற அளவிற்கு அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்;

(அத் தகாபுன் : 16)

- இந்தக் காலங்களின் போது அவர் ஜமாஅத் தொழுகைகளில் பேணுதலாகக் கலந்து கொள்வது அவசியமாகும்.

ஏனெனில், இமாம்கள் தனக்குப் பின்னால் தொழுபவர்களது தவறுகளை நிவர்த்திப்பதோடு அவரது தொழுகை நேர்த்தியாகவும் அமைந்து விடுகின்றது.



சூரதுல் பாதிஹாவின் பொருள் வருமாறு:

"அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்" அவனது அனைத்து விதமான பண்புகள், செயல்கள் மூலமும் மேலும், வெளிப்படையானதும் அந்தரங்கமானதுமான அவனது அருட்கொடைகள் மூலமும் அல்லாஹ்வை நான் அன்புடன் புகழ்கின்றேன்.

"ரப்பு" என்பவன், அவனே படைத்தவன், அனைத்தினதும் சொந்தக்காரன், அனைத்தையும் நிருவகிக்கும் அருலாளன்.

"ஆலமீன்" என்பது மனிதர்கள், ஜின்கள், மலக்குகள், மிருகங்கள் மற்றும் ஏனைய படைப்புக்கள் உள்ளிட்ட அல்லாஹ் தவிர்ந்த அனைத்தையும் குறிக்கும்.

"அர்ரஹ்மானிர் ரஹீம்" இந்த இரண்டு வார்த்தைகளும் அல்லாஹ்வின் திருநாமங்களாகும்.

"ரஹ்மான்" என்பது பொதுவாகவே "அனைத்தின் மீதும் இரக்கமுள்ளவன்" என்ற கருத்தைக் கொடுக்கும் ஒரு சொல்லாகும்.

"அர்ரஹீம்" என்பது "தனது அடியார்களான மு.ஃமின்கள் மீது அன்புள்ளவன்" என்ற பொருளைக் கொடுக்கும் ஒரு பதமாகும்.

"மாலிகி யவ்மித்தீன்" அவனே மறுமை நாளின் அதிபதி.

இந்த வசனம் ஒரு முஸ்லிமுக்கு மறுமை நாளை ஞாபகமூட்டுவதோடு, நல்ல செயல்களைச் செய்யவும் அவனைத் தூண்டுகின்றது.

"இய்யாக ந.ஃபுது வஇய்யாக நஸ்தஈன்" எமது இரட்சகனே! உன்னை மாத்திரமே நாங்கள் வணங்குகின்றோம். எந்தவொரு வணக்கங்களின் போதும் உன்னோடு இன்னொருவரை இணையாக்க மாட்டோம்.

எமது அனைத்து விவகாரங்களிலும் உன்னிடத்தில் மாத்திரமே உதவி கோருகின்றோம். அனைத்தினது அதிகாரமும் உனது கையிலேயே இருக்கின்றது.

"இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீம்" எமக்கு நேரான வழியைக் காட்டுவாயாக. உன்னை நாம் தரிசிக்கும் வரையில் அதில் எம்மை நிலைத்திருக்கச் செய்வாயாக.

நேரான வழியென்பது தெளிவான இஸ்லாமிய மார்க்கமாகும். இது அல்லாஹ்வினது திருப்தியையும் அவனது சுவனத்தையும் பெற்றுத் தரக்கூடியது.

இதனையே நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்தார்கள். இந்த மார்க்கத்தில் நிலைத்திருப்பதன் மூலமே ஒருவன் சுபீட்சத்தைப் பெறமுடியும்.


"ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம்" அது நீ அருள் புரிந்து, வழிகாட்டிய நபிமார்கள் நல்லடியார்களின் பாதையாகும். அவர்கள் அந்த சத்திய வழியை அறிந்து அதனையே பின்பற்றினர்.

"கைரில் ம.ஃலூபி அலைஹிம் வழல்லால்லீன்" நீ கோபித்தவர்களின் வழியிலிருந்து எம்மைக் காப்பாற்றி

தூரப்படுத்துவாயாக.

ஏனெனில், அவர்கள் சத்திய வழியை அறிந்தும் அதனைப் பின்பற்றாதவர்கள் அவர்களே யஹூதியர்களும் அவர்களை ஒத்தவர்களுமாவர்.

மேலும், வழிதவரியவர்களின் பாதையிலிருந்தும் எம்மை தூரப்படுத்துவாயாக. அறியாமை காரணமாக சத்திய வழியைப்பெறாதவர்கள். இவர்களே கிருஸ்தவர்களும் அவர்களை ஒத்தவர்களும் ஆவர்.



10 பின்னர் ருகூவிற்காக தக்பீர் கூறுதல். இதன் போது, தனது இரண்டு கைகளையும் தோள் புயம் வரையிலோ அல்லது அதைவிட சற்று உயரமாகவோ உயர்த்த வேண்டும்.
அப்போது அவரது இரண்டு முன்னங்கைகளினதும் உற்பகுதிகள் முதலாவது தக்பீரில் இருந்தது போன்று கிப்லாவை முன்னோக்கியதாகவே இருத்தல் வேண்டும்.

11 பின்னர், முதுகுப் பகுதியை கிப்லாத் திசையை நோக்கிப் பணிய வைத்தல்.
அதன் போது முதுகும் தலையும் சமமாக இருக்க வேண்டும். மேலும், இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்கள் மீதும் வைப்பதோடு "சுப்ஹான ரப்பியல் அழீம்" என்றும் ஓத வேண்டும்.
இதனை மூன்று தடவைகள் ஓதுவது முஸ்த்தஹப்பாகும். ஒரு முறை ஓதுவது கட்டாயமாகும்.
"ருகூ.்." என்பது அல்லாஹ்வை புகழுவதற்கானதோர் இடமாகும்.

- "சுப்ஹான ரப்பியல் அழீம்" என்பதன் பொருள் :



உயர்ந்த அல்லாஹ்வை குறைகளை விட்டு நான் தூய்மைப்படுத்துகின்றேன். இதனை நான் அல்லாஹ்விற்காக குனிந்தும் பணிந்தும் கூறுகின்றேன்.

12 பின்னர் ருகூ.்.விலிருந்து நிலைக்கு வர வேண்டும்.
அதன் போது இரண்டு கைகளையும் நேராக உயர்த்தி அதன் உட்பகுதிகளை "கிப்லா" திசையை நோக்கியவாறு வைக்க வேண்டும்.
அப்போது அவர் இமாமாக இருப்பின், "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்" என்றும் இமாமுக்குப் பின்னால் நின்று தொழுபவராயின், "ரப்னா வலகல் ஹம்த்" என்றும் கூறவேண்டும்.
இதனை பலமுறை கூறுவதும் இதன்பிறகு பின்வரும் துஆவை ஓதுவதும் முஸ்தஹப்பாகும்.
"ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் பீஹி, மில்அஸ்ஸமாவாதி வமில்அல் அர்ழி வமில்அ மா ஷி.்.த மின் ஷைஇன் ப.்.து"

13 பின்னர் தக்பீர் கூறியவராக பின்வரும் ஏழு உறுப்புக்களும் நிலத்தில் படும் வகையில் "சுஜூது" செய்தல்.
அந்த உறுப்புக்களாவன :
மூக்கு உட்பட நெற்றி, இரண்டு கைகள், இரண்டு முழங்கால்கள், இரண்டு பாதங்களினதும் விரல்கள்.



சுஜூதின் போது இரண்டு கைகளையும் வயிரையும் இரண்டு தொடைகளையும் முறையே விலாப்புறங்கள், தொடைகள், கால்கள் என்பவற்றிலிருந்து தூரமாக்கிய நிலையில் வைப்பது முஸ்தஹப்பாகும்.
மேலும் இரண்டு முன்னங்கைகளையும் பூமியில் படாதவாறு உயர்த்தி வைத்துக் கொள்ளல் வேண்டும்.

14 சுஜூதில் "சுப்ஹான ரப்பியல் அ.'.லா" என்று ஓத வேண்டும்.
இதனை ஒரு தடவை ஓதுவது கட்டாயமாகும். மூன்று முறைகள் ஓதுவது முஸ்தஹப்பாகும்.
"சுஜூது" என்பது அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதற்கான மகத்தானதோர் இடமாகும்.
இங்கு அவசியம் ஓதப்பட வேண்டிய திக்ரை கூறிய பிறகு, தான் விரும்புகின்ற உலகம் மற்றும் மறுமை சார்ந்த நலன்களைத் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திக்க முடியும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஓர் அடியான் தொழுகையின் போது சுஜூதில் இருக்கும் சந்தர்ப்பமே,அவன் தனது இறைவனுக்கு மிக நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பமாகும். எனவே,அதில் நீங்கள் அதிகமாக பிரார்த்தனை செய்யுங்கள். (முஸ்லிம் : 482)



- "சுப்ஹான ரப்பியல் அ.'.லா" என்பதன் பொருள் :

வானங்களின் மீது மிகவும் உயர்ந்தவனாகவும் சக்திவாய்தவனாகவும் இருக்கின்ற அந்த அல்லாஹ்வை அனைத்து விதமான குற்றம் குறைகளிலிருந்தும் நான் தூய்மைப்படுத்துகின்றேன்.
அல்லாஹ்விற்கு முன்னால் பணிந்தும் குணிந்தும் சுஜூது செய்த அந்த மனிதருக்கும், உயர்ந்த படைப்பாளனாகிய அந்த அல்லாஹ்வுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை இந்த வாசகம் அவருக்கு நினைவுபடுத்துகின்றது.
எனவே, அவர் தனது இரட்சகனுக்கு பணிந்து கட்டுப்பட்டு நடப்பார்.

15 "அல்லாஹு" அக்பர்" என்று கூறி, இரண்டு சுஜூதுக்குமிடையில் அமருதல்.

இவ்வாறு, உட்காரும் போது இடது காலின் மீது அமர்ந்து வலது காலை நட்டி வைக்க வேண்டும்.

மேலும், இரண்டு கைகளையும் முழங்காலை அடுத்துள்ள தொடைகளின் முன்பகுதிகளின் மீது வைக்க வேண்டும்.

- இறுதி "அத்தஹிய்யாத்" தவிர்ந்த தொழுகையின் அனைத்து இருப்புக்களின் போதும் இவ்வாறு அமருவதே முஸ்தஹப்பாகும்.

ஆனால் இறுதி அத்தஹிய்யாத்திற்காக அமரும் போது, மேற்சொன்னவாறு வலது காலை நட்டிவைத்து இடதுகாலை அதற்குக் கீழால் வெளியே எடுத்து ஆசனப் பகுதியை நிலத்தில்

வைத்தவராக உட்காருதல் வேண்டும்.

- முழங்கால் வலி அல்லது பழக்கமின்மை காரணமாக முதல் அல்லது இரண்டாவது அத்தஹிய்யாத்துகளுக்காக மேற்குறித்தவாறு உட்கார ஒருவருக்கு இயலாது போனால், அவர் தனக்கு வசதியானதும் இந்த இருப்புக்கு மிகவும் நெருக்கமான வேறொரு வகையில் உட்கார்ந்து கொள்ள முடியும்.

16 இரண்டு சுஜூதுகளுக்குமிடையில் அமருகின்ற போது "ரப்பி.'. பிர்லி" என்று ஓத வேண்டும்.
இவ்வாறு மூன்று தடவைகள் ஓதுவது முஸ்தஹப்பாகும்.

17 பின்னர், முதலாவது சுஜூதை செய்தது போன்றே இரண்டாவது சுஜூதையும் செய்ய வேண்டும்.

18 பின்னர், இரண்டாவது சுஜூதிலிருந்து நிலைக்கு வருவதற்காக "அல்லாஹு அக்பர்" என்று கூறியவராக எழும்ப வேண்டும்.

19 முழுமையாக முதல் ருகூ.'.வைச் செய்தது போன்றே, இரண்டாவது ருகூ.'.வையும் செய்ய வேண்டும்.

20 இரண்டாம் ரக்அத்தில் இரண்டாவது சுஜூதை செய்த பிறகு, முதல் அத்தஹிய்யாத்துக்காக உட்கார்ந்து இவ்வாறு ஓதுவார்.
"அத் தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு"



21 தொழுகை மூன்று அல்லது நான்கு ரக்அத்துக்களைக் கொண்டதாக இருப்பின், அதன் எஞ்சிய பகுதிகளை நிறைவேற்றுவதற்காக எழும்ப வேண்டும்.
எனினும், இந்த மூன்றாம் நான்காம் ரக்அத்துக்களின் போது சூரதுல் பாதிஹா மாத்திரமே ஓதப்படும்.

- சுப்ஹுத் தொழுகையைப் போன்று தொழுகை இரண்டு ரக்அத்துக்களைக் கொண்டதாக இருப்பின், முதலாவது அத்தஹிய்யாத் உட்பட இரண்டாவது அத்தஹிய்யாத்தையும் ஓத வேண்டும்.

22 பின்னர், இறுதி ரக்அத்தில் இரண்டாவது சுஜூதை செய்த பிறகு இறுதி அத்தஹிய்யாத்துக்காக உட்கார வேண்டும்.
இதில் பின்வரும் மேலதிகப் பகுதிகள் உட்பட முன்னர் குறிப்பிட்டவாறு முதல் அத்தஹிய்யாத்தை ஓத வேண்டும்.
"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத், வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத்"

- இதன் பிறகு, பின்வரும் துஆவை ஓதுவதும் தனக்கு விருப்பமான விடயங்களை அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதும் முஸ்தஹப்பாகும்.
  "அஊது பில்லாஹி மின் அதாபி ஜஹன்னம வமின் அதாபில் கப்ரி வமின் பித்னதில் மஹ்யா வல் மமாதி வமின் பித்னதில் மஸீஹித் தஜ்ஜால்"

23 பின்னர், இறுதியாக "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்" என்று கூறியவராக வலது பக்கம் முகத்தைத் திருப்ப வேண்டும்.

பிறகு அவ்வாறே இடது பக்கம் முகத்தைத் திருப்பி ஸலாம் கூற வேண்டும்.

- "தொழுகையானது தக்பீர் கூறுவதன் மூலம் ஆரம்பமாகி, ஸலாம் கூறுவதன் மூலம் முடிவடைகின்றது" (அபூ தாவூத் : 61, அத் திர்மிதி : 3)
  என்று நபியவர்கள் கூறியதற்கு இணங்க ஒரு முஸ்லிமின் தொழுகை அவர் ஸலாம் கூறுவதன் மூலம் நிறைவடைகின்றது.
  இந்த ஹதீஸின் பொருள் : ஆரம்பத் தக்பீரைக் கூறுவதன் மூலம் ஒருவர் தொழுகைக்குள் நுழைந்து ஸலாம் கூறுவதன் மூலம் அதிலிருந்து வெளியேறுகின்றார் என்பதாகும்.

24 பர்ளான தொழுகைகளை ஒருவர் முடித்த பின், பின்வரும் துஆக்கள் மற்றும் திக்ருகளை ஓதுவது முஸ்தஹப்பாகும்

- "அஸ்த.ஃ.பிறுல்லாஹ்" மூன்று தடவைகள்
- (அல்லாஹும்ம அன்தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம்) (அல்லாஹும்ம லா மானிய லிமா அ.ஃ.தய்த் வலா மு.ஃ.திய லிமா மன.ஃ.த் வலா என்பஉ தல் ஜத்தி மின்கல் ஜத்) என்று ஓத வேண்டும்.
- பின்வருவன ஒவ்வொன்றையும் 33 தடவைகள் ஓத வேண்டும்.
  "சுப்ஹானல்லாஹ்"
  "அல்ஹம்துலில்லாஹ்"
  "அல்லாஹு அக்பர்"
  பின்னர் நூறை பூர்த்தியாக்க "லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வகுவ அலா குல்லி ஷையின் கதீர்" என்று ஓத வேண்டும்.

## > எவ்வாறு தொழுவது? (நிலை - ருகூஃ - சுஜூது)

1

எழும்பி நின்று "அல்லாஹு அக்பர்" என்று கூறுவார். அதன் போது, தனது இரண்டு கைகளையும் அவரது இரண்டு காதுகள் மற்றும் தோள் புயங்கள் என்பவற்றுக்கு இடைப்பட்ட பகுதி வரை உயர்த்துவார்.



2

தனது வலது கையை இடது கையின் மீது கட்டி அவைகளை நெஞ்சின் மீது வைத்துக் கொள்வார்.
பின்னர், சூரதுல் பாதிஹாவையும், முதலாவது அல்லது இரண்டாவது ரக்அத்துக்களாக இருப்பின் பாதிஹா உட்பட குர்ஆனின் வேறு சில பகுதிகளையும் ஓதுவார்.



3

இரண்டு கைகளையும் உயர்த்தியவராக தக்பீர் கூறிய நிலையில், தனது முதுகை கிப்லாத் திசையை நோக்கியவாறு வைத்துக் கொண்டு குனிவார்.
அதன் போது, இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்கள் மீதும் வைத்துக் கொள்வார். அங்கு "சுப்ஹான ரப்பியல் அழீம்" என்று மூன்று முறைகள் கூறுவார்.





4 ருகூ.:.விலிருந்து எழும்பி நிலைக்கு வருவார். அதன் போது, அவரது இரண்டு கைகளையும் முதல் தக்பீரில் இருந்தவாறு உயர்த்துவார்.
பிறகு, அவர் இமாமாக இருந்தாலோ அல்லது தனியாக இருந்தாலோ "ஸமிஅல்லாஹு" லிமன் ஹமிதஹ்" என்று கூறுவார்.
அதன் பிறகு, இமாமுக்குப் பின்னாலுள்ள அனைவரும் "ரப்பனா வலகல் ஹம்த்" என்று கூறுவார்கள்.



5 கைகளை உயர்த்தாமல், தக்பீர் கூறியவராக பின்வரும் ஏழு உறுப்புக்களும் நிலத்தில் படும் வகையில் சுஜூது செய்வதற்காக குனிவார்.
சுஜூதுக்கான உறுப்புக்கள் :
மூக்கு உட்பட நெற்றி, இரண்டு கைகள், இரண்டு முழங்கால்கள், இரண்டு கால்கள்.
இதன் போது "சுப்ஹான ரப்பியல் அ.:.லா" என்று மூன்று தடவைகள் கூறுவார்.

6 இரண்டு சுஜூதுகளுக்குமிடையில் தனது வலது காலை நட்டி, இடது காலில் அமர்ந்தவராக உட்காருவார்.
அதன் போது, தனது இரண்டு கைகளையும் தொடைகளின் முன்பகுதிகளின் மீது வைத்துக் கொள்வார்.
அதில் "ரப்பி.:. பிர்லி வர்ஹம்னி" என்று ஓதுவார். பிறகு, முதல் சுஜூதைப் போன்றே இரண்டாவது சுஜூதையும் செய்வார்.



## > எவ்வாறு தொழுவது? (இரண்டாவது ரக்அத் - அத்தஹிய்யாத் - ஸலாம் கூறுதல்)

7

சுஜூதிலிருந்து எழும்பி இரண்டாவது ரக்அத்துக்காக நிற்பார். முதல் ரக்அத்தில் செய்த அனைத்தையும் முழுமையாக இதில் செய்வார். (நிலையில் நிற்றல், ஓதுதல், ருகூஃ செய்தல், அதிலிருந்து எழும்புதல், ஸஜூது செய்தல்)



8

இரண்டாவது ரக்அத்தில் இரண்டாம் சுஜூதைச் செய்த பின்னர், இரண்டு சுஜூதுகளுக்கிடையில் இருப்பது போன்று முதல் அத்தஹிய்யாத்துக்காக உட்கார்ந்து, அதில் இதனை ஓதுவார். "அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு"



9

தொழுகை மூன்று அல்லது நான்கு ரக்அத்துக்களைக் கொண்டதாக இருப்பின், மூன்றாவது ரக்அத்துக்காக எழும்பி முதலாம் இரண்டாம் ரக்அத்துக்களில் செய்தது போன்றே அதிலும் செய்வார். ஆனால், சூரதுல் பாதிஹாவிற்குப் பின்னர் வேறெந்த சூராவையும் ஓதமாட்டார். ஏனைய செயல்கள் மற்றும் ஓதல்கள் என்பன முன்னர் செய்தது போன்றே செய்யப்படும்.



**10** சுஜூதுக்குப் பின்னர், இறுதி ரக்அத்தில் அமர்ந்து முதல் அத்தஹிய்யாத்தையும் நபி (ஸல்) அவர்கள் மீதான ஸலவாத்தையும் ஓதுவார்.
"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத், வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத்"



**11** வலது பக்கம் முகத்தைத் திருப்பி "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்" என்று கூறுவார். அவ்வாறே இடது புறமும் திரும்பி ஸலாம் கூறுவார்.

## > தொழுகைக்கான அர்கான்களும் (தூண்களும்) அதற்கான வாஜிபுகளும்.

தொழுகையின் தூண்கள் : தொழுகையின் பிரதான கூறுகளையே இவைகள் குறிக்கின்றன.

இவைகளுள் ஏதேனுமொன்றை வேண்டுமென்றோ அல்லது மறதியாகவோ விட்டுவிடுவதன் மூலம் தொழுகை செல்லுபடி அற்றதாக மாறிவிடும்.

அவைகள் பின்வருமாறு :

ஆரம்பத் தக்பீரைக் கூறுதல், இயலுமானவர் நிற்றல், சூரதுல் பாதிஹாவை ஓதுதல், (இது தனியாகத் தொழுபவருக்கு) ருகூஃ செய்தல், அதிலிருந்து எழும்புதல், ஸஜூது செய்தல், இரண்டு சுஜூதுகளுக்குமிடையில் இருத்தல், இறுதி அத்தஹிய்யாத்தை ஓதுதல், அதற்காக இருத்தல், ஒவ்வொரு அசைவுகளுக்குப் பின்னரும் அமைதியாக இருத்தல், ஸலாம் கூறுதல்.

தொழுகையின் வாஜிபுகள் :

அவசியம் செய்யப்படவேண்டிய தொழுகையின் கூறுகளையே இவைகள் குறிக்கின்றன. இவைகளுள் ஒன்றை வேண்டுமென்றே செய்யாது விடுவதன் மூலம் தொழுகை செல்லுபடி அற்றதாக மாறிவிடும்.

இவைகளை மறதியாகவோ அல்லது கவனக்குறைவாகவோ விடுவதன் மூலம் தொழுகை செல்லுபடி அற்றதாக மாறாது.

இவைகளை "ஸஜதா ஸஹ்வு" வின் மூலம் நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

தொழுகையின் வாஜிபுகள் வருமாறு :

ஆரம்பத் தக்பீர் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தக்பீர்கள், பின்வரும் திக்ருகள் மற்றும் துஆக்களை ஓதுதல்

- "ஸுப்ஹான றப்பியல் அழீம் (ஒரு முறை)
- ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் (இது இமாமுக்கும் தனித்துத் தொழுபவருக்குமுரியது)
- றப்பனா வலகல் ஹம்து (இது அனைவருக்குமுரியது)
- ஸுஜூதில் ஸுப்ஹான றப்பியல் அஃலா (ஒரு முறை) -இரண்டு சுஜூதுகளுக்குமிடையில் றப்பிஃபிர்லீ (ஒரு முறை) - முதல் அத்தஹிய்யாத்.

இந்த வாஜிபுகள் மறக்கப்பட்டால் ஸஜ்தா ஸஹ்வின் மூலம் இவற்றை நிவர்த்தி செய்ய முடியும்.

தொழுகையின் சுன்னத்துக்கள் :

தொழுகையின் தூண்கள் மற்றும் வாஜிபுகள் தவிர்ந்த சொல், செயல் சார்ந்த அனைத்து அம்சங்களும் "சுன்னத்துக்கள்" எனக் கூறப்படும்.

இவைகள் தொழுகையை முழுமைப்படுத்துகின்ற அவசியம் பேணப்பட வேண்டிய விடயங்களாகும்.

எனினும், இவைகளுள் ஒன்றை விடுவதன் மூலம் தொழுகை செல்லுபடி அற்றதாக மாறாது.



மறதிக்காகச் செய்யப்படும் சுஜூதுகள் :

தொழுகையில் ஏற்படும் பிழைகள், தவறுகள் என்பனவற்றை நிவர்த்தி செய்வதற்காக அல்லாஹ் விதியாக்கிய இரண்டு சுஜூதுகளையே இவைகள் குறிக்கும்.

இவைகள் எப்போது செய்யப்படும் ?

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது இந்த சுஜூதுகள் செய்யப்படும் :

1 மறதி அல்லது தவறு காரணமாக தொழுகையில் ஒருவர் ருகூஉ செய்வது அல்லது சுஜூது செய்வது அல்லது நிலையில் நிற்பது அல்லது அமர்வது போன்றவற்றை அதிகப்படுத்தினால் அவர் "ஸஜதா ஸஹ்வை" செய்வார்.

2 தொழுகையிலுள்ள றுகுன்களுள் ஒன்றை செய்யத் தவறினால், அவர் அந்த றுகுனைச் செய்வதோடு, தொழுகையின் இறுதியில் அதற்காக ஸஜதா ஸஹ்வையும் செய்வார்.

3 முதலாவது அத்தஹிய்யாத் போன்ற தொழுகையின் வாஜிபுகளில் ஒன்றை ஒருவர் மறதியாக செய்யாது விட்டால், அதற்காக அவர் ஸஜதா ஸஹ்வைச் செய்வார்.

4 தான் தொழுத ரக்அத்துக்களின் எண்ணிக்கையில் ஒருவருக்கு சந்தேகம் ஏற்பட்டால், அவர் உறுதியாக நம்பும் மிகக் குறைந்தளவுள்ள ரக்அத்துக்களை தொழுதுவிட்டு பின்னர் மறதிக்காக தொழுகையின் இறுதியில் ஸஜதா ஸஹ்வு செய்வார்.

ஸஜதா ஸஹ்வை செய்வதற்கான முறை :

இரண்டு ஸஜதாக்களைச் செய்வதோடு, அவ்விரண்டிற்கும் இடையில் இருத்தல்.

இவைகள் பொதுவாக தொழுகையிலுள்ள ஸஜ்தா மற்றும் இடை இருப்பு ஆகியன போன்றே செய்யப்படும்.

ஸஜதா ஸஹ்வு செய்வதற்கான நேரம் :

இவைகளுக்கு பின்வரும் இரண்டு நேரங்கள் உண்டு.

- இறுதி அத்தஹிய்யாத் ஓதி, ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் இந்த சுஜூதுகளைச் செய்து விட்டு ஸலாமைக் கொடுக்கலாம்.
- தொழுகையை ஸலாம் கொடுத்து முடித்த பிறகு, இந்த இரண்டு சுஜூதுகளையும் செய்துவிட்டு, மீண்டும் ஒரு முறை ஸலாம் கொடுக்கலாம்.



## தொழுகையை செல்லுபடி அற்றதாக மாற்றும் செயல்கள்:

1. தொழுகையின் றுகுன்கள் அல்லது அதன் நிபந்தனைகளுள் ஏதேனும் ஒன்றை வேண்டுமென்றோ அல்லது மறதியாகவோ (அதனைச் செய்வதற்கு இயலுமான நிலையில் இருக்கும் போது) செய்யாது விட்டுவிடல்.
2. தொழுகையின் வாஜிபுகளில் ஏதேனும் ஒன்றை வேண்டுமென்றே விடுதல்.
3. வேண்டுமென்றே பேசுதல்.
4. சப்தமிட்டுச் சிரித்தல்.
5. தேவையற்ற விதத்தில் தொடராக பல்வேறு அசைவுகள் அல்லது நகர்வுகளை மேற்கொள்ளல்.



> தொழுகையின் போது, முகத்தை அல்லது கையைப் பிடித்தல் வெறுக்கப்பட்ட செயலாகும்.

## தொழுகையில் செய்யக்கூடாது என வெறுக்கப்பட்ட (மக்ரூஹான) செயற்பாடுகள் :

தொழுகையின் நன்மைகளைக் குறைத்து, இறையச்சத்தையும் பயத்தையும் போக்கிவிடுகின்ற செயல்களையே இவைகள் குறிக்கும்.

அவைகளாவன :

1. தொழுகையின் போது அங்கும் இங்கும் திரும்புதல்.

   தொழுகையில் இவ்வாறு செய்வது தொடர்பாக நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

   அது,ஓர் அடியானின் தொழுகையில் ஷைத்தான் ஏற்படுத்தும் திருட்டுத்தனமான செயலாகும். (அல் புகாரி : 718)

2. கை மற்றும் முகத்தைப் பிடித்தல், இடுப்பின் மீது கையை வைத்தல், விரல்களை ஒன்றோடு ஒன்றைக் கோர்த்தல், விரல்களில் நெட்டி முறித்தல்.



> தொழுகையின் போது, கவனத்தைக் கலைக்கின்ற விடயங்களிலிருந்து தன்னை தூர விலக்கி அல்லாஹ்வை அஞ்சிய நிலையில் தொழும் அளவு தொழுபவரின் அந்தஸ்தும் தொழுகைக்கான கூலியும் அதிகரிக்கின்றன.

**3** கவனம் கலைக்கப்பட்ட நிலையில் தொழுகையில் ஈடுபடல்.

உதாரணமாக, மலசலம் கழிக்கவேண்டிய சந்தர்ப்பம் அல்லது உணவு தயாராகி சாப்பிட வேண்டிய நிலை போன்றவற்றைக் கூறலாம்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

தொழுபவருக்கு முன்னால் உணவு தயாராக இருக்கும் நிலையில் அல்லது மலசலம் கழிக்க வேண்டிய தேவை இருக்கின்ற போது மேற்கொள்ளப்படும் தொழுகையானது பூரணமாக நிறைவேற்றப்பட முடியாது (முஸ்லிம் : 560)

## > முஸ்தஹப்பான தொழுகைகள் என்றால் என்ன ?

ஒரு நாளைக்கு ஐந்து நேரத்தொழுகைகள் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், முஸ்தஹப்பான இன்னும் பல தொழுகைகளை நிறைவேற்றுமாறு இஸ்லாம் முஸ்லிம்களைத் தூண்டுகின்றது.

இவ்வாறான தொழுகைகளை நிறைவேற்றுவதானது, அல்லாஹ் தனது அடியானை நேசிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுவதோடு, பர்ளான தொழுகைகளில் ஏற்பட்ட குறைபாடுகளை முழுமைப்படுத்துகின்றது.

உபரியான தொழுகைகள் அதிகமாக உள்ளன. அவைகளுள் மிக முக்கியமானவைகள் வருமாறு :

**1** ராதிபான சுன்னத்துக்கள் :

இந்த சுன்னத்தான தொழுகைகள், பர்ளான தொழுகைகளோடு இணைந்ததாகவும் ஒட்டியதாகவும் இருந்தமையினாலும் ஒரு முஸ்லிம் அவைகளை உதாசீனப்படுத்தி விடக்கூடாது என்பதனாலுமே அவைகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தினமும் பன்னிரண்டு ரக்அத்துக்கள் நபிலான தொழுகைகளை நிறைவேற்றி வரும் ஒரு முஸ்லிமுக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுக்கின்றான். (முஸ்லிம் : 728)

இந்த தொழுகைகள் வருமாறு :

| | |
|---|---|
| 1 | இரண்டு ரக்அத்துக்கள் - சுபஹுச் தொழுகைக்கு முன்னர். |
| 2 | நான்கு ரக்அத்துக்கள் - லுஹர்த் தொழுகைக்கு முன்னர்.<br>ஒவ்வொரு இரண்டு ரக்அத்துக்களுக்குப் பின்னரும் இங்கு ஸலாம் கொடுக்கப்படும்.<br>இரண்டு ரக்அத்துக்கள் - லுஹர்த் தொழுகைக்கு பின்னர். |
| 3 | இரண்டு ரக்அத்துக்கள் - மஃரிப் தொழுகைக்குப் பின்னர். |
| 4 | இரண்டு ரக்அத்துக்கள் - இஷாத் தொழுகையின் பின்னர். |

## 2 வித்ர் தொழுகை :

இந்தத் தொழுகையின் ரக்அத்துக்களின் எண்ணிக்கைகள் ஒற்றை எண்களாக இருப்பதனால், இது இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

இது உபரியான தொழுகைகளுள் மிகச் சிறந்ததாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல் குர்ஆனுடையவர்களே! நீங்கள் வித்ர் தொழுகையை நிறைவேற்றுங்கள். (அத் திர்மிதி : 453, இப்னு மாஜா : 1170)

இரவின் இறுதிப் பகுதியே, வித்ர் தொழுகையை நிறைவேற்றுவதற்கான மிகவும் சிறந்த நேரமாகும், இஷாவிற்கும் சுபஹுக்கும் இடைப்பட்ட எந்த நேரத்திலாயினும் இந்தத் தொழுகையை நிறைவேற்றலாம்.

வித்ர் தொழுகையின் ரக்அத்துக்களது எண்ணிக்கைகளுள் மிகவும் குறைந்த அளவு ஒரு ரக்அத்தாகும்.

இவற்றுள் மிகவும் சிறந்தது மூன்று ரக்அத்துக்கள் தொழுவதாகும். தான் விரும்பும் எத்தனை ரக்அத்துக்களையும் ஒருவரால் தொழ முடியும்.


நபி (ஸல்) அவர்கள் வித்ர் தொழுகையை பதினொரு ரக்அத்துக்களாக தொழுது வந்தார்கள்.

உபரியான தொழுகைகளைப் பொறுத்த வரையில், பொதுவாகவே அவைகள் இவ்விரண்டு ரக்அத்துக்களாகவே தொழப்படும்.

எனவே, இரண்டு ரக்அத்துக்களைத் தொழுது விட்டு பின்னர் ஸலாம் கூறப்படும். வித்ர் தொழுகையும் இவ்வாறே.

இருப்பினும், ஒருவர் வித்ர் தொழுகையை முடித்துக் கொள்ள விரும்பினால், அவர் இறுதியாக ஒரு ரக்அத்தை தொழுவார்.

இங்கு ருகூஃவிலிருந்து எழுந்து, சுஜூதுக்குச் செல்வதற்கு முன்னர் நபியவர்கள் கற்றுத்தந்த குனூத் எனும் துஆவை ஓதி விட்டு பின்னர் இரண்டு கைகளையும் உயர்த்தி தான் விரும்புவதை அல்லாஹ்விடம் பிரார்த்திக்கலாம்.



> நபிலான தொழுகைகளை நிறைவேற்றுவதானது,அல்லாஹ் தனதுஅடியானை நேசிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது.

## உபரியான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு தடைசெய்யப்பட்ட நேரங்கள் :

இஸ்லாம் தடைசெய்த சில நேரங்களை தவிர ஏனைய எல்லா வேளைகளிலும் பொதுவாகவே உபரியான இந்தத் தொழுகைகளை ஒரு முஸ்லிம் நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனெனில், தடைசெய்யப்பட்ட நேரங்கள் இறைநிராகரிப்பாளர்களினது வணக்கங்களுக்குரிய நேரங்களாகும்.

இவ்வேளைகளின் போது, கழாத்தொழுகை மற்றும் தஹிய்யதுல் மஸ்ஜித் போன்ற காரணத் தொழுகைகளை மாத்திரமே தொழ முடியும்.

இந்தத் தடை தொழுகையில் மாத்திரமே. ஏனைய திக்ருகள், பிரார்தனைகள் போன்றவற்றை எந்நேரத்தில் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

தடை செய்யப்பட்ட நேரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 1 | சுப்ஹுத் தொழுகை முடிந்ததிலிருந்து சூரியன் உதயமாகி, அது ஈட்டியின் அளவு உயரமாகும் வரையிலான நேரமாகும்.<br>இது இஸ்லாமிய ஷரீஆவில் வரையறுக்கப்பட்ட சிறியதொரு காலமாகும். சமசீதோஷ்ன கால நிலை நிலவும் நாடுகளில் சூரியன் உதயமானதிலிருந்து, மேற்கூறிய அளவு அது உயரும் வரையிலான இந்தக் காலப்பகுதி சுமார் 20 நிமிடங்கள் ஆகுமெனக் கணிக்கப்பட்டுள்ளது. |
| 2 | சூரியன் நடுஉச்சிக்கு வந்ததிலிருந்து, அது சற்று சாயும் வரையிலான நேரம்.<br>இது லுஹர் தொழுகையின் ஆரம்பவேளைக்கு முன்னரான மிகக் குறிகியதொரு கால அளவாகும். |
| 3 | அஸர் தொழுகை முடிந்ததிலிருந்து சூரியன் மறையும் வரையிலான நேரமாகும். |



> அஸர் தொழுகை முடிந்ததிலிருந்து சூரியன் மறையும் வரையிலான இந்தக் காலப்பகுதியில் உபரியான தொழுகைகளை தொழுவதானது ஹராமாகும்.

## › கூட்டுத் தொழுகை

ஐந்து நேரத்தொழுகைகளையும் கூட்டாக நிறைவேற்ற வேண்டுமென அல்லாஹ் ஆண்களைப் பணித்துள்ளான்.

அவ்வாறு செய்வதன் மகிமையை உணர்த்தும் வகையில் உயர்ந்த கூலிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படும் செய்திகள் ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கூட்டு (ஜமாஅ)த் தொழுகை தனித்துத் தொழுவதை விட இருபத்தேழு மடங்கு சிறந்ததாகும்.

(அல் புகாரி : 619, முஸ்லிம் : 650)

இந்தக் கூட்டுத்தொழுகையை நிறைவேற்றுவதற்குக் குறைந்தது இமாமும் அவரைப் பின்பற்றும் ஒருவரும் இருந்தால் போதுமானது.

கூட்டுத்தொழுகையில் அதிகமானோர் கலந்து கொள்ளும் அளவிற்கு அது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதாக அமைந்து விடுகின்றது.

### இமாமைப் பின்பற்றுதல் என்பதன் பொருள்:


இமாமுக்கு பின்னால் தொழுபவர், தனது தொழுகையை இமாமோடு தொடர்புபடுத்திக்கொள்வதனையே இது குறிக்கின்றது.

இவர் இமாமை ருகூஃவிலும் சுஜூதிலும் பின்பற்றுவதோடு, அவர் ஓதுவதையும் செவிமடுப்பார்.

இமாமை முந்தவோ அல்லது அவர் செய்வதற்கு முரணாக வேறொன்றைச் செய்யவோ மாட்டார். மாறாக, இமாம் செய்வதை நேரடியாகவே அவருக்கு பின்னால் நின்று அப்படியே செய்து விடுவார்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இமாமானவர், மஃமூம்களால் பின்பற்றப்படுவதற்காகவே உள்ளார். எனவே இமாம் தக்பீர் கூறினால், நீங்களும் 



அதனைக் கூறுங்கள்.அவர் அதனை முதலில் கூறும் வரை நீங்கள் அதனைக் கூறாதீர்கள். அவர் ருகூஉ செய்தால், நீங்களும் ருகூஉ செய்யுங்கள். அவர் முதலில் ருகூஉ செய்யும் வரை நீங்கள் அதனைச் செய்ய வேண்டாம். அவர் " ஸமியல்லாஹு லிமன் ஹமிதஹ்" என்று கூறினால், அதற்கு " றப்பனா வலகல் ஹம்த்" என்று நீங்கள் கூறுங்கள். அவர் ஸுஜூது செய்தால், நீங்களும் ஸுஜூது செய்யுங்கள். அவர் முதலில் ஸுஜூது செய்யும் வரை நீங்கள் அதனைச் செய்யாதீர்கள்... (அல் புகாரி: 701, முஸ்லிம்:414, அபூ தாவூத்:603)

### தொழுகையை நடாத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியவர் யார் ?

குர்ஆனை நன்கு மனனமிட்டவரே, இப்பணிக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியவர் ஆவார். பிறகு அவருக்கு அடுத்தடுத்த தரத்தில் உள்ளவர்கள் இதற்கு நியமிக்கப்படுவர்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "ஒரு கூட்டத்தில் அல்குர்ஆனை நன்கு ஓதத்தெரிந்தவரே இமாமத் செய்தல் வேண்டும் அவர்கள் ஓதலில் சமமாகயிருப்பின் அவர்களில் நபிவழியை நன்கு அறிந்தவராகும் .." (முஸ்லிம் : 673)

### இமாமும் ம.ஃமூம் எங்கே இருக்க வேண்டும் ?

இமாம் அவர்கள் ம.ஃமூம்களுக்கு முன்னால் நிற்க வேண்டும்.

ம.ஃமூம்கள் இமாமுக்குப் பின்னால் தோளோடு தோள் சேர்ந்து, அணி அணியாக நிற்க வேண்டும்.

இவர்கள், ஒவ்வொரு அணியையும் ஒன்றன் பின் ஒன்றாக நிரப்பி முழுமைப்படுத்த வேண்டும்.

ம.ஃமூம் ஒருவராக இருந்தால், அவர் இமாமுடைய வலது பக்கத்தில் நிற்க வேண்டும்.

### இமாமுடன் இணைந்தவாறு தொழுவதற்குத் தவறிய ரக்அத்துக்களை எவ்வாறு தொழ வேண்டும் ?

இமாமுடன் சேர்ந்து தொழும் நோக்கில், தொழுகையின் சில பகுதிகள் ஏலவே முடிவுற்ற நிலையில் ஒருவர் தாமதித்து வந்தால், அப்போது இமாம் இருக்கும் நிலையில், தாமதித்து வந்தவரான ம.ஃமூம் அவரோடு சேர்ந்து கொள்வார்.

இமாம் ஸலாம் கூறி தொழுகையை முடித்துக் கொண்ட பிறகு, இவரது தொழுகையில் தவறிய பகுதிகளை இவர் எழும்பித் தொழுவார்.

இமாமோடு இவர் தொழுத பகுதிகள் இவரது தொழுகையின் முதற்பகுதிகளாகவும், பின்னர் இவர் தொழும் பகுதிகள் இவரது தொழுகையின் கடைசிப் பகுதியாகவும் கருதப்படும்.



> இமாம் எவ்வாறானதொரு நிலையில் இருந்தாலும்,ம.ஃமூமானவர் அதே நிலையில் அவரோடு சேர்ந்து கொள்ளலாம்

## ஒரு ரக்அத் முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை எவ்வாறு தீர்மானிக்கலாம் ?

ஒரு தொழுகையானது, அதன் ரக்அத்துக்களின் எண்ணிக்கையை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இமாம் ருகூ.்.வில் இருக்கும் நிலையில், ஒருவர் தாமதித்து வந்து, இமாமோடு இணைந்துகொண்டால், அவர் அந்த ரக்அத்தை முழுமையாகத் தொழுதவராகவே கணிக்கப்படுவார்.

ஒருவருக்கு ருகூ.்.வை கூட்டாக தொழுது கொள்ள முடியாது தவறிப் போனால், அந்த ரக்அத்தின் எஞ்சிய பகுதியினை அவர் செய்த போதும், அது முழுமை பெற்றதொரு ரக்அத்தாகக் கணிக்கப்படமாட்டாது.

கூட்டுத் தொழுகையில் தவறிய ரக்அத்துக்களை தொழுவதற்கான முறைகள். உதாரணங்கள் வருமாறு:

இமாம் சுபஹுஃத் தொழுகையின் இரண்டாவது ரக்அத்தில் இருக்கும் போது, ஒருவர் ஜமாஅத் தொழுகையில் இணைந்து கொண்டால், இமாம் ஸலாம் கூறி தொழுகையை முடித்த பிறகு அவர் எழுந்து எஞ்சிய ஒரு ரக்அத்தை தொழ வேண்டும்.

அவர் இதனைச் செய்து முடிக்காத வரையில் ஸலாம் கொடுக்க மாட்டார். ஏனெனில், சுபஹுஃத் தொழுகை இரண்டு ரக்அத்துக்களைக் கொண்டது. அவற்றுள் ஒன்றை மாத்திரமே கூட்டாக இமாமோடு அவர் நிறைவேற்றியுள்ளார்.

இமாம் ம.்.ரிப் தொழுகையின் இறுதி அத்தஹிய்யாத்தில் இருக்கும் போது, ஒருவர் ஜமாஅத்துத் தொழுகையில் இணைந்து கொண்டால், இமாம் ஸலாம் கூறி தொழுகையை முடித்த பிறகு இவர் மூன்று ரக்அத்துகளையும் முழுமையாகத் தொழுது கொள்வார்.

ஏனெனில், இறுதி அத்தஹிய்யாத்தின் போது, ஒருவர் ஜமாஅத் தொழுகையில் இணைந்து கொள்வதனால், அந்த ரக்அத் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாக கணிக்க முடியாது. அவ்வாறு கணிக்கப்படுவதற்கு, இமாம் ருகூ.்.வில் இருக்கும் நிலையில் ஜமாஅத்தில் அவர் சேர்ந்திருக்க வேண்டும்.

இமாம் லுஹர் தொழுகையின் மூன்றாவது ரக்அத்தினது ருகூ.்.வில் இருக்கும் நிலையில் ஒருவர் ஜமாஅத் தொழுகையில் இணைந்து கொண்டால், இரண்டு ரக்அத்துக்களையும் இணைந்து நிறைவேற்றியவராகவே கணிக்கப்படுவார். (ம.்.மூமைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு ரக்அத்துக்களும் லுஹர் தொழுகையின் ஆரம்ப இரண்டு ரக்அத்துக்களாகவே கருதப்படும்) இமாம் ஸலாம் கூறி தொழுகையை முடித்து விட்டால், இவர் எழுந்து மூன்றாவது மற்றும் நான்காவது ரக்அத்துக்களைத் தொழுதுகொள்வார். லுஹர் தொழுகை நான்கு ரக்அத்துகளைக் கொண்டதாக இருப்பதுவே இதற்கான காரணமாகும்.

## > தொழுகைக்கான அழைப்பு (அல் அதான்)

> தொழுகைக்காக அழைப்பதானது, அல்லாஹ்விடம் மிக உயர்ந்த வணக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.



மக்களை தொழுகைக்காக அழைப்பதற்கும், அதற்கான ஆரம்ப நேரத்தை அவர்களுக்கு அறிவிப்பதற்கும் அல்லாஹ்வால் விதியாக்கப்பட்ட ஒரு கடமையே அதான் ஆகும்.

"இகாமத்" என்பது தொழுகையை துவங்குவதற்கு நேரமாகிவிட்டது என்பதை அறிவிப்பதற்கானதொரு முறையாகும்.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள் மஸ்ஜிதில் ஒன்றுகூடி, தொழுகைக்கான நேரத்தை தேடி அறிந்து கொண்டனர். அதற்கான எந்தவொரு அழைப்பாளரும் இருக்கவில்லை.

ஒரு நாள் முஸ்லிம்கள் ஒன்று கூடி இதுதொடர்பாக கலந்துரையாடினர். இதன் போது, சிலர் கிறிஸ்தவர்கள் செய்வது போன்று நாமும் மணி அடிப்போம் என்றனர். வேறுசிலர்

யஹூதிகளைப் போன்று நாமும் குழல் ஊதுவோம் என்றனர். பிறகு உமர் (றழி) அவர்கள் "முதலில் தொழுகைக்காக அழைக்கும் ஒருவரை அனுப்புங்கள்" என்று நபியவர்களிடம் கூறினார்கள். அதனை ஏற்ற நபி (ஸல்)அவர்கள் பிலால் (றழி) அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்: "பிலாலே! நீங்கள் எழுந்து மக்களை தொழுகைக்காக அழையுங்கள்" (அல் புகாரி : 579, முஸ்லிம் : 377)

### அதான் மற்றும் இகாமத் சொல்வதற்கான முறை:

- கூட்டாக தொழுகை நடாத்தப்படும் வேளைகளில் அதானும் இகாமத்தும் கூறுவது கட்டாயமாகும்.

  தனியாக இருக்கும் போது இவைகள் அவசியமில்லை.

  இவைகளை வேண்டுமென்றே அவர்கள் விட்டால், அவர்கள் பாவிகளாகக் கருதப்பட்டாலும் கூட அவர்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும்.

- மக்கள் கேட்டு தொழுகைக்கு வரும்வகையில் சப்தமாகவும் அழகிய தொனியிலும் அதான் கூறப்படல் வேண்டும்.

- அதான் மற்றும் இகாமத் கூறுவதற்கு நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. அவைகளுள் மிகப்பிரபல்யமான முறை பின்வருமாறு :

அதான் :

1 அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்.

2 அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

3 அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்.

4 ஹய்ய அலஸ் ஸலாஹ்,ஹய்ய அலஸ் ஸலாஹ்

5 ஹய்ய அலல் பலாஹ்,ஹய்ய அலல் பலாஹ்

6 அல்லாஹு அக்பர், அல்லாஹுஹு அக்பர்

7 லா இலாஹ இல்லல்லாஹ்

இகாமத்

1 அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பா

2 அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்

3 அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்

4 ஹய்ய அலஸ் ஸலாஹ்

5 ஹய்ய அலல் பலாஹ்

6 கத் காமதிஸ் ஸலாஹ், கத் காமதிஸ் ஸலாஹ்

7 அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்

8 லா இலாஹ இல்லல்லாஹ்



> பள்ளிவாயிலை நோக்கி ஒரு முஸ்லிம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்கும் அல்லாஹ் நன்மைகளை வழங்குகின்றான்

## அதானுக்குப் பதில் கூறுதல்

அதானை செவிமடுப்பவர் முஅத்தின் கூறுவதை அப்படியே திருப்பிக்கூறுவது முஸ்தஹப் ஆகும். முஅத்தின் 'ஹய்ய அலஸ்ஸலாஹ் அல்லது ஹய்ய அலல் பலாஹ்' எனும் வாசகங்களை கூறும் சந்தர்ப்பத்தில் 'லா ஹௌல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' என்று கூறுதல் வேண்டும்.

பின்னர் அதான் முடிந்ததும் பின்வரும் துஆவை ஓதுதல் வேண்டும் 'அல்லாஹும்ம றப்ப ஹாதிஹித் த.்.வதித் தாம்மஹ் வஸ்ஸலாதில் காஇமஹ் ஆதி முஹம்மதனில் வஸீலத வல் பழீலஹ் வப்அஸ்ஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தஹ்'

## > தொழுகையில் உள்ளச்சம்



> ஓர் அடியான் தொழுகையின் போது சுஜூதில் இருக்கும் சந்தர்ப்பமே,அவன் தனது இறைவனுக்கு மிக நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பமாகும்.

"தொழுகையில் உள்ளச்சம்" என்பது அதுவே தொழுகையின் சாரம்சமும் யதார்த்தமுமாகும்.

அல்லாஹ்விற்கு முன்னிலையில் இருக்கின்றேன் என்ற உள ஒருமைப்பாட்டோடு, அடக்கத்துடனும் பணிவுடனும், தான் ஓதுகின்ற குர்ஆனிய வசனங்கள், திக்ருகள், துஆக்கள் என்பவற்றின் கருத்துக்களை ஆழமாகப் புரிந்துகொண்ட நிலையில், ஒருவர் தொழுகையில் இருப்பதுவே "தொழுகையில் உள்ளச்சம்" என்பதன் பொருளாகும்.

இந்நிலையானது, வணக்கங்களுள் மிகச் சிறந்ததும் உயர்ந்ததுமாகும்.

இது இறைவிசுவாசிகளினது ஒரு பண்பாக இருக்கின்றது என்பதை அல்லாஹ் தனது இறைவேதத்தில் குறிப்பிட்டிருக்கின்றான்.

இதை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

விசுவாசிகள் திட்டமாக வெற்றியடைந்து விட்டார்கள்.

அவர்கள் எத்தகையோரென்றால், தம் தொழுகையில் மிக்க உள்ளச்சம் உடையவர்கள். (அல் மு.்.மினூன் : 1 - 2)

உள்ளச்சத்தோடு ஒருவர் தொழுகையில் ஈடுபட்டால், அவர் வணக்கத்தினதும் ஈமானினதும் சுவையை உணர்ந்து கொள்வார்.

இதன் காரணமாகவே, நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"தொழுகையிலேயே எனது கண்குளிர்ச்சி வைக்கப்பட்டுள்ளது" (அந் நஸாயி : 3940)

"கண்குளிர்ச்சி" என்பது உச்ச மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் இன்பம் என்பன போன்ற கருத்துக்களைக் கொடுக்கும்.

### தொழுகையில் உள்ளச்சத்தை உருவாக்கிக்கொள்வதற்கு துணை நிற்கும் காரணிகள் / வழிமுறைகள்

இதற்கு பின்வருவன போன்ற பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன :

அவைகளுள் சில பின்வருமாறு:-

#### 1 தொழுகைக்குத் தேவையான முன் ஆயத்தங்களை மேற்கொள்ளல் :

பின்வரும் விடயங்களைச் செய்வதன் மூலம் இதனைச் செய்ய முடியும்.

ஆண்கள் பள்ளிவாயிலுக்கு தொழுகைக்காக நேரகாலத்தோடு செல்லல், தொழுகைக்கு முன்னுள்ள சுன்னத்தான வணக்கங்களை மேற்கொள்ளல், பொருத்தமானதும் அழகானதுமான ஆடையை அணிதல், அடக்கத்துடனும் அமைதியுடனும் பள்ளிவாயிலை நோக்கி நடந்து செல்லல்.

## 2 கவனத்தைக் கலைக்கும் அம்சங்களை விட்டு தூர விலகிக் கொள்ளல் :

கவனத்தைக் கலைக்கும் பின்வருவன போன்ற விடயங்கள் தனக்கு முன்னால் இருக்கின்ற போது ஒருவர் தொழுகையில் ஈடுபடக்கூடாது.

உதாரணமாக, காட்சிகள், சப்தங்கள் மற்றும் இரைச்சல்கள் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

அவ்வாறே மலசலம் கழிக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள், உணவு மற்றும் குடிபானங்கள் போன்றன தனக்கு முன்னால் தயார் நிலையில் இருக்கும் போது பசியோடு அல்லது தாகத்தோடு உள்ளவர்கள் தொழுகையில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

கவனத்தைக் கலைக்கும் இத்தகைய அம்சங்கள் தொழுபவரின் சிந்தனையைக் குழப்பி, அல்லாஹ்வோடு சம்பாஷணை செய்கின்ற உயர்ந்த விடயமாகிய தொழுகையிலிருந்து கவனத்தைக் கலைத்துவிடுகின்றன.

## 3 தொழுகையில் அமைதியைப் பேணுதல் :

நபி (ஸல்) அவர்கள் ருகூ:். மற்றும் சுஜூது செய்கின்ற போது, அமைதியைப் பேணி இருக்கின்றார்கள். அதாவது,ஒவ்வொரு எலும்புகளும் தனது அசைவுகளுக்குப் பின்னர் மீண்டும் அதனது இடங்களுக்குச் சென்று நிலைகொள்ளும் வரையிலாகும்.

தொழுகையின் ஒழுங்குகளை முறையாகப் பின்பற்றாமல் தொழுபவர்களை அவதானித்து, தொழுகையின் ஒவ்வொரு செயல்களிலும் அமைதியைக் கைக்கொள்ளுமாறு அவர்களைப் பணித்திருக்கின்றார்கள்.

அவசரமாகத் தொழுவதைத் தடைசெய்த நபியவர்கள், அதனை காகம் கொத்துவது போன்ற செயலாகும் என்றும் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தொழுகையில் திருடுபவனே மனிதர்களுள் மிகவும் மோசமான திருடனாவான்.அப்போது நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! தொழுகையில் ஒருவன் எவ்வாறு திருட முடியும்? எனக் கேட்டனர். தொழுகையில் அதன் ருகூஉவையும் ஸுஜூதையும் நேர்த்தியாகவும் முழுமையாகவும் நிறைவேற்ற மாட்டான்.அவனே தொழுகையில் திருடுபவன் என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (அஹ்மத் : 22642)

தொழுகையை அமைதியாக நிறைவேற்றாதவர் உள்ளச்சத்தைப் பெறமுடியாது. தொழுகையில் அவசரப்படுவது அல்லது காகம் கொத்துவது போலத் தொழுவது உள்ளச்சத்தையும், தொழுகைக்கான நன்மைகளையும் போக்கிவிடுகின்றது.

## 4 அல்லாஹ்வின் மகோன்னத நிலையை மனதில் கொள்ளுதல் :

அல்லாஹ்வின் பெருந்தன்மையையும் அவனது மகத்துவத்தையும் உள்ளத்தில் நினைத்துக்கொண்டிருப்பதோடு, எமது பலவீனத்தையும் இயலாமையையும் மனதில் கொள்ள வேண்டும்.

மேலும். நாம் எமது இரட்சகனுக்கு முன்னிலையில் அவனுடன் சம்பாஷணை செய்து, அவனிடம் பணிவுடனும் அடக்கத்துடனும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

மறுமையில் அல்லாஹ் விசுவாசிகளுக்கு ஏற்பாடு செய்து வைத்திருக்கும் நன்மைகள் பற்றியும் அவ்வாறே இறைநிராகரிப்பாளர்களுக்கு அவன் சித்தப்படுத்தி வைத்துள்ள வேதனைகள் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

மேலும், மறுமையில் அல்லாஹ்வுக்கு முன்னால் நிறுத்தப்படும் போது எமது நிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் சற்று சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான மனோநிலைகளுடன் ஒருவர் தொழுகையை நிறைவேற்றினால், "அல்லாஹ்வை நாம் சந்திக்க இருக்கின்றோம் என்ற எண்ணத்தோடு வாழ்வதாக அல்லாஹ் தனது குர்ஆனில்

சிலாகித்துப் பேசும் மக்களுள் ஒருவராக" இவரும் கணிக்கப்படுவார்.

அல்லாஹ் கூறுகின்றான் :

நிச்சயமாக அதுவே உள்ளச்சம் கொண்டவர்களுக்கன்றி, (ஏனையோருக்கு) மிகப்பாரமானதா(க) இருக்)கும். (உள்ளச்சம் கொண்ட) அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனை நிச்சயமாக தங்கள் சந்திக்கக் கூடியவர்களென்றும், தங்கள் அவன் பாலே திரும்பிச் செல்லக் கூடியவர்களென்றும் உறுதியாக நம்புகின்றனர். (அல் பகறா : 45 - 46)

தொழுகையில், தான் ஓதுவதை அல்லாஹ் கேட்டுக் கொண்டிருக்கின்றான். தனது பிரார்த்தனைகளை அவன் செவிமடுத்து தனக்குத் தேவையானவற்றை தருகின்றான் என்ற மனோ நிலையோடு தொழும் ஒருவர், அவரது இந்த மனோநிலைக்கு ஏற்ப அவர் உள்ளச்சத்தைப் பெற்றுக்கொள்வார்.

## 5 தொழுகையில் ஓதப்படுகின்ற குர்ஆனிய வசனங்கள் மற்றும் ஏனைய திக்ருகள் என்பவற்றின் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தித்தல் :

குர்ஆனிய கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்பதற்காகவே அது இறக்கி அருளப்பட்டது.

இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : (நபியே ! குர்ஆனாகிய இது, அதன் நன்மைகள் பன்மடங்காக்கப்பட்டதாக இருக்க) பாக்கியமிக்க வேதமாகும்; இதனுடைய வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், (இதனைக் கொண்டு) அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் நாம் இதை உம்மீது இறக்கிவைத்தோம். (ஸாத் : 29)

ஓதப்படுகின்ற குர்ஆனிய வசனங்கள், திக்ருகள் என்பனவற்றின் கருத்துக்களை விளங்காமல், அவைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க முடியாது.

எனவே, கருத்துக்களை விளங்கிக்கொள்கின்ற போதுதான் அவைகளை சிந்திக்க முடியும்.

இவ்வாறு, ஆழ்ந்து சிந்திப்பதானது, உள்ளச்சத்தையும் பணிவையும் உள்ளத்தில் அக்கருத்துக்களின் தாக்கத்தையும் தொழுபவரிடம் ஏற்படுத்துகின்றது.

இதன் விளைவாக, சிலவேளைகளில் அவரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து விடுகின்றது.

ஓதப்படுகின்ற குர்ஆனிய வசனங்கள் எவ்விதத் தாக்கத்தினையும் ஏற்படுத்தாத குருடனையும் செவிடனையும் போல இருக்கமாட்டார்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டால் செவிடர்களாவும் குருடர்களாகவும் அதன் மீது விழமாட்டார்கள் (அதனை நன்குணர்ந்து அதன்படி நடப்பார்கள்) (அல் புர்கான் : 73)

## > ஜும்ஆத் தொழுகை

வெள்ளிக்கிழமைகளில் ளுஹர் தொழுகைக்கான நேரத்தில் கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென்று அல்லாஹ் கடமையாக்கிய ஒரு தொழுகையே "ஜும்ஆத் தொழுகை" எனப்படும்.

இஸ்லாத்தின் சடங்குகளுள் இது மிகவும் உன்னதமானதும் அதன் கட்டாயக் கடமைகளுள் மிக உறுதிமிக்கதுமாகும்.

வாரத்தில் ஒரு முறை இந்நாளில் முஸ்லிம்கள் ஒன்று கூடி, இமாம் அவர்களால் நிகழ்த்தப்படுகின்ற பிரசங்கத்தை செவிமடுக்கின்றனர். அதன் பிறகு அவர்கள் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

### வெள்ளிக்கிழமை தினத்தின் மகிமை:

வெள்ளிக்கிழமையானது, வார நாட்களுள் மிகவும் உயர்ந்ததும் உன்னதமானதுமான ஒரு தினமாகும்.

அல்லாஹ் ஏனைய நாட்களை விட இத்தினத்தை தெரிவுசெய்து, பின்வருவன போன்ற பல்வேறு தனித்துவங்களை இதற்கு வழங்கிச் சிறப்பித்துள்ளான்.

- நபி (ஸல்) அவர்களது சமூகத்திற்கு மாத்திரம் சிறப்புக்குரிய நாளாக, இந்நாளை அல்லாஹ் தெரிவு செய்திருக்கின்றான்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எமக்கு முன்னர் வாழ்ந்தோருக்கு அல்லாஹ் ஜும்ஆ தினத்தை வழங்கவில்லை. யஹூதிகளுக்கு சனிக்கிழமையையும் கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் (சிறப்புக்குரிய) தினங்களாக இருந்தன. பிறகு அல்லாஹ் எங்களைக் கொண்டு வந்து வெள்ளிக்கிழமையின் பால் எம்மை வழிகாட்டினான். (முஸ்லிம் : 856)

- ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்ததும், மறுமை நாள் ஏற்பட இருப்பதும் இந்நாளிலேயே ஆகும்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

சூரியன் உதயமாகும் நாட்களுள் மிகச் சிறந்த தினம் வெள்ளிக் கிழமையாகும். ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டு, சுவனம் நுழைவிக்கப்பட்டு மேலும்,



> ஜும்ஆத் தொழுகைக்கு சமுகமளித்தோர் ஜும்ஆப்பிரசங்கத்தை கவனமாக செவியேற்பது கட்டாயமாகும்.

அதிலிருந்து வெளியேற்றப்பட்டதும் அந்நாளிலேயே ஆகும். மேலும், மறுமை நாளும் வெள்ளிக் கிழமைத் தினத்தில் தான் சம்பவிக்கும். (முஸ்லிம் : 854)

### ஜும்ஆத் தொழுகையை (கட்டாயம்) நிறைவேற்ற வேண்டியவர்கள் யாவர் ?

பின்வருவோர் மீதே ஜும்ஆத் தொழுகை கடமையாகும் :

1. ஆண்களாக இருத்தல் வேண்டும். பெண்கள் மீது இது கடமையல்ல.

2. மார்க்கக் கடமைகள் விதியாக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

   இது பருவ வயதை அடையாத சிறுவர்கள் மீதோ அல்லது பைத்தியக்காரர்கள் மீதோ கடமையாகாது.

3. ஊரின் நிரந்தரக் குடிகளாக இருத்தல் வேண்டும்.

   இது பயணிகள் மீதோ அல்லது நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு வெளியில் நாடோடிகளாக வாழும் மக்களின் மீதோ கடமையாகாது.

4. தேகாரோக்கியம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

   ஜும்ஆத் தொழுகைக்கு சமூகமளிக்க முடியாத நிலையிலுள்ள நோயாளிகள் மீது இது கடமையாகாது.

### ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்படும் முறையும் அதற்கான சட்டவிதிகளும் :

1. ஒரு முஸ்லிம், ஜும்ஆத் தொழுகைக்கு முன்னர் குளித்துக் கொள்வதும், பிரசங்கம் ஆரம்பமாகுவதற்கு முன்னர் பள்ளிவாயிலை நோக்கி நேரகாலத்தோடு செல்வதும், அழகான ஆடைகளை அணிந்து கொள்வதும் முஸ்தஹப்பாகும்.

2. ஜும்ஆப் பள்ளியில் முஸ்லிம்கள் ஒன்றுகூடுவர். பின்னர் இமாம் பிரசங்க மேடை மீது ஏறி மக்களை முன்னோக்கி தனது பிரசங்கத்தினை நிகழ்த்துவார்.

   பிரசங்கமானது. இரு பகுதிகளைக் கொண்டதாகும். இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் சற்று அமர்ந்து கொள்வார்.
   அல்லாஹ்வை மக்கள் அஞ்சிக்கொள்ள வேண்டுமென்றும் இப்பிரசங்கத்தின் போது கூறுவார்.

   இதில் அவர்களுக்கு தேவையான உபதேசங்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதோடு, குர்ஆனிய வசனங்களையும் ஓதிக் காட்டுவார்.

3. முஸ்லிம்கள் பிரசங்கத்தை அவதானமாக செவிமடுத்தல் வேண்டும்.
   இதன் போது, பேசுவதோ அல்லது பிரசங்கத்தின் மூலம் பயனடைய முடியாத வகையில் கவனத்தைத் திருப்பி விடுகின்ற அம்சங்களில் ஈடுபடுவதோ "ஹராம்" ஆகும்.

   விரிப்பு அல்லது பொடிக்கற்கள், மணல் என்பவற்றைக் கையால் கிளறிக்கொண்டிருப்பது கூட தடை செய்யப்பட்டுள்ளது.



4 பிறகு இமாம் பிரசங்க மேடையிலிருந்து கீழே இறங்கி, இகாமத் கூறப்பட்டவுடன் இரண்டு ரக்அத்துக்களைக்கொண்ட ஜுமுஆத் தொழுகையை நடாத்துவார்.

இவ்விரு ரக்அத்துக்களிலும் ஓதப்பட வேண்டிய குர்ஆனிய வசனங்களை சப்தமிட்டே ஓதுவார்.

5 அதிகமான மக்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பத்திலேயே ஜுமுஆத் தொழுகை கடமையாகும்.

இத்தொழுகை ஒருவருக்கு தவறிவிடும் பட்சத்தில் அல்லது நியாயமானதொரு காரணத்திற்காக தாமதித்து விடும் பட்சத்தில் , அவர் இதற்குப் பதிலாக லுஹர் தொழுகையை நிறைவேற்ற முடியும். அந்நேரத்தில் அவர் ஜுமுஆத் தொழுவது செல்லுபடியாகாது.

6 ஒருவர் ஜுமுஆத் தொழுகைக்கு தாமதித்து வந்து, குறைந்தது ஒரு ரக்அத்தைக் கூட முழுமையாக அவரால் ஜமாஅத்துடன் தொழ முடியவில்லையெனில், இமாம் ஸலாம் கூறித் தொழுகையை முடித்த பிறகு, அவர் லுஹர் தொழுகையையே நிறைவேற்ற வேண்டும்.

7 ஜுமுஆத் தொழுகை கடமையாக்கப்படாதவர்களாகிய பெண்கள் மற்றும் பயணிகள் போன்றோர், (ஜுமுஆத் தொழுகை கடமையாக்கப்பட்டவர்களாகிய) முஸ்லிம்களோடு இணைந்து கூட்டாக ஜுமுஆத் தொழுகையை நிறைவேற்றினால், அவர்களின் அந்த ஜுமுஆத் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படும். அவர்கள் லுஹர்த் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

## ஜுமுஆத் தொழுகைக்கு சமூகமளிப்பதிலிருந்து விதிவிலக்குச் செய்யப்பட்டவர்கள் யார் ?

ஜுமுஆத் தொழுகை கடமையானவர்கள் அதற்கு சமூகமளிப்பது அவசியமென்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

இதனைப் புறக்கணித்துவிட்டு உலக அலுவல்களில் ஈடுபடுவதை அது கண்டிக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் : விசுவாசங் கொண்டோரே ! (வெள்ளிக்கிழமையாகிய) ஜுமுஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு



> (ஆகவே, நபியே! அவர்களிடம்,) நீர் கூறுவீராக : 'அல்லாஹ்விடத்தில் உள்ளது வேடிக்கையையும், வர்த்தகத்தையும் விட மிகச் சிறந்ததாகும். (அல் ஜுமுஆ : 11)

சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால், அப்போது அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பால் நீங்கள் சென்றுவிடுங்கள் வர்த்தகத்தையும் விட்டுவிடுங்கள்; நீங்கள் அறிவுடையோர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். (இதனை அறிந்து கொள்வீர்களாக !). (அல் ஜுமுஆ : 9)

சமயரீதியில் எந்தவித நியாயமுமின்றி ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றாது விட்டவரது உள்ளத்தின் மீது முத்திரையிடப்படுமென அவரை இஸ்லாம் எச்சரிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் மூன்று ஜும்ஆத் தொழுகைகளை சமய ரீதியிலான காரணங்கள் ஏதுமின்றி அலட்சியமாக விட்டு விடுவாறோ அவரது இதயத்தின் மீது அல்லாஹ் முத்திரை குத்திவிடுவான். (அபூ தாவூத் : 1052, அஹ்மத் : 15498)

இவரது உள்ளத்தில் அல்லாஹ் முத்திரையிடுவான் என்பதன் பொருள் யாதெனில், பாவிகள் மற்றும் நயவஞ்சகர்களின் உள்ளங்களைப் போன்று, இவரது உள்ளத்தில் மடமை, இரக்கமின்மை போன்ற பண்புகளை இட்டு மூடி முத்திரை குத்திவிடுவான் என்பதாகும்.

ஜும்ஆவுக்கு சமூகமளிக்காமல் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள காரணிகள் :

ஒருவருக்கு வழமைக்கு மாறான கடும் கஷ்ட நிலை உருவாகுதல் அல்லது வாழ்வு மற்றும் உடல் ஆரோக்கியம் என்பவற்றை வெகுவாகப் பாதிக்கும் வகையிலானதோர் இடர் ஏற்படுமென அஞ்சுதல்.

உதாரணமாக, ஒருவர் நோயாளியாக இருத்தல் அல்லது திடீர் விபத்துக்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பங்கள்.

### வழமையானதொரு வேலையை அல்லது தொழிலை ஜும்ஆத் தொழுகையை விடுவதற்குரிய நியாயமான காரணமாகக் கருத முடியுமா ?

பொதுவாகவே, வழமையானதும் நிலையானதுமான தொழில்கள் அல்லது வேலைகள் ஜும்ஆத் தொழுகையை விடுவதற்குரிய நியாயமான காரணங்களாகக் கருத முடியாது.

இந்நேரத்தில், எமது வேலைகளை விட்டு விட்டு, தொழுகைக்காகச் சென்று விடவேண்டுமென அல்லாஹ் எம்மைப் பணித்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் : விசுவாசங் கொண்டோரே ! (வெள்ளிக்கிழமையாகிய) ஜும்ஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால், அப்போது அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பால் நீங்கள் சென்றுவிடுங்கள் வர்த்தகத்தையும் விட்டுவிடுங்கள். (அல் ஜுமுஆ : 9)

எனவே, ஊதியம் குறைவாயினும், மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முடியுமான தொழில்களையே ஒரு முஸ்லிம் தெரிவுசெய்து கொள்வது மிக முக்கியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் : எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கின்றாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான். மேலும் அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான், எவர் அல்லாஹ்வின் மீது (தன் காரியத்தை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே (முற்றிலும்)போதுமானவன். (அத் தலாக் : 2 - 3)

## ஜும்ஆத் தொழுகையை விடுவதற்கான காரணியாக தொழில் எப்போது அமையும் ?

பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே, ஜும்ஆத் தொழுகையை விடுவதற்குரிய காரணியாக தொழில் அமைகின்றது.

1 தொழிலானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

அது பாரிய நன்மைகளை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.

ஒருவர், அதிலே இருந்துகொண்டு, ஜும்ஆத் தொழுகைக்குச் செல்லாதிருப்பதன் மூலமே அந்நலன்களைப் பெறுவது சாத்தியமாய் இருத்தல் வேண்டும்.

ஒருவர், அந்தத் தொழிலை விடுவதன் மூலம் பாரிய பாதிப்புகள் உருவாகும் நிலை காணப்படல்.

இதற்கு வேறொருவரை பதிலாக நியமிக்க முடியாத நிலை காணப்படல்.

உதாரணங்கள்

- அவசர சிகிச்சைப் பிரிவில் வேலைசெய்யும் வைத்தியர்கள்.
- மக்கள் மற்றும் அவர்களது உடமைகள் போன்றவற்றை குற்றச்செயல்கள் மற்றும் திருட்டு என்பவற்றிலிருந்து பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் பாதுகாப்பு அல்லது பொலீஸ் அதிகாரிகள்.
- பாரிய தொழிற்சாலைகளில் இடம்பெறும் வேலைகளை கண்காணிக்கும் மேற்பார்வையாளர்கள்.

  இவர்களின் கண்காணிப்பு நடவடிக்கையானது, தொடர்ந்து இடம்பெறவேண்டிய அவசிய நிலையில் காணப்படல்.

2 தொழிலானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

அது மாத்திரமே வருமானத்திற்கான ஏக வழியாக இருத்தல்.

தனக்கும் தனது குடும்பத்துக்குமான உணவு, குடிபானம் மற்றும் ஏனைய முக்கிய தேவைகளை நிவர்த்திப்பதற்கான அடிப்படைச் செலவுகளை பூர்த்தி செய்வதற்கு இதைத் தவிர வேறுதொழில் ஏதுமில்லை என்ற நிலை காணப்படல்.

தொழில் வழங்குனர் ஜும்ஆத் தொழுகைக்குச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்காது இருத்தல்.

இவ்வாறான சூழ்நிலையில் அவர் அத்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டு, ஜும்ஆத் தொழுகைக்குச் செல்லாது இருக்கலாம்.

ஆனால் இச்சலுகையானது, அவர் மற்றுமொரு தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வரை அல்லது தனக்கும் தனது குடும்பத்திற்குப் போதுமான உணவு, குடிபானம் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கான வேறு வழியை பெறும் வரையிலான இக்கட்டானதொரு தேவையின் நிமித்தம் வழங்கப்பட்டதாகும்.

## > நோயாளியின் தொழுகை

புத்தியும் உணர்வும் உள்ள வரை அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரு முஸ்லிம் கட்டாயம் தொழுகையை நிறைவேற்றியாக வேண்டும்.

எனினும், இஸ்லாம் மனிதர்களது வித்தியாசமான சூழ்நிலைகளையும் விஷேட தேவைகளையும் கவனத்திற் கொண்டுள்ளது.

அவ்வாறான விஷேட தேவைகளையுடையவர்களுள் நோயாளியும் ஒருவர் ஆவார்.

- ஒருவர் தொழுகையை நிறைவேற்ற இயலாத அளவு நோயாளியாக இருப்பின், அல்லது நின்று தொழுவதனால் நோய் குணமடைவதில் தாமதம் ஏற்படுமாயின், அவர் உட்கார்ந்த நிலையில் தொழலாம். அதற்கும் இயலாத நிலை ஏற்படின், சாய்ந்து கொண்டு தொழ முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நின்ற நிலையில் தொழுதுகொள்ளுங்கள். அதற்கு முடியா விட்டால், உட்கார்ந்த நிலையில் தொழுதுகொள்ளுங்கள். அதற்கும் முடியா விட்டால், விலாப்புறம் சாய்ந்த நிலையில் தொழுதுகொள்ளுங்கள. (அல் புகாரி : 1066)

- ருகூ.ஃ.வை அல்லது சுஜூதை செய்ய முடியாவிடின், இயலுமான அளவு குனிந்து,அதனை சமிஞ்சை மூலம் செய்யலாம்.
- நிலத்தில் உட்கார முடியாவிட்டால், கதிரை அல்லது அது போன்ற வேறொன்றின் மீது அமர்ந்து தொழலாம்.
- நோய் காரணமாக, ஒவ்வொரு தொழுகைக்கும் சுத்தம் செய்வதில் சிரமம் ஏற்படின், லுஹரையும் அஸரையும் மற்றும் ம.ஃ.ரிபையும் இஷாவையும் சேர்த்து தொழுது கொள்ள முடியும்.
- நோயின் காரணமாக, தண்ணீரைப் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படுமாயின் தொழுகையை நிறைவேற்றுவதற்காக "தயம்மும்" செய்யலாம்.

## > பயணத் தொழுகை

- ஒரு பயணி, தனது பயணத்தில் இருக்கும் போது ஓரிடத்தில் நான்கு நாட்களுக்குக் குறைவாக தங்குகின்றவேளையில் நான்கு ரக்அத்துக்கள் கொண்ட தொழுகைகளை இவ்விரண்டு ரக்அத்துக்களாகச் சுருக்கித் தொழுவது சுன்னத்தாகும்.

  எனவே, லுஹர், அஸர், இஷா போன்ற தொழுகைகளை நான்கு ரக்அத்துக்களாகத் தொழுவதற்குப் பதிலாக அவைகளை இவ்விரண்டு ரக்அத்துக்களாக தொழுது கொள்ளலாம்.
  ஆனால், அவர் பயணியல்லாத ஊரிலுள்ள ஓர் இமாமுக்குப் பின்னால் நின்று தொழுதால், இந்த இமாமைப் பின்பற்றி இவர் போலவே நான்கு ரக்அத்துக்களையே அவரும் தொழுது கொள்ள வேண்டும்.

- இதன் போது, பர்ளான தொழுகைகளுக்குப் பின்னர் நாளாந்தம் வழமையாகத் தொழுது வரும் சுன்னத்துக்களை தொழாது விட்டுவிடலாம்.

  ஆனால் இதிலிருந்து சுபஹு"க்கான சுன்னத்து தொழுகைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- லுஹரையும் அஸரையும் சேர்த்து இரண்டு வேளைகளுள் ஒரு வேளையில் தொழுது கொள்ளலாம். மேலும், ம.ஃ. ரிபையும் இஷாவையும் இவ்வாறே செய்யலாம்.

  பயணத்தின் போது ஏற்படும் கஷ்டங்களையும் சிரமங்களையும் குறைக்கும் நோக்கிலேயே இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.



# எமது நோன்பு



# 4

வருடத்தில் ஒரு மாதம் முஸ்லிம்கள் நோன்பு நோற்பதை அல்லாஹ் கட்டாயக் கடமையாக்கியுள்ளான்.

இம்மாதமே "புனித றமழான்" என அழைக்கப்படுகின்றது. இது இஸ்லாத்தின் தூண்களுள் நான்காம் கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசங் கொண்டோரே ! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல், நீங்கள் (உளச்சுத்தி பெற்று) பயபக்தியுடையவர்களாக ஆகுவதற்காக உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது. (அல் பகறா : 183)

## உள்ளடக்கம்

- நோன்பு என்பதன் பொருள்
- றமழான் மாதத்தினது மகிமைகள்
- நோன்பு விதியாக்கப்பட்டமைக்கான பின்னணி
- நோன்பின் சிறப்புகள்
- நோன்பை முறித்து விடும் அம்சங்கள்
- நோன்பை நோற்காதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்
  - நோயாளி
  - இயலாதவர்
  - பிரயாணி
  - ஹைழ் மற்றும் நிபாஸ் ஏற்பட்டிருக்கும் பெண்கள்
  - கற்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்.
- சுன்னத்தான நோன்புகள்
- நோன்புப் பெருநாள்
  - பெருநாளில் செய்யவேண்டியவைகள் என்ன ?

# *ரமழானில் நோன்பு நோற்றல்*

## நோன்பு என்பதன் பொருள :

சூரியன் உதயமானது(சுபஹுத் தொழுகைக்கு அதான் கூறியது) முதல் சூரியன் மறையும்( ம.்.ரிப் தொழுகையினது அதானுக்கான நேரம்) வரை சாப்பிடுவது, குடிப்பது, உடலுறவு கொள்வது மற்றும் நோன்பை முறிக்கும் ஏனைய கருமங்களில் ஈடுபடுவது போன்றவற்றிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்வதன் மூலம் அல்லாஹ்வுக்குச் செய்யும் ஒரு வணக்கமே நோன்பாகும்.

## › *றமழான் மாதத்தின் மகிமைகள்*

இஸ்லாமிய சந்திர நாட்காட்டி வருடத்தின் ஒன்பதாவது மாதமே றமழானாகும். இது வருடத்தின் மிகச் சிறந்த மாதமாகும். வேறு மாதங்களுக்கு இல்லாத பல்வேறு சிறப்புக்களை அல்லாஹ் இதற்கு வழங்கியுள்ளான்.

அந்தச் சிறப்புகளுள் சில :

1 வேதங்களுள் மிகச் சிறந்ததும்,மிகவும் உயர்ந்ததுமான அல் குர்ஆனை இம்மாதத்தில் தான் அல்லாஹ் இறக்கியருளினான்.

அல்லாஹ் கூறுகின்றான் : ரமழான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழியிலிருந்து(ள்ள) தெளிவாகவும், (சத்திய அசத்தியத்தைப்) பிரித்துக் காட்டக்கூடியதாகவும் உள்ள இந்தக் குர்ஆன் இறக்கியருளப்பட்டது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தைப் பெறுகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்றுவிடவும். (அல் பகறா : 185)

2 "றமழான் வந்துவிட்டால், சுவன வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரக வாயில்கள் மூடப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அல் புகாரி : 3103, முஸ்லிம் : 1079)

எனவே, நல்ல காரியங்களில் ஈடுபட்டு, தீய விடயங்களை விட்டு விலகுவதன் மூலம் அல்லாஹ்வை நெருங்குவதற்கான சந்தர்ப்பத்தை அவன் தனது அடியார்களுக்கு வழங்குகின்றான்.

3 இந்த மாதத்தில் யார் பகலில் நோன்பு இருந்து, இரவில் நின்று வணங்குவாரோ, அல்லாஹ் அவருடைய முன்னைய பாவங்களை மன்னித்து விடுகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் றமழான் மாதத்தில் நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்தவராக நோன்பு நோற்பாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். (அல் புகாரி : 1910, முஸ்லிம் : 760)

யார் றமழான் மாதத்தில் நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்தவராக நின்று வணங்குகின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்.

(அல் புகாரி : 1905, முஸ்லிம் : 759)

4 வருடத்தின் மிக உன்னதமான இரவாகிய "லைலதுல் கத்ர்" இந்த மாதத்தில் தான் இருக்கின்றது.

பல ஆண்டுகளாகச் செய்யும் நற்காரியங்களை விட இந்த ஓர் இரவில் செய்யும் நற்காரியங்கள் மிகச் சிறந்தது என அல்லாஹ் தனது வேதமாகிய அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் : கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களைவிட மிகச் சிறந்ததாகும். (அல் கத்ர் : 3)

யார் ஈமானுடன் நன்மையை எதிர்பார்த்தவராக இந்த இரவில் நின்று வணங்குகின்றாரோ, அவருடைய முன்னைய பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிடுவான்.

இது, றமழானின் இறுதிப்பத்து இரவுகளுள் ஓர் இரவாகும். இதற்கான மிகச் சரியான நேரத்தை யாரும் அறிய முடியாது.

## > நோன்பு விதியாக்கப்பட்டமைக்கான பின்னணி

உலகம், மறுமை என்பவற்றோடு தொடர்பான பல்வேறு நுணுக்கங்கள் மற்றும் காரணிகள் என்பவற்றை பின்னனியாகக் கொண்டே அல்லாஹ் நோன்பு நோற்பதை கடமையாக்கியுள்ளான்.
அவைகளுள் சில வருமாறு :

**1 தக்வாவை அடைந்து கொள்ளல் :**
ஒருவர் தனக்கு விருப்பமானவைகளைத் துறந்து, உடலியல் ஆசைகளை அடக்கி அல்லாஹ்வை நெருங்குவதற்காகச் செய்யப்படும் ஒரு வணக்கமே நோன்பாகும்.
எனவே, அவர் இரகசியமான பகிரங்கமான அனைத்து வேளைகளிலும் அல்லாஹ் தன்னைக் கண்காணித்துக்கொண்டிருக்கின்றான் என்ற உணர்வோடு, இறையச்சத்துடன் வாழ்வதற்கு பழக்கப்படுத்திக்கொள்கின்றார்.
இதனால் தான், அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல், நீங்கள் (உளச்சுத்தி பெற்று) பயபக்தியுடையவர்களாக ஆகுவதற்காக உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது. (அல் பகறா : 183)

**2 பாவங்கள் மற்றும் தவறுகளைக் கலைவதற்கான பயிற்சிகளை வழங்குதல் :**
நோன்பு நோற்கும் ஒருவர், அல்லாஹ்வின் உத்தரவிற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்பதற்காகவே அனுமதிக்கப்பட்ட விடயங்களிலிருந்து கூட தன்னைத் தவிர்த்துக் கொள்கின்றார்.
எனவே, நோன்பானது இவ்வாறானதொரு பயிற்சியை வழங்குவதன் விளைவாக, அவர் பாவங்கள் செய்யாது தனது இச்சையை கட்டுப்படுத்துவதற்கும் அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டிருக்கும் வரம்புகளை மீறாதிருக்கவும் அசத்தியத்தில் தறிகெட்டுச் செல்லாதிருக்கவும் அவருக்குத் தேவையான உந்துதலை நிச்சயம் இந்நோன்பு வழங்குமென்பது திண்ணம்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் மோசமான செயல்கள் மற்றும் பேச்சுக்கள் என்பனவற்றை விடவில்லையோ அவர் உண்ணுவதையும் குடிப்பதையும் விடுவதில் அல்லாஹ்வுக்கு எவ்விதத்தேவையும் இல்லை. (அல் புகாரி : 1804)

**3 வறியவர்களின் கஷ்ட நிலையை நினைவுபடுத்தி, அவர்களுக்கு உதவும் மனோ நிலையை உருவாக்கும் :**
ஒருவர் நோன்பு நோற்பதன் காரணமாக, வறுமை மற்றும் பசி என்பவற்றின் கஷ்டநிலையை பட்டறிவின் மூலம் புரிந்துகொள்ளலாம்.
காலமெல்லாம், வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் ஏழைகளையும் நினைவு படுத்திப்பார்க்க முடியும். எனவே,அவர் இந்த சந்தர்ப்பத்தில் தனது ஏழைச் சகோதரர்கள் பசி மற்றும் தாகத்தின் காரணமாக படும் அவஸ்தையை பற்றி சிந்திக்கின்றார்.
இதன் விளைவாக, அவர் இவ்வாறான வறிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கான மனோநிலையைப் பெறுவதோடு, அதற்கான முயற்சியையும் மேற்கொள்வார்.



> நோன்பாளிக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் சந்தோஷம் ஏற்படுகின்றது. ஒன்று நோன்பைத் திறக்கின்ற போது மற்றையது தனது இறைவனைச் சந்திக்கின்ற போது.

## > நோன்பின் சிறப்புகள்

நோன்பாளிக்கு பல்வேறு சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் சில பின்வருமாறு :

**1** ஒருவர், அல்லாஹ்வை ஈமான் கொண்டு, அவனது உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நோன்பின் மகிமை குறித்து இடம்பெற்றிருக்கின்ற செய்திகளை நம்பி, இதற்கு அல்லாஹ்விடம் நன்மைகள் உண்டு என்று எதிர்பார்த்து றமழான் மாதத்தில் நோன்பு நோற்றால், அவரது முன்னைய பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிடுவான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் றமழான் மாதத்தில் நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்தவராக நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். (அல் புகாரி : 1910, முஸ்லிம் : 760)

**2** ஒரு நோன்பாளி அல்லாஹ்வைச் சந்திக்கின்ற போது அவர் நோற்ற நோன்பிற்கான கூலிகளை பார்க்கின்ற வேளை மகிழ்ச்சி அடைகின்றார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நோன்பாளி இரண்டு சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சி அடைகின்றார் ஒன்று நோன்பு திறக்கின்ற போது, அடுத்தது அல்லாஹ்வைச் சந்திக்கின்ற போது" (அல் புகாரி : 1805, முஸ்லிம் : 1151)

**3** "றய்யான்" என அழைக்கப்படும் ஒரு வாயில் சுவனத்தில் உண்டு. அவ்வாயிலினூடாக நோன்பாளிகள் மாத்திரமே சுவனம் நுழைய முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "சுவனத்தில் "றய்யான்" எனும் வாயிலொன்று உள்ளது. மறுமை நாளில் அதனூடாக நோன்பாளிகள் மாத்திரமே செல்ல முடியும். வேறு எவரும் செல்ல முடியாது. நோன்பாளிகள் எங்கே என்று அழைக்கப்படும். அப்போது அவர்கள் எழுந்து அவ்வாயிலினூடகச் சுவனம் செல்வார்கள். அதன் பின்னர், அது மூடப்பட்டு விடும். வேறெவரும் அங்கு நுழைய முடியாது" (அல் புகாரி : 1797, முஸ்லிம் : 1152)

**4** நோன்பாளிகளுக்கான கூலி அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.
அவர்களுக்குரிய நன்மைகளை அல்லாஹ் தானே வழங்குவதாகவும் அதற்குரிய கூலியாக அவனே ஆகிவிடுவதாகவும் அல்லாஹ் கூறுகின்றான்.
ஒருவருக்குரிய கூலியாக அன்பு நிறைந்தவனும் கொடையாளியுமான உயர்ந்த அல்லாஹ்வே ஆகிவிடுவதாக இருப்பின், அவருக்கு அல்லாஹ் தயார்படுத்தி வைத்திருக்கும் இன்பங்களை சுகங்களை எண்ணி சந்தோஷப்படட்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஆதமுடைய மகனின் நோன்பைத் தவிரவுள்ள அனைத்து வணக்கங்களும் அவனுக்குரியதாகும். ஏனெனில், நோன்பானது எனக்குரியது அதற்குரிய கூலியை நானே வழங்குவேன். (அல் புகாரி : 1805, முஸ்லிம் : 1151)



> இஸ்லாமிய சந்திர நாட்காட்டி வருடத்தின் ஒன்பதாவது மாதமே றமழானாகும்.

## › நோன்பை முறித்து விடும் அம்சங்கள்

பின்வரும் விடயங்கள் நோன்பை முறித்துவிடுவதன் காரணமாக, அவைகளை ஒரு நோன்பாளி அவசியம் தவிர்த்துக் கொள்ளவேண்டும் :

**1** சாப்பிடுவதும், குடிப்பதும்.

அல்லாஹ் கூறுகின்றான் : இன்னும் பஜ்ர் (அதிகாலை) நேரத்தில் (இரவு என்ற) கறுப்பு நூலிலிருந்து, (அதிகாலை என்ற) வெள்ளை நூல் உங்களுக்குத் தெளிவாகும் வரை உண்ணுங்கள், இன்னும் பருகுங்கள்; பின்னர் இரவு (ஆரம்பமாகும்) வரை (மேலே கூறியவைகளைத் தவிர்த்து) நோன்பை (நோற்றுப்) பூரணமாக்குங்கள். (அல் பகறா : 187)

ஒருவர், தான் நோன்பாளி என்பதை மறந்து சாப்பிட்டால் அல்லது குடித்தால், அவரது நோன்பு முறியாது. மேலும் அவர் பாவியாகவும் கருதப்படமாட்டார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தான் நோன்பாளி என்பதை மறந்த நிலையில் யாராவது சாப்பிட்டால் அல்லது குடித்தால் அவர் தனது நோன்பை பூரணப்படுத்தட்டும். ஏனெனில், அல்லாஹ்தான் அவருக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்தான். (அல் புகாரி : 1831, முஸ்லிம் : 1155)

**2** வேறுவழிகளில் உண்ணுவதாகவும் குடிப்பதாகவும் கருதப்படும் விடயங்கள், உதாரணங்கள் :

- உணவாக, உடலுக்குச் செலுத்தப்படும் ஊசி மருந்துகள். உடலுக்குத் தேவையான போசாக்குகள் மற்றும் சக்திகள் குறைகின்ற போது அதனை இயக்குவதற்கு உதவியாகவே இவைகள் ஏற்றப்படுகின்றன. எனவே, இவைகள் உணவாகவும் குடிபானமாகவுமே கருதப்படுகின்றன.
- நோயாளிக்கு இரத்தம் ஏற்றுதல். ஏனெனில், இரத்தம் ஏற்றுவது சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் நிகரானது ஆகும்.
- புகைத்தல். இதன் அனைத்து வடிவங்களுமே நோன்பை முறித்துவிடுகின்றன.

**3** உடலுறவில் ஈடுபடல்.

ஆண் குறியினது நுனிப் பகுதி பெண்குறியில் நுழைந்தாலே நோன்பு முறிந்துவிடும்.இந்நேரம் இந்திரியம் வெளியேரினாலும் வெளியேறாவிட்டாலும் சரியே.

**4** உடலுறவின் மூலமோ அல்லது சுயஇன்பத்தில் ஈடுபடுவதன் மூலமோ அல்லது வேறுவழியிலோ சுயவிருப்பின் பேரில் இந்திரியத்தை வெளியேற்றுதல்.

தூக்கத்தில் ஏற்படும் ஸ்கலிதம் நோன்பை முறிக்காது.

நோன்பை முறித்துவிடும் காரியங்களில் ஈடுபடாத வகையில் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமான ஒருவர் மனைவியை முத்தமிடுவது போன்ற செயல்களைச் செய்யலாம்.

**5** வேண்டுமென்றே வாந்தி எடுத்தல்.

தானாகவே வாந்தி ஏற்பட்டால், அது நோன்பை முறிக்காது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பாளியாக இருக்கும் நிலையில் யாருக்கு தானாகவே வாந்தி வந்துவிடுகின்றதோ அவர் கழா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேலும் யார் வேண்டுமென்று வாந்தி எடுப்பாரோ அவர் அந் நோன்பை அவசியம் கழா செய்தல் வேண்டும். (அத் திர்மிதி : 720, அபூ தாவூத் : 2380)

**6** மாதவிடாய் மற்றும் நிபாஸ் ஏற்படல்.

பகலின் இறுதிநேரத்தில் மாதவிடாயோ அல்லது நிபாஸோ ஏற்பட்டு விட்டதாக உணர்ந்தால் கூட நோன்பு முறிந்துவிடும்.

அல்லது ஒரு பெண் ஹைழ் ஏற்பட்டவளாக இருந்து சுபஹுத் தொழுகையின் பின்னர் சுத்தமாகி விட்டாலும், அவருடைய நோன்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் நோன்பைப் பிடிக்காதவர் போன்றே நடந்துகொள்ள வேண்டும்.

பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டால் அவள் தொழவோ நோன்பு நோற்கவோ முடியாது அல்லவா!? என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (புகாரி: 1850)

ஒரு மாதத்தில் குறிப்பிட்டதொரு காலம் வழமையாக வெளிவரும் மாதவிடாய் அல்லது பிள்ளைப்பேற்றின் பின்னர் வெளிவரும் நிபாஸோ இன்றி நோயின் காரணமாக வெளிவரும் இரத்தமானது, நோன்பு நோற்பதற்கு தடையாக அமையாது.

## > நோன்பை நோற்காதிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்

இக்கடமையை இலகுபடுத்தும் நோக்கில் நோன்பு நோற்காதிருக்க அல்லாஹ் சில மக்களுக்கு சலுகையை வழங்கியிருக்கின்றான். அவர்கள் வருமாறு :

**1** நோயாளிகள்.
நோன்பு நோற்பதன் மூலம் இவர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படுமாயின், இவர்கள் நோன்பு நோற்காது விட்டு, றமழான் மாதம் முடிந்தன் பின்னர் கழாச் செய்து கொள்ள முடியும்.

**2** முதுமை அல்லது குணப்படுத்த முடியாத நோய் என்பவற்றின் காரணமாக நோன்பு நோற்பதற்கு இயலாத பலவீனர்கள்.
இவர்கள் நோன்பு நோற்காது இருக்கலாம். அத்தோடு நோன்பு நோக்கத் தவறிய ஒவ்வொரு நாளைக்கும் ஓர் ஏழைக்கு உணவு கொடுக்க வேண்டும்.
வழங்கப்படவேண்டிய உணவின் அளவு 1.5 கிலோ கிராமாகும் (இது பொதுவாக ஊரிலுள்ள பிரதான உணவாக இருத்தல் வேண்டும்)

**3** பிரயாணிகள்
பயணித்துக் கொண்டிருக்கும் போது அல்லது தற்காலிகமாக ஓரிடத்தில் நான்கு நாட்களைவிடக் குறைவாகத் தங்கியிருக்கின்ற போது,இவர்கள் நோன்பு நோற்பதை விடலாம்.
ஆனால், றமழான் மாதம் முடிந்த பிறகு தவறிய நோன்புகளைக் கழாச் செய்ய வேண்டும்.
அல்லாஹ் கூறுகின்றான் :
எவரேனும் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால், மற்ற நாட்களில் (ஏற்கனவே விடுபட்ட நோன்பினை) எண்ணி (நோற்று) விடவும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவை நாடுகிறான்; மேலும், அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை.
(அல் பகறா : 185)

**4** ஹைழ் மற்றும் நிபாஸ் ஏற்பட்டிருக்கும் பெண்கள்.
இவர்கள் நோன்பு நோற்பது ஹராமாகும். றமழான் முடிந்ததன் பிறகு விடுபட்ட நோன்புகளை நோற்பது கட்டாயமாகும்.

**5** கற்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்.
நோன்பு நோற்பதனால், தனக்கோ அல்லது தனது பிள்ளைகளுக்கோ ஏதும் பாதிப்புக்கள் ஏற்படும் என்று பயந்தால், இவர்கள் நோன்பை நோற்காது பின்னர் கழாச் செய்து கொள்ள முடியும்.



## றமழான் மாதத்தில் வேண்டுமென்றே நோன்பை நோற்காது விட்டவர்கள் தொடர்பான சட்டங்கள் ?

ஏற்றுக்கொள்ளத்தக்க எந்தவொரு காரணமுமின்றி ஒருவர் நோன்பை நோற்காது விட்டால், அல்லாஹ்வுடைய உத்தரவிற்குக் கட்டுப்படாது பாரியதொரு பாவத்தை அவர் செய்து விட்டார். எனவே, அவர் கட்டாயமாக இதற்கு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக்கோர வேண்டும். பின்னர் நோற்காது விட்ட அந்த நோன்புகளை நோற்க வேண்டும்.

ஆனால், உடலுறவில் ஈடுபட்டதன் காரணமாக ஒருவர் நோன்பை விட்டால், அதனை கழாச் செய்வதோடு, இந்தப் பாவத்திற்கான குற்றப்பரிகாரமாக முஸ்லிமான ஓர் அடிமையை விலைக்கு வாங்கி உரிமையிட வேண்டும்.

இவ்வாறான, அனைத்து சந்தர்ப்பங்களிலுமே மனிதர்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்தி வந்திருக்கின்றது.

(இன்றிருப்பது போன்று) அடிமைகள் இல்லையெனில், இரண்டு மாதங்களுக்கு தொடராக நோன்பு நோற்க வேண்டும். அதற்கும் முடியாவிட்டால், 60 ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

## > சுன்னத்தான நோன்புகள்

வருடத்தில் ஒரு மாதம் நோன்பு நோற்பதை அல்லாஹ் பர்ளாக ஆக்கியுள்ளான். எனினும் மேலதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் விருப்பமுள்ளோர் இயலுமான நிலையில் இருப்பின், வேறு நாட்களிலும் நோன்பு நோற்பதை சுன்னத்தாக்கியுள்ளான்.

1 ஆஷூராத் தினம் மற்றும் இதற்கு முந்திய அல்லது பிந்திய தினம் போன்ற இரண்டு தினங்கள்.

ஆஷூராத் தினம் என்பது இஸ்லாமிய நாட்காட்டியின் முதல் மாதமாகிய "முஹர்ரம்" மாதத்தின் பத்தாம் நாளாகும்.

இந்நாளில் தான் மூஸா (அலை) அவர்களைக் காப்பாற்றி, பிர்அவ்னையும் அவனது படையினரையும் அல்லாஹ் நீரில் மூழ்கடிக்கச் செய்தான்.

எனவே, மூஸா (அலை) அவர்களை அல்லாஹ் காப்பாற்றியமைக்காக அவனுக்கு நன்றிசெலுத்தி, நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றும் நோக்கிலேயே இந்த நோன்பை முஸ்லிம்கள் நோற்கின்றனர்.

நபியவர்கள் ஆஷூரா நோன்பை நோற்றதோடு, தமது தோழர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்:

"இந்த நாளைக்கு (ஆஷூரா) ஒரு நாள் முன்னரோ அல்லது பின்னரோ நீங்கள் நோன்பு இருங்கள்"

(அஹ்மத் : 2154)

இந்தத் தினத்தில் நோன்பு நோற்பது தொடர்பாக நபியவர்களிடம் வினவப்பட்ட போது, அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

"சென்ற வருடம் நடைபெற்ற பாவங்களுக்கு இது பிராயச்சித்தமாக அமைந்து விடுகின்றது"

(முஸ்லிம் : 1162)

2 அறபாத் தினம்.

இத்தினமானது "துல் ஹிஜ்ஜா" மாதத்தின் ஒன்பதாம் நாளாகும்.

இது, இஸ்லாமிய வருட நாற்காட்டியின் பன்னிரெண்டாம் மாதமாகும்.

ஹஜ்ஜுக்குச் சென்றோர் இத்தினத்தில் அறபா வெளியில் ஒன்றுகூடி, அல்லாஹ்வை துதி செய்தவர்களாக அவனிடம் பிரார்த்திப்பார்கள்.

இது வருடத்தின் மிகச் சிறந்த நாளாகும். ஹஜ்ஜுக்குச் செல்லாதோர் இத்தினத்தில் நோன்பு நோற்பது நபிவழியாகும்.

இந்த நோன்பு தொடர்பாக நபியவர்களிடம் வினவப்பட்ட போது அவர் இவ்வாறு பதிலுரைத்தார்கள்

"இந்த வருடம் இடம்பெற்ற பாவங்களையும் அடுத்த வருடம் இடம்பெறவிருக்கின்ற பாவங்களையும் இது போக்கிவிடுகின்றது"

(முஸ்லிம் : 1162)

3 ஷவ்வால் மாதத்தின் ஆறு நாட்கள்.

ஷவ்வால் மாதம் என்பது இஸ்லாமிய வருடத்தின் பத்தாவது மாதமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"யார் றமழான் மாதம் நோன்பு நோற்று, அதனை அடுத்து ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்புகளையும் நோற்பாரோ, அவர் வருடம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மையைப் பெற்றுக்கொள்கின்றார்"

(முஸ்லிம் : 1164)

## › நோன்புப் பெருநாள்

பெருநாட்கள் என்பது மார்க்கத்தின் வெளிப்படையான அடையாளச் சின்னங்களுள் / சம்பிரதாயங்களுள் ஒன்றாகும்.

நபி (ஸல்) அவர்கள் மதீனா சென்ற போது, அங்கிருந்த அன்ஸாரிகள் வருடத்தில் இரண்டு நாட்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை நபியவர்கள் பார்த்தார்கள்.

"இந்த இரண்டு தினங்களும் என்ன ? " என்று அவர்களைப் பார்த்து நபியவர்கள் வினவிய போது, "ஜாஹிலிய்யாக் காலம் முதல் இவ்விரு நாட்களிலும் கொண்டாட்டத்தில் ஈடுபடுவது எமது வழக்கமாகுமென" அவர்கள் பதிலளித்தார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் "இவ்விரு தினங்களையும் விட மிகச் சிறந்த வேறு இரு தினங்களை அல்லாஹ் உங்களுக்கு கொண்டாட்டத் தினங்களாக மாற்றித் தந்துள்ளான். ஒன்று ஹஜ்ஜுப் பெருநாள் மற்றது நோன்புப் பெருநாள்" என்று கூறினார்கள். (அபூ தாவூத் : 1134)

பெருநாட்கள் மதங்களின் அடையாளம் என்பதைத் தெளிவுபடுத்தி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் பெருநாள் உண்டு இது எமது பெருநாளாகும். ( அல் புஹாரி 909,முஸ்லிம் 892)

### இஸ்லாத்தின் பார்வையில் பெருநாள்

இஸ்லாத்தின் பார்வையில் "பெருநாள்" என்பது மக்கள் தங்களது மகிழ்ச்சியை வெளியிடும் ஒரு தினமாகும்.

இந்நாளில், முஸ்லிம்கள் வணக்கங்களில் ஈடுபடுவதன் மூலம் அல்லாஹ்வுக்கு தங்களது நன்றிகளை தெரிவிக்கின்றனர்.

அவனே அவர்களுக்கு நேர்வழியைக் காட்டியதோடு, வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும் அருள்பாளித்துள்ளான்.

அழகிய ஆடைகளை அணிந்தும் ஏழைகளுக்கும் தேவையுள்ளோருக்கும் உதவி உபகாரங்கள் புரிந்தும் மேலும், அனுமதிக்கப்பட்ட வேறு சில செயல்களில் ஈடுபடுவதன் மூலமும் தங்களது சந்தோஷத்தை அவர்களுக்கிடையே பகிர்ந்துகொள்கின்றனர்.

உதாரணமாக,விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களை நடாத்துதல்.

உண்மையில், இவைகள் அவர்கள் அனைவரையும் மகிழ்வுறச் செய்வதோடு, அல்லாஹ் அவர்கள் மீது புரிந்த அருட்கொடைகளையும் அவர்களுக்கு நினைவூட்டுகின்றன.

### முஸ்லிம்களின் பெருநாட்கள் :

வருடத்தில் கொண்டாட முடியுமான இரண்டு பெருநாட்களே முஸ்லிம்களுக்கு உண்டு.

அவைகள் அல்லாத வேறொரு நாளை பெருநாளாக முஸ்லிம்கள் கொண்டாட முடியாது. அவைகளாவன :

ஷவ்வால் மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படுகின்ற நோன்புப் பெருநாள்.

துல் ஹிஜ்ஜா மாதம் பத்தாவது நாள் கொண்டாடப்படுகின்ற ஹஜ்ஜுப் பெருநாள்.



## நோன்புப் பெருநாள் :

றமழான் மாதம் முடிவுற்று, பத்தாவது மாதமாகிய ஷவ்வால் மாதத்தின் முதல் தினத்திலேயே இது கொண்டாடப்படுகின்றது.
இதனால் தான், இந்நாள் "ஈதுல் பித்ர்" என அழைக்கப்படுகின்றது. றமழானில் நோன்பு நோற்பதன் மூலம் அல்லாஹ்வை வணங்கியது போலவே இந்நாளில் நோன்பைத் திறப்பதன் மூலம் அல்லாஹ்வை மக்கள் வணங்குகின்றனர்.
எனவே, றமழானில் இலகுவாக நோன்பை நோற்கச் செய்து, அல்லாஹ் தனது அருளை முழுமையாக வழங்கியமைக்காக அவனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே இவர்கள் இதனை கொண்டாடுகின்றனர்.
அல்லாஹ் கூறுகின்றான் : (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ்வை உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைப் படுத்துவதற்காகவும், நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே (இச்சலுகைகளை உங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்). (அல் பகறா : 185)

## பெருநாளில் செய்யவேண்டிவைகள் என்ன ?

### 1 பெருநாள் தொழுகை :

இதனை நிறைவேற்றுமாறு இஸ்லாம் வலியுறுத்துவதோடு, இதற்காக ஆண்களோடு கூட பெண்களும் சிறுவர்களும் செல்ல வேண்டுமெனவும் தூண்டுகின்றது.

இந்தத் தொழுகைக்கான நேரம் சூரியன் உதமாகி ஈட்டிமுனையளவு உயர்ந்தது முதல் அது சாயும் வரையிலாகும்.

தொழும் முறை :
இத்தொழுகை இரண்டு ரக்அத்துக்களைக் கொண்டது. இரண்டிலுமே இமாம் சப்தமிட்டே ஓத வேண்டும். ஒவ்வொரு ரக்அத்தினது ஆரம்பத்தின் போதும் தக்பீர்கள் அதிகமாகக் கூறப்படும். முதல் ரக்அத்தின் ஆரம்பத் தக்பீரை கூறிய பிறகு ஸூரதுல் பாதிஹாவை ஓதுவதற்கு முன்னர் ஆறு தக்பீர்களைக் கூறுவார்.
அவ்வாறே இரண்டாவது ரக்அத்திலும் சுஜூ திலிருந்து நிலைக்கு வருவதற்காக கூறிய தக்பீர் அல்லாமல் இன்னும் ஐந்து தக்பீர்களைக் கூறுவார்.
இவ்வாறு இந்தத் தொழுகை முடிந்ததன் பிறகு இரண்டு பகுதிகளைக் கொண்ட பிரசங்கத்தை இமாமவர்கள் நிகழ்த்துவார்.



## 2 ஸகாத் பித்ர் :

பெருநாள் தினத்திற்கு (இரவு, பகல்)

தேவையான உணவை விட அதிகளவு உணவைப் பெற்றிருக்கும் அனைவர் மீதும் "ஸகாதுல் பித்ர்" எனும் கடமையை அல்லாஹ் விதியாக்கியுள்ளான்.

நாட்டின் பிரதான உணவாகிய அரிசி, கோதுமை அல்லது ஈத்தம் பழம் போன்றவற்றிலிருந்து ஒரு "சா∴" அளவுகொண்ட உணவை ஏழை முஸ்லிம்களுக்கு வழங்குதல் வேண்டும்.

இந்நாளில் உணவின் பால் தேவையுள்ள எவரும் இருக்கக் கூடாது என்பதே இதன் நோக்கமாகும்.

மேலும், ஏழைகளுக்கு பயனுள்ளதாய்

அமையுமெனில், உணவுக்குப் பதிலாக அதன் பெறுமதியளவு பணத்தை அவர்களுக்கு வழங்கவும் முடியும்.

இதனை வழங்குவதற்கான நேரம் :

றமழான் மாதத்தின் இறுதி நாள் சூரியன் மறைந்தது முதல் பெருநாள் தொழுகை வரையிலான காலப் பகுதியே இதற்கான நேரமாகும். பெருநாளைக்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னரும் இதனை வழங்கலாம்.

வழங்க வேண்டிய அளவு :

நாட்டின் வழமையான உணவிலிருந்து ஒரு "சா∴" அளவு கொடுக்க வேண்டும்.

இது அரிசி அல்லது கோதுமை அல்லது ஈத்தம் பழம் அல்லது இவைகள் போன்ற வேறு ஏதேனுமோர் உணவுப்பொருட்களாகக் கூட இருக்கலாம்.

ஒரு "சா∴" என்பது சுமார் 3 கிலோ கிராம் அளவுக்குச் சமமாகும்.

ஒரு முஸ்லிம் ஸகாதுல் பித்ரை தனக்கும் தனது கட்டாயச் செலவிற்குட்பட்டவர்களான மனைவி மற்றும் பிள்ளைகள் போன்றவர்களுக்காகவும் வழங்குவது அவசியமாகும். தாயின் வயிற்றிலுள்ள சிசுவிற்காக இதனை வழங்குவது முஸ்தஹப்பாகும்.

எனவே, இவர்கள் ஒவ்வொருவருக்காகவும் நாட்டின் உணவிலிருந்து சுமார் 3 கிலோ கிராம் அளவு வழங்க வேண்டும்.

நோன்பு நோற்கும் போது நோன்பாளியினால் செய்யப்படும் மோசமான செயல்கள் மற்றும் பேச்சுக்கள் என்பவற்றுக்கு பரிகாரமாகவும் ஏழைகளுக்கு உணவாகவும் இருப்பதற்காகவே நபியவர்கள் இதனை கடமையாக்கினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் இதனை பெருநாள் தொழுகைக்கு முன்னர் நிறைவேற்றுகின்றாரோ அது அவர் வழங்கிய ஸகாத்தாக கருதப்படும். மேலும் யார் இதனை தொழுகைக்குப் பின்னர் நிறைவேற்றுகின்றாரோ அது அவரது ஸதகாவாகக் கருதப்படும். (அபூ தாவூத் : 1609)

## 3

இந்நாளில் குடும்பத்திலுள்ள சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் அனைவருக்குமிடையில் அனுமதிக்கப்பட்ட எல்லா வழிகளையும் பயன்படுத்தி ஆனந்தம் மகிழ்ச்சி என்பவற்றை பரவலாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.



ஆழகிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். நோன்பைத் திறந்து உண்டு மகிழ்வதன் மூலம் அல்லாஹ்வுக்கு வணக்கம் செய்ய வேண்டும்.

எனவேதான், இந்நாளில் நோன்பு நோற்பது ஹராமாக்கப்பட்டுள்ளது.

4 விஷேடமான இந்த சந்தர்ப்பத்தில் அல்லாஹ்விற்காகத் தக்பீர் கூற வேண்டும்.

இது பெருநாள் இரவிலிருந்து ஆரம்பமாகி பெருநாள்த் தொழுகையோடு நிறுத்தப்படும்.

பெருநாள் தொழுகைக்காகச் செல்லும் போதும் தக்பீர் கூறப்படும்.

இவ்வாறு தக்பீர் கூறுவது, றமழான் மாதத்திற்கான நோன்பை முழுமைப்படுத்திய சந்தோஷத்தை வெளிக்காட்டவும் நோன்பு நோற்பதற்கு எமக்கு அல்லாஹ் வழிகாட்டியமைக்காக அவனுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதற்குமாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

(நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ்வை உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக நீங்கள் பெருமைப் படுத்துவதற்காகவும், நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே (இச்சலுகைகளை உங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்). (அல் பகறா : 185)

### தக்பீர் கூறும் முறை:

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து

அல்லாஹு அக்பர் கபீரா வல் ஹம்துலில்லாஹி கதீரா வஸுப்ஹானல்லாஹி புக்ரதன் வஅஸீலா

பொதுவாக ஆண்கள் மக்களுக்கு இடையூறாக அமையாத விதத்தில் தக்பீரைச் சப்தமிட்டுக் கூறவேண்டும். ஆனால், பெண்கள் அவர்களது சப்தத்தைக் குறைத்தே இதனை மொழிய வேண்டும்.





# எமது ஸகாத்



# 5

ஸகாத் கொடுப்பதை அல்லாஹ் கட்டாயக் கடமையாக ஆக்கியுள்ளான். மேலும், இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களுள் மூன்றாவது கடமையாகவும் இதனை வைத்திருக்கின்றான்.

இதனை விட்டவர்களுக்கு கடுமையான தண்டனைகள் உண்டெனவும் எச்சரித்துள்ளான்.

பாவமன்னிப்புக் கோருவது, தொழுகையை நிலைநாட்டுவது, ஸ காத் கொடுப்பது என்பனவற்றோடு இஸ்லாமிய சகோதரத்துவத்தை இணைத்துக் கூறியுள்ளான்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : ஆகவே, அவர்கள் (தங்கள் பாவங்களிலிருந்து விலகிப்) பச்சாதாபப்பட்டு, தொழுகையையும் நிறைவேற்றி, ஸகாதையும் கொடுத்து வந்தால் அப்பொழுது (அவர்கள்) உங்களுக்கு மார்க்கத்தில் சகோதரர்களாவர்.

(அத் தௌபா : 11)

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாம் ஐந்து விடயங்களின் மீது நிறுவப்பட்டுள்ளது... தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல்.

(அல் புகாரி : 8, முஸ்லிம் : 16)

## பொருளடக்கம்

- ஸகாதின் இலக்குகள்:
- ஸகாத் விதியாகும் சொத்துக்கள் :
  - தங்கம் வெள்ளி
  - அனைத்து வகை நாணயங்கள்
  - வியாபாரப் பொருட்கள்
  - பழங்கள் தானியங்கள் போன்ற விளை பொருட்கள்
  - ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால் நடைகள்
- ஸகாத்தைப் பெறத்தகுதியானவர்கள் யார் ?

# ஸகாத்

"ஸகாத்" என்பது முஸ்லிம்கள் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ள சிறியளவிலான பணத்தொகையையே குறிக்கின்றது.

ஏழைகளது தேவைகள் மற்றும் கஷ்டங்களை நீக்குவதற்காகவும் வேறு பல நோக்கங்களுக்காகவும் இந்தப் பணத் தொகையை பணக்காரர்கள் ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.

### ஸகாதின் இலக்குகள் :

பல்வேறு உயர்ந்த இலக்குகளை நோக்காகக் கொண்டு அல்லாஹ் ஸகாதை முஸ்லிம்கள் மீது கடமையாக்கியுள்ளான்.

அவற்றுச் சிலவற்றை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

1 சொத்தின் மீதான மோகம் மனித இயல்பாகும். சொத்துக்களைச் சேகரிப்பதற்கும் அதனை பாதுகாப்பதற்கும் இது மனிதனைத் தூண்டுகின்றது.

எனவே, பேராசை, கஞ்சத்தனம் போன்ற இழி குணங்களிலிருந்து மனித உள்ளத்தை தூய்மைப்படுத்தி, உலகின் மீதான மோகத்தை களையும் நோக்குடனே இஸ்லாம் ஸகாத் கொடுப்பதைக் கடமையாக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் :

(நபியே!) அவர்களுடைய செல்வங்களிலிருந்து தா்மத்தை (ஸகாதை) எடுப்பீராக ! அதனால் அவர்களை நீா் சுத்தப்படுத்தி, அவர்க(ளின் அகங்க)ளை தூய்மையாக்கி வைப்பீராக!(அத்தௌபா : 103)

2 ஸகாத் கொடுப்பதன் மூலம் மனிதர்களுக்கிடையே அன்பும் பிணைப்பும் ஏற்படுகின்றது. ஏனெனில், மனித உள்ளமானது தனக்கு உதவி உபகாரம் செய்பவர்களை நேசிக்கும் இயல்பைக் கொண்டுள்ளது.

இதன் விளைவாக, கற்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த நிலையிலுள்ள உறுதியானதொரு கட்டடத்தைப் போன்று, முஸ்லிம் சமூகத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஒருவர் மற்றவரை நேசித்து, ஒத்துழைப்போடு ஒற்றுமையாக வாழ முடியும்.

மேலும் களவு, வழிப்பறி, திருட்டு போன்ற குற்றச்செயல்களும் குறையும்.

3 ஸகாத் வழங்குவதன் மூலம், ஒருவர் தான் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, அவனது உண்மையான அடியானாக வாழ்வதை மிகத் தெளிவாக வெளிக்காட்ட முடிகின்றது.

பணக்காரா் தனது சொத்திலிருந்து ஸகாத் வழங்குகின்ற போது உண்மையாக, அவா் அல்லாஹ்வினது உத்தரவை நடைமுறைப்படுத்துகின்றார். மேலும், சொத்துக்கள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கப் பெற்றன எனக் கருதி அதற்காக அல்லாஹ்வுக்கு தனது நன்றியைத் தெரிவிக்கின்றார். அல்லாஹ் கூறுகின்றான் :

அன்றியும் உங்கள் இரட்சகன் (இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (என் அருளை) நிச்சயமாக உங்களுக்கு அதிகப்படுத்துவேன். (இப்ராஹீம் : 7)

4 ஸகாத் வழங்குவதன் மூலம், சமூகப் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படுகின்றது.

மேலும், மக்களிடையே காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் கலையப்பட்டு பொருளாதார சமநிலை பேணப்படுகின்றது.

வசதிபடைத்தோா் தங்களது ஸகாத்துக்களை, பெறத்தகுதியான வறியவர்களுக்கு வழங்குகின்றபோது (சொத்துக்கள்) சமூகத்தின் ஒரு சாராருக்கிடையில் மாத்திரம் சுழல்வதையும் முடங்கிக் கிடப்பதையும் தவிர்க்கலாம்.அல்லாஹ் கூறுகின்றான் :

செல்வம் உங்களிலுள்ள பணக்காரா்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக, (இவ்வாறு பங்கீடு செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்).(அல் ஹஷ்ா் : 7)

## ஸகாத் விதியாகும் சொத்துக்கள் ?

மனிதன் தனது சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற சொத்துக்களில் ஸகாத் விதியாகாது. உதாரணமாக, குடியிருக்கும் வீடு, பயணத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், உணவுகள், குடிபானங்கள், ஆடைகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இவைகள் விலை உயர்ந்ததாகவும் நிறைந்த சொகுசுகளைக் கொண்டதாகக் கூட இருக்கலாம். தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாத, இயல்பான வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருக்கும் பின்வருவன போன்ற பல்வேறு வகையான சொத்துக்களில் அல்லாஹ் ஸகாத்தைக் கடமையாக்கியுள்ளான். அவைகள் வருமாறு :



1 தங்கம் வெள்ளி

(பெண்கள் தங்களது சொந்தப் பாவனைக்காக பயன்படுத்தும் தங்கம் மற்றும் வெள்ளியிலான ஆடைகளோ அல்லது ஆபரணங்களோ இவற்றுள் உள்ளடக்கப்படவில்லை)

குறித்த "நிஸாபை" அடைந்து, 354 நாட்களைக் கொண்ட ஒரு சந்திர வருடத்தினை பூர்த்தி செய்கின்ற போது தான், இவைகளுக்கு ஸகாத் கடமையாகும்.

இவைகளுக்கான நிஸாப் அளவு :

தங்கம் சுமார் 85 கிராமாகவும் வெள்ளி சுமார் 595 கிராமாகவும் இருக்க வேண்டும்.

ஒருவரிடம் இந்த நிஸாப் அளவு தங்கமோ அல்லது வெள்ளியோ ஒரு வருட காலத்திற்கு சொந்தமாக வைத்திருப்பின், அவர் அவற்றிலிருந்து 2.5% ஸகாதாக வழங்க வேண்டும்.



2 அனைத்து வகை நாணயங்கள்.

இவைகள் ரொக்கமாக கையில் இருக்கலாம் அல்லது வங்கிகளில் வைப்பில் இருக்கலாம்.

நாணயங்களுக்கான "நிஸாப்" தங்கத்திற்கான நிஸாபின் பெறுமதி அளவுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும்.

நாணயத்தின் பெறுமதி தங்கத்தின் நிஸாப் அளவுக்குச் சமமாகவோ அல்லது அதனை விட அதிகமாகவோ இருக்கின்ற போது, அதிலிருந்து 2.5% ஸகாதாக வழங்க வேண்டும்.

இந்த வகையில் நாணயத்தின் பெறுமதி சுமார் 85 கிராம் தங்கத்தின் அளவைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், இது ஒரு வருட காலத்திற்கு அவரிடம் இருக்க வேண்டும். இவ்வாறானதொரு நிலையின் போது தான், மேற்குறித்தவாறு நாணயத்தின் ஸகாதை வழங்க வேண்டும்.

உதாரணம் :

தங்கத்தின் விலை மாறக்கூடியதாகும். ஸகாத் விதியாகும் போது ஒரு கிராம் தங்கத்தின் விலை 25 டொலர்களாயின் நாணயத்தின் நிஸாப் பின்வருமாறு அமையும் :

25 (ஒரு கிராம் தங்கத்தின் விலை மாறக்கூடியது) X 85 (கிராம்களின் எண்ணிக்கை மாறாது) = 2125 டொலர்கள். இதுவே நாணயத்தின் நிஸ ாப் ஆகும்.



3 வியாபாரப் பொருட்கள் :

வியாபாரத்தில் முதலீடு செய்யும் நோக்கிலுள்ள நிலங்கள், கட்டடங்கள் போன்ற அசையாப் பொருட்களையும் உணவு வகைகள் மற்றும் நுகர்வுப் பண்டங்கள் போன்ற வியாபாரப் பொருட்களையுமே இவைகள் குறிக்கின்றன.

ஸகாத்தைக் கொடுப்பதற்கான முறை :

ஒரு வருடகாலமாக கையிலிருந்த பொருட்கள் அனைத்தினதும்பெறுமதியைக் கணித்து, அது நாணயத்தின் நிஸாப் அளவைப் பெறுமாயின் அதிலிருந்து 2.5% ஸகாத்தாக வழங்க வேண்டும்.



4 பழங்கள் தானியங்கள் போன்ற விளை பொருட்கள் :

அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசங் கொண்டோரே ! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், உங்களுக்குப் பூமியிலிருந்து நாம் வெளிப்படுத்தியவற்றிலிருந்தும் நல்லவைகளை (தர்மமாகச்) செலவு செய்யுங்கள். (அல் பகறா : 267)

குறித்த, சில வகை விளைபொருட்களில் மாத்திரம், அவைகள் குறித்த நிஸ ாபை அடைகின்ற போது ஸகாத் விதியாகும்.

மழை நீர் மற்றும் ஆற்று நீர் என்பவற்றின் மூலம் விளைந்த பொருட்கள், செலவு மற்றும் உழைப்பு போன்றவற்றின் மூலம் விளைந்தவைகள் என்ற வேறுபாடுகள் இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றன.

மக்களின் நிலமைகளைக் கருத்திற்கொண்டு, இவைகளிலிருந்து ஸகாத்தாக வழங்க வேண்டிய அளவிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.



5 ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால் நடைகள் :

மேய்ப்பு நிலங்களில் உண்ணுகின்ற மேலும், சிரமங்கள் ஏதுமின்றி தீனி-களை பெறமுடியுமான நிலையிலுள்ள கால்நடைகளில் மாத்திரமே ஸ காத் விதியாகும்.

ஒரு வருட காலத்திற்கு அல்லது அதனை விட அதிகமான காலங்களுக்கு தீனி விநியோகம் செய்யப்படவேண்டுமாயின், அவைகளுக்கு ஸகாத் விதியாகாது.

இவைகளுள் ஸகாத் விதியாகும் அளவு மற்றும் நிஸாப் என்பன பற்றிய விரிவான தகவல்களை இஸ்லாமிய சட்டநூற்களில் படித்துக்கொள்ளலாம்.

## ஸகாத் பெறத்தகுதியானவர்கள் யார்?

ஸகாத்தைப் பெறத்தகுதியானவர்களை இஸ்லாம் வரையறை செய்துள்ளது.

இதனை இவர்களுள் ஏகதரப்பினருக்கோ அல்லது பல தரப்பினருக்கோ அல்லது தகுதியானவர்களை இணங்கண்டு இதனை விநியோகிக்கின்ற ஸகாத் மற்றும் நலன்புரி நிறுவனங்களுக்கோ வழங்கலாம்.

ஒருவரின் ஸகாத்தை அவர் வாழும் குறித்த அந்தப் பிரதேசத்திலேயே விநியோகிப்பது தான் மிகவும் பொருத்தமானது.

பின்வருவோர் ஸகாத்தைப் பெறத் தகுதியுடையோராவர் :

1 அடிப்படையான மற்றும் அத்தியவசியமான தேவைகளைக் கூட நிவர்த்தி செய்துகொள்வதற்கு முடியாத வசதியற்ற ஏழைகள்.

2 ஸகாத்தை சேகரித்து விநியோகிப்போர்.

3 தன்னை அடிமைத்தளையிலிருந்து விடுதலை செய்ய பணம் தேவைப்படும் நிலையிலுள்ள அடிமைகள்.

4 கடன் பெற்று, அதனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலுள்ள கடனாளிகள்.
தனது நலனுக்காகவோ அல்லது பொது நலனுக்காகவோ இக்கடனை அவர் பெற்றிருக்கலாம்.

5 அல்லாஹ்வின் பாதையில் போராடுவோர்.
இவர்கள் தங்களது மார்க்கத்தை அல்லது நாட்டை பாதுகாக்கப் போராடுபவர்கள்.
இஸ்லாத்தை பரப்பவும் அதனை மேம்படுத்தவும் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளும் அல்லாஹ்வின் பாதையில் போராடுதல் என்ற விடயத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன.


6 மனஅமைதி ஏற்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளோர்.
இவர்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோர் அல்லது இஸ்லாத்தை தழுவ எதிர்பார்த்துக் கொண்டிருப்போர்.
இவர்களுக்கு ஸகாத் கொடுப்பதானது, தனிநபர்களுக்குரிய கடமை மாத்திரமல்ல. முஸ்லிம் அரச அதிகாரிகள், நலன்புரி நிறுவனங்கள் போன்றவைகள் கவனம் செலுத்த வேண்டிய சமூகப் பொறுப்பாகும்.

7 பணம் தேவைப்படும் நிலையிலுள்ள அநாதரவான பயணிகள்.
இவர்கள் தங்களது ஊர்களில் பெரும் செல்வந்தர்களாகக் கூட இருக்கலாம்.

ஸகாத் பெறத்தகுதியானவர்கள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : தர்மங்களெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதற்காக (வசூல் செய்வது, கணக்கிடுவது போன்ற வேலைகளில்) உழைப்பவர்களுக்கும், (புதிதாக இஸ்லாத்தை தழுவியோரில்) எவர்களின் இதயங்கள் அன்பு செலுத்தப்பட வேண்டுமோ அத்தகையோருக்கும், இன்னும் (அடிமைகளின்) பிடரிகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையி(ல் செலவழிப்பதி)லும், வழிப்போக்கருக்கும் உரித்தானதாகும். (அத் தௌபா : 60)



> "புகறாக்கள்" என்போர் அடிப்படையான மற்றும் அத்தியவசியமான தேவைகளைக் கூட நிவர்த்திசெய்து கொள்வதற்கு முடியாத நிலையிலுள்ள வசதியற்றோர் ஆவர்.



# எமது ஹஜ்



# 6

மக்காவுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வது இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களுள் ஐந்தாம் கடமையாகும்.

இது உள்ளம், உடல், பணம் ஆகியவைகளால் நிறைவேற்றப்பட வேண்டியதொரு வணக்கமாகும்.

உடற் பலமும் பணவசதியும் பெற்ற ஒருவர் ஆயுளில் ஒரு தடவையேனும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயமானதொரு கடமையே "ஹஜ்" கடமையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

(ஆகவே) எவர்கள் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ்ஜு செய்வது கடமையாகும் எவரேனும் (இதை) நிராகரித்தால் அப்போது (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தா(ர் அனைவ)ரை விட்டும் தேவையற்றவன். (ஆலு இம்றான் : 97)

## உள்ளடக்கம்

- மக்கா மற்றும் அல் மஸ்ஜித் அல் ஹராம் என்பவற்றின் சிறப்புகள்
- ஹஜ் என்பதன் பொருள்
- "ஹஜ்" கடமையை நிறைவேற்றுவதற்கான இயலுமையும் அதற்குரிய வித்தியாசமான சூழ்நிலைகளும்
- ஒரு பெண், தனது ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு மஹரமான ஆணின் துணை இருக்க வேண்டும்.
- ஹஜ்ஜின் சிறப்புகள்
- ஹஜ்ஜுக்கான இலக்குகள்
- உம்றா
- ஹஜ்ஜுப் பெருநாள்
  - "ஹஜ்ஜுப் பெருநாள்" தினத்தன்று நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் என்ன ?
  - உழ்ஹிய்யாவிற்கான மிருகங்கள் கொண்டிருக்க வேண்டிய நிபந்தனைகள்
  - அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களை என்ன செய்ய வேண்டும்?
- புனித மதீனாவைத் தரிசித்தல்

# அல் ஹஜ்

## மக்கா மற்றும் மஸ்ஜிதுல் ஹராம் என்பனவற்றின் மகிமைகள் :

"மஸ்ஜிதுல் ஹராம்" என்பது அறபுத் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் மக்கா நகரிலே இருக்கின்றது.

இஸ்லாத்தின் பார்வையில் அதற்கு பல்வேறு சிறப்புக்கள் உண்டு.

அவற்றுள் சில:

1 புனித க.்.பா அமைந்துள்ளமை:

சுமார் சதுரமான பெட்டி வடிவத்தில் அமைந்துள்ள ஒரு கட்டடமே க.்.பாவாகும்.

இது மக்கா நகரிலுள்ள மஸ்ஜிதுல் ஹராமின் மத்தியில் அமைந்துள்ளது.

இதுவே, தொழுகையின் போதும் அல்லாஹ் ஏவிய இன்னும் சில வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுகின்ற போதும் முஸ்லிம்கள் முன்னோக்க வேண்டிய திசையாகவும் இருக்கின்றது.

அல்லாஹ்வின் உத்தரவிற்கு இணங்க இதனை இப்ராஹீம் மற்றும் இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவருமே கட்டினர். பின்னர் இது பலதடவைகள் புனர்நிர்மானம் செய்யப்பட்டது.

அல்லாஹ் கூறுகின்றான் :

இன்னும், (நினைவு கூருங்கள்) இப்றாஹீமும், இஸ்மாயீலும் அவ்வீட்டின் அடித்தளங்களை உயர்த்திய பொழுது "எங்களுடைய இரட்சகனே! (உனக்காக நாங்கள் செய்த இப்பணியை) எங்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே (யாவற்றையும்) செவியேற்கிறவன்; நன்கறிகிறவன்"

(அல் பகரா : 127)

க.்.பா மீள்நிர்மானம் செய்கின்ற போது நபி(ஸல்) அவர்கள் மக்காவிலுள்ள மக்களோடு இணைந்து "ஹஜருல் அஸ்வதை" அதற்குரிய இடத்தில் வைத்தார்கள்.



> பல்வேறு அல் குர்ஆனிய வசனங்கள் பொறிக்கப்பட்ட (எழுதப்பட்ட)நிலையில், புனித க.்.பாவின் வாயில்

2 இது பூமியில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாயில்:

அல்லாஹ்வின் தூதரே! உலகில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாயில் எது ? என்று நபித்தோழர்களுள் ஒருவர் நபியவர்களிடம் வினவிய போது, அது அல் மஸ்ஜிதுல் ஹராமாகும் என அவர்கள் பதிலுரைத்தார்கள்.

பிறகு எது ? என்று கேட்க "அல் மஸ்ஜிதுல் அக்ஸா" என்று கூறினார்கள். இரண்டுக்குமிடையில் எவ்வளவு காலம் இடைவெளி உண்டு ? எனக் கேட்டதற்கு,"நாற்பது ஆண்டுகள்" எனப் பதில் கூறினார்கள்.

எந்த இடத்தில் தொழுகைக்கான நேரம் வந்துவிடுகின்றதோ அங்கு நீர் தொழுது கொள். ஏனெனில், உரிய நேரத்தில் தொழுவதில் தான் சிறப்பு உண்டு எனக் கூறினார்கள். (அல் புஹாரி 3186, முஸ்லிம் 520)

3 அங்கு நிறைவேற்றப்படும் தொழுகைகளுக்கு பன்மடங்கு நன்மைகள் உண்டு.

எனது பள்ளி வாயிலில் (மதீனாப் பள்ளி) ஒரு தொழுகையை நிறைவேற்றுவது "அல் மஸ்ஜிதுல் ஹராம்" தவிர்ந்த ஏனையப் பள்ளிவாயில்களில் நிறைவேற்றப்படும் ஆயிரம் தொழுகைகளை விட சிறந்ததாகும்.

அல்மஸ்ஜிதுல் ஹராமிலே நிறைவேற்றப்படும் ஒரு தொழுகையானது, ஏனைய பள்ளிவாயில்களில் நிறைவேற்றப்படும் ஒரு இலட்சம் தொழுகைகளை விட சிறந்ததாகும். (இப்னு மாஜா∴ :1406, அஹ்மத்:14694)

4 அல்லாஹ்வும் அவனது தூதரும் இதனைப் புனிதப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை.

அல்லாஹ் கூறுகின்றான் :

"நான் கட்டளையிடப்பட்டதெல்லாம் (மக்காவாகிய) இந்த ஊரின் இரட்சகனை நான் வணங்குவதைத் தான்; அவன் எத்தகையவனென்றால், இதை அவன் புனிதமாக்கி வைத்துள்ளான்; ஒவ்வொரு பொருளும் அவனுக்கே உரியது! இன்னும், அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் உள்ளவனாக (முஸ்லீமாக) இருக்குமாறும் நான் ஏவப்பட்டுள்ளேன்" (என்று நபியே! நீர் கூறுவீராக!). (அந் நம்ல் : 91)

மக்காவை அல்லாஹ் புனிதப் பிரதேசமாகவும் அதி உயர் பாதுகாப்பு வலயமாகவும் பிரகடணப்படுத்தியுள்ளான்.

அங்கு இரத்தம் சிந்துதல், அநியாயம் செய்தல், வேட்டையாடுதல், அங்குள்ள மரங்களையோ அல்லது புற்களையோ வெட்டுதல் போன்ற விடயங்களை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான்.

"மக்காப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக மாற்றியது அல்லாஹ் தான், மனிதர்கள் அல்ல.

எனவே, அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்ட ஒருவர், இங்கு இரத்தம் சிந்தவோ அல்லது இங்குள்ள மரங்களை வெட்டவோ கூடாது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அல் புகாரி : 104, முஸ்லிம் : 1354)

5 இதுவே, பூமியில் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மிகவும் விருப்பமான இடம்.

நபித் தோழர்களுள் ஒருவர் கூறுகின்றார் :

"அல் ஹஸ்வரா" எனுமிடத்தில் தனது ஒட்டகத்தின் மீது நபி (ஸல்) அவர்கள் அமர்ந்தவராக, மக்காவை நோக்கி பின்வருமாறு கூறுவதை நான் பார்த்தேன்.

"அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ்வினது பூமியில் மிகச் சிறந்ததாகவும் அவனுக்கு மிகவும் விருப்பமானதாகவும் நீயே இருக்கின்றாய். நான் இங்கிருந்து வெளியேற்றப்படவில்லையெனில்; உன்னை விட்டு,விட்டு ஒருபோதும் நான் சென்றிருக்கமாட்டேன்" (அத் திர்மிதி : 3925, அந் நஸாயி பில் குப்றா : 4252)

6 புனித இல்லத்திற்கு சமூகமளிக்க முடியுமானவர் மீது "ஹஜ்" செய்வதை அல்லாஹ் கட்டாயக் கடமையாக்கியுள்ளமை.

"ஹஜ்" கடமையை நிறைவேற்ற வருமாறு இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்களை நோக்கி அழைப்புக் கொடுத்த போது, அனைத்து இடங்களிலிருந்தும் அவர்கள் அதனை நிறைவேற்ற வந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் இதைப் பற்றிக் கூறியதற்கு இணங்க, அனைத்து நபிமார்களும் ஹஜ் கடமையை நிறைவேற்றியுள்ளனர். இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு தனது உத்தரவை அறிவித்தது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"ஹஜ்ஜுக்காக (அதைச் செய்ய வருமாறு) நீர் மனிதர்களை அழைப்பீராக!" (அவ்வழைப்பை ஏற்று) அவர்கள் நடந்தவர்களாக உம்மிடம் வருவார்கள் ; இன்னும், இளைத்த (களைப்புற்ற) ஒட்டகங்களின் மீது (சவாரி செய்தவர்களாகவும் வருவார்கள்.) அவை தூரமான ஒவ்வொரு வழியிலிருந்தும் (அவர்களைக் கொண்டு) வரும். (அல் ஹஜ் : 27)



> ஏழு தடவைகள் க.்.பாவை வலம் வருவதானது, ஹஜ் மற்றும் உம்ராக்களின் போது நிறைவேற்றப்படுகின்ற கடமைகளுள் ஒன்றாகும்

## > "ஹஜ்" என்பதன் பொருள்

குறித்த சில வணக்கங்களை நிறைவேற்றும் நோக்கில், புனித இறை இல்லத்தை நோக்கி மேற்கொள்ளப்படும் புனித பயணத்தையே "ஹஜ்" என்ற பதம் குறிக்கின்றது.

இங்கு, நிறைவேற்றப்படும் சில "வணக்கங்கள்" என்பது நபி (ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட சொல் செயல் சார்ந்த விடயங்களைக் குறிக்கும்.

உதாரணமாக, இஹ்ராம் உடை அணிதல், ஏழு தடவைகள் புனித க.்.பாவை வலம் வருதல், சபா, மர்வா மலைகளுக்கிடையில் ஏழு முறைகள் தொங்கோட்டம் ஓடுதல், அறபா வெளியில் தரித்தல், மினாவிலுள்ள ஜமராத்துக்களில் கல்லெறிதல் போன்றவற்றைக் கூறலாம்.

ஹஜ் செய்வதானது, அதன் யாத்திரிகர்களுக்கு "அல்லாஹ் ஒருவன்" என்பதை பிரகடனப்படுத்தல், இறைவனின் உயர்ந்த மன்னிப்பைப் பெறல், முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளல், மார்க்கச் சட்டங்களை கற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறு பாரிய பலன்களை வழங்குகின்றது.

ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான நேரம் :

"துல் ஹிஜ்ஜா" மாதத்தின் எட்டாம் நாள் முதல் பதின் மூன்றாம் நாள் வரையிலான காலப்பகுதியிலேயே ஹஜ்ஜுக்கான கிரியைகள் நிறைவேற்றப்படுகின்றன.

"துல் ஹிஜ்ஜா" என்பது இஸ்லாமிய வருட நாட்காட்டியின் பன்னிரெண்டாம் மாதமாகும்.

### யார் "ஹஜ்" கடமையை நிறைவேற்ற வேண்டும் ?

முஸ்லிமாக இருத்தல், பருவ வயதை அடைந்த புத்தி சுவாதீனமுள்ளவராக இருத்தல், இக்கடமையை நிறைவேற்ற இயலுமான-வராக இருத்தல் போன்ற விடயங்கள் "ஹஜ்" கடமையாவதற்குரிய நிபந்தனைகளாகக் கருதப்படும்.

"இயலுமை" என்பதன் பொருள் :

சட்டபூர்வமானதும் நியாயமானதுமான வழிமுறை-களைப் பயன்படுத்தி, இறை இல்லத்திற்கான பயணத்தை மேற்கொள்ள முடியுமாயிருத்தல், உயிர் மற்றும் உடமைகளுக்கான பாதுகாப்புடன்

பெரியளவிலான சிரமங்கள் ஏதுமின்றி ஹஜ்ஜுக்கான கிரியைகளை நிறைவேற்ற முடியுமாயிருத்தல், ஹஜ் கடமையை நிறைவேற்றத் தேவைப்படும் பணமானது தனக்கும் தனது செலவில் தங்கிவாழ்வோரினது தேவைகளுக்கும் மேலதிகமாக இருத்தல் போன்ற விடயங்களையே "இயலுமை" என்ற இந்த அறபுப் பதம் குறிக்கின்றது.

## > "ஹஜ்" கடமையை நிறைவேற்றுவதற்கான இயலுமையும் அதற்குரிய வித்தியாசமான சூழ்நிலைகளும்

1 ஒருவர், தனது ஹஜ் கடமையை அவராகவே நிறைவேற்றிக் கொள்ள முடியுமான நிலையில் இருத்தல்.

அதாவது, இதனை நிறைவேற்ற அவரிடம்

போதியளவு பண வசதி காணப்படல், பயணத்தின் போது வழமையாக ஏற்படும் சிரமத்தை விட மேலதிகமான எந்தவிதக் கஷ்டங்களுமின்றி இறை இல்லத்தை நோக்கி சுயமாக பயணிக்க முடியுமாக இருத்தல்.

இந்நிலையில் அவரே கட்டாயமாக தனது ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும்.

2 ஒருவர், தனது ஹஜ்ஜை வேறொருவரின் மூலம் நிறைவேற்றுதல்.


நோய் அல்லது முதுமை காரணமாக ஒருவர் தனது ஹஜ்ஜை சுயமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலையில், இவர் சார்பாக இதனை நிறைவேற்ற வேறொருவர் இருந்து, அதற்கான செலவுகளை வழங்குவதற்கான பண வசதியும் இவரிடம் இருப்பின், இந்நிலையில் இவர் சார்பாக அவரை அனுப்பி வைப்பது கடமையாகும்.

3 ஒருவர், தனது ஹஜ்ஜை சுயமாகவோ அல்லது வேறொருவர் மூலமோ நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலையில் இருத்தல்.

இவ்வாறான நிலையிலுள்ளவர் மீது ஹஜ் விதியாகமாட்டாது (கடமையாகாது).

உதாரணமாக, தனக்கும் தனது குடும்பத்தினர்களது செலவுகளுக்கும் மேலதிகமாக ஹஜ்ஜை நிறைவேற்றுமளவு பணவசதி இல்லாத ஒருவரைக் குறிப்பிடலாம்.

இதற்காக இவர் பணம் சேகரிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக,வசதி ஏற்படுகின்ற போது தான் இவர் மீது ஹஜ் கடமையாகும்.



## > ஒரு பெண், தனது ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு மஹ்ரமான ஆணின் துணை வேண்டும்.

ஒரு பெண், தனது ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு, அவளுடன் தனது கணவனர் அல்லது மஹ்ரமான(திருமணம் செய்துகொள்ள முடியாத உறவினர்) மற்றுமோர் உறவினர் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். இவ்வாறானதோர் ஆணின் துணையின்றி ஹஜ் கடமையை நிறைவேற்றுவது ஒரு பெண்ணின் மீது கடமையாகாது.

ஒரு பெண்ணுக்குரிய மஹ்ரமான ஆண்கள் வருமாறு :

தந்தை, தந்தையின் தந்தை, மகன்,பேரன், சகோதரன், அவனின் பிள்ளைகள், சிறிய தந்தை, மாமா. (பார்க்க பக்கம்:227)

ஒரு பெண், மஹ்ரமான ஓர் ஆணின் துணையின்றி தனக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாப்பானதொரு முறையில் ஹஜ் கடமையை நிறைவேற்றினால், அந்த ஹஜ் ஏற்றுக்கொள்ளப்படும்.

## > ஹஜ்ஜின் சிறப்புகள்

ஹஜ்ஜின் மகிமைகள் :

1. இது மிகச் சிறந்த வணக்கங்களுள் ஒன்றாகும்.

   மிகச் சிறந்த வணக்கம் எது என்று நபியவர்களிடம் வினவப்பட்ட போது "அல்லாஹ்வையும் அவனது

   தூதரையும் நம்புதல்" எனக் கூறினார்கள். பிறகு எது? எனக் கேட்க "அல்லாஹ்வுடைய பாதையில் போராடுதல்" எனக் கூறினார்கள். பிறகு எது? எனக் கேட்கப்பட்ட போது "அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்" என்றார்கள்.

   (அல் புகாரி : 1447, முஸ்லிம் : 83)

2. பாவமன்னிப்பை பெறுவதற்கான மிக உயர்ந்த பருவகாலம்.

   "பாவங்களில் ஈடுபடாத நிலையிலும் தகாத உறவுகளில் ஈடுபடாத நிலையிலும் யாராவது ஒருவர் ஹஜ்ஜை நிறைவேற்றினால், அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவங்கள் கலையப்பட்ட நிலையில் வீட்டுக்குத் திரும்புகின்றார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

   (அல் புகாரி : 1449, முஸ்லிம் : 1350)

3. நரக விடுதலையைப் பெறுவதற்கான பாரியதொரு சந்தர்ப்பம்.

   "நரகிலிருந்து அதிகமானோரை விடுதலை செய்யும் பணியை அல்லாஹ் அறபா தினத்தில் மேற்கொள்வது போன்று, வேறு எந்தத் தினத்திலும் செய்வதில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 1348)

4. ஹஜ்ஜுக்கான கூலி சுவன பாக்கியமாகும்.

   "ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கான கூலி சுவனத்தைத் தவிர வேறெதுவுமில்லை." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

   (அல் புகாரி : 1683, முஸ்லிம் : 1349)

உடல் மற்றும் உளச்சுத்தம் என்பவற்றுடன் நபியவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றிய நிலையில், ஹஜ் கடமையை நிறைவேற்றியவர்கள் மாத்திரமே மேற்குறித்த சிறப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## > ஹஜ்ஜுக்கான இலக்குகள்

ஹஜ்ஜின் மூலம் தனிமனிதர்களும் சமூகமும் அடைந்து கொள்ள வேண்டிய பல்வேறு இலக்குகளும் நோக்கங்களும் உள்ளன. இதன் காரணமாகவே, அல்லாஹ்வினது நெருக்கத்தைப் பெறும் நோக்கில் ஹாஜிகள் செய்கின்ற "அறுத்துப் பலியிடுதல்" போன்ற கடமைகளைப் பற்றிக்கூறியதன் பின்னர் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"அவைகளின் மாமிசமோ அல்லது இரத்தங்களோ அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக அவனது "தக்வாவே" அவனைச் சென்றடைகின்றது. (அல் ஹஜ் : 37)

"க.'.பாவை வலம் வருதல், சபா மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், ஜம்ராக்களில் கல்லெறிதல் போன்ற அனைத்துக் கிரியைகளும் அல்லாஹ்வினது ஞாபகத்தை உருவாக்குவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூ தாவூத் : 1888)

ஹஜ்ஜின் மூலம் அடையப்பெற வேண்டிய சில இலக்குகளும் நோக்கங்களும் :

### 1 அல்லாஹ்வுக்கான தனது கட்டுப்பாட்டையும் பணிவையும் வெளிக்காட்டுதல்.

ஹாஜிகள் அனைத்து விதமான அலங்காரங்கள் மற்றும் ஆடம்பரங்களைக் கைவிட்டு, தங்களது ஏழ்மையை இறைவனுக்கு முன்னிலையில் வெளிக்காட்டும் வகையில் தைக்கப்படாத எளிமையான துணிகளை அணிந்து கொள்கின்றனர்.

மேலும், அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்படும் நிலையிலிருந்து தங்களது கவனத்தைத் திருப்பிவிடுகின்ற உலக அலுவல்களை முற்றும் துறந்து விடுகின்றனர்.

பின்னர், இவர்கள் அறபா வெளியில் ஒன்று கூடி இறைவனுக்கு முன்னால் அவனை பயந்தவர்களாகவும், புகழ்ந்தவர்களாகவும் அவன் செய்த அருட்கொடைகளை எண்ணி நன்றி செலுத்தியவர்களாகவும் தங்களது பாவங்களுக்கு மன்னிப்பைக் கேட்டு நிற்கின்றனர்.

இதன் விளைவாக, இவர்கள் பாவமன்னிப்பையும் இறை அன்பையும் பெறுகின்றனர். இவ்வாறு இவர்கள் நடந்து கொள்கின்ற போது அல்லாஹ்வுக்கு இவர்கள் வெளிக்காட்டும் கட்டுப்பாட்டையும் பணிவையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

### 2 அல்லாஹ் செய்த அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி தெரிவித்தல்.

ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்ற போது, பின்வரும் இரண்டு விடயங்களுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கப்படுகின்றது. ஒன்று பணம் எனும் அருட்கொடை, மற்றது உடலாரோக்கியம் எனும் அருட்கொடை. மனிதன் அனுபவிக்கின்ற இவ்வுலக அருட்கொடைகளுள் இவ்விரண்டும் மிக உன்னதமானவைகளாகும்.

ஹஜ்ஜின் போது, அல்லாஹ்வினது நெருக்கத்தைப் பெறும் நோக்கில் ஹாஜிகள் உடலியல் கஷ்டங்களை அனுபவிப்பதன் மூலமும் பணத்தை செலவிடுவதன் மூலம் உன்னதமான இந்த



> ஹஜ் மற்றும் உம்ரா போன்ற கடமைகளை நிறைவேற்ற விரும்பும் ஒருவர், அவைகள் தொடர்பான இஸ்லாமிய சட்டங்களை அவர் அவச-ியம் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

இரண்டு அருட்கொடைகளுக்கும் தங்களது நன்றிகளை இவர்கள் தெரிவிக்கின்றனர்.
நன்றி தெரிவிப்பது ஒரு கடமையென்பதை பகுத்தறிவு மாத்திரமல்ல எமது மார்க்கமும் ஏறறுக்கொண்டுள்ளது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

### 3 உலகலாவிய முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுகூடும் சர்வதேச மாநாடு.

ஹஜ்ஜின் போது, உலகின் நாலா திசைகளிலிருந்தும் முஸ்லிம்கள் ஒன்றுகூடுகின்றனர்.

இங்கு, அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து அன்பு கொள்கின்றனர். மனிதர்களிடையே காணப்படுகின்ற இன, மொழி, நிற, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்ற அனைத்து வேறுபாடுகளும் களையப்படுகின்றன.
மனிதம் நிறைந்த உயர்ந்த இந்த மாநாட்டில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு ஓர் அணியில் திரண்டு, நன்மை மற்றும் சத்தியம் என்பவற்றைப் போதிக்கவும் அதன் போது ஏற்படும் துயரங்களைச் சகித்துக் கொள்ளவும் தீர்மானிக்கின்றனர்.
இவ்வுலக விடயங்களை விண்ணுலக காரியங்களோடு தொடர்புபடுத்துவதே இம்மாநாட்டின் மிக உயர்ந்த இலக்காகும்.

### 4 மறுமை நாளை நினைவுபடுத்துதல் :

ஒரு ஹாஜி வழமையான தனது ஆடையைக் களைந்து விட்டு இஹ்ராம் ஆடையை அணிந்தவராக அறபா வெளியில் நிற்கின்ற போது, அவர் அங்கு ”கபனை” ஒத்த ஆடைகளை அணிந்த மக்கள் திறளைப் பார்க்கின்றார். அப்போது, அவர் காணும் இந்தக் காட்சியானது, தனது மரணத்திற்குப் பிறகு நடக்கவிருக்கும் நிகழ்வுகளை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதோடு இந்நாளுக்கான தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதலையும் வழங்குகின்றது.
எனவே, ஹஜ் கடமையானது ஒரு முஸ்லிமுக்கு மறுமை நாளை நினைவூட்டுகின்றது.

### 5 ஹஜ்ஜின் போது மேற்கொளளப்படுகின்ற சொல், செயல் சார்ந்த அனைத்து கிரியைகள் மூலமும் "அல்லாஹ்வை மாத்திரமே வணங்குதல் வேண்டும்" என்ற செய்தியை வெளிக்கொணருதல்.

ஹாஜிகளின் அடையாளச் சின்னமான "தல்பியாவை" உச்சாடணம் செய்வதன் மூலம் இந்த உண்மை உணரப்படுகின்றது. எனவே தான், ஒரு நபித்தோழர் இந்த "தல்பியா" பற்றி விபரிக்கையில் இவ்வாறு கூறினார். "இது ஏகத்துவத்தின் தூய வடிவமாகும்" (முஸ்லிம் : 1218)
ஹஜ்ஜினது சொல், செயல் சார்ந்த அனைத்து கிரியைகளின் போதும் இந்த "தூய ஏகத்துவம்" மிகத் துல்லியமாக வெளிப்படுத்தப்படுகின்றது.



## > உம்ரா


இஹ்ராம் உடை அணிதல், க.்.பாவை ஏழு தடவைகள் வலம் வருதல், ஸபா மர்வா மலைகளுக்கிடையில் ஏழு தடவைகள் தொங்கோட்டம் ஓடுதல், தலை முடியை சிரைத்தல் அல்லது குறைத்தல் போன்ற கிரியைகளில் ஈடுபடுவதன் மூலம் அல்லாஹ்வுக்காச் செய்யப்படும் ஒரு வணக்கமே "உம்ரா" ஆகும்.

உம்ரா தொடர்பான இஸ்லாமியச் சட்ட விதி : உம்ராக் கடமையை நிறைவேற்ற முடியுமானோர், ஆயுளில் ஒரு தடவையேனும் அதனை மேற்கொள்வது கடமையாகும். இதனைத் திரும்பத் திரும்ப நிறைவேற்றுவது "முஸ்தஹப்" ஆகும்.

இதற்குரிய காலம் :

வருடத்தின் எந்தக் காலப்பகுதியிலும் இதனை நிறைவேற்றலாம். றமழான் மாதத்தில் இதனை நிறைவேற்றுவதற்கு பன்மடங்கு கூலிகள் உண்டு.

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் : "றமழான் மாதத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு உம்ரா, நன்மையில் ஒரு ஹஜ்ஜுக்குச் சமமாகும்"
(அல் புகாரி : 1764, முஸ்லிம் : 1256)



> உம்ராக் கடமையை நிறைவேற்ற முடியுமான ஒருவர், தனது ஆயுளில் ஒரு தடவையேனும் அதனை மேற்கொள்வது கடமையாகும்.

## ஹஜ்ஜுப் பெருநாள்

இது முஸ்லிம்களுக்கான இரண்டாவது பெருநாளாகும். வருடத்தில் "துல் ஹிஜ்ஜா" (இம்மாதமானது இஸ்லாமிய வருட நாற்காட்டியின் பன்னிரெண்டாவது மாதமாகும்) மாதம் பத்தாம் நாளன்று இது கொண்டாடப்படுகின்றது.
இது பல்வேறு சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில :

1 இது வருடத்தின் சிறந்த நாட்களுள் ஒன்றாகும்.

வருடத்தின் மிகச் சிறந்த நாட்கள் துல் ஹிஜ்ஜா மாதத்தின் முதற் பத்து தினங்களாகும். நபி (ஸல்) அவர்கள் இதனை இவ்வாறு கூறினார்கள்:

"இந்தப் பத்து நாட்களில் செய்யப்படும் நல்ல செயல்களாகின்றன, ஏனைய நாட்களில் செய்யப்படும் அனைத்து நற்செயல்களை விடவும் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதாகும். அல்லாஹ்வின் பாதையில் புரியப்படும் அறப்போரை விடவுமா இவைகள் மேலானவை ? என அங்குள்ளவர்கள் கேட்க "ஆம்". ஆனால்,"ஒருவர் ஜிஹாதுக்கு தனது உயிர் உடமைகளோடு செல்கின்றார். பிறகு இவைகளுள் எதுவுமின்றி வீடு திரும்புகின்றார். இவ்வாறான இந்த மனிதரைத் தவிர" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள். (அல் புகாரி: 926, அத்திர்மிதி: 757)

2 இந்த நாளில் தான், பெரிய ஹஜ்ஜினது மிகவும் உயர்ந்ததும் முக்கியமானதுமான கிரியைகள் இடம்பெறுகின்றன. உதாரணமாக, கஃ. பாவை வலம் வருதல், மிருகங்களை அறுத்துப் பலியிடுதல், ஷைத்தானுக்கு கல்லெறிதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### "ஹஜ்ஜுப் பெருநாள்" தினத்தன்று நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் என்ன ?

ஹஜ் கடமைக்காகச் செல்லாத முஸ்லிம்கள்" நோன்புப் பெருநாளில் செய்கின்ற கடமைகளுள் "ஸகாதுல் பித்ர்" தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களையும் இத்தினத்தில் நிறைவேற்ற வேண்டும். "ஸகாதுல் பித்ர்" என்பது நோன்புப் பெருநாளைக்கு மாத்திரம் உரியதொரு கடமையாகும்.

"முஸ்தஹப்" எனும் நிலையிலுள்ள மிருகத்தை அறுத்துப் பலியிடும் வணக்கமானது,ஹஜ்ஜுப் பெருநாளின் தனித்துவ அடையாளமாகக் கருதப்படுகின்றது.

இது அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் நோக்கில், நிறைவேற்றப்படும் ஒரு வணக்கமாகும்.

"உழ்ஹிய்யா" அல்லது மிருகத்தை அறுத்துப் பலியிடுதல் :

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் நோக்கில், ஆடு அல்லது மாடு அல்லது ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்துப் பலியிடும் செயலையே "உழ்ஹிய்யா" எனும் இச்சொல் குறிக்கின்றது.

மிருகத்தை அறுத்துப் பலியிடுவதற்கான நேரமானது, பெருநாள் தொழுகையின் பிறகிலிருந்து ஆரம்பமாகி "துல் ஹிஜ்ஜாஹ்" பிறை 13ஆம் நாள் மஃரிப் வரையிலாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

"உங்கள் இரட்சகனைத் தொழுது, அவனுக்கே நீங்கள் அறுத்துப்பலியிடுங்கள்" (அல் கௌஸர் : 2)

இங்கு, இடம்பெற்றிருக்கும் தொழுகை மற்றும் அறுத்துப்பலியிடல் என்பது பெருநாள் தொழுகையையும் அதன்பிறகு நிறைவேற்றப்படும் "உழ்ஹிய்யா"எனும் வணக்கத்தினையுமே குறிக்கும்.

"உழ்ஹிய்யா" தொடர்பான இஸ்லாமியச் சட்டங்கள்:

உழ்ஹிய்யாக் கொடுக்க முடியுமான ஒருவர்,இதனை நிறைவேற்றுவது "சுன்னா முஅக்கதாவாகும்". எனவே, ஒரு குடும்பத்தலைவர் தனக்காகவும் தனது குடும்பத்தினருக்காகவும் இதனை நிறைவேற்றலாம்.

இக்கடமையை நிறைவேற்ற விரும்பும் ஒருவர், துல் ஹிஜ்ஜாஹ் மாதத்தின் முதல்நாள் தொடக்கம் (பத்தாவது நாள் வரையிலான காலப் பகுதியில்) மிருகத்தை அறுத்துப் பலியிடும் வரை தனது தலைமுடி மற்றும் நகங்கள் என்பவற்றை வெட்டவோ அல்லது வேறு இடங்களிலுள்ள முடிகளை களையவோ கூடாது.

### உழ்ஹிய்யாவிற்கான மிருகங்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

**1** ஆடு அல்லது மாடு அல்லது ஒட்டகம் போன்ற மிருகங்களாக இருத்தல் வேண்டும். இவைகளல்லாத வேறு மிருகங்களையோ அல்லது பறவைகளையோ உழ்ஹிய்யாவாகக் கொடுக்க முடியாது.
ஒருவரின் சார்பில் (அவரின் குடும்பம் உட்பட) ஒரு வெள்ளாட்டையோ அல்லது செம்மறி ஆட்டையோ அறுத்துப்பலியிடலாம். அதுபோலவே ஏழு பேரின் சார்பில் ஓர் ஒட்டகத்தையோ அல்லது ஒரு மாட்டையோ உழ்ஹிய்யாவாகக் கொடுக்கலாம்.

**2** இவைகள் குறித்த வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
செம்மறி ஆடு ஆறு மாதங்கள் கொண்டதாகவும் வெள்ளாடு ஒரு வருடம் நிரம்பியதாகவும் மாடு மற்றும் ஒட்டகம் முறையே இரண்டு வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களைக் கொண்டவைகளாகவும் இருத்தல் வேண்டும்

**3** இவைகள் வெளிப்படையான எந்தவிதக் குறைகளும் அற்ற மிருகங்களாக இருத்தல் வேண்டும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நான்கு வகையான மிருகங்களை உழ்ஹிய்யாவுக்காக அறுத்துப்பலியிடக் கூடாது: வெளிப்படையான குருட்டுத்தன்மை கொண்ட, வெளிப்படையான நோயுள்ள, வெளிப்படையான நொண்டித்தன்மையுள்ள, கடுமையாக மெலிந்தவைகளாகும். (அந் நஸாயி : 4371, அத் திர்மிதி : 1497)

### அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களை என்ன செய்ய வேண்டும்?

- இந்த மாமிசங்களை விற்பனை செய்வது ஹராமாகும்.
- இவைகளை மூன்று பங்குகளாக பிரித்துக் கொள்வது முஸ்தஹப் ஆகும்.
  முதலாம் பங்கை சாப்பிடுவதற்கும் இரண்டாம் பங்கை அன்பளிப்பாக வழங்குவதற்கும் மூன்றாம் பங்கை ஏழைகளுக்கு ஸதகாவாக வழங்கவும் பயன்படுத்தலாம்.
- ஒருவர், தனக்காக வழங்கவுள்ள மிருகத்தை அறுத்துப்பலியிடுவதற்கான பொறுப்பை (அதற்கான பணத்தைக் கொடுத்து) வேறொருவருக்கு வழங்கலாம்.
  உதாரணமாக, உழ்ஹிய்யாவுக்கான மிருகங்களை அறுத்து ஏழைகளுக்கு விநியோகிக்கும் பணியை மேற்கொள்கின்ற நம்பகமான நலன்புரி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதைக் குறிப்பிடலாம்.



> அறுத்துப் பலியிடப்படும் மிருகங்கள் எதுவிதக் குறைகளும் அற்றவைகளாக இருக்கவேண்டுமென இஸ்லாம் நிபந்தனை இட்டுள்ளது.

## புனித மதீனாவைத் தரிசித்தல்

இறை நிராகரிப்பாளர்கள் நபி (ஸல்) அவர்களை துன்புறுத்திய போது, மக்காவைத் துறந்து சென்று, குடியேறிய நகரமே மதீனாவாகும்.
அங்கு, நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட முதற்பணி பள்ளிவாயிலை நிறுவியமையாகும். பின்னர்,இது அறிவு மற்றும் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கான கேந்திர நிலையமாக மாறியது.
ஹஜ் காலத்திலோ அல்லது வேறு காலத்திலோ இப்பள்ளிவாயிலைத் தரிசிப்பது, மிகவும் வலியுறுத்தப்பட்ட முஸ்தஹப்பானதொரு வணக்கமாகும்.
இதனை இவ்வாறு தரிசிப்பதற்கும், ஹஜ்ஜுடைய கிரியைகளுக்குமிடையில் எவ்விதத் தொடர்புமில்லை. மேலும், இது குறித்ததொரு வேளையில் நிறைவேற்றப்பட வேண்டியதொரு வணக்கமாக வரையறுக்கப்படவுமில்லை.
"நன்மையை நாடிய நிலையில், பயணம் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களாக மூன்று பள்ளிவாயில்களே உள்ளன. ஒன்று மஸ்ஜிதுல் ஹராம் இரண்டாவது எனது பள்ளிவாயில் (மதீனா) மூன்றாவது மஸ்ஜிதுல் அக்ஸா என்பவைகள் ஆகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல் புகாரி : 1139, முஸ்லிம் : 1397, அபூ தாவூத் : 2033)
"எனது பள்ளிவாயிலில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகையானது, மஸ்ஜிதுல் ஹராம் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொழப்படும் ஆயிரம் தொழுகைகளை விடச் சிறந்தது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல் புகாரி : 1133, முஸ்லிம் : 1394)

### புனித மதீனாவில் தரிசிக்கப்படவேண்டிய இடங்கள் :

நபி (ஸல்) அவர்களது பள்ளிவாயிலை தரிசிப்பதும் அதில் தொழுவதுமே மதீனாவைத் தரிசிக்க வரும் ஒரு முஸ்லிமின் நோக்கமாக இருக்க வேண்டும். எனினும், இங்கு பின்வரும் இடங்களையும் தரிசிக்கலாம்.

**1** "அர் றவ்ழதுஷ் ஷரீபா" எனுமிடத்தில் தொழுதல்.

இது, நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாயிலின் முன்பகுதியான நபியவர்களின் வீட்டுக்கும் மிம்பருக்குமிடையில் இடைப்பட்ட குறுகியதொரு பகுதியையே குறிக்கின்றது. இந்த இடத்தில் தொழுவதற்கு பெரியளவிலான சிறப்புக்கள் உண்டு.



"எனது வீட்டுக்கும் எனது மிம்பருக்குமிடைப்பட்ட பகுதியிலே சுவனத்தின் பூங்காக்களுள் ஒன்று இருக்கின்றது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல் புகாரி : 1137, முஸ்லிம் : 1390)

**2** நபி (ஸல்) அவர்களுக்கு "ஸலாம்" கூறுதல்.

நபி (ஸல்) அவர்களின் மண்ணறைக்குச் சென்று, "கிப்லா" தனக்குப் பின்னால் இருக்கும் நிலையில், அதனை முன்னோக்கி நின்று தாழ்ந்த குரலில் ஒழுக்கத்துடன் பின்வருமாறு கூற வேண்டும்.

"அஸ்ஸலாமு அலைக யா ரஸூலல்லாஹ் வறஹ்மதுல்லாஹி வபரகாதுஹ் அஷ்ஹது அன்னக பல்ல.்.தர் ரிஸாலா வஅத்தைதல் அமானா வனஸஹ்தல் உம்மஹ் வஜாஹத்த

பில்லாஹி ஹக்க ஜிஹாதிஹ் வஜஸ ராக்கல்லாஹு" அன் உம்மதிக் அப்லழ மா

ஜஸா நபிய்யுனா அன் உம்மதிஹ்"

"ஒருவர் எனக்கு "ஸலாம்" கூறினால், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக, அல்லாஹ் எனது உயிரைத் திருப்பித் தருகின்றான்"

என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூ தாவூத்:2041)

பின்னர், நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாகவும், நபித்தோழர்களுள் மிகச் சிறந்தவராகவும் இருந்த அபூ பக்ர் (றழி) அவர்களுக்கு ஸலாம் கூறுவதற்காக, வலது பக்கம் நோக்கி சற்று முன்னோக்கிச் செல்லவேண்டும்.

பிறகு,நபி (ஸல் )மற்றும் அபூ பக்கர் ஆகிய இருவருக்கும் பின்னர் மிகச் சிறந்த நபித் தோழர்களுள் ஒருவராகத் திகழ்ந்த இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்களுக்கு ஸலாம் கூறுவதற்காக அதே திசையை நோக்கி இன்னும் சற்று முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் மனிதர்களுள் மிகச் சிறந்தவராக இருந்தாலும் கூட, அவரால் யாருக்கும் எந்தவொரு நலனையோ அல்லது தீங்கையோ ஏற்படுத்தமுடியாது.

எனவே, இந்நிலையில் நபி (ஸல்) அவர்களிடம் பிரார்த்திப்பதும், உதவி கோருவதும் கூடாது. ஏனெனில், பிரார்த்தனை செய்வது உள்ளிட்ட அனைத்து வணக்கங்களும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே நிறைவேற்றப்பட வேண்டும். அவனுக்கு இதில் எந்தவொரு இணையும் கற்பிக்கக் கூடாது.

### 3 "குபா" பள்ளிவாயிலைத் தரிசித்தல்.

இஸ்லாமிய வரலாற்றில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாயில் இதுவாகும். உண்மையில், தனது பள்ளிவாயிலைக் கட்டுவதற்கு முன்னரே, நபி (ஸல்) அவர்கள் இதனை நிர்மாணித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இதனைத் தரிசித்து வந்தது போலவே மதீனாவிற்குச் செல்லும் ஒருவரும், இந்தப் பள்ளி வாயிலைத் தரிசிப்பது "முஸ்தஹப்" ஆகும்.

"ஒருவர் தனது வீட்டில் "வுழுச்" செய்துகொண்டு, குபா பள்ளிவாயிலுக்குச் சென்று, இரண்டு ரக்அத்துக்களைத் தொழுதால், அவர் ஒரு உம்ராக் கடமையை நிறைவேற்றிய நன்மையைப் பெறுவார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு மாஜா : 1412)



> "மஸ்ஜித் குபா" இஸ்லாமியவரலாற்றில் கட்டப்பட்டமுதல் பள்ளிவாயிலாகும்.



# எமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்



# 7

மனிதன், ஏழையாயினும் செல்வந்தனாயினும் இஸ்லாம் அவனது நலன்களையும் தொழில்களையும் மற்றும் நிதிசார்ந்த உரிமை-களையும் கவனத்திற் கொள்ளக்கூடியதும், பாதுகாக்கக்கூடியதுமான அனைத்து சட்டவரையறைகளையும் வகுத்துள்ளது.

மேலும், அவர்களுக்கிடையே பலமானதொரு சமூகப் பிணைப்பை உருவாக்கி, வாழ்வின் சகல துறைகளிலும் அவர்களை விருத்தி செய்துகொள்வதற்கான ஒத்துழைப்புக்களையும் வழங்கியுள்ளது.

## உள்ளடக்கம்

- ”அனைத்து விதமான கொடுக்கல் வாங்கல்களும் அனுமதிக்கப்பட்டுள்ளவையே” என்பதுதான் இஸ்லாத்தின் பொது விதி.
- இயல்பு நிலை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள்
- பொருளீட்டும் முறை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள்
- வட்டி
  - றிபத் தய்ன்
  - றிபல் கர்ழ்
  - வட்டி தொடர்பான இஸ்லாமியச் சட்டம்
  - வட்டிக்கான தண்டனைகள்
- வட்டியின் மூலம் ஏற்படும் தனிமனித மற்றும் சமூகப் பாதிப்புக்கள்:
- நிச்சயமற்ற நிலையும் தெளிவின்மையும்
- அநியாயம் செய்தலும் பிறர் சொத்துக்களை அபகரித்தலும்
- சூதாடுதல்
  - சூதாடுதல் எனும் செயலானது சமூகம் மற்றும் தனிமனிதர்கள் மீது ஏற்படுத்தும் பாதக விளைவுகள்
- கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது கடைபிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்க நெறிகள்
  - நேர்மை
  - வாய்மை
  - வேலைகளை நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் செய்தல்

## எமது கொடுக்கல் வாங்கல்கள்

முஸ்லிம்கள் தங்களது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ள வேண்டுமென்று அல்லாஹ் அவர்களைப் பணித்துள்ளதோடு, அதற்கு ஊக்கமும் அளித்துள்ளான்.
இதனைப் பின்வரும் அம்சங்களில் மிகத் தெளிவாகவே காணலாம் :

- மனிதன் உழைப்பதற்கும், பொருளீட்டிக்கொள்வதற்கும் இயலுமான நிலையில் இருக்கின்ற போது, அவன் மக்களிடம் யாசிப்பதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.
  இவ்வாறான நிலையில், ஒருவன் யாசிப்பதானது அல்லாஹ்விடமும் மக்களுக்கு மத்தியிலும் அவனுக்கு இருக்கின்ற மரியாதையை இல்லாமற் செய்துவிடும்.
  நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
  "எவ்விதத் தேவைகளுமின்றி ஒருவன் தொடராக யாசகம் கேட்டுக்கொண்டிருந்தால், அவன் முகத்தில் சதை இல்லாத நிலையில் அல்லாஹ்வை சந்திப்பான்" (அல்புஹாரி : 1405, முஸ்லிம் :1040)

"ஒருவருக்கு வறுமை ஏற்பட்டு, அதனை அவர் மக்களிடம் ஒப்படைத்து விட்டால், அவரது வறுமை நீங்காது. அதேவேளை அதனை அவர் அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டால், அவசரமாகவே, அல்லாஹ் அவனுக்கு செல்வத்தை வழங்கி விடுவான்" என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத் : 3869, அபூதாவூத் :1645)

- அனுமதிக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து விதமான தொழில் முயற்சிகளையும் இஸ்லாம் மதிக்கின்றது.
  அது கைத்தொழிலாகவோ அல்லது சேவையாகவோ அல்லது முதலீட்டு நடவடிக்கையாகவோ எப்படியும் இருக்கலாம்.
  அனைத்து நபிமார்களும் அவர்களது சமூகத்தில் அனுமதிக்கப்பட்ட கௌரவமான தொழில்களை மேற்கொண்ட நிலையிலேயே வாழ்ந்து வந்தனர்.
  இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
  "அல்லாஹ் அனுப்பிய நபிமார்களுள் ஆடுகளை மேய்க்கும் தொழிலில் ஈடுபடாத எந்தவொரு நபியும் இருக்கவில்லை" (அல்புஹாரி : 2143)



> அனுதிக்கப்பட்ட அனைத்து விதமான தொழில்களையும் இஸ்லாம் மதிக்கின்றது

"ஸகரிய்யா (அலை) அவர்கள் ஒரு தச்சனாக தொழிற் புரிந்துள்ளார்கள்" என்று ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 2379)
இவ்வாறே, ஏனைய நபிமார்களும் இதுபோன்ற பல் வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

- ஒருவர் தனக்கும் தனது குடும்பத்துக்கும் செலவு செய்யும் நோக்கிலும் தேவையுடைய ஏழைகளுக்கு உதவி செய்யும் நோக்கிலும் நல்லெண்ணத்துடன் தொழிலில் ஈடுபட்டால், அதற்காக அல்லாஹ் அவருக்கு நன்மைகளை வழங்குகின்றான்.

**"அனைத்து விதமான கொடுக்கல் வாங்கல்களும் அனுமதிக்கப்பட்டுள்ளவையே" என்பது தான் இஸ்லாத்தின் பொது விதி.**

வாங்குதல், விற்றல், கூலிக்கு கொடுத்தல் போன்ற மனிதர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துவிதமான நிதிக்கொடுக்கல் வாங்கல்களும் இஸ்லாத்தின் பொதுவிதிக்கமைய அனுமதிக்கப்பட்டவைகளாகும்.
இயல்பு நிலை காரணமாகவோ அல்லது பொருளீட்டும் முறை (ஹராமானதாக இருப்பதன்) காரணமாகவோ சில வர்த்தக நடவடிக்கைகள் மேற்படி பொதுவிதியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

## இயல்பு நிலை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள் :-

இயல்பு நிலை காரணமாக அல்லாஹ் தடைசெய்த சில பொருட்களையே இவைகள் குறிக்கின்றன.
எனவே, இவைகள் மூலம் பின்வரும் விடயங்களைச் செய்ய முடியாது:
வர்த்தகம் செய்தல், விற்றல், வாங்குதல், கூலிக்கு கொடுத்தல் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல், மக்களின் பாவனைக்கு விடல்.

சுத்தமின்மை காரணமாக அல்லாஹ் ஹராமாக்கிய சில பொருட்களுக்கான உதாரணங்கள் :-

- நாய் மற்றும் பன்றி
- செத்த மிருகங்கள் அல்லது அவற்றின் சில பகுதிகள்
- மது சாரங்கள் / போதையூட்டும் பானங்கள்
- போதை வஸ்துக்கள் மற்றும் உடல் நலத்தை பாதிக்கும் பொருட்கள்.
- ஒழுக்கக்கேட்டை மக்களிடையே பரப்பும் சாதணங்கள்.

  உதாரணமாக, ஒலி நாடாக்கள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள்
- சிலைகள் அல்லது (அல்லாஹ் தவிர்ந்த) வணங்கப்படும் வேறு பொருட்கள்.

## பொருளீட்டும் முறை காரணமாக ஹராமாக்கப்பட்ட பொருட்கள் :-

அடிப்படையில் பொருட்கள் அனைத்தும் ஹலாலானவை என்றே கருதப்படுகின்றன. ஆனால், தனிமனிதனையும் சமூகத்தையும் பாரியளவில் பாதிக்கும் சில பொருளீட்டல் முறைகள் மூலம் இவைகள் ஹராமாக்கப்படுகின்றன.
கொடுக்கல் வாங்கல்களை ஹராமாக்கக்கூடிய காரணிகள் :-
வட்டி, மோசடி, அநியாயம், சூது.
இவைகளை ஒவ்வொன்றாக அடுத்து வரும் பக்கங்களில் விளக்கவுள்ளோம் :

## > வட்டி

வழங்கிய கடன்தொகையை விட மேலதிகமாக பெறப்படும் பணத்தினையே "ரிபா" எனும் சொல் குறிக்கின்றது. இதில் பாதிப்பும் அநியாயமும் காணப்படுவதனால், இது இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்டுள்ளது.

"வட்டி" என்பது வித்தியாசமான பல்வேறு வடிவங்களைக் கொண்டது. இதில் மிகவும் மோசமானது, கடனோடு தொடர்பான வட்டியாகும்.
கடனைத் திருப்பிச் செலுத்தும் போது, (கடனைப் பெற்றவர் மூலம்)வழங்கப்பட வேண்டுமென இருசாராருக்குமிடையில் நிர்ணயிக்கப்படும் மேலதிகத் தொகையினையே இவ்வகை வட்டி குறிக்கின்றது.
இது இரு வகைப்படும்:

- "ரிபத் தய்ன்"

கடன் பெற்றவர் குறித்த தவணையில் அதனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், தவறும் அந்தக் காலங்களுக்காக கடன் வழங்கியவருக்கு இவரால் செலுத்தப்பட வேண்டிய மேலதிப் பணத்தொகையினையே"ரிபத் தய்ன்" என்ற சொற்பிரயோகம் குறிக்கின்றது.
உதாரணம் :-
ஒரு மாதத்தின் பின்னர் திருப்பிச் செலுத்துவதாகக் கூறி "சயீத்" என்பவர் 1000 டொலர்கள் பணத்தினை "காலித்" என்பவரிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டார். ஆனால், இவரால் இந்தக் காலப்பகுதியில் அதனை திருப்பிச் செலுத்த முடியவில்லை.
இந்நிலையில், கடன் வழங்கியவரான "காலித்" தனது கடனை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் இரண்டு நடவடிக்கைகளுள் ஏதேனுமொன்றை மேற்கொள்வார்.



> கடன் கொடுத்தவருக்கு (மேலதிகப்) பயனை ஏற்படுத்தும் ஒவ்வொரு கடனும் வட்டியெனக் கருதப்படும்.

வழங்கப்பட்ட கடன் தொகையை விட மேலதிகமாக எதையும் பெறாமல், உடனடியாக தனது கடனை திருப்பிச் செலுத்த வேண்டுமெனக் கூறுவார் அல்லது ஒரு மாதத்தின் பின்னர், 1100 டொலர்கள் செலுத்த வேண்டுமெனக் கூறுவார். இதன் பின்னரும் "சயீத்" என்பவருக்கு கடனைச்செலுத்த முடியாத நிலை ஏற்படின், இரண்டு மாதங்களின் பின்னர் 1200 டொலர்களைச் செலுத்த வேண்டுமெனக் கூறுவார்.

- "றிபல் கர்ழ்"

5% அல்லது அதனை விடக்கூடுதலாகவோ குறைவாகவோ இருசாராரும் உடன்படுகின்ற ஏதோவொரு தொகையை வருடாந்தம் வட்டியாகச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்கிணங்க, ஒருவர் இன்னொருவரிடமிருந்து அல்லது வங்கியிலிருந்து ஒரு தொகைப் பணத்தினைக் கடனாகப் பெறுவதனையே "றிபல் கர்ழ்" என்ற சொற்பிரயோகம் குறிக்கின்றது .

உதாரணம்:-

ஓர் இலட்சம் பெறுமதியானதொரு வீட்டை கொள்வனவு செய்ய விரும்பும் ஒருவர், இதற்கு அவரிடம் போதியளவு பணம் இல்லாத போது இவ்வீட்டினை விலை கொடுத்து வாங்கும் நோக்கில் அவர் வங்கிக்கு சென்று, மேற்படி பணத்தினை மாதாந்த தவணை முறையில் ஐந்து வருட காலத்துக்குள் 1,50,000.00 ரூபாவாகத் திருப்பி செலுத்துவேன் எனும் நிபந்தனையின் பேரில், கடனாக பெறுகின்றார்.

"வட்டி" என்பது ஹராமாக்கப்பட்ட பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.இவ்வாறு வட்டிக்குக் கடன் பெறுவதானது, வியாபாரம் அல்லது கைத்தொழிற் துறைகளில் முதலீடு செய்தல் போன்ற முதலீட்டுத் தேவைகளுக்காகவோ அல்லது அசையாச் சொத்துக்களான வீடு, காணி போன்றவற்றைக் கொள்வனவு செய்தல் போன்ற நுகர்வுத் தேவைகளுக்காகவோ இருக்கலாம்.

தவணை முறையில் கூடுதல் விலைக்கு ஒரு பொருளை கொள்வனவு செய்வது வட்டியாகக் கருதப்படமாட்டாது.

ஒருவர், ஒரே பொருளை உடன் காசுக்காகவோ (1000 டொலர்களுக்கு) அல்லது தவணை முறையிலோ (1200 டொலர்களுக்கு) எப்படி வேண்டுமானாலும் கொள்வனவு செய்யலாம்.

இவ்வாறு தவணை முறையில் செலுத்தும் போது, ஒரு வருட காலத்துக்குள் மாதாந்தம் நூறு டொலர்களாக இத்தொகையைச் செலுத்தலாம்.

## வட்டி தொடர்பான இஸ்லாமியச் சட்டம் :

வட்டியானது மிக மோசமான செயலாகும் என்று குர்ஆனும் ஸுன்னாவும் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளன.

இது பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.

வட்டியோடு தொடர்புள்ளவர்களைத் தவிர வேறெந்த பாவிகளுடனும் அல்லாஹ் யுத்தப்பிரகடனம் செய்யவில்லை.

இஸ்லாம் மாத்திரமல்ல விண்ணுலகோடு தொடர்புடைய தெய்வீகம் சார்ந்த அனைத்து சமயங்களுமே இதனை ஹராமாக்கியுள்ளன.

ஆனாலும், ஏனைய இறைச்சட்டங்களை மாற்றியது போன்றே இது தொடர்பான சட்டத்தையும் இந்த சமயங்களைச் சார்ந்த சண்டாலர்கள் திரிவுபடுத்திவிட்டனர்.

இவ்வாறான, இந்த வேதக்காரர்களுக்கு அல்லாஹ்வின் கோபமும் அவனின் தண்டனையும் ஏற்பட்டமைக்கான காரணத்தை அல்லாஹ் இவ்வாறு விளக்குகின்றான்

"வட்டி அவர்களுக்கு தடுக்கப்பட்டிருந்தும் கூட அதனை அவர்கள் எடுத்ததற்காக" (அந் நிஸா : 161)

## வட்டிக்கான தண்டனைகள்

1. வட்டியுடன் தொடர்புடையோர், அல்லாஹ்வோடும் அவன் தூதரோடும் யுத்தம் செய்வதற்குத் தாங்கள் தயார் நிலையில் இருக்கின்றோம் என்று தங்களைக் காட்டிக்கொள்கின்றனர்.

   எனவே, இவர்கள் அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் எதிரிகளாக மாறி விடுகின்றனர்.

   அல்லாஹ் கூறுகின்றான் :

   ஆகவே (கட்டளையிடப்பட்டவாறு) நீங்கள் செய்யாவிடின் அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் போரிடுவதாகப் பிரகடனம் செய்துவிடுங்கள்; மேலும், நீங்கள் (தவ்பாச் செய்து) மீண்டுவிட்டால் உங்கள் செல்வங்களின் அசல் தொகைகள் உங்களுக்குண்டு; நீங்கள் (அதிகமாக வாங்கி கடன் பட்டோருக்கு) அநியாயம் செய்யாதீர்கள்; (அவ்வாறே) நீங்களும் (மூலத் தொகையைப்) பெற்றுக் கொள்வதிலிருந்து அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள். (அல் பகறா : 279)

   உண்மையில் இந்தப் போரானது, உடல்

மற்றும் உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கின்றது.
இன்று, அல்லாஹ்வின் உத்தரவை மீறி வட்டியுடன் தொடர்புகொண்டிருக்கின்ற மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ள கலக்கமும், மன அழுத்தமும் கவலையும் இந்த யுத்தத்தின் கோர விளைவுகளே ஆகும். இதன், இவ்வுலக விளைவுகளே இவ்வாறான நிலையில் இருக்கின்றதெனில், இதன் மறு உலக பாதிப்புகள் இதனை விட படு மோசமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

2 ஒருவர், வட்டியோடு எந்த வகையிலான தொடர்பினைக் கொண்டிருந்தாலும் அவர் அல்லாஹ்வினால் சபிக்கப்பட்டவராகவும் அவனது அருளை விட்டு தூரப்பட்டவராகவுமே இருப்பார்.
"வட்டி எடுப்பவர், வட்டிக்கு கொடுப்பவர், அதனை எழுதுபவர், அதற்கான இரண்டு சாட்சிகள் போன்றவர்களை நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள். மேலும், அவர்கள் அனைவரும் பாவத்தில் சமமானவர்களே" என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்: 1598)

3 பைத்தியம் அல்லது ஷைத்தான் பிடித்தவனைப் போன்ற மிகவும் அவலட்சனமானதொரு தோற்றத்திலேயே வட்டி சாப்பிட்டவர் மறுமையில் எழுப்பப்படுவார்.
இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் : வட்டியை உண்பவர்கள், ஷைத்தான் தீண்டியதால் எவனை அவன் நினைவிழக்கச் செய்தானோ அத்தகையவன் எழும்புவது போலன்றி, (வேறு வகையாக மறுமை நாளில்) அவர்கள் எழமாட்டார்கள். (அல் பகறா : 275)

4 வட்டிப் பணமானது அதிகமாக இருந்தாலும் கூட, அது "பரக்கத்தை" அழித்து விடும், அதன் மூலம் மன அமைதியையோ சந்தோஷத்தையோ பெற முடியாது.
அல்லாஹ் கூறுகின்றான் : அல்லாஹ் வட்டியை (அதில் எவ்வித அபிவிருத்தியுமில்லாது) அழித்து விடுவான்; மேலும் தர்மங்களை (அபிவிருத்தியைக் கொண்டு) வளரச் செய்கின்றான். (அல் பகறா: 276)



> வட்டியானது, சொத்துக்கள் அழிந்து போவதற்கும் பொருளாதார வீழ்ச்சிகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

## வட்டியின் மூலம் ஏற்படும் தனிமனித மற்றும் சமூகப் பாதிப்புக்கள்:

தனிமனிதனையும் சமூகத்தையும் பாரியளவில் பாதிக்கும் வகையிலான பல் வேறு விடயங்களை வட்டி கொண்டிருப்பதன் காரணமாகவே, இதனை இஸ்லாம் மிகவும் வன்மையாகத் தடைசெய்துள்ளது.

அவ்வகைப் பாதிப்புக்களுள் சில:

1 சொத்துப் பங்கீட்டின் போது ஒழுங்கின்மை ஏற்படல்: ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்.

சொத்துக்கள் சமூகத்திலுள்ள பெரும்பகுதியினருக்குப் பயன்படாது, சில தனி மனிதர்களின் கைகளிலேயே தேங்கிக் கிடப்பதற்கு வட்டி காரணமாக அமைந்து விடுகின்றது.

இந்நிலையானது சொத்துப் பங்கீட்டில் சமநிலையற்றதொரு கோளாறை தோற்றுவிப்பதோடு, ஏழைச் சிறுபான்மையினர், பணக்காரப் பெரும்பான்மையினர் என்று சமூகத்தை இரு கூறுகளாகப் பிளவுபடுத்திவிடும். இவ்வாறானதொரு சூழல் தோன்றுவதானது, சமூகத்தில் குரோதங்களும் குற்றச்செயல்களும் மலிந்து விடுவதற்குக் காரணமாக அமைந்து விடும்.

2 சேமிப்பை கைவிட்டு, வீண்விரயம் செய்வதற்கு மக்களைத் தூண்டுகின்றது.

மிக இலகுவில் வட்டிக்குக் கடன்களைப் பெறுவதற்கானதொரு சூழ்நிலை காணப்படுவதானது, சேமிப்பை கைவிட்டு, வீண்விரயம் செய்வதற்கு மக்களைத் தூண்டுகின்றது.

அனைத்து தேவைகளுக்காகவும் கடன்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதனால், தங்களது நிகழ்கால மற்றும் எதிர்கால நிலைகளைப் பற்றி சற்றும் சிந்திக்காது, ஆடம்பர தேவைகளுக்காக் கூட இவர்கள் பணங்களை அள்ளி இறைக்கின்றனர்.

இதன் விளைவாக, கடன்கள் அதிகரித்து இவர்களது வாழ்க்கை நெருக்கடி நிறைந்ததாக மாறிவிடுகின்றது.

எனவே, இவர்கள் ஆயுள் முழுவதும் கடன் சுமைகளுடனேயே காலத்தைக் கழிக்க வேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

3 நாட்டுக்குப் பயனளிக்கும் பாரிய முதலீட்டு முயற்சிகளில் செல்வந்தர்கள் ஈடுபடாதிருக்க இது காரணமாக அமைந்து விடுகின்றமை.

வட்டி ஒழுங்கின் மூலம், செல்வந்தர்கள் தங்களால் வழங்கப்படுகின்ற பண முதலுக்காக எவ்வித உழைப்புமின்றி குறித்ததொரு தொகையினை வட்டியாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருப்பதனால், சமூகத்திற்கு நன்மை பயக்கும் கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் போன்ற எந்தவொரு துறைகளிலும் இவர்கள் தங்களது பணங்களை முதலீடு செய்ய விரும்புவதில்லை.

ஏனெனில், இவ்வாறான முதலீடுகளில் ஈடுபடுவதன் மூலம் சில ஆபத்துக்களில் சிக்கலாம் என்றும் இவைகளுக்காக பாரிய உழைப்புக்களும் முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டியதொரு நிலை உருவாகலாம் என்றும் சிந்திக்கின்றனர்.

4 சொத்து செல்வங்களிலுள்ள "பரகத்தை" இல்லாமற் செய்து, பொருளாதார வீழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றமை.

ஹராமான வட்டியோடு கொண்டிருக்கும் விடாப்பிடியான இந்தத் தொடர்பானது, பொருளாதார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஏற்படும் அனைத்து விதமான பாரிய பொருளாதார வீழ்ச்சிகளுக்கும் நஷ்டங்களுக்கும் காரணமாய் அமைந்து விடுகின்றது.

சொத்துக்களை அழித்து நாசப்படுத்திவிடும் அம்சங்களுள் ஒன்றென இதனை அடையாளப்படுத்தியிருக்கும் அதேவேளை, தர்மம் செய்வது, மக்களுக்கு உபகாரம் செய்வது போன்றவற்றை சொத்துக்களில் பரகத்தையும், விருத்தியையும் ஏற்படுத்துபவைகளாக அல்லாஹ் அறிமுகப்படுத்தியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"அல்லாஹ் வட்டியை அழித்து, தர்மங்களை வளர்க்கின்றான்" (அல் பகறா: 276)

## வட்டி சார்ந்த ஒப்பந்தங்களோடு தொடர்பினைக் கொண்டிருக்கும் நிலையில் இஸ்லாத்தை தழுவிய ஒருவர் தொடர்பான சட்டம் என்ன?

இந்நிலையிலுள்ள ஒருவருக்கு பின்வரும் இரண்டு தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன:-

1.வட்டி எடுப்பவராக இருப்பின், அவர் இஸ்லாத்தை தழுவிய உடனே அவரால் வழங்கப்பட்ட முதலை மாத்திரம் பெறலாம் அதற்கு மேலதிகமாக வேறெதனையும் பெறக்கூடாது.
அல்லாஹ் கூறுகின்றான்: "நீங்கள் வருந்தினால், அநியாயம் செய்யாமலும் அநியாயத்திற்குட்படாமலும் உங்களுடைய முதலை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்" (அல் பகறா: 279)

2.ஒருவர் வட்டி கொடுப்பவராக இருப்பின், அவருக்கு இரண்டு விதிகள் உண்டு :-

- பாரிய நஷ்டங்கள் ஏதும் இடம் பெறாதவாறு ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியுமாக இருப்பின், அவர் அதனை கட்டாயம் செய்ய வேண்டும்.

- பாரிய நஷ்டங்கள் ஏற்படாதவாறு ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாத நிலை இருப்பின், அவர் ஒப்பந்தக் காலத்தை நிறைவு செய்வதோடு இனிமேல், இவ்வாறானதொரு ஒப்பந்தத்தைச் செய்வதில்லை எனவும் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும்.
அல்லாஹ் கூறுகின்றான் : (உங்களில்) யாருக்கு தன் இரட்சகனிடமிருந்து (வட்டியைப்பற்றிக் கண்டித்து) உபதேசம் வந்து, பின்னர் (அதை விட்டு) அவர் விலகிக் கொண்டாரோ, (அவர் அதற்கு) முன் (வாங்கிச்) சென்று போனது அவருக்குரியதே; இன்னும், அவருடைய காரியம் அல்லாஹ்வின் பாலாகும்; மேலும், (இக்கட்டளை கிடைத்த பின்) எவர்கள் (வட்டியை எடுப்பதன்பால்) திரும்பி விடுகிறார்களோ, அவர்கள் நரகவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக (த் தங்கி) இருப்பவர்கள். (அல் பகறா: 275)

நீ வட்டிக்குக் கடன் கொடுப்பவனா?

இல்லை | ஆம்

(ஆம்) வட்டியை எடுக்காமல் பணத்திற்கான முதலை மாத்திரம் பெறுவதுதான் உண் மீதுள்ள கடமையாகும்.

நீ வட்டி கொடுப்பவராக இருந்தால், பாரியளவில் இழப்பு ஏற்படாத வகையில் வட்டி சார் உடன்படிக்கையை இரத்துச் செய்ய முடியுமா?

இல்லை | ஆம்

(ஆம்) இழப்புக்கள் ஏதுமின்றி உடன்படிக்கையை இரத்துச் செய்ய முடியுமாக இருந்தால் அவ்வாறு செய்வது உனக்கு கட்டாயக் கடமையாகும்.

(இல்லை) உடன்படிக்கையை இரத்துச்செய்ய முடியாவிட்டால் அல்லது உடன்படிக்கையை இரத்துச் செய்வதன் மூலம் பாரிய இழப்புக்கள் ஏற்படுமானால் நீ அவ்வுடன்படிக்கைக்குரிய தவணையை நிறைவு செய்வதோடு எதிர்காலத்தில் இவ்வாறானதொரு உடன்படிக்கை மேற்கொள்வதில்லை என உறுதிபூண வேண்டும்.

## › நிச்சயமற்ற நிலையும் தெளிவின்மையும்



தெளிவின்மை மற்றும் நிச்சயமற்ற தன்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் ஒப்பந்தத்தையே இது குறிக்கின்றது.
ஒப்பந்த தாரர்களுக்கு இடையில் முரண்பாட்டையும் பிரச்சினையையும் உருவாக்கவோ அல்லது ஒரு தரப்பு அடுத்த தரப்பினருக்கு அநியாயம் செய்துவிடவோ இது காரணமாக அமையலாம்.

பிரச்சினை அல்லது அநியாயம் என்பவற்றை தடைசெய்யும் நோக்கிலேயே இஸ்லாம் இதனை தடை செய்துள்ளது.
மக்கள் அங்கீகரித்திருந்த போதும் இஸ்லாம் இதனை 'ஹராம்' என பிரகடனப்படுத்தியுள்ளது.
'நிச்சயமற்ற தன்மை கொண்ட வியாபார முறையை நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள். (முஸ்லிம் : 1513)

### தெளிவின்மை மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் கொண்ட வியாபார முறைகளுக்கான உதாரணங்கள்:

1. பழங்கள் கனிந்து அறுவடை செய்ய முடியுமான நிலை உருவாகுவதற்கு முன்னர் அவைகளை விற்றல்.
இந்நிலையில் விற்பதனால், இவைகள் பழுதடையும் வாய்ப்பு இருப்பதன் காரணமாகவே நபி (ஸல்) அவர்கள் இதனை தடைசெய்தார்கள்.

2. பெட்டியொன்றை கொள்வனவு செய்வதற்கு
ஒருதொகைப் பணத்தினை வழங்குதல். ஆனால், குறித்த அந்தப் பெட்டியினுள் இருப்பவை பெறுமதியான பொருளா? இல்லையா? என்பது பற்றித் தெரியாது.
இவ்வாறே, தனக்கு உரிமையில்லாத பொருளை அல்லது ஒப்படைக்க முடியாத பொருளை விற்றல்.

### தெளிவின்மை என்பது ஒப்பந்தத்தை எப்போது பாதிக்கும்?

இந்தத் தன்மைகள் அதிகமாகவும் ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கத்துடன் தொடர்புபட்டதாகவும் இருந்தால் மாத்திரமே ஒப்பந்தத்தை பாதிக்கும். இல்லையேல் பாதிக்காது.

உதாரணமாக, ஒரு வீட்டை கட்டுவதற்கு அல்லது பூச்சு வேலைகளுக்கு எவ்வாறான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன என்பது பற்றித் தெரியாத நிலையில் ஒரு முஸ்லிம் அதனைக் கொள்வனவு செய்யலாம்.

இங்கு காணப்படும் அறியாமை எனும் பண்பானது, ஒப்பந்தத்தின் பிரதான விடயத்தில் அல்லாமல் அதன் கிளை அம்சங்களிலேயே இடம்பெற்றிருக்கின்றது.

எனவே, இது ஒப்பந்தத்தை பாதிக்காது.

## > அநியாயம் செய்தலும் பிறர் சொத்துக்களை அபகரித்தலும்

அநியாயம் என்பது மிகக் கொடூரமான செயலாகும். இதனை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்துள்ளது.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"அநியாயம் மறுமை நாளின் இருள்களாக இருக்கும்." (அல் புகாரி: 2315, முஸ்லிம்: 2579)
மக்களின் சொத்துக்களை அநியாயமாக அபகரிப்பதானது (அவைகள் குறைவாக இருப்பினும்) மிகப்பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.
இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மறுமையில் கடினமான தண்டனைகள் உண்டெனவும் இஸ்லாம் எச்சரிக்கின்றது.
"ஒரு சான் நிலத்தையேனும் ஒருவர் அநியாயமாகப் பறித்துக்கொண்டால், மறுமை நாளில் ஏழு பூமிகளையும் அவரது கழுத்தில் மாலையாக அணிவிக்கப்படும்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அல்புகாரி: 2321, முஸ்லிம்: 1610)



> மக்களின் சொத்துக்களை அநியாயமாக அபகரிப்பது (அச்சொத்துக்கள் மிகக் குறைவாக இருந்தாலும் கூட) மிகக் கொடூரமான குற்றச் செயலாகும்.

### கொடுக்கல் வாங்கல்களின் போது இடம்பெறுகின்ற நியாயமற்ற முறைமைகளுக்கான உதாரணங்கள் :

**1** பலவந்தப்படுத்துதல்:
கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது எந்தவகையான பலவந்தங்களையும் பிரயோகிக்க கூடாது.
இரு சாராருக்குமிடையில் பரஸ்பர சம்மதம் (உடன்பாடு) ஏற்படுவதன் மூலமே வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
"(இரு சாராருக்குமிடையில்) சம்மதம் ஏற்படுவதன் மூலமே கொடுக்கல் வாங்கல் ஏற்றுக்கொள்ளப்படும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு மாஜா : 2185)

**2** மக்களை ஏமாற்றுதல் :
பிறரின் சொத்துக்களை அநியாயமாக ஏமாற்றி வாங்குதல் பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் எம்மை ஏமாற்றி விட்டாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்லர்" (முஸ்லிம் : 101)
ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்று, அங்கு குவிக்கப்பட்டிருந்த தானியங்களுக்குள், தனது கையைச் செலுத்தினார்கள். அப்போது அவைகள் நனைந்திருப்பதனை கண்ட நபி (ஸல்) அவர்கள் வியாபாரியே ! இது என்ன ? என்று வினவினார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதரே ! இரவு பெய்த மழையில் இவை நனைந்துவிட்டது எனப் பதிலளித்தார்கள். அதற்கு நபியவர்கள் இவைகளை மக்கள் பார்வைக்காக மேலே வைத்திருக்கலாமே? என்று கூறி விட்டு இவ்வாறு சொன்னார்கள்
"யார் எம்மை ஏமாற்றினாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல". (அத் திர்மிதி : 1315)

3 எவ்வித உரிமையுமின்றி அநியாயமாக பிறரின் சொத்துக்களை அபகரித்துக்கொள்வதற்காக சட்டங்களைக் கையாளுதல்.

சில மனிதர்கள் தங்களது தந்திரப் புத்தியினால், பிறர் சொத்துக்களை சட்டரீதியாக வாதாடிப் பெற்றுக்கொள்கின்றனர்.

எனினும், நீதிபதியினால் வழங்கப்படும் இந்தத் தீர்ப்பானது, அசத்தியத்தை சத்தியமாக மாற்றிவிடாது.

நபி (ஸல்) அவர்கள் இதனை இவ்வாறு கூறினார்கள்:

நான் வெறுமனே ஒரு மனிதப்பிறவி தான். நீங்கள் உங்களுடைய பிரச்சினைகள் குறித்து முறைப்பாடுகளை செய்ய என்னிடம் வருகிறீர்கள். அப்போது, உங்களில் ஒருவர் மற்றவரை விட தனது தரப்பிலுள்ள நியாயத்தினை சரளமாக முன்வைக்கலாம். எனவே நான் அவர் கூறுவதை அடிப்படையாக வைத்து தீர்ப்பளித்து விடுகின்றேன். (சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டவர் தான் தவறு செய்திருக்கின்றேன் என்பதை அறிந்த நிலையில்) நான் அவர் சார்பாக தீர்ப்பளித்து விட்டால் அவர் தனது சகோதரருக்குரிய அந்த உரிமையை அவர் பெற வேண்டாம். ஏனெனில் நான் உண்மையாகவே அவருக்கு (தீர்வாக) நரக நெருப்பின் ஒரு துண்டைத்தான் வழங்குகின்றேன். (அல் புகாரி : 6748, முஸ்லிம் : 1713)

4 இலஞ்சம்:

ஒருவர் தனக்கு உரித்தில்லாத ஒரு விடயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பணம் அல்லது சேவையை வழங்குவதனையே இது குறிக்கின்றது.

இது மிகமோசமானதோர் அநியாயமும் மிகக்கொடூரமான பாவமுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் இலஞ்சம் கொடுப்பவர் மற்றும் எடுப்பவர்களைச் சபித்தார்கள். (அத் திர்மிதி : 1337)

சமூகத்தில் இலஞ்சம் எனும் கொடுமை பரவி வியாபிக்கின்ற போது சமூக ஒழுங்குகள் பாதிக்கப்படுவதோடு, அதன் அபிவிருத்தியும் வளர்ச்சியும் தடைப்பட்டுவிடுகின்றது.



> நபி (ஸல்) அவர்கள் இலஞ்சம் கொடுப்பவர் மற்றும் எடுப்பவர்களைச் சபித்தார்கள்.

### இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னர் பிறர் சொத்துக்களை அபகரித்துக்கொண்டவர் தொடர்பான சட்டம் என்ன?

மக்களுக்கு அநியாயம் செய்து, அவர்களைத் தாக்கி, திருடி அல்லது ஏமாற்றி சம்பாதித்த பணம் கைவசம் இருக்கும் நிலையில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால், அவர் பின்வரும் நிலைகளில் அப்பணங்கள் மற்றும் சொத்துக்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

சொத்து உரிமையாளர்களை தெரிந்திருத்தல் அவருக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத விதத்தில் அவைகளை ஒப்படைக்க முடியுமாயிருத்தல்.

ஏனெனில், இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் இவ்வாறானதோர் அநியாயத்தின் மூலமாகப் பெற்ற பணம் தொடர்ந்தும் சொந்தமாக ஒருவரிடம் இருக்குமாயின், அவர் அதனை மீள ஒப்படைத்துவிட வேண்டும் இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களை அதற்கான உரிமையாளர்களிடம் ஒப்படைத்து விடுமாறு அல்லாஹ் உங்களைப் பணித்திருக்கின்றான்". (அந் நிஸா : 58)

தேடிய பின்னரும் சொத்துக்களுக்கான உண்மையான உரிமையாளர்களை கண்டுகொள்ள முடியாது போனால், அவைகளை நல்ல வழியில் செலவு செய்வதன் மூலம் அவற்றிலிருந்து விடுபடலாம்.

## > சூதாடுதல்

### "சூதாடுதல்" என்பதன் பொருள் என்ன?

விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய போட்டிகள் என்பவற்றின் போது விளையாட்டு வீரர்கள் இருவர் அல்லது போட்டியாளர்கள் இருவர் குறித்த அந்த விளையாட்டுப் போட்டிகளில் தோல்வியடைபவர் வெற்றிபெறுபவருக்கு பணம் வழங்க வேண்டுமென நிபந்தனை இட்டுக்கொள்ளும் ஓர் ஒப்பந்தமே "சூது விளையாடுதல்" என அழைக்கப்படுகின்றது. சூதாட்டமானது வெற்றியை அல்லது தோல்வியை வழங்கும். சூதாடுபவர் வெற்றிபெற்று பிறரிடமிருந்து பணத்தை பெறலாம் அல்லது வேறொருவர் பணத்தைப் பெறுவதற்காக அவர் தோல்வியடையலாம்.

### "சூதாடுதல்" தொடர்பான இஸ்லாத்தின் சட்டம் :

"சூதாடுதல்" என்பது ஹராமானதொரு விடயமாகும். இது தொடர்பான மிகக்கடுமையான எச்சரிக்கைகள் குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ளன.



> சூதாட்டமானது ஒரு மனிதனை அதற்கு அடிமையாக்கும்.

அவைகளுள் சில வருமாறு :

1 சூதாட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படும் பாவமானது அதனால் அடையப்பெறும் பயன்கள் மற்றும் நன்மைகளை விட பாரியது என அல்லாஹ் கருதுகின்றான்.

"மக்கள் உங்களிடம் மதுபானம் பற்றியும் சூதாட்டம் பற்றியும் வினவுகின்றனர். நபியே! நீர் கூறும் இவ்விரண்டிலுமே மக்களுக்குப் பெரியளவில் பாதிப்பும் சில பயன்களும் உண்டு. ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவமானது அவைகளிலுள்ள பயன்களை விடப்பெரியாதாகும்". (அல் பகறா : 219)

2 சமூகத்தின் மீதும் தனிமனிதர்கள் மீதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதன் காரணமாகவே சூது விளையாடுவதை ஒருவகையான அசுத்தமான செயலென அல்லாஹ் தீர்ப்பு வழங்கியுள்ளான்.

மேலும், அவன் இதனை மக்கள் தவிர்ந்து கொள்ள வேண்டுமெனப் பணித்துள்ளதோடு அவர்களிடையே பிரிவினை மற்றும் பகைமை ஏற்படுவதற்கும் தொழுகை மற்றும் இறைசிந்தனை என்பவற்றிலிருந்து அவர்கள் விலகியிருப்பதற்கும் இதைக் காரணமாக ஆக்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசங் கொண்டோரே ! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், (வணகத்திற்காக) நடப்பட்டுள்ளவை (களான சிலை) களும், குறிபார்க்கும் (சூதாட்ட) அம்புகளும் (ஆகிய இவையாயும்) ஷைத்தானுடைய செயலிலுள்ள அருவருக்கத்தக்கவையாகும். ஆகவே, இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் நாடுவதெல்லாம், மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணவும், அல்லாஹ்வை நினைவு கூறுவதை விட்டும், தொழுகையை (நிறைவேற்றுவதை) விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமே யாகும்; (ஆகவே, அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்கிறீர்களா?. (அல் மாயிதா : 90 - 91)

## "சூதாடுதல்" எனும் செயலானது சமூகம் மற்றும் தனிமனிதர்கள் மீது ஏற்படுத்தும் பாதக விளைவுகள் :

சூதாடுதல் தனிமனிதர்கள் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் பாதிப்புகள் நிறையவே உள்ளன. அவைகளுள் சில வருமாறு :

1 இது மனிதர்களிடையே பகை உணர்வையும் வெறுப்பையும் ஏற்படுத்துகின்றது.

நண்பர்கள் ஒன்றாகக் கூடி சூதாடுகின்றனர். அப்போது அவர்களுள் ஒருவர் வெற்றிபெற்று ஏனையோரது பணங்களை பெறுகின்றார்.

இந்நிலையில் நிச்சயமாக அனைவரும் அவர் மீது குரோதம் கொண்டு அவரை வெறுக்கின்றனர். இவர்களது உள்ளங்களில் அவர் பற்றிய பொறாமையையும் பகை உணர்வையும் சுமந்து திரிகின்றனர்.

மேலும், அவர் இவர்களுக்கு ஏற்படுத்திய நஷ்டத்தைப் போன்று இவர்களும் அவருக்கு நஷ்டத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்துவதற்காக சதி முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இது அனைவரும் கண்கூடாகக் காணமுடியுமானதோர் உண்மையாகும்.

இது பற்றி குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது:

"மதுவிலும், சூதாட்டத்திலும் (அதன் மூலம்) உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணுவதை விட்டும் மேலும் அல்லாஹ்வை நினைவு கூருவதை விட்டும், தொழுகையை (நிறைவேற்றுவதை) விட்டும் உங்களை அவன் தடுப்பதையுமேயாகும் நிச்சயமாக ஷைத்தான் நாடுகின்றான்."

பின்னர் இது பர்ளான தொழுகைகளை நிறைவேற்றுதல் மற்றும் இறை சிந்தனை என்பவற்றிலிருந்து மனிதர்களின் கவனத்தை திருப்பி விடுகின்றது.

மனிதர்களுக்கு சூதாட்டத்தை அழகுபடுத்தி காட்டும் ஷைத்தானின் தொடர்ந்தேர்ச்சையான முயற்சிகள் பற்றி விபரிக்கையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

2 இது பணம் மற்றும் செல்வங்களை அழித்து விடும். மேலும் சூதாடுபவர்களுக்கு பாரிய பொருளாதார இழப்புக்களையும் ஏற்படுத்தும்.

3 சூதாடுதல் மற்றும் அதன் மூலம் வெற்றி பெற முடியும் எனும் உணர்வானது ஒருவனை அதற்கு அடிமையாக்கி விடுகின்றது. சூதாடுபவர் வெற்றிபெற்றாலும் தோல்வியடைந்தாலும் சூதாட்டத்தில் ஈடுபட வேண்டுமென்ற அவ்வுணர்வானது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. எனவே அவர் தோல்வியடைந்தால் இழந்த பணத்தை பெறவேண்டுமென்ற எண்ணத்தில் தொடர்ந்தும் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றார். அவ்வாறே அவர் வெற்றியடைகின்ற போதும் பணம் மீது அவருக்கிருக்கும் அதீத மோகத்தின் காரணமாக சூதாட்டத்தை தொடர்கின்றார். எனவே மேற்படி இருவருமே தொழிலை இழந்து சமூகத்தை அழித்து விடுகின்ற பெரும் பாவத்தையே செய்கின்றனர்.

## சூதாட்ட வகைகள்

சூதாட்டம் என்பது அன்றும் இன்றும் பல வடிவங்களைப் பெற்றுள்ளது. அவைகளுள் பின்வருவன நவீன முறைகளாகும் :

1. வெற்றிபெறும் வீரர், ஒருதொகைப் பணத்தைப் பெறுவார் என்று விளையாட்டு வீரர்கள் அவர்களுக்கிடையே நிபந்தனை இட்டுக்கொண்டு விளையாடுகின்ற விளையாட்டுக்கள்.

   உதாரணமாக, சிலர் இணைந்து, அவர்களுள் ஒவ்வொருவரும் குறித்ததொகைப்பணத்தை போட்டு குழுவாக சூது அட்டைகளை வைத்து விளையாடுவார்கள். இறுதியில் இதில் வெற்றி பெறும் ஒருவர் மாத்திரம் அந்தப் பணம் அனைத்தையும் எடுத்துவிடுவார்.

2. குறித்தவொரு அணி அல்லது வீரர் வெற்றிபெறுவார் என்று பந்தயம் பிடித்தல்.

   இவ்வாறான பந்தயத்தில் ஈடுபடுவோர் அனைவரும் அவரவர் அணி அல்லது வீரர் வெற்றியடைவார் என்று பணத்தை வைத்து பந்தயம் பிடிப்பார்கள்.

   இறுதியில் எவரது அணி வெல்லுமோ அவர் பணத்தைப் பெறுவார். தோற்ற அணிக்குரியவர் பணத்தை இழப்பார்.

3. சீட்டிழுத்தல்.

   உதாரணமாக, சீட்டிழுப்பின் போது ஆயிரம் டொலர்களை வெல்லும் எதிர்பார்ப்போடு ஒரு டொலருக்கான சீட்டைக் கொள்வனவு செய்தல்.

4. இலத்திரனியல் அல்லது இணையத் தளங்களினூடாக விளையாடக்கூடியவருக்கு இலாபம் அல்லது நஷ்டம் வரக்கூடிய கெஷினோ உள்ளிட்ட அனைத்து வகையான சூதாட்டங்களும்.



> விதிவிலக்கின்றி அனைத்து வகையான சூதாட்ட முறைகளையும் இஸ்லாம் தடைசெய்துள்ளதோடு அவைகளை பெரும்பாவங்களாகவும் கருதுகின்றது.

## *கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது கடைபிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தும் ஒழுக்க நெறிகள்*

நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கான சட்டங்களை இஸ்லாம் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டது போலவே, அதன் போது கடைப்பிடித்தொழுக வேண்டிய பல்வேறு ஒழுக்கப் பண்பாடுகளையும் அது வலியுறுத்திக்கூறியுள்ளது. அவற்றுள் சில :




### நேர்மை :

வியாபார நடவடிக்கைகளின் போது ஏனையோருடன், (அவர்கள் முஸ்லிம்களாகவோ அல்லது காபிர்களாகவோ இருக்கலாம்) நேர்மையாக நடந்துகொள்வதானது இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லிமினுடைய மிக முக்கியமான பண்பாடுகளுள் ஒன்றாகும். இதன் முக்கியத்துவம் பின் வரும் குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகளிலிருந்து புலப்படுகின்றது.

- அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

"நம்பி ஒப்படைக்கப்பட்டவைகளை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அல்லாஹ் உங்களுக்கு கட்டளை இடுகின்றான்". (அந் நிஸா : 58) என்று கூறுகின்றான்.

- நேர்மை இல்லாமல் போய் நம்பிக்கை மோசடி ஏற்படல் நயவஞ்சகர்களின் அடையாளங்களுள் ஒன்றென நபியவர்கள் கருதினார்கள்.

"நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று ; பேசினால் பொய் பேசுவான், வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் துரோகம் செய்வான்" (அல்புகாரி : 33, முஸ்லிம் : 59)

- நேர்மையாக நடத்தல் மு஁மின்களது மிக முக்கிய பண்புகளுள் ஒன்றாகும்.

"மு஁மின்கள் வெற்றி பெற்று விட்டனர்"......

"ஏனெனில் அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவைகள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றை பேணிக்கொள்வார்கள்" என்று அல்லாஹ் கூறுகின்றான் : (அல் மு஁மினூன் : 1 - 8)

எனவே தான், நம்பிக்கை துரோகம் செய்தவனுக்கு ஈமான் இருக்காது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"நேர்மை இல்லாதவனிடம் ஈமானே இல்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத் :12567)

- நபித்துவம் கிடைப்பதற்கு முன்னர் மக்காவில் நபி (ஸல்) "உண்மை பேசும் நம்பிக்கையாளர்" (அஸ்ஸாதிக், அல் அமீன்) எனும் பட்டப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

அனைத்து நடவடிக்கைகளிலும் நபி (ஸல்) அவர்கள் நேர்மையுடனே நடந்து கொண்டார்கள் என்பதற்கு இதுவே அடையாளமாகும்.

2



## உண்மை / வாய்மை :

வாய்மையும் தெளிவும் மிகவும் முக்கியமான இஸ்லாத்தின் தனித்துவங்களாகும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

- கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"இருவரும் உண்மையே பேசி, பொருட்களிலுள்ள குறை நிறைகளையும் தெளிவுபடுத்தி, வியாபாரம் செய்தால், அவர்களது கொடுக்கல் வாங்களில் "பரகத" செய்யப்படும். மாறாக பொருட்களிலுள்ள உண்மைகளை மறைத்து பொய் கூறினால், அதிலுள்ள "பரகத்" அழிக்கப்பட்டுவிடும்" (அல் புகாரி : 1973, முஸ்லிம் : 1532)

- "நீங்கள் உண்மையாக நடந்துகொள்ளுங்கள் அவ்வாறு நடந்து கொள்வது நன்மைக்கு வழிகாட்டும். நன்மை சுவனத்திற்கு வழிகாட்டும். ஒருவர் உண்மையாளர் என்று எழுதப்படும் வரை அவர் உண்மையைத் தொடர்ந்தும் பேசிக்கொண்டே இருப்பார்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 2607)

- வாங்க வருபவர் பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டுமென்பதற்காக அவைகளைப் பாராட்டிப் பொய் சத்தியம் செய்வதானது பெரும் பாவங்களுள் ஒன்றென இஸ்லாம் கருதுகின்றது. "மூன்று வகை மனிதர்களோடு மறுமையில் அல்லாஹ் கதைக்க மாட்டான், மேலும் அவர்களை அவன் பார்க்கவோ, பரிசுத்தப்படுத்தவோ மாட்டான். மாறாக அவர்களுக்கு கடுமையான வேதனை உண்டு "அவர்களுள் ஒருவர், தனது பொருளை பொய்சத்தியம் செய்து விற்றவராவார்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 106)

3



## வேலைகளை நேர்த்தியாகவும் அழகாகவும் செய்தல் :

ஒரு முஸ்லிம் தனது தொழில் அல்லது வேலை எதுவாக இருப்பினும் அதனை நேர்த்தியாகவும் அழகாகவும் முழுமையாகவும் செய்ய வேண்டுமென்பது கட்டாயமாகும்.

- அனைத்திலும் நேர்த்தி பேணப்படல் வேண்டுமென அல்லாஹ் விதியாக்கியுள்ளான்.

வாழ்வின் அனைத்து துறைகளிலுமே இது பேணப்படவேண்டுமென அவன் பணித்துள்ளான். வேட்டையாடுதல், அறுத்தல் போன்ற சாதாரண விடயங்களில் கூட இது கடைபிடிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு காரியங்களையும் திறம்பச் செய்வதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். எனவே, நீங்கள் அறுத்தால் அழகாக அறுங்கள். கொன்றால் அதனை அழகாகச் செய்யுங்கள். உங்களில் ஒருவர் அவரது ஆயுதத்தை கூராக்கி, அறுக்கும் மிருகத்தை மிதமாக அறுக்கட்டும். (முஸ்லிம் : 1955)

- ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் ஒருவரின் ஜனாஸாவில் கலந்து கொண்டு, கப்ரை சமப்படுத்துமாறும் அழகாகவும் நேர்த்தியாகவும் ஜனாஸாவை அடக்கம் செய்யுமாறும் சஹாபாக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கிவிட்டு, அவர்களை நோக்கித் திரும்பி இவ்வாறு கூறினார்கள்.

" உண்மையில் இவ்வாறு செய்வது கப்ரில் உள்ளவருக்கு எந்தவித நன்மையையோ, பாதிப்பையோ ஏற்படுத்தாது, எனினும், ஒருவர் அவரது வேலையை நேர்த்தியாகவும் அழகாகவும் செய்வதை அல்லாஹ் விரும்புகின்றான்" என்று கூறினார்கள்." (அல் பைககி பீ ஷுஅபில் ஈமான் : 5315)

மற்றுமோர் அறிவிப்பில் "உங்களில் ஒருவர் ஒரு வேலையைச் செய்தால், அவர் அதனை நேர்த்தியாகச் செய்வதை அல்லாஹ் விரும்புகின்றான்"(அபூ யஃலா : 4386, ஷுஅபில் ஈமான் : 5312)



# எமது உணவு



# 8

ஹலாலான உணவிற்கு இஸ்லாத்தின் பார்வையில் மிகப்பெரும் அந்தஸ்து உண்டு. பிராாத்தனை ஏற்கப்படவும், குடும்பம் மற்றும் சொத்து செல்வங்களில் விருத்தி ஏற்படவும் இது காரணமாக அமைந்து விடுகின்றது.

ஹலாலான உணவானது, பிறரது உரிமைகளை மீறாமல் அநியாயம் செய்யாது ஹலாலான பணத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளினூடாக பெறப்பட்ட ஆகுமான உணவு வகைகளையே குறிக்கும்.

## உள்ளடக்கம்


- உணவு தொடர்பான அடிப்படை பொது விதி
- பழங்களும் பயிர்களும்
- மதுபான வகைகள்
- போதைப் பொருட்கள்
- கடல் உணவுகள்
- தரை வாழ் உயிரினங்கள்
  - இஸ்லாமிய அறுப்பு முறை
  - உணவகங்கள் மற்றும் கடைகளிலுள்ள மாமிச வகைகள்
- இஸ்லாமிய விதிமுறைகளுக்கமைவாக வேட்டையாடுதல்
- உண்ணும் போது குடிக்கும் போது பேணவேண்டிய ஒழுங்குகள்

## எமது உணவு

### உணவு தொடர்பான அடிப்படை பொது விதி

மனிதனின் ஆரோக்கியம், பண்பாடு, சமயம் போன்றவைகளுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய ஹறாமான சில பொருட்களைத் தவிர ஏனைய உணவு மற்றும்குடிபான வகைகள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டவை ஹலாலானவை என்பது இஸ்லாத்தின் பொதுவிதியாகும்.

பூமியின் மீதுள்ள அனைத்தையும் மனிதர்களுக்காக அல்லாஹ் படைத்திருப்பதன் மூலம் அவன் அவர்களுக்கு உதவிசெய்திருக்கின்றான்.

ஹறாமாக்கப்பட்ட சிலவற்றைத் தவிர ஏனைய அனைத்துப் படைப்புகளிலிருந்தும் அவர்கள் நன்மை அடைகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"பூமியிலுள்ள அனைத்தையும் அவனே உங்களுக்காகப் படைத்தான்" (அல்பகறா : 29)

### > பழங்களும் பயிர்களும்

மனிதர்கள் பயிரிடுகின்ற அனைத்துத் தாவரங்கள் அல்லது இயற்கையாக முளைக்கின்ற மரங்கள்,காடுகள், புற்பூண்டுகள் போன்றவற்றிலிருந்து அவர்கள் பெறுகின்ற அனைத்து விதமான இலைகள் மற்றும் மூலிகைகள் உண்பதற்கு ஆகுமாக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவைகளாகும்.

இவற்றில் உடல் மற்றும் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற அல்லது சிந்தனையை மலுங்கடித்து போதையை ஏற்படுத்துகின்ற பானங்கள் அல்லது பொருட்கள் ஹறாமாகும்.

ஏனெனில், இவைகள் மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, அவனின் சிந்தனையையும் இல்லாமல் செய்துவிடுகின்றன.



## > மதுபான வகைகள்

சிந்தனையை மலுங்கடித்து, பாதிப்படையச் செய்கின்ற போதையூட்டும் அனைத்துப் பொருட்களையும் இது குறிக்கும். இது பற்றி நபியவாகள் இவ்வாறு கூறினார்கள்: "போதையூட்டும் அனைத்தும் மதுபானங்களாகும், மதுபானங்கள் அனைத்தும் ஹராமாகும்"
(முஸ்லிம் : 2003)

இவை முந்திரிகை, ஈத்தம்பழம், அத்தி, திராட்சை போன்ற பழங்களால் செய்யப்படலாம் அல்லது கோதுமை, பார்ளி, சோளம், அரிசி போன்ற தானிய விதைகளால் செய்யப்படலாம் அல்லது தேன் போன்ற இனிப்புப்பண்டங்களால் கூடத் தயாரிக்கப்படலாம்.

சிந்தனையில் மயக்கத்தை உருவாக்கி போதையை ஏற்படுத்துகின்ற அனைத்துப் பொருட்களும் ஹராமாக்கப்பட்ட போதைவஸ்துக்களாகும். அவைகள் என்ன பெயரில் எந்த வடிவத்தில் இருந்தாலும் சரியே.



> இஸ்லாம் மனித புத்தியைப் பாதிக்கின்ற அனைத்து விடயங்களிலிருந்தும் அதனைப் பாதுகாத்திருக்கின்றது.

பழச்சாறுகள், இனிப்புப்பண்டங்கள் மற்றும் சொக்கலட் போன்றவற்றில் சேர்க்கப்பட்டால் கூட இவைகள் போதை வஸ்துக்களாகும்.

### சிந்தனையைப் பாதுகாத்தல்

மனிதர்களின் ஈருலக நலன்களையும் பாதுகாக்கவே இந்த மார்க்கம் வகை செய்கின்றது.

அவைகளுள் முதன்மையாக பின்வரும் ஐந்து அடிப்படை தேவைகளைப் பாதுகாக்கின்றது. மார்க்கம், உயிர், உள்ளம், சொத்து, பரம்பரை / சந்ததி.

மார்க்கக்கடமைகள் விதியாக்கப்படுவதற்கு அடிப்படையாகவும் மனிதன் இறைகௌரவத்திற்கும் அதன் தெரிவிற்கும் உள்ளாகுவதற்கு அச்சாணியாகத் திகழ்வதற்கும் காரணம் இந்த உள்ளமே ஆகும்.

எனவே, இஸ்லாம் இதனைப் பாதிக்கின்ற அல்லது பலவீனப்படுத்துகின்ற அனைத்து விடயங்களிலிருந்தும் உள்ளத்தை பாதுகாக்கின்றது.

### மதுபானம் தொடர்பான சட்டம்

மதுபானத்தை பயன்படுத்துவது பெரும் பாவங்களுள் ஒன்றாகும். இது ஹராம் என்று குர்ஆனிலும் ஸுன்னாவிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவைகள் வருமாறு :

- அல்லாஹ் கூறுகின்றான் :
  விசுவாசங் கொண்டோரே ! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும், (வணகத்திற்காக) நடப்பட்டுள்ளவை (க஌ன சிலை)களும், குறிபார்க்கும் (சூதாட்ட) அம்புகளும் (ஆகிய இவையாவும்) ஷைத்தானுடைய செயலிலுள்ள அருவருக்கத்தக்கவையாகும். ஆகவே, இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.
  (அல் மாயிதா : 90)

உண்மை

அல்லாஹ் மதுபானத்தை "நஜீஸ்" எனவும் ஷைத்தானின் செயலெனவும் விபரிப்பதோடு, ஈருலகிலும் வெற்றி பெற இவற்றை பயன்படுத்துவதை விட்டு விலகுமாறும் அவன் எம்மைப் பணித்திருக்கின்றான்.

- "போதையூட்டும் அனைத்தும் மதுபானங்களாகும். மதுபானங்கள் அனைத்தும் ஹராமாகும். உலகில் ஒருவர் மதுபானம் அருந்தி அதற்கு அடிமைப்பட்ட நிலையில் மரணித்தால், அவர் மறுமையில் அதனைக்குடிக்கும் பாக்கியத்தைப் பெற மாட்டார்."
என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 2003)

- மதுபானம் அருந்துவதானது, ஈமானுக்கு முரணான அதனைக்குறைத்து விடுகின்ற செயலாகும் என்பது தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் "மது அருந்தும் ஒருவர் அதனைக் குடிக்கும் போது, அவர் மு:'.மினாக இருக்க மாட்டார். (அல்புகாரி : 5256, முஸ்லிம் : 57)

- மது அருந்துவோருக்கு எதிராக இஸ்லாம் தண்டனையை விதியாக்கியுள்ளது. எனவே, அவர்கள் சமூகத்தில் தங்களது கௌரவத்தையும் நம்பகத்தன்மையையும் இழந்து விடுகின்றனர்.

- மதுபானம் மற்றும் அதுபோன்ற அனைத்தையும் பிடிவாதமாக தொடர்ந்தும் பயன்படுத்தி, பாவமன்னிப்புக்கோராத நிலையில் மரணிப்போருக்கு மறுமையில் கடுமையான தண்டனைகள் உண்டு என்பது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வாருமாறு எச்சரித்துள்ளார்கள்.
மதுபானம் குடிப்பவர்களுக்கு "தீனதுல் கபால்" எனும் பானத்தை அருந்தச் செய்வதென அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான். (முஸ்லிம்: 2002)
"தீனதுல் கபால்" என்பது நரகிலுள்ளோரின் சீல், சலம், வாந்தி, அழுக்கு போன்றவைகளைக் குறிக்கும்.

- மதுபானம் அருந்தும் செயற்பாட்டோடு யாருக்கு எந்த வகையில், தொடர்பு இருந்தாலும், அவர்கள் அனைவரும் இந்த எச்சரிக்கைக்குள் உட்பட்டவர்களே.
நபி (ஸல்) அவர்கள் மதுபானத்தோடு தொடர்புடைய பத்து நபர்களைச் சபித்தார்கள்
உற்பத்தி செய்பவர்கள், யாருக்காக உற்பத்தி செய்யப்படுகின்றதோ அவர்கள், குடிப்பவர்கள், சுமந்து செல்பவர்கள், யாருக்காக சுமந்து செல்லப்படுகிறதோ அவர்கள், பரிமாறுபவர்கள், விற்பவர்கள், இலாபமீட்டுபவர்கள், வாங்குபவர்கள், யாருக்காக வாங்கப்படுகிறதோ அவர்கள். (அத்திர்மிதி : 1295)

## › போதைப் பொருட்கள்

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதானது, (அவைகள் பயிரிடப்பட்டவைகளாகவோ அல்லது உற்பத்திசெய்யப்பட்டவைகளாகவோ இருக்கலாம் மேலும் சுவாசிப்பதன் மூலமோ அல்லது மெல்வதன் மூலமோ அல்லது ஊசிகள் மூலம் ஏற்றப்படுவது போன்ற எந்த முறையில் பயன்படுத்துவதாகவும் இருக்கலாம்) மிகப் பெரும் பாவங்களுள் ஒன்றாகும்.

இவைகள் சிந்தனையில் மயக்கத்தை ஏற்படுத்தி விடுவதோடு, மனிதனின் நரம்பு மண்டலத்தையும் தகர்த்து விடுகின்றது. இவைகளைப் பயன்படுத்துவோருக்கு பல்வேறு வகை உளரீதியான மற்றும் நரம்பியல் வியாதிகள் ஏற்படுகின்றன.

இறுதியாக, இவைகள் சிலவேலைகளில் அவர்களின் மரணத்திற்குக் கூட வழிவகுத்து விடுகின்றன.

மனிதர்கள் மீது இரக்கமுள்ள அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : "உங்களையே நீங்கள் கொன்று விட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்களோடு இரக்கமுள்ளவனாக இருக்கிறான்". (அந்நிஸா : 29)

## › கடல் உணவுகள்

கடல் உணவுகள் என்பது, நிலத்திலல்லாது நீரில் வாழும் உயிரினங்களால் ஆன உணவு-களையே குறிக்கும்.

இங்கு "கடல்" என்பது அதிக நீர் கொண்ட இடங்களையே குறிக்கின்றது.

எனவே, ஆறுகள், குளங்கள் மற்றும் இவைகள் போன்ற அதிக நீர் கொண்ட இடங்களையே இது குறித்து நிற்கின்றது.

மிருகங்களாகவோ அல்லது தாவரங்களாகவோ உள்ள கடல் சார் உணவுகள் அனைத்தும் உயிருடனோ அல்லது இறந்த நிலையி-லோ எப்படிக் கிடைத்தாலும் அவைகள் ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாத போது அவைகளை உணவுகளாகக் கொள்வது அனுமதிக்கப்பட்டதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

"கடலில் பிடித்தவையும் அதன் உணவும் உங்களுக்கு ஹலால் ஆகும்". (அல் மாயிதா : 96)

இங்கு " கடலில் நீங்கள் பிடித்தவை" என்பது உயிரோடு பிடித்தவைகளையும் "உணவு" எனும் சொல் கரையிலே கடல் ஒதுக்கியிருக்கின்ற இறந்தவைகளையுமே குறித்துக்காட்டுகின்றன.



## › தரை வாழ் உயிரினங்கள்

தரையிலுள்ள மிருகங்களை உணவாகக்கொள்வதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு :

1. அவைகள் உணவாக உட்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உயிரினங்களாக இருத்தல் வேண்டும்.
2. இஸ்லாமிய விதி-முறைகளுக கமைய வேட்டையாடப்பட டிருக்கவோ அல்லது அறுக்கப்படடிருக்கவோ வேண்டும்.

### உணவாகக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உயிரினங்கள் எவை?

குர்ஆனிலும் சுன்னாவிலும் "ஹராம்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பவைகள் தவிரவுள்ள ஏனைய மிருகங்கள் அனைத்தும் "ஹலால்" என்பது இஸ்லாத்தின் பொதுவிதியாகும்.

ஹராமாக்கப்பட்ட மிருகங்கள் வருமாறு :

**1 பன்றி :**

இது இஸ்லாத்தில் "நஜீஸ்" ஆகக் கருதப்படும் ஹராமானதொரு மிருகமாகும்.

இதன் அனைத்து உடல் உறுப்புக்களும் மேலும் இதிலிருந்து உற்பத்திசெய்யப்படுகின்றவைகளும் ஹராமானதே ஆகும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"இறந்த மிருகங்கள், இரத்தம், பன்றியின் மாமிசம், என்பன உங்களின் மீது ஹராமாக்கப்பட்டுள்ளது". (அல்மாயிதா : 3)

மேலும் கூறுகின்றான்:

"பன்றியின் மாமிசம் ஹராமாக்கப்பட்டுள்ளது.ஏனெனில் இது "நஜீஸ்" ஆகும்.

(அல் அன்ஆம் : 145)

உணவு

2 வேட்டைப்பற்களைக் கொண்ட மிருகங்கள்

மாமிசத்தை உணவாக உட்கொள்ளும் அனைத்து மிருகங்களையும் இது குறிக்கும்.
இவைகள் சிங்கம், புலி போன்ற பெரிய மிருகங்களாகவோ அல்லது பூனை போன்ற சிறிய மிருகங்களாகவோ இருக்கலாம். இவ்வகை மிருகங்களுள் நாயும் ஒன்றாகும்.

3 வேட்டை நகங்களையுடைய பறவைகள் :

இராஜாளி, கழுகு போன்ற மாமிசத்தை உணவாக உட்கொள்ளும் பறவைகள் அனைத்தையும் இது குறிக்கும்.

4 ஊர்வனகள் :

வெட்டுக்கிளி தவிர்ந்த ஏனைய தரைவாழ் ஊர்வனகள் அனைத்தையும் உணவாக உட்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில், இவைகளை அறுக்கமுடியாது.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"இறந்த இரண்டு மிருகங்களுடைய மாமிசங்கள் ஹலால் ஆகும் 1. மீன் 2. வெட்டுக்கிளி.
(இப்னு மாஜா : 3218)

5 பாம்புகளும் எலிகளும் :

இவைகளைச் சாப்பிடுவது ஹராம். இவைகளை கொல்லுமாறு நாம் பணிக்கப்பட்டுள்ளோம்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
பின்வரும் ஐந்து பிராணிகளையும் இஹ்ராம் உடையுடன் ஹரத்தில் இருக்கின்ற போது கூட கொலை செய்வது குற்றமாகாது: பாம்பு, காகம், எலி, விசர் நாய், தேள்
(அல்புகாரி : 3136, முஸ்லிம் : 1198)

6 வீட்டுக்கழுதை :-

கிராமப்புறங்களில் பயணிக்கவும் பொருட்களை சுமந்து செல்லவும் பயன்படுத்தப்படும் கழுதைகளையே இது குறிக்கும்.



> குர்ஆனிலும் சுன்னாவிலும் தடைசெய்யப்பட்டவைகள் தவிர்ந்த அறுக்கப்பட்டதன் பின்னர் உண்ண முடியுமான அனைத்து மிருகங்களும் ஹலால் ஆகும்.

உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்ட மிருக வகைகள் :

உண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்கள் இரண்டு வகைப்படும் :

- வன விலங்குகள், அறுப்பதற்கு இலகுவில் பிடிக்க முடியாத மனிதர்களை விட்டு தூர விலகி ஓடுகின்ற மிருகங்களையே இது குறிக்கும்.
இஸ்லாமிய விதிமுறைகளுக்கமைவாக வேட்டையாடுவதன் மூலம் இவைகள் ஹலாலாக மாறும்.

- வீட்டு விலங்குகள். இவைகளை மிக இலகுவாகப் பிடிக்க முடியும். ஷரீஆ விதிமுறைகளுக்கமைவாக அறுப்பதன் மூலம் இவைகள் ஹலாலாக மாறும்.

## இஸ்லாமிய அறுப்பு முறை :

இஸ்லாமிய ஷரீஆ விதிமுறைகளுக்கமைவாக மிருகங்களை அறுக்கும் முறையினையே இது குறிக்கும்.

இஸ்லாமிய முறையில் அறுப்பதற்கான நிபந்தனைகள் :

1. அறுப்பவர் முஸ்லிமாகவோ அல்லது வேதக்காரராகவோ இருப்பதோடு, பகுத்தறிவு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
   அறுக்கும் எண்ணத்துடனேயே இக்கருமத்தை அவர் செய்தல் வேண்டும்.
2. அறுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதம் கூரியதாகவும் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக கத்தியைக் குறிப்பிடலாம்.
   கூரில்லாத கனதியான ஆயுதங்களை பயன்படுத்துதல். மிருகத்தின் தலையைத் தாக்கி அல்லது மின்சார அதிர்வுகள் போன்றவற்றை ஏற்படுத்தி இறக்கச் செய்தல் போன்ற அனைத்து முறைகளும் ஹராமாகும்.
3. மிருகத்தை அறுக்கின்ற போது “பிஸ்மில்லாஹ்” என்று அல்லாஹ்வின் திருநாமம் மொழியப்படல் வேண்டும்.
4. மிருகங்களில் அவசியம் அறுக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள பின்வரும் இடங்கள் அறுக்கப்படல் வேண்டும்.
   - மூச்சுக் குழாய்
   - தொண்டை
   - தொண்டைப் பகுதியிலுள்ள இரண்டு இரத்தக் குழாய்கள் அல்லது இந்த நான்கில் மூன்றை அறுத்தல்.

இந்த நிபந்தனைகள் முழுமையாகப் பேணப்படுகின்ற போதே அறுக்கப்பட்ட மிருகத்தின் மாமிசம் “ஹலாலானதாக” மாறும்.

இவற்றுள் ஒரு நிபந்தனையேனும் பூர்த்திசெய்யப்படாது போனால், அம்மாமிசம் ஹலால் ஆகாது.




> இஸ்லாமிய முறைப்படி வேதக்காரர்கள் அறுத்த பிராணிகளின் மாமிசங்களை நாம் உண்ணுவதற்கு அல்லாஹ் அனுமதித்துள்ளான்.

## மாமிச வகைகள்

### உணவகங்கள் மற்றும் கடைகளிலுள்ள மாமிச வகைகள் :

1. முஸ்லிம்கள் மற்றும் வேதக்காரர்கள் அல்லாதோரினால் அறுக்கப்படும் மிருகங்களின் மாமிசம்.
   உதாரணமாக, பௌத்தர்கள் இந்துக்கள் போன்றவர்களால் அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களைக் குறிப்பிடலாம்.
   இந்த மாமிசங்கள் ஹராமாகும். முஸ்லிம்களும் வேதக்காரர்களும் சிறுபான்மையாக வாழும் நாடுகளிலுள்ள உணவகங்களில் பயன்படுத்தப்படும் மாமிசங்கள் இவ்வாறான ஹராமான நிலையிலேயே இருக்கலாம். இவைகள் ஹலால் என்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
2. முஸ்லிம்கள் அல்லது வேதக்காரர்களால் ஷரீஆ விதிமுறைகளுக்கமைவாக அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்கள். இவைகள் “ஹலால்” என்பது இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.
3. இஸ்லாமிய விதிமுறைகளுக்கு முரணாக முஸ்லிம்கள் அல்லது வேதக்காரர்களினால் அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்கள்.
   மின் அதிர்வுகளை ஏற்படுத்துவதன் மூலமாகவோ அல்லது நீரில் மூழ்கடிப்பதன் மூலமாகவோ இறக்கச்செய்கின்ற மிருகங்களின் மாமிசங்கள் ஹராமாகும்.

4 வேதக்காரர்களினால் அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்கள்.
இவை அறுக்கப்பட்ட முறைபற்றி எதுவும் எமக்குத் தெரியாது. அவர்களின் உணவகங்கள் மற்றும் கடைகளிலுள்ள மாமிசங்கள்.
அவர்களால் அறுக்கப்பட்டவைகளாக இருத்தல் வேண்டுமென்பது அடிப்படையாகும். இந்நிலையில், இது தொடர்பான மிகச்சரியான கருத்து, சாப்பிடும் வேளையில் அல்லாஹ்வின் பெயரைக் கூறிய நிலையில் சாப்பிடுவது அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.
ஆனால், மிகவும் தெளிவான நிலையிலுள்ள ஹலாலான உணவுகளைத்தேடிப் பெற்றுக்கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

## › இஸ்லாமிய விதிமுறைகளுக்கமைவாக வேட்டையாடுதல்.

சாப்பிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட, அறுப்பதற்கு பிடிக்க முடியாத மிருகங்கள் மற்றும் பறவைகளை வேட்டையாடுவது அனுமதிக்கப்பட்டுள்ளது.
மாமிசத்தை உணவாக உட்கொள்ளாத வீட்டு அல்லது காட்டு மிருகங்கள் மற்றும் பறவைகளைக் குறிப்பிடலாம். உதாரணமாக மான்கள், காட்டுமுயல்கள்.

வேட்டையாடுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் உண்டு :

1 வேட்டையில் ஈடுபடுபவர், (புத்தியுள்ள)அறிவுத்தெளிவுள்ள முஸ்லிமாக அல்லது வேதக்காரராக இருப்பதோடு, வேட்டையாடும் செயலை நாடிச் செய்பவராவும் இருத்தல் வேண்டும்.

எனவே, சிலைவணங்கியோ, பைத்தியக்காரரோ வேட்டையாடும் செயலில் ஈடுபடுவது ஹலால் ஆகாது.

2 வேட்டையாடப்படும் மிருகங்கள் மனிதர்களைக் கண்டால் விரண்டோடுகின்ற அறுக்க முடியாத மிருகங்களாக இருத்தல் வேண்டும். கோழி, ஆடு, மாடு போன்ற அறுக்க முடியுமான மிருகங்களாக இருத்தால், அவைகள் வேட்டையாட அனுமதிக்கப்படவில்லை.

3 வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதம், அதன் கூரினாலேயே மிருகத்தினைக் கொல்ல வேண்டும்.
உதாரணமாக, ஈட்டி, துப்பாக்கி ரவை போன்றவைகளைக் குறிப்பிடலாம். கல்லுப் போன்ற பாரமான ஆயுதங்களால் கொன்று வேட்டையாடப்படும் மிருகங்களின் மாமிசங்களை சாப்பிட முடியாது.
இவ்வாறு வேட்டையாடப்படும் மிருகங்கள் இறப்பதற்கு முன்னர் அவைகளை அறுக்க முடியுமாக இருப்பின், அவைகளின் மாமிசங்களைச் சாப்பிட முடியும்.

4 வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதத்தை செலுத்துவதற்கு முன்னர் "பிஸ்மில்லா" என்று அல்லாஹ்வின் திருநாமத்தை கூறுதல் வேண்டும்.

5 வேட்டையாடப்படும் மிருகம் அல்லது பறவை இறக்காது உயிரோடு இருப்பின், அதனை உடனடியாக அறுப்பது கட்டாயமாகும்.

6 உணவல்லாத வேறு நோக்கங்களுக்காக மிருகங்களை வேட்டையாடுவது "ஹராம்" ஆகும். உதாரணமாக விளையாடும் நோக்கங்களுக்காக வேட்டையாடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## › உண்ணும் போதும் குடிக்கும் போதும் பேணவேண்டிய ஒழுங்குகள்



உண்ணுதல், குடித்தல் போன்ற சந்தர்பங்களின் போது பேண வேண்டிய பல்வேறு ஒழுக்கங்களை அல்லாஹ் விதியாக்கியுள்ளான்.

அவைகள், பொதுவாக தெய்வீக நோக்கங்களை உணர்த்துவதாகவே இருக்கின்றன.

உதாரணமாக,மனிதர்கள் மீது அல்லாஹ் புரிந்துள்ள அருட்கொடையை நினைவூட்டுதல், வியாதிகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல், விரயம் மற்றும் அகம்பாவம் என்பனவற்றைத் தவிர்த்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அவ்வொழுக்கங்களுள் சில வருமாறு:

1. தங்கம் வெள்ளி அல்லது அவைகளால் முலாம் பூசப்பட்ட பாத்திரங்களில் உண்ணுவதையும் குடிப்பதையும் தவிர்த்தல்.

   இவைகளில் உண்ணுவதும், குடிப்பதும் வீண் விரயமானதும் ஏழைகளின் உள்ளங்களை உடைத்துவிடுவதுமான செயலாகும்.
   நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:
   "தங்கம் மற்றும் வெள்ளி பாத்திரங்களில் நீங்கள் குடிக்க வேண்டாம்.அவ்வாறே நீங்கள் தங்கம் வெள்ளி உணவுத் தட்டுக்களில் சாப்பிடவும் வேண்டாம்.
   ஏனெனில், அவைகள் இவ்வுலகில் காபிர்களுக்கும் மறுமையில் நமக்கும் உரியதாகும்."
   (அல் புகாரி : 5110, முஸ்லிம் : 2067)

2 உண்ணுவதற்கு முன்னரும் பின்னரும் இரண்டு கைகளையும் கழுவுதல்.

கைகளில் அழுக்குகளோ அல்லது உணவின் எச்சங்களோ இருப்பின் இவ்வாறு செய்வது மிகவும் அவசியமாகும்.

3 உண்ணுவது அல்லது குடிப்பதற்கு முன்னர் "பிஸ்மில்லாஹ்" என்று அல்லாஹ்வின் திரு நாமத்தை கூறுதல்.

அல்லாஹ்வின் பெயரைக் கூறுவதன் மூலம் பரகத்தையும் அவன் உதவியையும் அவனிடம் கோருகின்றேன் என்பதே இதன் பொருளாகும்.

இதனை ஆரம்பத்தில் கூறுவதற்கு மறந்து விட்டால், நினைவு வருகின்ற போது "பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிறஹு" என்று கூற வேண்டும்.

உணவின் ஒழுங்குகளைப் பேணாத நிலையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுவனை பார்த்து, நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு அவனுக்கு அறிவுரை கூறினார்கள்: "சிறுவனே! நீ அல்லாஹ்வின் பெயரைக் கூறி வலது கையினால் உனக்கு முன்னாலுள்ளவற்றிலிருந்து சாப்பிடு" (அல் புகாரி : 5061, முஸ்லிம் : 2022)

4 வலது கையினால் உண்ணுதல் மற்றும் குடித்தல்.

"இடது கையினால் சாப்பிடாதீர்கள். ஏனெனில், ஷைத்தான் இடது கையினால் சாப்பிடுகின்றான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 2019)

5 நின்ற நிலையில் உண்ணாமலும் குடிக்காமலும் இருப்பது "முஸ்தஹப்" ஆகும்.

6 தனக்கு முன்னால் நெருக்கமாகவுள்ள உணவுகளிலிருந்து சாப்பிடுதல். மற்றவர்களின் இடங்களிலுள்ள உணவுகளிலிருந்து சாப்பிடக் கூடாது. அவ்வாறு சாப்பிடுவது ஒழுங்கற்ற செயலாகும்.

ஒரு சிறுவனை நோக்கி நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"உனக்கு முன்னால் உள்ளவற்றிலிருந்து நீ சாப்பிடு"

7 கீழே விழுந்து கிடக்கும் உணவுக் கவளங்களைப் பறக்கி, அவைகளிலுள்ள அழுக்குகளை துடைத்து அகற்றிவிட்டு, சாப்பிடுவது "முஸ்தஹப்" ஆகும்.

அவ்வாறு செய்வதானது, உணவு எனும் அருட்கொடையை பேணிப்பாதுகாப்பதாய் அமையும்.

8 உணவைக் குறைகூறி, அற்பமாகக் கருதி இழிவுபடுத்துவதை தவிர்த்தல். உணவை பாராட்ட வேண்டும் அல்லது குறையேதும் கூறாது விட்டு விடல் வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் எந்தவொரு உணவையும் குறைகூறியது கிடையாது. விரும்பினால், சாப்பிடுவார்கள் இல்லையெனில் விட்டு விடுவார்கள். (அல் புகாரி : 5093, முஸ்லிம் : 2064)

9 வயிறு புடைக்குமளவு அதிகமாக உண்ணுவதைத் தவிர்த்தல்.

இவ்வாறு சாப்பிடுவதானது, நோயும் சோம்பலும் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடும்.

மிதமாக சாப்பிட்டுக் கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

"மனிதன் நிரப்பும் பாத்திரங்களுள் வயிற்றை விட மிக மோசமானது வேறெதுவும் கிடையாது. அவனது இடுப்பை நேராக வைத்துக் கொள்வதற்கு சில உணவு கவளங்கள் போதுமானது, ஆனாலும், அதற்கு மேலும் அவன் சாப்பிட விரும்பினால், அவனது வயிற்றின் மூன்றில் ஒரு பகுதியை உணவுக்கும் மற்றுமொரு பகுதியை தண்ணீருக்கும் மூன்றாவதொரு பகுதியை காற்றோட்டத்திற்குமென பிரித்துக் கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத் திர்மிதி : 2380, இப்னு மாஜா : 3349)

## 10 சாப்பிட்டு முடிந்த பின்னர் "அல்ஹம்துலில்லாஹ்" எனக் கூறிக் கொள்ளுதல்.

மனிதர்களுள் பலர் உணவின்றி இருக்கும் நிலையில் அல்லாஹ் எமக்கு வழங்கிய உணவு என்னும் இந்த அருட்கொடைக்காக அல்லாஹ்வைப் புகழுதல் வேண்டும். பின்வரும் துஆவையும் மேலதிகமாக ஓதிக் கொள்ளலாம்.

'அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனீ ஹாதா வரஸகனீஹி மின் கைரி ஹௌலின் மின்னீ வலா குவ்வஹ்'



> ஒன்றை சாப்பிட்டு விட்டு அதற்காக அல்லாஹ்வைப் புகழ்கின்ற மேலும் அவ்வாறே ஒன்றைக் குடித்து விட்டு அதற்காக அல்லாஹ்வைப் புகழ்கின்ற ஒருவனை அல்லாஹ் பொருந்தி ஏற்றுக் கொள்கின்றான். (முஸ்லிம் : 2734)

# எமது ஆடை





# 9

ஆடை என்பது அல்லாஹ் மனித குலத்திற்குச் செய்த அருட்கொடைகளுள் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "ஆதமுடைய மக்களே உங்களுடைய மறைவிடங்களை மறைப்பதற்காகவும் உங்களின் அலங்காரமாகவும்

ஆடையை அல்லாஹ் உங்களுக்காக இறக்கிவைத்தான் "தக்வா" எனும் அந்த ஆடையே சிறந்தது. இது அல்லாஹ்வின் அத்தாட்சிகளுல் ஒன்றாகும் (இதனைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறலாம்". (அல் அ.்.ராப் : 26)

## உள்ளடக்கம்

- இஸ்லாத்தின் பார்வையில் ஆடை
- ஹராமான ஆடைகள்
  - அவ்ரத்தை வெளிக்காட்டும் வகையில் அமைந்த ஆடைகள்.
  - ஆண், பெண்ணினது ஆடைகளைப் போன்றும் பெண், ஆணினது ஆடைகளைப் போன்றும் அணிதல்.
  - முஸ்லிமல்லாதோரின் ஆடைகளைப் போன்று ஆடைகள் அணிதல்.
  - பெருமையும் கர்வமும் கொண்ட ஆடைகள்
  - தங்க வேலைப்பாடுகள் போடப்பட்ட ஆடைகளும் பட்டாடைகளும்
  - வீண் விரயம் கலந்த ஆடைகள்.

## இஸ்லாத்தின் பார்வையில் ஆடை

ஒரு முஃமினின் ஆடை அழகாகவும் சுத்தமாகவும் இருப்பது அவசியமாகும். குறிப்பாக, மக்களோடு உறவாடுதல் மற்றும் தொழுகையை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பங்களின் போது இதில் விஷேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் (ஆடைகளினால்) உங்களுடைய அலங்காரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். (அல் அஃராப் : 31)

மனிதன் தனது ஆடையையும் அவனது வெளித்தோற்றத்தையும் அழகு படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை அல்லாஹ் விதியாக்கி இருக்கின்றான். ஏனெனில், இவ்வாறு செய்வது அல்லாஹ் மனிதனின் மீது புரிந்துள்ள அருட்கொடைகளை எடுத்துக் கூறுவதாக அமையும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

(நபியே!) "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியிருக்கும் (சகலவித) அலங்காரத்தையும், உணவு வகைகளில் நல்லவற்றையும் (ஆகாதவையென்று) தடுத்தவர் யார் ?" என்று கேட்பீராக! "அது இவ்வுலக வாழ்வில் விசுவாசங் கொண்டவர்களுக்கு (உரியதாகும். எனினும்,) மறுமை நாளில் (மற்றவர்களுக்கன்றி அவர்களுக்கு மட்டுமே) பிரத்தியேகமானதாகும் என்று கூறுவீராக! அறியக்கூடிய சமூகத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம். (அல் அஃராப் : 32)

### ஆடைகள் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்கின்றன:

1 மனிதர்களிடம் இயல்பாகக் காணப்படும் வெட்க உணர்வின் காரணமாக அவசியம் மறைக்கப்பட வேண்டிய மனித உடம்பிலுள்ள சில உறுப்புக்களை இது மறைக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் :

ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் திட்டமாக நாம் உங்களுக்கு இறக்கி வைத்திருக்கின்றோம். (அல் அஃராப் : 26)

2 இது மனித உடலை சூடு, குளிர் மற்றும் ஏனைய பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்கின்றது.

சூடும், குளிரும் காலநிலை மாற்றங்களின் காரணமாக ஏற்படுபவைகளாகும். இவைகள் மனித உடலை பாதிப்பவைகளாக உள்ளன. ஆடையின் பயன்பாடு பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

வெப்பத்திலிருந்து உங்களைக் காக்கக்கூடிய சட்டைகளையும், உங்களுடைய போரில் உங்களைக் காக்கக்கூடிய (கவசங்களையும், உருக்குச்) சட்டைகளையும் உங்களுக்காக அவனே ஆக்கியிருக்கின்றான்; நீங்கள் (அவனுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்காக இவ்வாறு அவன் தன் அருளை உங்கள் மீது பூர்த்தியாக்கி இருக்கின்றான். (அன் நஃல் : 81)



> ஆடை மனிதனுக்கு பல்வேறு பயன்களை வழங்குகின்றது.

எமது ஆடை

## > ஆடை தொடர்பான பொது விதி

> இவ்வகை ஆடையைத்தான் அணிய வேண்டுமென்று ஆடைகளுக்கு எதுவித வரையறைகளையும் இஸ்லாம் இடவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் நாடுகளில் பயன்படுத்தும் (இஸ்லாத்தினால்) அனுமதிக்கப்பட்ட ஆடைகளை அணிவதே மிகப் பொருத்தமானது.



இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். மனித வாழ்விற்குத் தேவையான சட்டங்களை அது இயற்றுகின்ற போது மனித இயல்போடும் அவன் அறிவோடும் இசைந்து செல்கின்ற விடையங்களையே சட்ட விதிகளாக அது ஆக்குகின்றது.

அனைத்து வகை ஆடைகளும் "ஆபரணங்களும்" அனுமதிக்கப்பட்டவை என்பதே இஸ்லாமிய "ஷரிஆ"வின் பொது விதியாகும்.

இஸ்லாம் குறித்த இந்த ஆடையை தான் அணிய வேண்டுமென மனிதனைப் பணிக்கவில்லை. (உடுத்தும் ஆடைகள்) இஸ்லாம் விதித்திருக்கும் வரையறைகளை மீறாது அவைகளுக்கான இலக்குகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ள அனைத்து வகை ஆடைகளும் அனுமதிக்கப்பட்டவைகளாகவே கருதப்படும்.

நபி(ஸல்) அவர்கள் அவரது காலத்து ஆடைகளை அணிந்தார்கள். இவ்வகை ஆடையைத் தான் அணிய வேண்டுமென்று ஏவவுமில்லை. குறித்த இந்த வகை ஆடையை அணியக்கூடாது என தடுக்கவுமில்லை.

ஆனால், ஆடைகளில் குறித்த சில பண்புகள் மாத்திரம் இருக்கக்கூடாது என்றே நபியவர்கள் தடுத்தார்கள்.

ஆடை அணிதல் உள்ளிட்ட மனிதனின் அனைத்து நடவடிக்கைகளோடும் தொடர்பான இஸ்லாமியச் சட்டப் பொது விதி யாதெனில், அனைத்தும் "ஹலால்"என்பதே ஆகும். "ஆதாரமின்றி" இவைகளுள் எதுவும் ஹரமாக்கப்படமாட்டது.

இது வணக்க வழிபாடுகள் தொடர்பான பொது விதிக்கு மாற்றமானது. வணக்க வழிபாடுகளை பொறுத்த மட்டில், அவைகள் அனைத்தும் தடுக்கப்பட்டவை என்பதே இஸ்லாமியச் சட்டப் பொது விதியாகும்.

அவைகளுள் ஏதும் ஒன்றை நிறைவேற்றுவதற்கு குர்ஆன் அல்லது சுன்னாவிலிருந்து பெறப்பட்ட மிகத் தெளிவான ஆதாரமொன்று இருத்தல் வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தற்பெருமை மற்றும் வீண் விரயமின்றி உண்ணுங்கள், உடுத்துங்கள், கொடை கொடுங்கள்"
(அன் நஸாயி : 2559)

### ஹராமான ஆடைகள் :

1. அவ்ரத்தை வெளிக்காட்டும் வகையில் அமைந்த ஆடைகள்.

   ஒரு முஸ்லிம் தனது அவ்ரத்தை ஆடையால் மறைத்துக் கொள்வது அவசியமாகும்.

   இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

   "உங்களுடைய மறைவிடங்களை மூடிக்கொள்வதற்கான ஆடையை உங்களுக்காக நாங்கள் இறக்கி

வைத்தோம்" (அல் அ.்.ராப் : 26)

ஆணும் பெண்ணும் அவசியம் மறைக்கவேண்டிய எல்லைகளை இஸ்லாம் வரையறை செய்துள்ளது.

இந்த வகையில், ஆணின் அவ்ரத்தானது தொப்புல் முதல் முழங்கால் வரையிலுமான பகுதியாகும்.

அந்நிய ஆணுக்கு முன்னால் இருக்கின்ற போது, பெண்ணின் அவ்ரத்தானது முகம் மற்றும் இரண்டு மணிக்கட்டுக்கள் தவிர்ந்த உடம்பின் அனைத்து பகுதிகளுமாகும்.

உடற்பாகங்களை வெளிக்காட்டும் வகையில் அமைந்த இறுக்கமானதும் மெல்லியதுமான ஆடைகளினால் உடலை மறைப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை.

எனவேதான், அவ்ரத்தை வெளிக்காட்டும் வகையில் அமைந்த மெல்லிய ஆடைகள் அணிபவர்களை அல்லாஹ் எச்சரித்துள்ளான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நரகவாதிகளில் இரண்டு சாரார் உள்ளனர் அவர்களுள் ஒரு சாரார் "ஆடைகள் அணிந்தும் நிர்வாணிகள் போன்று இருக்கும் பெண்களாவர்".

2 ஆண், பெண்ணினது ஆடைகளைப் போன்றும் பெண் ஆணினது ஆடைகளைப் போன்றும் அணிதல்.

இவ்வாறு ஆடை அணிவது ஹராமாகவும் பெரும் பாவங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

ஒரு பாலினர் அடுத்த பாலினர் போன்று பேசுவது, நடப்பது, அசைவது, போன்றனவும் இவ்வாறே நோக்கப்படுகின்றது.

பெண்ணின் ஆடையை அணியும் ஆணையும் ஆணின் ஆடையை அணியும் பெண்ணையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள். (அபூ தாவுத் : 4098)

பெண்களுக்கு ஒப்பான ஆண்களையும் ஆண்களுக்கு ஒப்பான பெண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள். (அல் புகாரி : 5546) (இங்கு "சபித்தல்" என்பதன் பொருள் அல்லாஹ்வின் அன்பிலிருந்து தூரப்படுத்தல் என்பதாகும்)

ஆண்களும் பெண்களும் அவரவருக்குரிய வித்தியாசமான தோற்றத்திலும் இயல்பிலும் இருக்க வேண்டுமென இஸ்லாம் விரும்புகின்றது. இதனையே மனித இயல்பும் அவனது இயற்கை அறிவும் எதிர்பார்க்கின்றது.

3 முஸ்லிமல்லாதோரின் ஆடைகளைப் போன்று ஆடைகள் அணிதல்.

அவர்களது தனித்துவமான ஆடைகளைப் போன்று அணிவதனையே இது குறிக்கும்.

உதாரணமாக, அவர்களது மதகுருமார்கள் அணியும் ஆடைகளை அணிதல், சிலுவை அடையாளத்தினை அணிதல், ஏதோவொரு மார்க்கத்திற்குரிய அடையாளச் சின்னங்களை அணிதல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

இவைகளை உடுத்துவது ஹராமாகும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் எந்த சமூகத்திற்கு ஒப்பானவராக ஆகிவிட்டாரோ, அவர் அந்த சமூகத்தைச் சார்ந்தவராவார்." (அபூ தாவுத் : 4031)

வழிதவறிய ஒரு சிந்தனைப் பிரிவினர் அல்லது ஒரு சமயத்தினரது அடையாளச் சின்னங்களைக் கொண்டுள்ள ஆடைகள் போன்றவற்றினை அணிவதும் இங்கு முன்வைக்கப்படும் எச்சரிக்கைகளுக்குள் உள்ளடக்கப்படும்.

இவ்வாறு நடந்து கொள்வதானது, ஒருவர் தன்னிடமுள்ள சத்திய மார்க்கத்தின் மீதான தனது நம்பிக்கை குறைவினையும் அவரது நடத்தை சார் பலவீனத்தையும் உணர்த்துவதாகவே அமையும்.



> முஸ்லிமல்லாதோரினால் அணியப்படும் அவர்களது சமய, கலாச்சாரத்திற்குச் சொந்தமான ஆடைகளை அணிவதும், வேறு சமயங்களினது அடையாளச் சின்னங்களைக் கொண்டிருக்கும் ஆடைகளை அணிவதும் ஹராமாகும்.

ஒரு முஸ்லிம் தனது நாட்டிலுள்ள முஸ்லிமல்லாத பெரும்பான்மையின மக்கள் பரவலாக அணியும் ஓர் ஆடையை அணிவது இந்த ஹதீஸினால் கண்டிக்கப்பட்டதோர் அம்சமாகக் கருதப்படமாட்டாது.

நபி(ஸல்) அவர்கள் (தடுக்கப்பட்ட சிலவற்றைத் தவிர) குறைஷிகளான இணைவைப்போர் அணிந்தது போன்ற ஆடைகளை உடுத்தி வந்தார்கள்

4 பெருமையும் கர்வமும் கொண்ட ஆடைகள்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவனது உள்ளத்தில் அணுவளவு பெருமை இருக்குமோ அவன் சுவனம் நுழைய மாட்டான்"
(முஸ்லிம் : 91)
இதன் காரணமாகவே, இஸ்லாம் ஆண்கள் தங்களது கரண்டைக் காலுக்கு கீழால் ஆடைகளை அணிவதை (அது பெருமைக்கும் கர்வத்துக்கும் காரணமாக இருக்குமானால்) தடை செய்துள்ளது.
நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பெருமையின் காரணமாக யார் தனது ஆடையை கரண்டைக் காலுக்கு கீழால் அணிகின்றாரோ அவரை அல்லாஹ் மறுமையில் பார்க்க மாட்டான்."
(அல் புகாரி : 3465 , முஸ்லிம் : 2085)
மக்களிடையே பிரபல்யத்தை பெறும் வகையில் அமைந்த ஆடைகளை அணிவதையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஒருவர் எந்த வகை ஆடையினை அணிந்தால், அவரை மக்கள் வியந்து பார்த்து, அவரைப் பற்றி கதைப்பார்களோ, அவர் அந்த ஆடையின் மூலம் பிரபல்யம் அடைகின்றார்.
இந்த ஆடை அறிமுகமற்றதாகவும் இதன் கவர்ச்சிகரமான தோற்றமும் நிறமும் மக்களின் கவனத்தை இவர் பால் ஈர்த்ததன் விளைவாகவும் இவர் பெருமையும் அகங்காரமும் கொள்கின்றார்.
நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"யார் இவ்வுலகில் பிரபல்யம் அடைவதற்காக ஆடையை அணிகின்றாரோ அவருக்கு அல்லாஹ் மறுமையில் இழிவடையும் ஆடையை அணிவிப்பான்" (அஹ்மத் : 5664, அப்னு மாஜா : 3607)

5 தங்க வேலைப்பாடுகள் போடப்பட்ட ஆடைகளும் பட்டாடைகளும்.

இவ்வகை இரண்டு ஆடைகளையும் ஆண்களுக்கு இஸ்லாம் ஹராமாக்கி உள்ளது. இதனை நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
"இந்த இருவகை ஆடைகள் எனது சமூகத்தில் ஆண்கள் மீது ஹராமாகவும் பெண்கள் மீது ஹலாலாகவும் உள்ளன" (இப்னு மாஜா : 3595, அபூ தாவுத் : 4057)
ஆண்கள் மீது ஹராமாக்கப்பட்ட "பட்டு" என்பது, பட்டுப்பூச்சியிலிருந்து பெறப்படும் தூய பட்டினையே குறிக்கும்.

6 விரயம் கலந்த ஆடைகள்"

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உண்ணுங்கள் உடுத்துங்கள், தர்மம் கொடுங்கள்" ஆனால் நீங்கள் செய்பவற்றோடு பெருமையோ வீண் விரயமோ கலந்து விடாது பார்த்துக்கொள்ளுங்கள்."
(அந் நஸாயி : 2559)
ஆடைகள் அணியும் முறையானது, ஆளுக்காள் வேறுபடும்.
ஒரு செல்வந்தர் வாங்கும் ஆடையானது, அவரது பொருளாதார நிலை, மாதாந்த வருமானம், அவரது ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் போன்றவற்றோடு ஒப்பிடுகையில், ஓர் ஏழை வாங்கும் ஆடையோடு எவ்வகையிலும் பொருந்தாது. ஓர் ஏழையைப் பொறுத்தவரையில், ஓர் ஆடைத்துண்டு கூட விரயமாகக் கருதப்படலாம் ஆனால் பணக்காரனைப் பொறுத்தவரையில் அவ்வாறு கருதப்படமுடியாது.



# எமது குடும்பம்

# 10

இஸ்லாம் குடும்பம் எனும் கட்டமைப்பைப் பலப்படுத்துவதிலும் அதனைப் பாதிக்கின்ற அல்லது அழித்து விடுகின்ற விடயங்களிலிருந்து அதனை பாதுகாப்பதிலும் அதிக கரிசனை கொண்டுள்ளது.

ஏனெனில், சிறந்ததொரு குடும்பத்தின் மூலமே சிறந்த தனிமனிதர்களையும் சிறந்த சமூகத்தினையும் கட்டியெழுப்புவதற்கான உத்தரவாதத்தினை நாம் வழங்கலாம்.

## உள்ளடக்கம்

இஸ்லாத்தின் பார்வையில் குடும்பம்

இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து

- மிகக் கரிசனையோடு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என இஸ்லாம் வலியுறுத்தும் பெண்கள்.
- ஆண்களும் பெண்களும் மோதிக்கொள்வதற்கான எந்தவொரு இடமுமில்லை
- ஆணைப் பொறுத்தவரையில் பெண்ணின் வகை, ஆணைப்பொறுத்த வரையில் பெண்கள் பல்வேறு வகையினராக வகுக்கப்படுகின்றனர்.
- ஆண்களுக்கும் அந்நிய பெண்களுக்குமிடையிலான தொடர்புகளின் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய வரையறைகள்
- உடலை மறைக்கும் ஹிஜாபுக்கான எல்லைகள்

- இஸ்லாத்தின் பார்வையில் திருமணம்
- கணவன் மற்றும் மனைவிக்கான உரிமைகள்
- பலதார மணம்
- விவாகரத்துச் செய்தல்
- பெற்றோர்களின் உரிமைகள்
- பிள்ளைகளின் உரிமைகள்

## > இஸ்லாத்தின் பார்வையில் குடும்பம்

குடும்ப நலனில் இஸ்லாம் பின்வரும் விதங்களில் அதன் கவனத்தைச் செலுத்தியுள்ளது.

1 குடும்பத்தை அமைப்பதற்கு அடிப்படையாக விளங்கும் திருமணம் எனும் விடயத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மேலும், அதனை இறைத்தூதர்களின் வழிமுறைகளுள் ஒன்றாகவும் மிகவும் உயர்ந்ததொரு செயலாகவும் ஆக்கியுள்ளது.

இதனைப் பற்றி நபி(ஸல்) இவ்வாறு கூறினார்கள்:

"எனினும், நான் நோன்பு நோற்கின்றேன், அதனை விடுகின்றேன். மேலும் தொழுகின்றேன், தூங்கின்றேன், திருமணம் செய்கின்றேன். யார் எனது வழிமுறையை வெறுக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர்."
(அல் புகாரி : 4776, முஸ்லிம் : 1401)

- கணவன் மனைவிக்கிடையில் அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கும் மனஅமைதியும், அன்பும் அல்லாஹ் மனிதனுக்குச் செய்த மிகப் பெரும் அருட்கொடைகள் மற்றும் அவனது அத்தாட்சிகளுள் ஒன்றென குர்ஆன் குறிப்பிடுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் :

(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும் ஆக்கியிருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். (அர் ரூம் : 21)

- கற்பைப் பாதுகாக்கும் நோக்கில், திருமணம் செய்ய விரும்பும் ஒருவருக்கு மிக இலகுவாக அதனைச் செய்வதற்கு அல்லாஹ் உதவுகின்றான்.

இதனையே நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"நிச்சயமாக, அல்லாஹ் மூன்று பேர்களுக்கு உதவி செய்வான். "கற்பைப் பாதுகாக்கும் நோக்கில் திருமணம் செய்பவர்" அம்மூவருல் ஒருவராவார்." (அத் திர்மிதி : 1655)



> தம்பதியர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருக்கும் அன்பையும் உள அமைதியையும் மிகவும் மகோண்ணதமான இறை அருட்கொடைகளுள் ஒன்றாக அல் குர்ஆன் கருதுகின்றது.

- இளைஞர்கள் தங்களது வாலிபப் பருவம் முறுக்கேறிய நிலையில் இருக்கின்ற போதே மணம் முடிக்க வேண்டுமென்று இஸ்லாம் அவர்களைப் பணிக்கின்றது.

திருமணம் செய்வதானது, உண்மையில் அவர்களது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கான சமய ரீதியிலானதொரு தீர்வாக அமைவதோடு, அவர்களுக்கு மன அமைதியையும் ஆறுதலையும் வழங்குகின்றது.

எமது குடும்பம்

**2** குடும்ப அங்கத்தவர்கள் (அவர்கள் ஆணாயினும் பெண்ணாயினும்) அனைவருக்கும் இஸ்லாம் முழுமையான கௌரவத்தை வழங்கியுள்ளது.

பிள்ளைகளை நன்முறையில் வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பினை அல்லாஹ் பெற்றோர்களுக்கே வழங்கியுள்ளான்.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவதை தான் கேட்டதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

உங்களுள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாவர். அவரவர் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் வினவப்படுவர்: ஆட்சியாளர் பொறுப்பாளியாவார் அவரது பிரஜைகள் பற்றி அவர் வினவப்படுவார். ஒரு ஆண் அவரது குடும்பத்துக்கு பொறுப்பாளியாவார் அவரது குடும்பம் பற்றி அவர் வினவப்படுவார். ஒரு பெண் அவளது கணவனின் வீட்டுக்கு பொறுப்பாளி ஆவார் அவள் அவளது பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவார். ஓர் ஊழியர் தனது எஜமானனின் சொத்துக்களுக்கு பொறுப்பாளியாவார் அவரது பொறுப்புப் பற்றி வினவப்படுவார்.
(அல் புகாரி : 853, முஸ்லிம் : 1829)

**3** பெற்றோர்களுக்கு உரிய கௌரவத்தினை பிள்ளைகள் வழங்கவேண்டுமென்று இஸ்லாம் தூண்டுகின்றது.

அவர்கள் மரணிக்கும் வரை அவர்களை அன்போடும் கருணையோடும் பராமரிக்குமாறும் அவர்களது கட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்குமாறும் பிள்ளைகளை இஸ்லாம் பணிக்கின்றது.

பிள்ளைகள் பெரியவர்களானாலும் கூட, அவர்களது பெற்றோர்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடப்பதும் உதவி உபகாரம் புரிவதும் கட்டாயக் கடமையாகும்.

இவ்வாறு நடந்துகொள்வதை அல்லாஹ் தனக்குச் செய்கின்ற வணக்க வழிபாடுகளோடு இணைத்துப் பேசும் அதேவேளை, அவர்கள் வெறுக்கும்
வகையில் சப்தத்தை உயர்த்தி பேசுவது உட்பட பேச்சிலும் செயலிலும் அவர்களுடன் கடினமாக நடந்துகொள்வதையும் தடைசெய்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

அவ்விருவருக்கும் (இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள) "சீ" என்று (கூட) நீ சொல்ல வேண்டாம்; (உம்மிடமிருந்து) அவ்விருவரையும் விரட்டி விடவும் வேண்டாம்; அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக!.
(அல் இஸ்ரா∴ : 23)

**4** பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், செலவு செய்கின்ற போதும் ஏனைய வெளிப்படையான விடையங்களைக் கையாள்கின்ற சந்தர்பங்களிலும் அவர்களுக்கிடையில் நீதமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் பெற்றோர்களைப் பணிக்கின்றது.

**5** உறவுகளைப் பேணி நடப்பதானது, ஒரு முஸ்லிமின் மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

மனிதன், தனது தாய் தந்தையினரின் வழி வந்த அவனது பின்வரும் உறவினர்கள் போன்றோருடன் சேர்ந்து அவர்களுக்கு உதவி உபகாரம் புரிவதே இதன்

பொருளாகும்.

உதாரணமாக, சகோதர சகோதரிகள், மாமா, மாமி அவர்களின் பிள்ளைகள், சாச்சா, சாச்சி அவர்களது பிள்ளைகள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவர்களோடு உறவாடுவதனை மிகப்பெரும் வணக்கமாகக் கருதும் இஸ்லாம், இவர்களோடுள்ள உறவை துண்டித்து வாழ்வதை மிகக்

கடுமையாக எச்சரிப்பதோடு இதனை பெரும் பாவங்களுள் ஒன்றெனவும் நோக்குகின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உறவுகளைத் துண்டித்து வாழ்பவன் சுவனம் நுழைய மாட்டான்" (அல் புகாரி : 5638, முஸ்லிம் : 2556)

## > இஸ்லாத்தில் பெண்களுக்கான அந்தஸ்து

இஸ்லாம் பெண்களை மதித்ததோடு, ஆணாதிக்கத்திலிருந்து அவர்களை விடுவித்தும் உள்ளது.

எந்தவொரு மதிப்பும் மரியாதையும் அற்ற மலிவானதொரு பண்டமாக பார்க்கப்படும் நிலையிலிருந்து அவர்களை காத்திருக்கின்றது.

இஸ்லாம் பெண்ணினத்திற்கு வழங்கியுள்ள கௌரவத்தோடு தொடர்பான சட்டங்களுக்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:

- சொத்துரிமை பெறும் அதிகாரத்தை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

  சொத்தில் நீதமான கௌரவமான பங்கொன்றினை இவர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

  இந்த வகையில், சில இடங்களில் இவர்கள் ஆணுக்குச் சமமான பங்கினைப் பெறுவதோடு, மற்றும் சில சந்தர்ப்பங்களில் இவர்களின் சொத்துப்பங்கானது, இவர்களது உறவுமுறை மற்றும் குடும்பத்திற்கு செலவு செய்யும் பொறுப்புக்கள் என்பவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றது.

- பணப் பரிமாற்றம் உள்ளிட்ட வித்தியாசமான பல்வேறு விவகாரங்களில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் நிறைவான சமத்துவத்தினை இஸ்லாம் பேணிவருகின்றது.

  நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

  "பெண்கள் ஆண்களின் பாதிப்பகுயினராவர்" (அபூ தாவூத் : 236)

- கணவனைத் தெரிவுசெய்யும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது.

  பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பில் பெரும் பகுதி இவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

  நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

  "ஒரு பெண் தனது கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளி ஆவார். அவளின் இப்பொறுப்பு பற்றி அவள் வினவப்படுவாள்" (அல் புகாரி : 853, முஸ்லிம் : 1829)

- தனது பெயரை தந்தையின் பெயரோடு இணைத்து பயன்படுத்த இஸ்லாம் பெண்களுக்கு அனுமதித்துள்ளது.

  திருமணத்தின் பின்னர் தனது பெயரை கணவனின் பெயரோடு இணைத்து பயன்படுத்தாது, தந்தை மற்றும் குடும்பப் பெயரோடு இணைத்தே தொடர்ந்தும் பயன்படுத்தலாம்.

- மனைவி மற்றும் தனது செலவில் தங்கிவாழும் தாய், மகள் போன்றோரை பராமரிப்பதும் செலவளிப்பதும் கணவனின் கட்டாயப் பொறுப்பாகும்.

  இதன் போது, இவர்களிடமிருந்து எந்தவொரு நன்மையையும் எதிர்பார்க்கக்கூடாது.

- அநாதரவான நிலையிலுள்ள பலவீனமான பெண்களுக்கு தொண்டு செய்வதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

  உறவுகள் யாருமின்றி சிரமத்தோடு வாழும் பெண்களுக்கு தொண்டு செய்வதனை இஸ்லாம் ஊக்கப்படுத்தியுள்ளதுடன் அல்லாஹ்வின் பார்வையில் மிகச் சிறந்ததொரு வணக்கமாகவும் இதனைக் கருதுகின்றது.

  நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

  விதவைகளையும் ஏழைகளையும் பராமரிக்கின்றவர் அல்லாஹ்வின் பாதையில் போராடும் போர் வீரர் போலாவார் அல்லது தளராமல் இரவில் நின்று வணங்குபவர் போலாவார் அல்லது நோன்பை திறக்காமல் தொடராக நோன்பு வைப்பவர் போலாவார். (அல் புகாரி : 5661, முஸ்லிம் : 2982)

### மிகக் கரிசணையோடு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் என இஸ்லாம் வலியுறுத்தும் பெண்கள் :

#### தாய் :

அபூ ஹுரைறா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபியவர்களிடம் ஒருவர் வந்து, அல்லாஹ்வின்

தூதரே! மனிதர்களுள் யாருடன் மிக இரக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென கேட்டார்? அதற்கு அவர் உமது தாய் எனப் பதிலளித்தார்கள்.

பின்னர் யாருடன்? என்று கேட்டார் "உனது தாய்" என்றார்கள் பின்னர் யாருடன் என்று வினவ "உனது தாய்" என்றார்கள்.

பின்னர் யாருடன் என்று மூன்றாவது முறையும் கேட்க "உனது தாய்" என்றே கூறினார்கள் பின்னர் யாருடன் என்று கேட்க "உனது தந்தை" எனப் பதிலளித்தார்கள். (அல் புகாரி : 5626, முஸ்லிம் : 2548)

### மகள் :

நபியவர்கள் பின்வருமாறு கூறுவதைத் தான் செவியுற்றதாக உக்பத் இப்னு ஆமிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்

"யாருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருந்து அவர்களுடன் பொறுமையாக நடந்து கொண்டு அவரின் உழைப்பிலிருந்து அவர்களுக்கு உணவளித்து, ஆடை கொடுத்து வளர்த்தால், அப்பிள்ளைகள் மறுமையில் நரகிலிருந்து இவரைத் தடுக்கும் திரையாக ஆகிவிடுவார்கள்" (இப்னு மாஜா : 3669)

### மனைவி :

நபியவர்கள் கூறியதாக ஆயிஷா(றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்

"உங்களது குடும்பத்திற்குச் சிறந்தவரே உங்களுள் மிகச் சிறந்தவர்" நான் உங்களுள் எனது குடும்பத்திற்கு மிகச் சிறந்தவனாவேன்" (அத் திர்மிதி : 3895)

> கணவன் மனைவிக்கிடையிலான தொடர்பை இஸ்லாம் முழுமைத்துவம் பெற்றதொரு உறவாகவே நோக்குகின்றது. முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அவர்களுள் ஒருவர் மற்றவரின் குறையை மறைத்துக் கொள்ளவேண்டும்.

### ஆண்களும் பெண்களும் மோதிக்கொள்வதற்கான எந்தவொரு இடமுமில்லை :

ஜாஹிலிய்ய சமூகங்களில் காணப்பட்டது போன்று ஆண்கள் பெண்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் நிலை உருவானது. இறைவழிகாட்டலை விட்டு தூர விலகி வாழும் இன்றைய சமூகங்களில் காணப்படுவது போல பெண்கள் படைக்கப்பட்டுள்ள இயல்பு நிலையிலிருந்து அவர்கள் வெளிச்சென்று தறிகெட்டுச் செல்லும் நிலை உருவானது.

இவ்வாறான சூழல்கள் உருவாகி இருக்கும் இந்நிலையில் தான் ஆண்கள்



பெண்களுக்கிடையிலான சிந்தனை மோதல் முடிவிற்கு வந்துள்ளது.

இறை வழிகாட்டலை புறக்கணித்ததன் விளைவாகவே இந்நிலை உருவானது.

இதனை அல்லாஹ் இவ்வாறு விபரிக்கின்றான்:

இன்னும் உங்களில் சிலரைக்காண சிலரை, அல்லாஹ் மேன்மையாக்கி இருப்பதைப் பற்றி நீங்கள் பேராசை கொள்ளாதீர்கள்; ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்தவற்றில் உரியபங்குண்டு; (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்தவற்றில் (உரிய) பங்குண்டு. மேலும், (நற்செயல்களின் மூலம்) அல்லாஹ்விடத்தில் அவனின் பேரருளைக் கேளுங்கள். (அன் நிஸா : 32)

அனைவருக்கும் அவரவருக்குரிய தனித்துவங்களும் கௌரவங்களும் உண்டு. ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் அருளையும் அவன் திருப்தியையும் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். உண்மையாகவே இஸ்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கௌரவத்தினை வழங்கியுள்ளது. மேலும் அவர்கள் ஒவவொருவருக்கும் வேறுபட்ட பல்வேறு பண்புகளையும் பணிகளையும் வழங்கியுள்ளது. எனவே அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

மேலும், இருதரப்பினர்களுள் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் எந்தொரு விஷேட சிறப்புச் சலுகைகளையும் இஸ்லாம் வழங்கவில்லை. மாறாக அனைவரினதும் நலன்களையும் விருத்தி செய்வதற்கே இஸ்லாம் பொதுவாக உழைக்கின்றது.

இருபாலினருக்கிடையில் மோதல் எனும் விடயம் இஸ்லாமிய வழிகாட்டலில் கிடையாது. உலக இலாபங்களை ஈட்ட வேண்டும் என்பதற்கான பயங்கரப் போட்டிகளும் அவர்களுக்கிடையே கிடையாது. ஆணினம் பெண்ணினத்தையோ அல்லது பெண்ணினம் ஆணினத்தையோ ஒரு தரப்பினர் மற்றுமொரு தரப்பினை இழிவுபடுத்தவோ விமர்சிக்கவோ எந்தவொரு தேவையுமில்லை.

இவ்வாறான நிலைகள் இஸ்லாத்தில் இருக்கின்றன என்று கூறுவதானது இஸ்லாத்துக்கெதிரான வீண் வதந்தியும் இஸ்லாம் பற்றிய தெளிவின்மையின் தீய விளைவுகளுமே ஆகும். எனவே, அல்லாஹ்விடத்தில் அவனது அருட்கொடைகளை கேட்பது அனைவரினதும் கடமையாகும்.

## ஓர் ஆணைப்பொறுத்த வரையில் பெண்ணின் வகைகள் :

ஓர் ஆணைப்பொறுத்த வரையில் பெண்கள் பல்வேறு வகையினராக வகுக்கப்படுகின்றனர் :

### 1 ஆணின் மனைவியாக பெண் இருத்தல்:

இந்நிலையில், ஒரு கணவன் தனது மனைவியைப் பார்க்கவோ, அவளுடன் சுகமாக இருக்கவோ அவன் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இவ்வாறே ஒரு மனைவியும் தனது கணவரோடு நடந்துகொள்ளலாம்.


கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவருக்கு உள்ளமும் உடலும் இணைந்த இருவருக்குமிடையிலான உணர்வுபூர்வமானதொரு தொடர்பை வெளிக்காட்டும் ஆடையாக உள்ளனர் என்று அல்லாஹ் கூறுகின்றான் :

அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள். (அல் பகறா : 187)

### 2 அவள் அவனுக்குரிய மஹ்ரமியப் பெண்ணாக இருத்தல் வேண்டும்.

ஓர் ஆணினால் (ஒரு போதும்) திருமணம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படாத பெண்களையே "மஹ்ரம்" எனும் சொற்பிரயோகம் குறிக்கின்றது. இப்பெண்கள் வருமாறு:

| | |
|---|---|
| 1 | தாய்,தாய் வழி அல்லது தந்தை வழிப் பாட்டி, இதற்கு மேலுள்ளவர்கள். உதாரணமாக, தாயின் தாய், தந்தையின் தாய் |
| 2 | மகள் அல்லது மகனின் மகள் அல்லது மகளின் மகள் அல்லது இதற்கு கீழுள்ளோர்கள். |
| 3 | உடன் பிறந்த சகோதரி அல்லது தாய் வழிச் சகோதரி அல்லது தந்தை வழிச் சகோதரி. |
| 4 | தந்தையின் உடன்பிறந்த சகோதரிகள் அல்லது அவரின் தாய் வழி அல்லது தந்தை வழிச் சகோதரிகள்.<br>இவர்களுள் தாயின் மாமி அல்லது தந்தையின் மாமியும் உள்ளடங்குகின்றனர். |
| 5 | தாயின் உடன்பிறந்த சகோதரிகள் அல்லது அவரின் தாய் வழி அல்லது தந்தை வழிச் சகோதரிகள்.<br>இவர்களுள் தாயின் சாச்சி அல்லது தந்தையின் சாச்சி உள்ளடங்குகின்றனர். |
| 6 | உடன் பிறந்த அல்லது தாய் வழி அல்லது தந்தை வழிச் சகோதரரின் மகள்.<br>மேலும், இதற்கு கீழுள்ள உறவினர்கள். உதாரணமாக, சகோதரரின் மகனின் மகள். |
| 7 | உடன் பிறந்த அல்லது தாய் வழி அல்லது தந்தை வழிச் சகோதரியின் மகள்.<br>மேலும் இதற்கு கீழுள்ள உறவினர்கள் உதாரணமாக, சகோதரியின் மகளின் மகள். |
| 8 | மனைவியின் தாய் (அவருடன் மனைவி இருந்தாலும் சரி அல்லது "தலாக்" கூறப்பட்டவளாக இருந்தாலும் சரி)<br>பொதுவாக, இவள் "மஹ்ரமியாகவே" கருதப்படுவாள். மனைவியினது தாயின் தாயும் இவ்வாறே நோக்கப்படுவாள். |
| 9 | மனைவியின் மகள். (வேறொரு கணவனுக்குப் பிறந்தவள்) |
| 10 | மகனின் மனைவி.<br>மேலும், அவளுக்கு கீழுள்ள உறவினர்கள். உதாரணமாக, பேரனின் மனைவி. |
| 11 | தந்தையின் மனைவி.<br>மேலும், இதற்கு மேலுள்ள உறவினர்கள் உதாரணமாக, பாட்டனின் மனைவி. |
| 12 | பால் குடித் தாய்<br>ஒரு பிள்ளை பிறந்து ஆரம்ப இரண்டு வருடங்களில் அப்பிள்ளைக்கு ஐந்து தடவைக-ளாவது வயிறு நிறம்பும் அளவு பாலுட்டிய ஒரு பெண்ணையே பால் குடித் தாய் எனப்படும். பாலுட்டியதன் காரணமாகவே, இவ்வாறானதொரு உரிமையை இஸ்லாம் அவளுக்கு வழங்கியுள்ளது. |
| 13 | பால் குடிச் சகோதரி<br>முன்னர் குறிப்பிட்டது பேன்று ஒரு பெண்ணிடம் சிறு வயதில் பால் குடித்த வேறொரு பெண்ணின் மகளையே "பால் குடிச் சகோதரி" எனும் இச்சொற்பிரயோகம் குறிக்கின்றது.<br>இரத்த உறவின் மூலம் ஏற்படும் உறவினர்களைப் போலவே பால் குடி உறவின் மூலம் ஏற்படும் உறவினர்களும் கருதப்படுவர்.<br>உதாரணமாக, பால் குடி மாமி, பால் குடிச்சாச்சி, பால் குடிச் சகோதரனின் மகள், பால் குடிச்<br>சகோதரியின் மகள். |




வரையறைகளை மீறாதவகையில் மணிக்கட்டுக்கள்,கழுத்து,முடி போன்றவழமையாகவெளிக்காட்டமுடியுமான உடற் பகுதிகளைத்திறந்தநிலையில் ஆண் உறவினர்களுக்குமுன்னால் தோன்றுவது மேற்குறித்த மஹ்ரமிகளாகவுள்ள இப்பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டவிடயமாகும்.

3 பெண், அவருக்கு "அஜ்னபி"யான ஒருவராக இருத்தல்.

இவ்வாறான நிலையிலுள்ள பெண்களோடு ஒரு முஸ்லிம் கொண்டிருக்க வேண்டிய உறவு தொடர்பான சட்டங்களையும் வரையறைகளையும் இஸ்லாம் வகுத்துள்ளது.

இவைகளைப் பேணுவதன் மூலம் மக்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதையும் மனிதர்களை ஷைத்தானின் தீய வழிக்கு இட்டுச் செல்லும் காரணிகளை தடுப்பதையுமே இஸ்லாம் நோக்காகக் கொண்டுள்ளது.

மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுக்குப் பொருத்தமானது எது? என்பதையும் அவன் நன்கு அறிந்து வைத்துள்ளான்.

இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : (யாவையும்) படைத்தவன், அவனோ நுட்பமான (அறிவுடைய)வனாக, யாவையும் நன்குணர்பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அவன் அறிய மாட்டானா ? (அல் முல்க் : 14)

> கற்பழிப்பு மற்றும் முறைகேடான பாலியல் தொடர்புகள் பற்றிய பல்வேறு சம்பவங்கள் அடங்கிய அறிக்கைகளும் தரவுகளும் நாளாந்தம் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.
> இவ்வாறான சம்பவங்கள், இறைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலிருந்து தூர விலகிச் சென்றுள்ள பல்வேறு குடும்பங்கள் மற்றும் சமூகங்களை சிதைத்து சின்னாபின்னப்படுத்தியுள்ளன.

## ஆண்களுக்கும் அந்நிய பெண்களுக்குமிடையிலான தொடர்புகளின் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய வரையறைகள் :

1 பார்வையைத் தாழ்த்துதல் :

ஒரு முஸ்லிம், அந்நிய பெண்களையோ அல்லது உள்ளத்தில் விரசத்தைத் தூண்டுகின்ற விடயங்களையோ பார்ப்பதை முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அவசியமின்றி ஒரு பெண்ணை நீண்ட நேரம் பார்க்கவும் கூடாது.


ஆண்களும் பெண்களும் தங்களது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டுமென அல்லாஹ் பணித்திருக்கின்றான். இவ்வாறு நடந்து கொள்வதானது, மனிதர்கள் தங்களது கற்பு மற்றும் கௌரவம் என்பவற்றை பாதுகாப்பதற்கானதொரு வழியாகும்.

வரையறைகளை மீறிய நிலையில் பொதுவாகவே பெண்களைப் பார்ப்பது பாவங்களுக்கு வழி வகுக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

(நபியே !) விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக : "அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிக்காத்துக் கொள்ளவும்; "அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் செய்பவைகளை நன்கு உணர்பவன்.

மேலும், (நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக: "தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும்; தங்கள் மர்மஸ்தானங்களையும் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவும். (அந் நூர்:30-31)



> ஹராமான விடயங்களை நோக்காது பார்வையை தாழ்த்திக் கொள்வதானது,ஒருவர் தனது மானத்தை காத்துக்கொள்வதற்கும் பவித்திராத் தன்மையுடன் வாழ்வதற்குமான சிறந்ததொரு வழியாகும்.

ஒரு முஸ்லிம் எதேச்சையாக ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டால், உடனடியாக அவர் தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள வேண்டும்.

பார்வையை தாழ்த்திக் கொள்வது என்ற இந்த விடயமானது, ஊடகங்கள் மற்றும் இணையதளங்கள் போன்றவற்றிலுள்ள காம உணர்வு மற்றும் விரசத்தை தூண்டுகின்ற பல்வேறு ஆபாசமான காட்சிகளைப் பார்க்க நேரிடுகின்ற போது கூட பிரயோகிக்கப்பட வேண்டியதாகும். இதுவும் ஹராமாகவே கருதப்படும்.

2 ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்துகொள்ளல் :ஓர் ஆணும் பெண்ணும் பேசிக் கொள்ளும் போது, இருவரும் ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்து கொள்வதோடு பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வார்த்தைகளைத் தவிர்த்து கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே,

- அந்நிய ஆண்களோடு பெண்கள் பணிவாகவும் குளைந்தும் பேசுவதை அல்லாஹ் தடை செய்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

(அந்நியருடன்) பேச்சில் நீங்கள் நளினம் காட்டாதீர்கள்; ஏனென்றால், எவனுடைய இதயத்தில் (பாவ) நோய் இருக்கின்றதோ அத்தகையவன் (தவறான விருப்பங்களில்) ஆசை கொள்வான்; மேலும், நீங்கள் (நேர்மையான) பேச்சையே பேசிவிடுங்கள். (அல் அஹ்ஸாப் : 32)

- அல்லாஹ் கூறுகின்றான் :

அன்றியும் தம் அலங்காரத்திலிருந்து தாம் மறைந்திருப்பதை அறியப்படுவதற்காக, தங்களுடைய கால்களை (பூமியில்) அடிக்க வேண்டாம்.
(அந் நூர் : 31)

3 அந்நிய பெண்ணோடு தனிமையில் இருப்பதைத் தவிர்த்தல் :

"கல்வத்" என்பதன் பொருள் யாரும் அறியாததோர் இடத்தில் ஓர் ஆண் அந்நிய பெண்ணோடு தனிமையில் இருப்பதைக் குறிக்கும்.

இவ்வாறு தனிமையில் இருப்பதானது, முறைகேடான பாலியல் உறவிற்கு ஷைத்தான் மனிதனை தூண்டி விடுவதற்கானதொரு வழியென்பதனால் இதனை இஸ்லாம் ஹராமாக்கியுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் தனித்திருக்கும் போதெல்லாம் மூன்றாமவனாக ஷைத்தான் அவர்களுடன் இருப்பான். (அத் திர்மிதி : 2165)




எமது குடும்பம்

## 4 "ஹிஜாப்" அணிதல் :

ஆணுக்கு அல்லாமல் பெண்ணுக்கு மாத்திரமே "ஹிஜாப்" அணிவதை அல்லாஹ் கட்டாயமாக்கியுள்ளான்.

பெண்களிடமே, ஆண்களை மிக இலகுவில் பாவத்தில் ஈடுபடச்செய்கின்ற இயல்பான அழகும் கவர்ச்சியும் அதிகமாகவே உள்ளன. இந்நிலை ஆண்களில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

பல்வேறு காரணங்களின் நிமித்தம் "ஹிஜாப்" அணிவதை அல்லாஹ் விதியாக்கியுள்ளான். அவைகளுள் சில பின்வருமாறு :

- ஒரு பெண் தனது கற்பையும் கௌரவத்தையும் பாதுகாத்துக் கொண்டு, தொழில் மற்றும் கல்விசார் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் சமூகம் மற்றும் சொந்த வாழ்வினது அவளின் இலக்குகளை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

- பாலியல் உணர்வுகளைத் தூண்டும் சந்தர்பங்களைக் குறைத்தல்.

  இது ஒரு புறம் சமூகத்தின் தூய்மையை உத்தரவாதப் படுத்துவதோடு மறுபுறம் பெண்ணின் கௌரவத்தையும் பாதுகாக்கும்.

- பெண்களைப் பார்த்து ரசிக்கும் ஆடவர்களின் விரச உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, கற்பொழுக்கத்துடன் வாழ இது அவர்களுக்கு உதவுவதோடு, பாலியல் உணர்வுகளைத் தூண்டும் காமப் பொருளாக பெண்களை நோக்காது கல்வியும் பண்பாடும் நிறைந்ததொரு மனிதப்பிறவிகளாக அவர்களை நடத்தும் நிலையை உருவாக்கும்.

### ஹிஜாபுக்கான எல்லைகள் :

அந்நிய ஆண்களுக்கு முன்னால், ஒரு பெண் தனது முகம் மற்றும் இரண்டு மணிக்கட்டுக்கள் தவிர்ந்த உடலின் ஏனைய அனைத்துப் பகுதிகளையும் மறைப்பதை அல்லாஹ் கட்டாயக் கடமையாக்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

அதினின்று வெளியில் தெரியக்கூடியவைகளைத் தவிர, தங்கள் (அலங்காரத்தை,) அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்.
(அந் நூர் : 31)

இங்கு "அவற்றுள் வெளிப்பட்டவை" என்று குறிப்பிடப்படுவது, முகம் மற்றும் இரண்டு மணிக்கட்டுக்கள் போன்ற பகுதிகளை ஆகும்.

முகத்தையும் இரண்டு மணிக்கட்டுக்களையும் வெளிக்காட்டுவதன் மூலம் பாவம் நிகழுமானால், அந்த சமயத்தில் இவைகளையும் மறைப்பது கட்டாயமாகும்.

### உடலை மறைக்கும் ஹிஜாபுக்கான வரையறைகள்:

ஒரு பெண், பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக தான் விரும்பும் நிறத்திலும் விதத்திலும் ஹிஜாபுகளை அணியலாம்.

1. உடலில் கட்டாயம் மூடப்படவேண்டிய பகுதிகளை மறைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. விசாலமானதாகவும் தொங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
3. உடற்பாகங்கள் வெளியில் விளங்கும் அளவு மெல்லியதாக இருக்கக் கூடாது.



> ஹிஜாபானது பெண்களைப் பாதுகாப்பதோடு, சமூகத்தில் அவர்களது இலக்குகளை மனித சமூகம் கண்டிராத மிகவும் தூய்மையானதொரு வழிமுறையினூடாக அடைந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

## > இஸ்லாத்தின் பார்வையில் திருமணம்



> திருமணமானது, பேணப்படவேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தும் மிகவும் உன்னதமான உறவுகளுள் ஒன்றாகும்.

இஸ்லாம் வலியுறுத்தும் மிக உயர்ந்ததொரு உறவாக திருமண உறவு கருதப்படுகின்றது. இறைத்தூதர்களின் வழிமுறையான இதனை இஸ்லாம் அதிகளவில் ஊக்கப்படுத்துகின்றது.

திருமணத்தின் சட்டங்கள், ஒழுக்கங்கள், கணவன் மற்றும் மனைவியினது உரிமைகள் போன்றவற்றில் இஸ்லாம் தனது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இவைகள் அந்தத் திருமண உறவினை ஸ்திரப்படுத்துவதோடு, வெற்றிகரமானதொரு குடும்பத்தையும் உருவாக்கும்.

இவ்வாறானதொரு குடும்பத்தில் தான், உளஉறுதிப்பாட்டோடு இஸ்லாத்தில் நிலைத்து நின்று வாழ்வின் சகல துறைகளிலும் வெற்றிபெறும் பிள்ளைகள் உருவாகுவார்கள்.

### அந்தச் சட்டங்களுட் சில வருமாறு :

திருமண ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கு கணவனிடமும் மனைவியிடமும் அவசியம் இருக்க வேண்டிய பின்வருவன போன்ற பல்வேறு நிபந்தனைகளை இஸ்லாம் இட்டுள்ளது :

### மனைவி தொடர்பான இஸ்லாத்தின் நிபந்தனைகள் :

1 மனைவி முஸ்லிமாகவோ அல்லது தனது சமயத்தை நம்பிய வேதக்காரப் பெண்ணாகவோ இருத்தல் வேண்டும்.

எனினும், இறைபக்தியுள்ள ஒரு பெண்ணையே மனைவியாகத் தெரிவு செய்து கொள்ளுமாறு இஸ்லாம் முஸ்லிம்களைத் தூண்டுகின்றது.

இவ்வாறான பெண்தான் பிள்ளைகளை நல்லமுறையில் வளர்த்தெடுக்கும் மனைவியாகவும் கணவன் நல்ல காரியங்களில் ஈடுபடவும் மார்க்கத்தில் நிலைத்திருக்கும் அவருக்கு உதவும் சிறந்த மனைவியாகவும் இருப்பாள்

இதனை நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

மார்க்கப்பற்றுள்ள பெண்ணை திருமணம் செய்துகொள், நீ வெற்றி அடைவாய். (அல் புகாரி : 4802, முஸ்லிம் : 1466)

எமது குடும்பம

## 2 மனைவி கற்புள்ள தூய்மையான பெண்ணாக இருத்தல் வேண்டும் :

கற்பொழுக்கமற்ற தீயபண்புகள் கொண்ட பெண்ணைத் திருமணம் செய்வது "ஹராம்" ஆகும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

விசுவாசங் கொண்ட கற்புடைய பெண்களையும், உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களிலுள்ள கற்புடைய பெண்களையும், (அல் மாயிதா : 5)

## 3 மனைவி மஹ்ரமான பெண்களுள் ஒருவராக இருக்கக் கூடாது.

இவ்வாறான பெண்களை ஓர் ஆண் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

இது தொடர்பான விளக்கம் 227 ஆம் பக்கத்தில் முன்னர் இடம்பெற்றுள்ளது. ஒரே சமயத்தில் இரண்டு உடன் பிறந்த சகோதரிகளையோ அல்லது ஒரு பெண்ணையும் அவளது மாமி அல்லது சிற்றன்னையையோ திருமணம் செய்து கொள்ள முடியாது.



### கணவன் தொடர்பான இஸ்லாத்தின் நிபந்தனைகள் :

கணவன் முஸ்லிமாக இருக்க வேண்டுமென்பது இஸ்லாத்தின் நிபந்தனையாகும்.

முஸ்லிமான ஒரு பெண் இறை நிராகரிப்பாளனாக இருக்கும் ஒருவனை திருமணம் செய்வது ஹராமாகும்.

அவன் யஹூதியாகவோ, கிறிஸ்தவனாகவோ அல்லது வேறு எந்த சமயத்தைச் சேர்ந்தவனாகவோ இருக்கலாம்.

ஒருவனை கணவனாக ஏற்றுக் கொள்வதற்கு பின்வரும் இரண்டு பண்புகள் அவனில் இருக்க வேண்டுமென இஸ்லாம் அழுத்தம் கொடுத்துள்ளது :

- இஸ்லாத்தைப் பின்பற்றுதல்.
- நற்குணம்.

நபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் திருப்திப்படுமளவு மார்க்கப் பற்றும் நற்குணமுமுள்ள ஒருவர் உங்களிடத்தில் மணமுடிக்கக் கேட்டால் அவருக்கு நீங்கள் திருமணம் செய்து கொடுங்கள்.
(அத் திர்மிதி : 1084, இப்னு மாஜா : 1967)

## > கணவன் மற்றும் மனைவிக்கான உரிமைகள்

கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் பல்வேறு உரிமைகளை அல்லாஹ் வழங்கியுள்ளான். திருமணத் தொடர்பை விருத்தி செய்யவும், அவைகளைப் பேணிக் கொள்ளவும் இவ்வுரிமைகள் அவர்கள் இருவரையும் தூண்டும்.

குடும்பத்தின் நலனுக்கும் அவர்கள் இருவருமே பொறுப்பாளிகள் ஆவர். உண்மையில், இயலுமைக்கு அப்பாற்பட்ட தொரு விடயத்தைச் செய்யுமாறு ஒருவர், மற்றவரைக் கோரக்கூடாது.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

(மனைவியரான) அவர்களின் மீதுள்ள கடமைகள் போன்று அவர்களுக்கு முறைப்படி உரிமைகளும் உண்டு. (அல் பகறா : 228)

எனவே, கௌரவமானதொரு குடும்பத்தைக் கட்டியெழுப்பவும் வளமான வாழ்வை உருவாக்கவும் சகிப்புத் தன்மையும் அன்பும் அங்கு அவசியம் இருத்தல் வேண்டும்.

### மனைவிக்கான உரிமைகள் :

1 பராமரிப்புச் செலவும் வீட்டு வதிவிட வசதியும்.

- மனைவிக்கான உணவு, உடை மற்றும் ஏனைய செலவுகளை வழங்குவது கணவன் மீதான கடமையாகும்.

மனைவி செல்வந்தப் பெண்ணாக இருந்தாலும் கூட, அவள் வசிப்பதற்குப் பொருத்தமானதொரு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது அவர் மீது கடமையாகும்.

- வழங்கப்பட வேண்டிய பராமரிப்புச் செலவின் அளவு :

வீண்விரயமோ கருமித்தனமோ செய்யாது,கணவன் தனது வருமானத்திற்கேற்ப நன்முறையில் செலவு செய்தல் வேண்டும் இதுவே இதன் அளவாகும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

(பால் குடிச் செலவு விஷயத்தில்) வசதியுடையவர், தன்னுடைய வசதிக்கேற்ப (தாராளமாகச்) செலவு செய்யவும்; எவருக்கு அவருடைய வாழ்வாதாரங்கள் நெருக்கடியாக்கப்பட்டுள்ளதோ அவர் தமக்கு அல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்யவும். (அத் தலாக் : 7)

- பராமரிப்புச் செலவை வழங்குவதானது, மனைவிக்கு வழங்கும் மேலதிகமானதொரு அன்பளிப்பல்ல.மாறாக, அது அவளுக்கு நன்முறையில் கொடுக்க வேண்டிய கட்டாயச்



> ஒருவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நன்முறையில் செலவு செய்வது அவரது கடமையாகும்.

செலவாகவும் அவளது உரிமையாகவும் உள்ளது.

எனவே, அல்லாஹ் கூறுவது போன்று இதனை கணவன் தனது மனைவிக்கு குத்திக்காட்டாமலும் இலிவாகக் கருதாமலும் அன்போடு செலுத்துதல் வேண்டும்.

- மனைவிக்கும், குடும்பத்திற்கும் செலவு செய்வதானது இஸ்லாத்தின் பார்வையில் மிகப் பெரும் கூலியைப் பெற்றுத் தரும் ஒரு வணக்கமாகும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மறுமையில் அல்லாஹ்விடமிருந்து நன்மையை எதிர்பார்த்தவனாக, ஒருவன் தனது குடும்பத்திற்குச் செலவு செய்தால் அது அவர் செய்த தர்மமாக கருதப்படும்."

(அல் புகாரி : 5036, முஸ்லிம் : 1002)

மேலும், நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"உன் மனைவியின் வாயில் (தீத்திவிடுகின்ற) வைத்துவிடுகின்ற உணவுக் கவளம் உள்ளிட்ட அல்லாஹ்வுக்குச் செய்கின்ற அனைத்துச் செலவுகளுக்காகவும் அல்லாஹ்வினால் நீ கூலி வழங்கப்படுவாய்"

(அல் புகாரி : 56, முஸ்லிம் : 1628)

இயலுமான நிலையில் யார் குடும்பத்திற்குச் செலவு செய்யும் தனது கடமையை மறுப்பாரோ அல்லது அசட்டை செய்வாரோ, அவர் பாரியதொரு தீமையைச் செய்தவராகக் கருதப்படுவார்.

இது பற்றி நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"யார் தனது செலவில் தங்கியிருப்போரைப் புறக்கணிப்பாரோ, அவருக்கு அப்பாவமே போதுமானதாகும்" (அபூ தாவூத் : 1692)

## 2 மனைவியோடு அன்பாக நன்முறையில் நடத்தல் :

அன்பாக நன்முறையில் நடத்தல் என்பதன் பொருள், பண்பாட்டோடு பழகுதல், மிருதுவாக நடத்தல், இங்கிதமாகப் பேசுதல், தவறுகள் செய்கின்ற போதும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவு அலட்சியப் போக்கோடு நடக்கின்ற சந்தர்ப்பங்களிலும் சகிப்புத் தன்மையோடு நடந்து கொள்ளல் என்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

மேலும் அவர்களிடம் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்; அவர்களை நீங்கள் வெறுத்துவிடுவீர்களானால், நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும்; (அவ்வாறு வெறுக்கக் கூடிய) அதில் அல்லாஹ் அநேக நன்மைகளை ஆக்கக் கூடும். (அந் நிஸா : 19)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

" இறைவிசுவாசிகளுள் நிரப்பமான ஈமானைப் பெற்றவர், அவர்களில் அழகிய குணமுள்ளவராவார். உங்களில் மிகச் சிறந்தவர் அவர்களது மனைவியர்களோடு, சிறந்த பண்பாட்டுடன் நடப்பவராவார்." (அத் திர்மிதி : 1162)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

" இறைவிசுவாசிகளுள் நிரப்பமான ஈமானைப் பெற்றவர், அவர்களில் நற்பண்பு கொண்டவரும் குடும்பத்தை நன்முறையில் அன்பாக நடத்துபவருமாவார்" (அத் தர்மிதி : 2612, அஹ்மத் : 24677)

மேலும், நபியவர்கள் கூறினார்கள்:

" உங்களில் மிகச் சிறந்தவர், அவர் குடும்பத்திற்கு



> திருமண ஒப்பந்தத்தின் போது,மனைவியினால் இடப்படும் நிபந்தனைகளை கணவன் அவசியம் நிறைவேற்றியாக வேண்டும்.

மிகச் சிறந்தவரே, நான் உங்களுள் எனது குடும்பத்திற்கு மிகச் சிறந்தவன்" (அத் திர்மிதி : 3895)

மனைவிக்கு நாங்கள் வழங்க வேண்டிய உரிமைகள் என்ன? என்று நபித் தோழர்களுள் ஒருவர் நபி

(ஸல்) அவர்களிடம் வினவிய போது இவ்வாறு பதிலளித்தார்கள்:

நீ உணவு சாப்பிட்டால் அவளுக்கும் உண்ணக் கொடு, நீ ஆடை அணிந்தால் அவளுக்கும் ஆடை அணியச் செய், அவள் கன்னத்தில் அறையாதே மேலும் அவளைத் திட்டாதே, வீட்டிலே அல்லாது வேறெங்கும் நீ அவளை விட்டு தனித்திருக்காதே. (அபூ தாவூத் : 2142)

3 சகிப்புத் தன்மையும் அமைதியும் :ஒரு கணவன் தனது மனைவியின் இயல்பை கவணத்திற் கொள்வது அவசியமாகும். இது ஆணின் இயல்புக்கு முற்றிலும் வித்தியாசமானது.

அவளது வாழ்வின் சகல கோணங்களையும் நோக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். எந்தவொரு மனிதனும் தவறு செய்யும் நிலையிலிருந்து நீங்கியவர்களல்லர்.

எனவே, இருவரும் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்வதோடு, ஒருவர் மற்றவரை உடன்பாடாகவே நோக்க வேண்டும்.

இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென இருவரையும் பார்த்து விழித்தவனாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

"ஒருவர் மற்றவருக்கு அன்புகாட்டுவதற்கு மறந்து விடாதீர்கள்". (அல் பகறா : 237)

இது குறித்து நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"இறைவிசுவாசியொருவர் இறைவிசுவாசம் கொண்ட ஒரு பெண்ணை வெறுக்கக் கூடாது. அவளின் ஒரு பண்பை வெறுத்தால், மற்றுமொரு பண்பை திருப்தியோடு ஏற்றுக் கொள்ளவேண்டும்" (முஸ்லிம் : 1469)

பெண்களை அன்புடன் நடத்த வேண்டுமென நபி(ஸல்) அவர்கள் ஆண்களை ஊக்கப்படுத்தியிருப்பதோடு, அவர்களின் மனோபாவம் மற்றும் உளரீதியான இயல்பு நிலை என்பன ஆண்களை விட வித்தியாசமானது என்பதையும் மேலும், இந்நிலையானது குடும்பத்தின் முழுமைத்துவத்திற்கு தேவையானது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்த வித்தியாச வேறுபாடானது, பிரிவினைக்கோ தலாக்குக்கோ காரணமாக இருந்து விடக் கூடாது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

நபி(ஸல்) அவர்கள் இதனை இவ்வாறு கூறினார்கள்:

பெண்களுடன் அன்பாக நன்முறையில் நடந்து கொள்ளுங்கள். விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டுள்ளாள். எனவே அவளை உனது வழிக்கு திருப்ப முடியாது. நீ அவள் மூலம் இன்புற விரும்பினால் அவள் வளைவை வைத்தே நீ இன்புற வேண்டும். அவளை நீ நேராக்கச் சென்றால் நீ அவளை உடைத்து விடுவாய். அவளை உடைத்து விடுவதானது அவளை மண விலக்குச் செய்வதாகும். (அல் புகாரி : 3153, முஸ்லிம் : 1468)

4 மனைவியோடு இரவைக் கழித்தல் :

ஓர் ஆண், தனது மனைவியோடு இரவைக் கழிப்பது அவசியமாகும். இதனை குறைந்தது நான்கு நாட்களுக்கு ஒரு முறையாவது செய்வது கட்டாயமாகும்.

பல மனைவிகள் இருப்பின், அவர்களுக்கிடையே இரவை சமமாக பிரித்துக் கொள்வது கட்டாயக் கடமையாகும்.

5 மனைவி கணவனின் மானமாகக் கருதப்படுவதனால், அவளை பாதுகாத்தல்

ஒருவன் ஒரு பெண்ணை மணம் முடித்துக் கொண்டால், அவள் அவனின் மானமாகவும் கௌரவமாகவும் மாறிவிடுகின்றாள்.

எனவே, அவன் இந்த மானத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பது கட்டாயமாகும். இம்முயற்சியில் அவன் கொல்லப்பட்டாலும் கூட இதனை அவன் செய்தாக வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக யார் கொலை செய்யப்படுகின்றாரோ, அவர் உயிர் தியாகி ஆவார்" (அத் திர்மிதி : 1421, அபூ தாவூத் : 4772)

**6** மனைவியின் படுக்கையறை இரகசியங்களை வெளியிடாது இருத்தல் :

ஒரு கணவன் தனது மனைவியின் தனிப்பட்ட விடயங்களையோ, படுக்கையறை விவகாரங்களையோ ஏனையவர்களோடு கதைப்பது கூடாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மறுமையில் அல்லாஹ்வின் பார்வையில் மிகக் கெட்ட மனிதன், கணவனும் மனைவியும் இல்லற உறவில் ஈடுபட்டு விட்டு பின்னர் கணவன் அவர்களது இந்தப் படுக்கையறை இரகசியங்களைப் பற்றி அடுத்தவர்களுக்கு கூறுபவராவார்". (முஸ்லிம் : 1437)

**7** மனைவிக்கெதிராக வன்முறைகளைப் பிரயோகிக்காதிருத்தல் :

தம்பதியர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் பல்வேறு வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது. அவைகள் வருமாறு :

- பேச்சுவார்த்தைகள், அறிவுரைகள் மூலம் பிழையான நடத்தைகளைத் திருத்துவதனூடாக, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.

- மூன்று நாட்களுக்கு மேற்படாத விதத்தில் மனைவியோடு பேசுவதை நிறுத்திக் கொள்ளலாம்.

  இதற்குப் பின்னரும் பிரச்சினை தீரவில்லையெனில், வீட்டை விட்டு வெளியில் செல்லாமல் படுக்கையிலிருந்து அவளைத் தூரப்படுத்திப் பார்க்கலாம்.

- ஆயிஷா (றழி) அவர்கள் கூறினார்கள்:

  "நபி(ஸல்) அவர்கள் யுத்தத்தில் அன்றி வேறோரு போதும் தனது கையினால், பெண்ணையோ, ஊழியரையோ அடித்ததே கிடையாது"

**8** மனைவிக்கு கற்றுக் கொடுத்தலும் அறிவுரை கூறலும் :

தனது குடும்பத்தினருக்கு நல்லதை ஏவுவதும் தீயதை தடுப்பதும் ஓர் ஆணின் பொறுப்பாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசிகளே ! நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் (நரக) நெருப்பை விட்டும் நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (அத் தஹ்றீம் : 6)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஓர் ஆண் அவரது குடும்பத்துக்கு பொறுப்பாளியாவார் அவரது குடும்பம் பற்றி அவர் வினவப்படுவார். (அல் புகாரி : 2416, முஸ்லிம் : 1829)

**9** மனைவியினால் இடப்படும் நிபந்தனைகளை நிறைவேற்றல் :

திருமண ஒப்பந்தத்தின் போது, மனைவியினால் இடப்படும்(இஸ்லாத்தில்) அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளை கணவன் ஏற்றுக்கொண்டால் அவைகளை அவர் நிறைவேற்றுவது கட்டாயமாகும்.

(உதாரணமாக, குறித்த இவ்வாறானதொரு தங்குமிட வசதி மற்றும் செலவுகள் என்பனவற்றை மாத்திரமே தனக்கு வழங்க வேண்டுமெனக் கோருவது போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்)

திருமண உடன்படிக்கையானது ஒப்பந்தங்களுள் மிகவும் உயர்ந்ததும் உன்னதமானதுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் செய்துகொள்ளும் உடன்படிக்கை நிபந்தனைகளுள் நிறைவேற்றுவதற்கு மிகவும் தகுதியானது பெண்ணுடன் உறவுகொள்வதற்கு உங்களுக்கு சட்டரீதியாக அனுமதியைப் பெற்றுத்தரும் திருமண ஒப்பந்தமாகும்.

(அல் புகாரி : 4856, முஸ்லிம் : 1418)

## கணவனுக்கான உரிமைகள்

1 நன்முறையில் கட்டுப்பட்டு நடத்தல் :

பெண்ணுக்கான பொறுப்பாளனாக ஆணையே அல்லாஹ் ஆக்கியுள்ளான். அந்த வகையில் அவளைப் பராமரிக்கின்ற, வழிகாட்டுகின்ற பொறுப்புக்கள் அனைத்தும் அவனையே சாரும். பெண்களுக்கு இல்லாத பல்வேறு தனித்துவங்களையும் சிறப்பம்சங்களையும் அல்லாஹ் ஓர் ஆணுக்கு வழங்கியிருப்பதோடு, நிதிசார்ந்த பொறுப்பையும் அவனுக்கே கொடுத்துள்ளான்.
அல்லாஹ் கூறுகின்றான் :
ஆண்கள், பெண்களை நிர்வகிக்கின்றவர்கள்; ஏனெனில், அவர்களில் சிலரைக்காண (மற்ற) சிலரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருப்பதனாலும், (ஆண்களாகிய) அவர்கள், தங்கள் செல்வங்களிலிருந்து (பெண்களுக்காக)ச் செலவு செய்வதாலுமாகும். (அந் நிஸா : 34)

2 கணவனின் பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.

ஒரு மனைவி தனது கணவனின் பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்வது அவளின் பொறுப்பாகும். அதற்காக அவள் தன்னை அலங்கரித்து தயார் நிலையில் இருப்பது விரும்பத்தக்கதாகும்.
கணவன் தனது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக மனைவியை அழைக்கின்ற போது அதற்கு அவள் மறுத்து விட்டால், அவள் பெரும் பாவங்களுள் ஒன்றை செய்தவளாகவே கருதப்படுவாள்.
ஆனால் ஹைழுடைய காலம், பர்ளான நோன்பு, நோய் போன்ற ஷரீஆ அனுமதித்த சந்தர்ப்பங்களின் போது மனைவி இவ்வாறு நடந்து கொள்வது குற்றமாகாது.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"ஒருவன் தனது மனைவியை படுக்கைக்கு அழைத்து அதற்கு அவள் மறுத்து அவள் மீது கோபம் கொண்ட நிலையில் இரவைக் கழித்தால், விடியும் வரை மலக்குகள் அவள் மீது சாபமிடுகின்றனர்" (அல் புகாரி : 3065, முஸ்லிம் : 1436)

3 கணவன் விரும்பாத ஒருவனை வீட்டுக்குள் நுழைய அனுமதிக்காது இருத்தல்.

இது மனைவி கணவனுக்கு செய்ய வேண்டிய கடைமைகளுள் ஒன்றாகும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"கணவனின் அனுமதியின்றி ஒரு பெண் சுன்னத்தான நோன்பினை நோற்கவோ அல்லது அவர் விரும்பாத எவரையும் வீட்டுக்குள் நுழைய அனுமதிக்கவோ கூடாது" (அல் புகாரி : 4899)

4 கணவனின் அனுமதியின்றி வீட்டிலிருந்து வெளியில் செல்லாதிருத்தல் :

தனிப்பட்ட அல்லது பொதுவான எந்தவொரு தேவைகளுக்கும் கணவனின் அனுமதியின்றி மனைவி வீட்டை விட்டு வெளியில் செல்லாதிருப்பது, அவள் கணவன் மீது செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்.

5 கணவனுக்கு பணிவிடை செய்தல் :

உணவு சமைப்பது உள்ளிட்ட வீட்டு அலுவல்கள் அனைத்தையும் நன்முறையில் செய்வதன் மூலம் கணவனுக்குப் பணிவிடை செய்வது விரும்பத்தக்கதாகும்.

## > பலதார மணம்

ஓர் ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் முடித்து அவ்விருவரும் அன்புடனும் புரிந்துணர்வுடனும் ஒரே குடும்பமாக இணைந்து வாழ்வதே இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாகும்.

எனினும், இஸ்லாம் தனிமனித மற்றும் சமூக நலன்களைக் கருத்திற்கொண்டு பலதார திருமண முறையை அனுமதித்துள்ளது.

இவ்வனுமதியும் கூட, பெண்களை அநியாயத்திலிருந்து தடுக்கின்ற அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற பல்வேறு வகையான நிபந்தனைகளையும் வரையறைகளையும் இட்டதன் பின்னரே வழங்கப்பட்டுள்ளது.

அவைகள் பின்வருமாறு :

### 1 சமத்துவம் :

செலவளித்தல், உறவு கொள்ளல் போன்ற வெளிப்படையான உடல்சார்ந்த விவகாரங்களில் மனைவியர்களுக்கிடையில் சமத்துவம் பேணுவது கட்டாயக் கடமையாகும்.

இதனைப் பேண முடியாதவர்கள் பலதார திருமணம் செய்துகொள்வது ஹராமாகும்.

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறுகினறான்: அவர்களுக்கிடையில், நீங்கள் நீதமாக நடக்கமுடியாததனைப் பயந்தால், ஒரு பெண்ணை (திருமணம் செய்து கொள்ளுங்கள்). (அந் நிஸா : 3)

அவர்களுக்கிடையில் சமத்துவம் பேணாத நிலையில் நடந்துகொள்வது, மிகவும் அசிங்கமான பாவங்களுள் ஒன்றாகும்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

யாருக்கு இரண்டு மனைவியர்கள் இருந்து அவர்களுள் ஒருவரின் பால் அதிக அக்கறை கொண்டால் அவர் மறுமையில் ஒரு பகுதி சாய்ந்த நிலையில் வருவார்.
(அபூ தாவூத் : 2133)

உளரீதியான அன்புசார் விடயங்களில் சமத்துவம் பேணப்படவேண்டுமென்பது கட்டாயமல்ல.

அது மனித சக்திக்குப் புறம்பானது. பின்வரும் திருமறை வசனம் இதனையே குறித்துக் காட்டுகின்றது.

இன்னும், நீங்கள் (உங்கள்) மனைவியருக்கிடையில் எவ்வளவு விரும்பிய போதிலும் நீதமாக நடக்க நீங்கள் சக்தி பெறவே மாட்டீர்கள். (அந் நிஸா : 129)



> பலதாரமணம்செய்துகொள்வதற்கானசட்டவரையறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது.

**2** மனைவியர்களுக்கு செலவுசெய்வதற்கான பொருளாதார பலத்தை பெற்றிருத்தல் :

தனது அனைத்து மனைவியர்களுக்கும் செலவுகளை வழங்குவதற்கான பொருளாதார பலத்தைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

முதற் திருமணம் நடப்பதற்கே இது நிபந்தனையாகக் கொள்ளப்படுமெனில், இரண்டாம் திருமணத்தின் போது இதன் நிலை எவ்வாறு இருக்குமென்பதை விளக்க வேண்டிய தேவை இருக்காது.

**3** நான்கு பெண்களை விட அதிகமானோரை மனைவியர்களாகக் கொள்ளாதிருத்தல் :

இதுவே, பலதார மணத்துக்கான இஸ்லாத்தின் அதி உயர் எல்லையாகும்.

அல்லாஹ் இதனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான் :

பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நன்னான்காகத் திருமணம் செய்து கொள்ளுங்கள்; அவர்களுக்கிடையில், நீங்கள் நீதமாக நடக்கமுடியாதெனப் பயந்தால், ஒரு பெண்ணை (திருமணம் செய்து கொள்ளுங்கள்).

(அன் நிஸா : 3)

நான்கு பெண்களை விட அதிகமான பெண்களைத் திருமணம் முடித்த நிலையில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினால், அவர்களுள் தான் விரும்பிய நான்கு பெண்களை மாத்திரம் மனைவியர்களாகத் தெரிவுசெய்து விட்டு மீதமுள்ள பெண்களை விட்டுப் பிரிந்து விட வேண்டும்.

**4** சொந்தங்களுக்கிடையிலுள்ள உறவை பாதித்து விடக் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, பின்வரும் சில பெண்களை ஒரே நேரத்தில் மனைவியர்களாகக் கொள்ளாதிருத்தல் :

- ஒரு பெண்ணையும் அவளது சகோதரியையும் ஒரே நேரத்தில் திருமணம் செய்வது ஹராம்.
- ஒரு பெண்ணையும் அவளது மாமியையும் ஒரே நேரத்தில் திருமணம் செய்வது ஹராம்.
- ஒரு பெண்ணையும் அவளது சிற்றன்னையையும் ஒரே நேரத்தில் திருமணம் செய்வது ஹராம்.

## › விவாகரத்துச் செய்தல்




› திருமண உறவானது,தம்பதியர்களிடையே நின்றுநிலைக்க வேண்டுமென்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது. எனினும், விவாகரத்துச் செய்வதற்கான நியாயமான தேவைகள் அவர்களிடையே ஏற்படுகின்ற போது,இதனை முறையாக மேற்கொள்வதற்கான சட்டதிட்டங்களையும் அது விதித்துள்ளது.

திருமண ஒப்பந்தம் எப்போதும் நிலைத்திருக்கவேண்டுமெனவும் தம்பதிகள் இருவருக்குமிடையில் இவ்வுறவானது மரணம் வரையில் தொடர வேண்டுமெனவும் இஸ்லாம் ஊக்கப்படுத்துகின்றது.

திருமணம் மிகவும் வலுவானதொரு உடன்படிக்கையென அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

திருமண ஒப்பந்தம் காலாவதியாகும் நேரம் இதுவென இஸ்லாம் எந்தவொரு காலத்தையும் வரையறை செய்யவில்லை.

இவ்வாறானதோர் உறவு தொடர வேண்டுமென வலியுறுத்தும் இஸ்லாம் மண்ணில் வாழும் மனிதனின் இயல்புகளைக் கருத்திற்கொண்டு இரு தம்பதிகளுக்கிடையிலான திருமண வாழ்க்கை முரண்பாடும் நெருக்கடியும் நிறைந்தவொன்றாக மாறி, அவர்களை இணக்கப் பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைகின்ற போது, இத்திருமண ஒப்பந்தத்திலிருந்து விடுபடுவதற்கான சட்டத்திட்டங்களையும் வகுக்கத்தவறவில்லை.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது, இஸ்லாம் கணவன் மனைவி இருவருடனும் நடைமுறை வாழ்வியலோடு ஒத்துவரும் விதத்தில் நியாயமாக நடந்து கொள்கின்றது.

தம்பதியர்களுக்கிடையில் பல்வேறு பிரச்சினைகளும் மனக்கசப்புக்களும் அதிகமாகவே ஏற்பட்டு விடுகின்றன. இதன் போது, விவாக விலக்கானது

அவர்களின் நல்வாழ்விற்கு மிக முக்கியமானதாகவும் அவர்கள் சார்ந்துள்ள குடும்பம் மற்றும் சமூகம் என்பவற்றின் ஸ்திரப்பாட்டுக்குமான ஒரே வழியாகவும் மாறிவிடுகின்றது.

இவ்வாறான பிரச்சினைகள் நிறைந்து காணப்படும் திருமண வாழ்வானது, அதன் இலக்கை அடைய முடியாது.

இந்நிலையில், இரு தம்பதிகளும் இணைந்து வாழ்வதை விட பிரிந்து வாழ்வதுவே மிகக் குறைந்த பாதிப்பைக் கொண்டதொரு விடயமாக மாறிவிடுகின்றது.

எனவே, மோசமான இந்நிலையிலிருந்து விடுபட்டு இருவரும் தங்களுக்குப் பொருத்தமான மற்றுமொரு வாழ்க்கைத் துணையை பெற்றுக்கொள்வதன் மூலம் முதல் திருமணத்தில் இழந்த சுகங்களை அடைந்துகொள்வதற்கான ஒரு மாற்று வழியாகவே "விவாகரத்து" அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

மேலும் (சேர்ந்து வாழ முடியாமல்,) அவ்விருவரும் பிரிந்து விட்டால், அல்லாஹ், தன் தாராளத்தினால் (அவர்களில்) ஒவ்வொருவரையும் முற்றிலும் (மற்றவரை விட்டும்) தேவையற்றவராக ஆக்கி விடுவான்; (கொடையளிப்பதில்) அல்லாஹ் மிக விசாலமானவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான். (அந் நிஸா : 130)

எனினும், விவாகரத்துத் தொடர்பாகவும் இஸ்லாம் பல்வேறு சட்டத்திட்டங்களை வகுத்துள்ளது. அவைகளுள் சில :-

- விவாகரத்து என்பது, பெண்ணின் பொறுப்பிலல்லாது ஆணின் பொறுப்பிலுள்ள ஒரு விடயம் என்பதே இஸ்லாத்தின் பொதுவிதியாகும்.
- மனைவிக்கு தனது கணவனோடு வாழ முடியாத நிலை உருவாகி விடும் நிலையில் கணவனும் விவாகரத்து செய்து கொள்ள விரும்பாவிடின், குறித்த இந்த மனைவி "காழி"யிடம் சென்று விவாகரத்து கோர முடியும்.

  இதற்காக இவள் முன்வைக்கும் காரணங்கள் ஏற்கமுடியுமானதாக இருப்பின், "காழி" இவளுக்கு விவாக விலக்கு வழங்க முடியும்.
- ஒரு பெண்ணை இரு முறைகள் "தலாக்" கூறிய பின்னர், அவளைத் திரும்பவும் மனைவியாக மாற்றிக் கொள்ள முடியும்.

  ஆனால், மூன்று தடவைகள் தலாக் கூறிவிட்டால், அவள் மற்றுமொருவனை திருமணம் செய்து அவன் இவளை தலாக் கூறும் வரையில் இவர் மறுபடியும் இவளை மனைவியாக மாற்றிக் கொள்ள முடியாது.

ஒருவன் தனது மனைவியை உடலுறவு கொள்ளாத சுத்தமானதொரு காலப்பகுதியில் தலாக் கூறுவதே ஷரீஆ முறைசார்ந்த தலாக்காகும்



## > பெறறோர்களின் உரிமைகள்

பெற்றோர்களோடு அன்பாக நன்முறையில் நடந்து கொள்வதானது மிகவும் உன்னதமான நற்கருமங்களுள் ஒன்றாகவும் அல்லாஹ்விடம் அதீத நன்மைகளைப் பெற்றுத் தரும் ஒரு செயலாகவும் கருதப்படுகின்றது.

இதனை அல்லாஹ் தனக்குச் செய்யப்படும் வணக்க வழிபாட்டோடு இணைத்துக் குறிப்பிட்டுள்ளான்.

இவர்களோடு அன்பாக நன்முறையில் நடந்து கொள்வதானது சுவனத்துக்கு இட்டுச் செல்கின்ற மிக உன்னதமான வணக்கங்களுள் ஒன்றாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தந்தை சுவன வாயில்களுள் நடுவாயிலாவார். நீ விரும்பினால் அதனை மூடிவிடலாம் அல்லது காத்துக்கொள்ளலாம். (அத் திர்மிதி : 1900)

- பெற்றோர்களுக்குக் கட்டுப்படாது அவர்களைத் துன்புறுத்துவதன் ஆபத்தான நிலை :

பெற்றார்களுக்குக் கட்டுப்படாது நடப்பது, மிகப் பெரும் பாவங்களுள் ஒன்று என்பதை வின்னியல் சார்ந்த அனைத்து சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, அவ்வாறு நடப்பதை எச்சரித்தும் உள்ளன.

இதனை நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு இவ்வாறு விளக்கினார்கள் :

"பெரும் பாவங்களுள் ஒன்றைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? எனக் கேற்க, "ஆம்" என ஸஹாபாக்கள் கூறினர். அதற்கு நபியவர்கள் "அல்லாஹ்விற்கு இணை கற்பிப்பது, பெற்றோர்களுக்கு கட்டுப்படாது வாழ்வது" எனக் கூறினார்கள். (அல் புகாரி : 5918)

- அல்லாஹ்விற்கு மாறுசெய்யாத நிலையில் பெற்றோர்களுக்குக் கட்டுப்படல் :

பெறறோர்கள் கட்டளையிடும் அனைத்து விவகாரங்களிலும் அவர்களுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

ஆனால், அல்லாஹ் தடுத்த விடயங்களைச் செய்யுமாறு அவர்கள் கூறினால், அந்த சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவர்களுக்கு கட்டுப்படக் கூடாது.

ஏனெனில், படைத்தவனுக்கு மாறுசெய்ய வேண்டிய விடங்களில் படைப்பினங்களுக்கு கட்டுப்படல் என்பது கிடையாது.

அல்லாஹ் கூறுகின்றான்:

மேலும், தன் பெற்றோருக்கு நன்மை செய்யும்படியாக நாம் மனிதனுக்கு நல்லுபதேசம் செய்திருக்கின்றோம்; அன்றியும், எதைப் பற்றி உனக்கு அறிவு இல்லையோ அதை எனக்கு நீ இணையாக்குமாறு (மனிதனே !) அவர்கள் இருவரும் உன்னை நிர்ப்பந்தித்தால் (அவ்விஷயத்தில்) நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம் (அல் அன்கபூத் : 8)

- குறிப்பாக,வயோதிப காலத்தில் அவர்களுடன் மிக அன்பாக நடந்துகொள்ளல் :

அல்லாஹ் கூறுகின்றான் :

(நபியே !) உமதிரட்சகன் அவனைத் தவிர (மற்றொருவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்றும், பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ, அல்லது அவ்விருவருமோ உம்மிடத்தில் திண்ணமாக முதுமையை அடைந்து விட்டால், அவ்விருவருக்கும் (இழித்துக் கூறப்படும் வார்த்தைகளிலுள்ள) "சீ" என்று (கூட) நீ சொல்ல வேண்டாம்; (உம்மிடமிருந்து) அவ்விருவரையும் விரட்டி விடவும் வேண்டாம்; அவ்விருவருக்கும் மரியாதையான வார்த்தையைக் கூறுவீராக ! (அல் இஸ்ரா∴ : 23)

பெற்றார்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல், அவர்களை வெறுக்காது இருத்தல் (குறிப்பாக, அவர்கள் விருத்தாபிய நிலை அடைந்ததன் பின்னர்) மனிதர்கள் மீது கட்டாயக் கடமை என்பதை அல்லாஹ் இவ்வசனத்தில் குறிப்பிடுகின்றான்.

வெறுப்பைக் காட்டுவதானது, பேச்சில் மட்டுமல்லாது சைகையால் கூட இருக்கக் கூடாது.

- முஸ்லிமல்லாத பெற்றோர்கள் :

பெற்றோர்கள் இறைநிராகரிப்பாளர்களாக இருந்தாலும் கூட, அவர்களுடன் அன்பாக நன்முறையில் நடந்து கொள்வது ஒரு முஸ்லிமின் மீதுள்ள கடமையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

எது பற்றி உனக்கு அறிவு (ஆதாரம்) இல்லையோ, அதை எனக்கு நீ இணையாக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் (அவ்விடயத்தில்) நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம்; ஆயினும், இவ்வுலகில் நன்மையான காரியத்தில் நீ அவ்விருவருடனும் (அன்புடன் ஒத்து) உடனிருப்பாயாக. (லுக்மான் : 15)

அவர்களுக்குச் செய்யும் மிகப்பெரும் நன்மை யாதெனில், அவர்களை அன்பாகவும் அறிவுபூர்வமாகவும் இஸ்லாத்தின் பால் அழைப்பதாகும்.

## › பிள்ளைகளின் உரிமைகள்



- சிறந்ததொரு தாயாக இருப்பதற்கு நல்ல மார்க்கப் பற்றுள்ள பெண்ணை மனைவியாகத் தெரிவு செய்தல். இதுவே, ஒருவன் தனது பிள்ளைகளுக்கு கொடுக்கும் மிகப்பெரும் அன்பளிப்பாகும்.
- ஆழகான சிறந்த பெயர்களை அவர்களுக்குச் சூட்டுதல். இதுவே ஒருவனின் அடையாளமாக அமைந்து விடுகின்றது.
- இஸ்லாத்தின் அடிப்படைகளை அவர்களுக்குப் போதித்து, அதில் அவர்களுக்கு விருப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை நன்முறையில் வளர்த்தல்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களுள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாவர். அவரவர் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் வினவப்படுவர்: ஆட்சியாளர் பொறுப்பாளியாவார் அவரது பிரஜைகள் பற்றி அவர் வினவப்படுவார். ஒரு ஆண் அவரது குடும்பத்துக்கு பொறுப்பாளியாவார் அவரது குடும்பம் பற்றி அவர் வினவப்படுவார். ஒரு பெண் அவளது கணவனின் வீட்டுக்கு பொறுப்பாளி ஆவார் அவள் அவளது பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவார். அறிந்துகொள்ளுங்கள் உங்களுள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாவர். அவரவர் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொருவரும் வினவப்படுவர்:

(அல் புகாரி : 2416, முஸ்லிம் : 1829)

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு மிக முக்கியமானவைகளை ஆரம்பமாகக் கொடுத்து வளர்க்க வேண்டும்.

ஆரம்பமாக, அவர்கள் ஷிர்க் மற்றும் பித்அத்துக்கள் அற்ற மிகச்சரியானதொரு கொள்கைகளின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டும்.

பின்னர், வணக்க வழிபாடுகளை குறிப்பாக தொழுகை என்பவற்றை பயிற்றுவிக்க வேண்டும்.

பின்னர், அவர்களுக்கு நல்ல பண்பாட்டு ஒழுக்கங்களைப் போதிக்க வேண்டும். அதனை அடுத்து நல்ல காரியங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

இது, அல்லாஹ்விடம் மிகவும் உயர்ந்த வணக்கங்களுள் ஒன்றாக கணிக்கப்படுகின்றது.

- செலவளித்தல்:

தந்தை தனது பிள்ளைகளுக்காக செலவளிப்பது கட்டாயக் கடமையாகும்.

இதில் அவர் அசிரத்தையாக நடந்துகொள்ளாது, அவரது சக்திக்குட்பட்ட வகையில் முழுமையாக செலவு செய்வது கடமையாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தனது பராமரிப்புக்குக் கீழ் உள்ளவர்களை உதாசீனப்படுத்துவது ஒருவன் பாவியாகுவதற்கு போதுமானதாகும். (அபூ தாவுத் : 1692)

குறிப்பாக, பெண்பிள்ளைகளை கரிசனையோடு வளர்த்து அவர்களுக்குச் செலவு செய்வதைப் பற்றி

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

யார் இந்தப் பெண் பிள்ளைகளுக்கு பொறுப்பாளியாக இருந்து அவர்களை நன்முறையில் கவனித்துக் கொள்கின்றாரோ அவர்கள் இவரை நரகிலிருந்து காக்கும்

திரையாக மாறிவிடுகின்றனர்.
(அல் புகாரி : 5649, முஸ்லிம் : 2629)

- பிள்ளைகளுக்கிடையில் நீதமாக நடந்து கொள்ளல்.

அவர்கள் ஆண்களாகவோ பெண்களாகவோ எப்படி இருப்பினும் அவர்களை சமமாகவே நடத்த வேண்டும்.

இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு

கூறினார்கள்:

"அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள் மேலும், உங்களது பிள்ளைகளுக்கிடையில் நீதமாக நடந்து கொள்ளுங்கள்." (அல் புகாரி : 2447, முஸ்லிம் : 1623)

ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளையோ அல்லது பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளையோ மேம்படுத்தி நோக்கலாகாது. ஏனெனில் இது பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கிவிடும்.



# எமது பண்பாடுகள்





# 11

இஸ்லாத்தில், பண்பாடானது அதனை முழுமைப்படுத்தும் சாதாரணமானதொரு விடயமாக நோக்கப்படவில்லை. மாறாக, அது மார்க்கத்திலிருந்து பிரிக்க முடியாத அதன் அனைத்துத் துறைகளுடனும் ஆழமான தொடர்பைக் கொண்ட பிரதானமானதோர் அம்சமாகும்.

பண்பாட்டிற்கு இஸ்லாத்தில் மிக உயர்ந்ததும் உன்னதமானதுமான அந்தஸ்து உண்டு.

இது, இஸ்லாத்தினது அனைத்துவிதமான சட்டதிட்டங்களிலும் வெளிப்படையாகவே தென்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூட, இதனை முழுமைப்படுத்தும் நோக்கிலேயே இறைத்தூதராக அனுப்பப்பட்டார்கள்.

## உள்ளடக்கம்

### இஸ்லாத்தின் பார்வையில் பண்பாடுகள்.

- நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்டதற்கான பிரதான இலக்குகளுள் இதுவும் ஒன்றாகும்
- நற்பண்புகள் ஈமான் மற்றும் கொள்கை சார்ந்த மிகவும் உறுதிமிக்கதொரு பகுதியாகும்
- நற்பண்புகள், அனைத்துவிதமான வணக்க வழிபாடுகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன.
- நற்பண்புகளுடன் வாழ்பவர்களுக்கு பெரியளவிலான கூலியையும் மிக உன்னதமான சிறப்புக்களையும் அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்துள்ளான்

### இஸ்லாத்தின் பார்வையில், பண்பாடுகள் கொண்டிருக்கும் சிறப்பியல்புகள்

- பண்பாடாக நடந்துகொள்வதானது, மனிதர்களுள் குறித்ததொரு சாராருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை
- பண்பாடாக நடத்தல், மனித சமூகத்தோடு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை
- வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பண்பாடு பேணப்படல் வேண்டும்:
- அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போதும் பண்பாடாக நடந்து கொள்ளல் வேண்டும்

### நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் முறைகளும் பண்பாடுகளும்

- பணிவு
- கருணை
- நீதம்
- உதவுதலும் தாராளத் தன்மையும்

# இஸ்லாத்தின் பார்வையில் பண்பாடுகள்

**1** நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்டதற்கான பிரதான இலக்குகளுள் இதுவும் ஒன்றாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

அவன் எத்தகையவனென்றால், எழுத்தறிவில்லாத (அரபி) சமூகத்தார்களில், அவர்களிலிருந்தே ஒரு

தூதரை (த் தேர்ந்தெடுத்து) அனுப்பி வைத்தான். அவர் அவனுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைத்து... (அல் ஜும்ஆ : 2)

இறைவிசுவாசிகளுக்கு அல் குர்ஆனைப் போதிப்பதற்கும், அவர்களின் உள்ளங்களைத்

தூய்மைப்படுத்துவதற்கும் இறைத்தூதரை அனுப்பியதன் மூலம் அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிந்துள்ளான்.

இணைவைத்தல், குரோதம் மற்றும் பொறாமை போன்ற தீய பண்புகளிலிருந்து உள்ளத்தைச் சுத்தப்படுத்துவதோடு, மோசமான பேச்சுக்கள் மற்றும் செயற்பாடுகள் போன்ற தீய பழக்க வழக்கங்களை இல்லாமற் செய்வதனையே "தூய்மைப்படுத்துதல்" எனும் சொற்பிரயோகம் குறித்துக்காட்டுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக இவ்வாறு கூறினார்கள்:

"நற்பண்புகளை முழுமைப்படுத்தவே நான் இறைத்தூதராக அனுப்பப்பட்டுள்ளேன்" (அல் பைஹகி : 21301)

மனித சமூகத்தினது ஒழுக்கப்பண்பாட்டை மேம்படுத்துவதானது, நுபுவத்தின் மிகப் பிரதான இலக்குகளுள் ஒன்றாகும்.

**2** நற்பண்புகள் ஈமான் மற்றும் கொள்கை சார்ந்த மிகவும் உறுதிமிக்கதொரு பகுதியாகும் :

மிகச் சிறந்த இறைவிசுவாசி யார்? என நபியவர்களிடம் வினவப்பட்டபோது, "அவர்களுள் மிக அழகிய பண்புள்ளவரே ஆவார்" என நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்."
(அத்திர்மிதி : 1162, அபூ தாவூத் : 4682)

ஈமானை அல்லாஹ் "பிர்" எனும் அறபுப் பதத்தின்



> நற்குணத்தைமுழுமைப்படுத்துவதானது,இறைத தூதின் இலக்குகளுள் மிக முக்கியமானதோர் அம்சமாகும்

மூலம் குறித்துக்காட்டியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான் :

கிழக்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் உங்களுடைய முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மையாக(க் கொள்ளப்படுவது) இல்லை, எனினும், நன்மை உடையவர் (யாரென்றால்,) அல்லாஹ்வைக் கொண்டும், மறுமை நாளைக் கொண்டும், மலக்குகளைக் கொண்டும், வேதத்தைக் கொண்டும், நபிமார்களைக் கொண்டும் ஈமான் கொண்டவரும் ஆவார். (அல் பகறா : 177)

"பிர்" எனும் அறபுப் பதமானது சொல், செயல் சார்ந்த அனைத்துவித நற்கருமங்களையும் குறிக்கும் கருத்தாழமிக்கதொரு சொல்லாகும்.

எனவேதான், நபி (ஸல்) அவர்கள் "நற்கருமம் என்பது நற்பண்புகளாகும்" எனக் கூறினார்கள். (முஸ்லிம் : 2553)

பின்வரும் நபியவர்களின் கூற்றிலிருந்து நற்பண்புகள் ஈமானைச் சார்ந்ததொரு விடயம் என்பது மிகத் துல்லியமாக புலப்படுகின்றது.

"ஈமான் அறுபதிற்கு மேற்பட்ட கிளைகளைக்

கொண்டது. அவற்றுள் மிக உயர்ந்தது "லா இலாஹ இல்லல்லாஹ்" எனக் கூறுவதாகும். அவற்றுள் மிகத் தாழ்ந்தது இடர்தரும் பொருட்களைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். மேலும், வெட்கம் ஈமானின் ஒரு கிளையாகும். (முஸ்லிம் : 35)

3 நற்பண்புகள் அனைத்துவித வணக்க வழிபாடுகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளன :

வணக்க வழிபாடுகளில் ஈடுபடுமாறு மனிதனை அல்லாஹ் பணிக்கின்ற போதெல்லாம், அவைகள் தன்னகத்தே கொண்டிருக்கும் பண்பாட்டியல் இலக்குகளின் பால் அல்லது தனி மனிதன் மற்றும் சமூகம் என்பவற்றில் அவைகள் ஏற்படுத்த வேண்டிய சாதக விளைவுகளின் பால் அவன் அவர்களின் கவனத்தைத் திருப்புகின்றான்.

இதற்குப் பின்வருவன போன்ற பல்வேறு உதாரணங்களை குறிப்பிடலாம்.

தொழுகை:

"தொழுகையை நிலைநாட்டு, நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான மற்றும் வெறுக்கத்தகுந்த செயல்களிலிருந்து தடுக்கும்" (அல் அன்கபூத் : 45)

ஸகாத் :

அவர்களைத் தூய்மைப்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக அவர்களின் சொத்துக்களிலிருந்து ஸகாத்தாக நீ எடுப்பீராக. (அத் தௌபா : 103)

மனிதர்களுக்கு உபகாரம் மற்றும் உதவி செய்வதும், ஆத்மாவை பக்குவப்படுத்துவதும் தீய குணங்களிலிருந்து அதனை பரிசுத்தப் படுத்துவதும் ஸக்காத்தின் யதார்த்தமாகும்.

நோன்பு:

"இறையச்சமுள்ளவர்களாக நீங்கள் மாற வேண்டும் என்பதற்காக, உங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது." (அல் பகறா : 183)

அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்து நடப்பது மற்றும் அவனது விலக்கல்களை விட்டு விலகி வாழ்வது என்பதன் நோக்கம் "இறைவனை அஞ்சிவாழ்வது" ஆகும்.

எனவேதான், நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

யார் மோசமான செயல்கள் மற்றும் பேச்சுக்கள் என்பனவற்றை விடவில்லையோ அவர் உண்ணுவதையும் குடிப்பதையும் விடுவதில் அல்லாஹ்வுக்கு எவ்விதத்தேவையும் இல்லை. (அல் புகாரி : 1804)

ஒருவன் நோற்கும் நோன்பானது, அவனிலோ அல்லது அவன் பிறருடன் நடந்துகொள்ளும் முறையிலோ எந்தவொரு சாதகமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லையெனில், அந்நோன்பு அதன் இலக்கை அடையவில்லை என்பதே பொருளாகும்.

4 இது தொடர்பிலான சான்றுகள், அல் குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் அதிகளவில் காணப்படுகின்றன. அவைகளுட் சில வருமாறு:

மறுமைநாளில் நன்மை தீமைகள் நிறுக்கப்படும் தராசினில் இடப்படும் நற்கருமங்களுள் அதிக நிறை கொண்டதொரு செயலாக இது காணப்படும்.

■ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நன்மை தீமைகள் நிறுக்கப்படும் தராசினில் வைக்கப்படுபவைகளுள் நற்குணத்தை விட பாரமானது வேறொன்றும் இல்லை. நற்குணம் கொண்டதொரு மனிதன் தனது நற்குணத்தினால் தொழுபவர்கள் மற்றும் நோன்பாளிகள் பெறும் அந்தஸ்தினை பெற்றுக்கொள்வான். (அத் திர்மிதி : 2003)

■ இது, மனிதர்கள் சுவனத்தில் நுழைவதற்கு இட்டுச் செல்லும் பெரியதொரு காரணியாகும் :

"மனிதர்களை அதிகளவில் சுவனத்தில் நுழையச் செய்வது, இறையச்சமும் நற்பண்புமாகும்" என நபி
(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அத்திர்மிதி : 2004, இப்னு மாஜா : 4246)

■ மறுமை நாளில், நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானதோர் அந்தஸ்தில் இருப்பவர்கள் நற்பண்புள்ளவர்களாவர் :

இதனைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"உங்களுள் எனக்கு மிகவும் விருப்பமானவராகவும் மறுமையில் எனக்கு மிகவும் நெருக்கமானவராகவும் இருப்பவர் யாரெனில், உங்களுள் மிகச் சிறந்த நற்குணமுள்ளவர்களாவார்" (அத் திர்மிதி : 2018)

■ நற்பண்புகளுக்கு, சுவனத்தின் மிக உயர்ந்த பகுதியில் வீடொன்று வழங்கப்படுவதாக நபியவர்கள் உத்தரவாதம் அளித்துள்ளமை :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சத்தியவாதிகளாக இருந்த போதும் யார் விவாதிப்பதை கைவிடுகின்றனரோ அவர்களுக்கு சுவனத்தின் சுற்றுச்சூழலில் மாளிகை ஒன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கின்றேன். மேலும் விளையாட்டுக்கேனும் பொய் சொல்வதை விட்டவருக்கு சுவனத்தின் மத்திய பகுதியில் மாளிகை ஒன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு உத்தரவாதமளிக்கின்றேன். மேலும், நற்குணத்துடன் நடந்துகொள்பவர்களுக்கு சுவனத்தின் அதிஉயர் பகுதியில் மாளிகையொன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு உத்தரவாதமளிக்கின்றேன்.
(அபூ தாவுத் : 4800)

"ஸயீம்" என்பதன் பொருள் "உத்தரவாதம் அளிப்பவர்" என்பதாகும்.



> நற்பண்பானது, அல்லாஹ்வின் பார்வையில் மிக உன்னதமானதொரு வணக்கமாகும். மேலும், இது மனித உள்ளத்திற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் வழங்குகின்றது.

## இஸ்லாத்தின் பார்வையில், பண்பாடுகளின் சிறப்பியல்புகள்

இஸ்லாத்தில் காணப்படும் பண்பாடுகள் ஏனைய சமயங்களிலுள்ள பண்பாடுகளை விட பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டிருப்பதன் மூலம் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. அவைகளுள் சில :

### 1. பண்பாடாக நடந்துகொள்வதானது, மனிதர்களுள் குறித்ததொரு சாராருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை.

அல்லாஹ், மனிதர்களை பல்வேறு வித்தியாசமான வடிவங்களிலும் நிறங்களிலும் பல்வேறு மொழிகளைப் பேசக்கூடியவர்களாகவும் படைத்துள்ளான்.

அவனது பார்வையில், அவர்கள் அனைவரும் சமமானவர்களே ஆவர். இந்நிலையில், ஒருவர் மற்றவரை விட நம்பிக்கை, இறையச்சம், நன்நடத்தை என்பவற்றினூடாக மாத்திரமே மேம்பட்டவராக இருக்க முடியும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

மனிதர்களே ! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம்; மேலும், நீங்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைப் பல கிளையினராகவும், பல கோத்திரங்களாகவும் நாம் ஆக்கினோம்; (யாராகயிருப்பினும்) அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக உங்களில் மிக்க சங்கைக்குரியவர் உங்களில் மிக்க பயபக்தியுள்ளவர்தாம். (அல் ஹுஜராத் : 13)

உண்மையில், ஒரு முஸ்லிம் மனிதர்களுள் அனைத்து தரப்பினருடனும் பணக்காரன், ஏழை, அரசன், ஆண்டி, அறபி, அஜமி போன்ற வேறுபாடுகள் ஏதுமின்றி சமமான உறவைப் பேணவேண்டுமென்ற நிலைப்பாட்டைப் பெற்றிருப்பது இஸ்லாமியப் பண்பாடு கொண்டிருக்கும் தனித்துவமாகும்.

பிற சமயத்தவர்களோடு பண்பாடாக நடத்தல் : விதிவிலக்கின்றி அனைத்து மக்களுடனும் அன்பாக நடந்து கொள்ள வேண்டுமென அல்லாஹ் எம்மைப் பணித்துள்ளான்.

நீதம், அன்பு, கருணை என்பது ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் முஸ்லிம்களுடனும் இறைமறுப்பாளர்களுடனும் பேச்சிலும் நடத்தையிலும் கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகளாகும்.

பிற சமூகத்தவர்களை இஸ்லாத்தின் பால் அழைப்பதற்கான ஒரு வழியாக இந்த நற்பண்புகளை மாற்றிக் கொள்வதில் ஒரு முஸ்லிம் பேரார்வம் கொண்டவனாக இருக்க வேண்டும்

அல்லாஹ் கூறுகின்றான் :

மார்க்க விஷயத்தில் உங்களுடன் எவர் போரிடவில்லையோ, இன்னும் உங்களுடைய வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றவில்லையோ அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதை விட்டும், அவர்களின் பால் நீங்கள் நீதி செலுத்துவதை விட்டும் அல்லாஹ் உங்களை தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான். (அல் மும்தஹினா : 8)

இறைநிராகரிப்பாளர்களுடன் நட்புவைத்துக் கொள்ளக் கூடாது என்று அல்லாஹ் தடுத்திருப்பதற்கான ஒரே காரணம், அவர்களிடம் காணப்படும் ஷிர்க்கும், இறைநிராகரிப்புமே ஆகும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

அல்லாஹ் உங்களைத் தடுப்பதெல்லாம் : மார்க்க விஷயத்தில் உங்களிடம் போரிட்டு, உங்களுடைய வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றி, உங்களை வெளியேற்றுவதற்கு (எதிரிகளுக்கு) உதவி செய்தார்களே அவர்களை நீங்கள் நண்பர்களாக ஆக்கிக் கொள்வதைத் தான் எவர் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்கிறார்களோ அத்தகையோர் அவர்கள்தாம் அநியாயக்காரர்கள். (அல் மும்தஹினா : 9)

### 2. பண்பாடாக நடத்தல், மனித சமூகத்தோடு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை.

மிருகங்களோடு பண்பாடாக நடத்தல் :

பசியோடு இருந்த பூனையை உண்ணவிடாது அடைத்து வைத்து சாகடித்த காரணத்தினால், நரகம் நுழைந்த பெண்ணொருத்தி பற்றி நபி (ஸல்) அவர்கள் எமக்குக் கூறியுள்ளார்கள். அவ்வாறே,கடும் தாகத்தோடு இருந்த நாயிக்கு நீர் புகட்டியதன் காரணமாக பாவங்களை அல்லாஹ் மன்னித்த ஒரு மனிதரது கதையையும் நபி (ஸல்) அவர்கள் எமக்குக் கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பூனையை கட்டி வைத்து, அதற்கு உணவு கொடுக்கவுமில்லை அதனை பூமியில் சுதந்திரமாக உண்ணவிடவுமில்லை என்ற காரணத்தினால் ஒரு பெண் நரகம் நுழைந்தாள்" (அல் புாகரி : 3140, முஸ்லிம் : 2619)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கடுமையான தாகத்துடன் ஒரு மனிதன் பாதையில் நடந்து கொண்டிருந்தான். அப்போது அங்கு ஒரு கிணறு இருப்பதைக் கண்டு அதிலே இறங்கி நீர் அருந்தி விட்டு மேலே ஏறி பார்த்த போது, தாகத்தின் காரணமாக பெரு மூச்சி வாங்கிய நிலையில் மண்ணை உண்டு கொண்டிருக்கும் ஒரு நாயைப் பார்த்தார். தனக்கு ஏற்பட்ட தாகத்தைப் போன்றே இதற்கும் தாகம் ஏற்பட்டிருக்கின்றது என்று தனக்குள் கூறிக்கொண்டு, மறுபடியும் கிணற்றுக்குள் இறங்கி பாதணிக்குள் நீரை நிரப்பி தனது வாயில் அதனை கௌவிக்கொண்டு வெளியே வந்த அவர் தாகசாந்தி ஏற்படும் வரையில் அதற்கு நீர் புகட்டினார்.

எனவே, அல்லாஹ் அதற்கு நன்றி தெரிவித்து, அவரது பாவத்தை மன்னித்துவிட்டான்."

"அந்தக் கால்நடைகளுக்கு உதவுவதன் மூலமும் எமக்கு நன்மை கிடைக்குமா? அல்லாஹ்வின் தூதரே! என நபித்தோழர்கள் வினவிய போது " உயிர் வாழும் எந்தவொரு உயிரினத்திற்கு தொண்டு செய்தாலும் அதற்கும் நன்மை உண்டு" எனப் பதிலுரைத்தார்கள். (அல் புகாரி : 5663, முஸ்லிம் : 2244)

சூழலைப் பாதுகாத்தல் :

பூமியை வளப்படுத்துமாறு இஸ்லாம் எம்மைப் பணிக்கின்றது.

உற்பத்திகளை மேற்கொண்டு, நாகரிகங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் பூமியை வளப்படுத்துவதற்கான முயற்ச்சிகளையே இது குறிக்கின்றது.

இதன் போது, இந்த வளங்களைப் பாதுகாக்கவும் இவைகளை துஷ்பிரயோகம் செய்வது அல்லது வீணடிப்பது போன்றவற்றிலிருந்து பிறரைத் தடுக்கவும் வேண்டும்.

இவ்வாறான வளத்துஷ்பிரயோகங்கள் மனிதனையோ அல்லது மிருகங்களையோ அல்லது தாவரங்களையோ எதனைப் பாதித்த போதும் அவைகளைத் தடுக்க வேண்டும். ஏனெனில், இவைகளை இஸ்லாம் மறுப்பதோடு வெறுக்கவும் செய்கின்றது.

வாழ்வின் எத்துறை சார்ந்த விடயங்களானாலும் அவைகளை நாசப்படுத்துவதை அல்லாஹ் விரும்புவதில்லை.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: "அழிவு ஏற்படுத்துவதை அல்லாஹ் விரும்பமாட்டான்" (அல் பகறா : 205)

நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வழிகாட்டும் அளவு இது தொடர்பில் இஸ்லாம் அதன் ஆழமான கவனத்தைச் செலுத்தியுள்ளது.

மிகக் கஷ்டமான சூழ்நிலைகளில் கூட முஸ்லிம்கள் நன்மைகள் செய்வதிலும் பூமியில் பயிரிடுவதிலும் அதிகூடிய கரிசனையைச் செலுத்த வேண்டுமென்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மறுமை நாள் சம்பவிக்கப் போகின்றது என்ற சந்தர்பத்தில் உங்களுள் ஒருவரது கையில் தானிய வித்தொன்று இருக்கின்றது. மறுமை நிகழ்வதற்குள் அதனை நட்டி விடுவதற்கு முடியுமாக இருந்தால் கூட அதனை அவர் நட்டட்டும்" (அஹ்மத் : 12981)



> சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென இஸ்லாம் முஸ்லிம்களைத் தூண்டுகின்றது.

## 3. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பண்பாடு பேணப்படல் வேண்டும்:

குடும்பம் :

குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலே பண்பாட்டை பேணவேண்டியதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"உங்களில் மிகச் சிறந்தவர் உங்கள் குடும்பத்திற்கு மிகச் சிறந்தவரே ஆவார். நான் எனது குடும்பத்தவர்களுக்கு உங்களுள் மிகச் சிறந்தவர் ஆவேன்." (அத் திர்மிதி : 3895)

- நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த மனிதராக இருந்தும் கூட, சிறிய பெரிய அனைத்து வீட்டு வேலைகளிலும் ஈடுபட்டு குடும்பத்தவர்களுக்கு உதவுவார்கள்.

  இதுதொடர்பாக நபியவர்களின் மனைவியர்களுள் ஒருவரான ஆயிஷா (றழி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

  "வீட்டு வேலைகளில் மனைவியர்களுக்கு உதவக்கூடியவர்களாக நபியவர்கள் இருந்தார்கள்" (அல் புகாரி : 5048)

- நபி (ஸல்) அவர்கள் தனது குடும்ப அங்கத்தவர்களோடு கொஞ்சிக் குலாவி பரிகாசம் செய்து விளையாடும் வளக்கமுடையவர்களாக இருந்தனர்.

  இதுதொடர்பானதொரு கதையை நபியவர்களின் மனைவி ஆயிஷா (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்:

  "நான் இளமையானவளாகவும் மெல்லிய உடலைக் கொண்டவளாகவும் இருந்த சமயத்தில் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுடன் பயணம் மேற்கொண்டிருந்தேன். அப்பொழுது நபியவர்கள் எம்முடன் வந்தவர்களை முந்திச் செல்லுமாறு கூற அவர்கள் எம்மை முந்திச் சென்றுவிட்டார்கள். பிறகு என்னிடம் வந்து இங்கே வா! என அழைத்து இருவரும் ஓடிப்பார்ப்போமா? எனக் கூறினார்கள். நாங்கள் இருவரும் ஓடினோம் அந்த ஓட்டப்பந்தயத்தில் நான் நபியவர்களை முந்திச் சென்று வெற்றி பெற்றேன்.

  நபி (ஸல்) அவர்கள் இது பற்றி எதுவும் கதைக்கவில்லை. பின்னர் நான் கொழுத்து இந்த சம்பவத்தை மறந்து விட்டிருந்த சந்தர்பத்தில் இது போன்றதொரு மற்றுமொரு பயணத்தை மேற்கொண்டோம். எம்முடன் வந்தவர்களைப் பார்த்து முந்திச்செல்லுங்கள் என்று கூறி விட்டு என்னிடம் வந்து ஓடிப்பார்ப்போமா? என்று கேட்க நாங்கள் இருவரும் ஓடினோம் இம்முறை நபியவர்கள் என்னை முந்திவிட்டார்கள் இதன் போது நபியவர்கள் சிரித்து விட்டு "அன்று தோற்றதற்காக இன்று நான் வெற்றிபெற்றுள்ளேன்" எனக் கூறினார்கள். (அஹ்மத் : 26277)



வர்த்தகம் :

சில வேளைகளில், மனிதர்கள் பணத்தின் மீது அதிக மோகம் கொண்டு செயற்படுவதன் காரணமாக மார்க்க வரையறைகளை மீறி ஹராமான விடயங்களில் அவர்களை ஈடுபடச்செய்துவிடுகின்றது.

இவ்வாறு ஹராமான செயற்பாடுகளை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் சில பண்பாடுகளை கைக்கொள்வதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

அவைகளுள் சில :

■ அளவை நிறுவைகளின் போது ஏமாற்று மற்றும் அநியாயம் செய்வதை இஸ்லாம் தடைசெய்துள்ளதோடு, இவ்வாறு நடந்துகொள்பவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுமெனவும் எச்சரித்துள்ளது.
இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:
(அளவையிலும், எடையிலும் மோசம் செய்து) குறைக்கக்கூடியவர்களுக்குக் கேடு உண்டாவதாக!
அவர்கள் எத்தகையோரென்றால், (தங்களுக்காக) மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கினால், நிறைவாக (அளந்து) வாங்கிக் கொள்கின்றனர்.
(ஆனால்) தாங்கள் அவர்களுக்கு (மற்ற மனிதர்களுக்கு) அளந்து கொடுத்தாலும், அல்லது அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் (குறைத்து மோசடி செய்து அவர்களை) நஷ்டப்படுத்தி விடுகின்றனர். (அல் முதப்பிபீன் : 1 - 3)

■ கொடுக்கல் வாங்கல்களின் போது, இங்கிதமாகவும் சகிப்புத் தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டுமென இஸ்லாம் வர்த்தகர்களைத் தூண்டுகின்றது.
இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்:
"விற்கும் போதும் வாங்கும் போதும் மேலும், பொருட்களுக்கு விலைகோருகின்ற போதும் அன்பாக நடந்துகொள்ளும் ஒரு மனிதருக்கு அல்லாஹ் அவன் கருணையை வழங்குவானாக" (அல் புகாரி : 1970)

கைத்தொழில் :

பல்வேறு ஒழுக்கப்பண்பாடுகளைத் தொழிலாளிகள் கொண்டிருக்க வேண்டுமென இஸ்லாம் அவர்களை வலியுருத்துகின்றது.

■ செய்யும் தொழிலை கனகச்சிதமாகவும் அழகாகவும் மேற்கொள்ளல் வேண்டும்.
இதனை நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
"உங்களில் ஒருவர் ஒரு வேலையைச் செய்தால், அதனை கச்சிதமாக மேற்கொள்வதனையே அல்லாஹ் விரும்புகின்றான்" (அபூ யஃலா : 4386, அல் பைஹகி பீ ஷுஅபில் ஈமான் : 5313)

■ மனிதர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மதித்தல் வேண்டும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று" அவற்றுள் "அவன் வாக்களித்தாள், மாறுசெய்வான்" என்பதும் ஒன்றாகும். (அல் புகாரி : 33)

## 4. அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போதும் பண்பாடாக நடந்து கொள்ளல் வேண்டும்:

பண்பாடாக நடந்துகொள்வதற்கு விதிவிலக்குச் செய்யப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பமும் இஸ்லாத்தில் கிடையாது. யுத்தங்கள் மற்றும் அவை போன்ற மிகக் கடுமையான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போது கூட, ஒரு முஸ்லிம் இறைச்சட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டுமெனவும் நற்பண்புகளை கடைபிடித்தொழுக வேண்டுமெனவுமே கோரப்பட்டுள்ளான்.
அடைய வேண்டிய இலக்கு தூய்மையானது என்பதற்காக, அதற்கான வழிமுறைகளில் ஏற்படும் பிழைகளும் தவறுகளும் மூடிமறைக்கப்படவோ நியாயப்படுத்தப்படவோ மாட்டாது.
இதன் காரணமாகவே, யுத்தம் போன்ற சந்தர்ப்பங்களில் கூட, ஒரு முஸ்லிமின் செயற்பாடுகள் இவ்வாறுதான் அமையவேண்டுமென்று அதற்கான தனியான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை இஸ்லாம் வகுத்துள்ளது.
எனவே, இவ்வாறான நிலைகளில் கூட, கோபம், பிடிவாதம் போன்ற மனித இயல்புகளுக்கு கட்டுப்படாமல் இருப்பதற்கும் குரோதம், இரக்கமின்மை, சுயநலம் போன்ற பண்புகளின் பக்கம் அள்ளுண்டு செல்லாதிருக்கவும் இஸ்லாம் இந்த பண்பாடுகளின் மூலம் தடையை ஏற்படுத்துகின்றது.

## யுத்ததின் போது பேண வேண்டிய இஸ்லாமிய பண்புநெறிகள் / யுத்த தருமங்கள் :

1- எதிரிகளோடு கூட, நீதமாகவும் நடுநிலையாகவும் நடந்து கொள்ளுமாறும் அவர்களுக்கு அநியாயம் செய்யாமலும் அத்துமீறாமலும் இருக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளமை.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

எந்த சமூகத்தவரின் விரோதமும், நீங்கள் நீதமாக நடந்து கொள்ளாதிருக்க உங்களைத் திண்ணமாக தூண்டிவிடவேண்டாம்; (எவ்வளவு விரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதி செலுத்துங்கள். அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும்.

(அல் மாஇதா : 8)

அதாவது, உங்களின் எதிரிகள் மீதுள்ள உங்களது வெறுப்பானது, நீங்கள் அவர்களுக்கு எல்லை மீறி அநியாயம் செய்ய உங்களைத் தூண்டி விடக்கூடாது. மாறாக, உங்களது பேச்சிலும் நடத்தையிலும் அவர்களுடன் நீதமாக நடந்து கொள்ளுங்கள்.

2- எதிரிகளுடன் உறவாடும் போது, அவர்களுக்கு மோசடி மற்றும் துரோகம் செய்வதைத் தவிர்த்தல்.

எதிரிகளுக்குக் கூட, துரோகம் மற்றும் மோசடி செய்வது ஹராமாக்கப்பட்டுள்ளது.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

"நிச்சயமாக அல்லாஹ் மோசடி செய்பவர்களை விரும்பமாட்டான்". (அல் அன்பால் : 58)

3- எதிரிகளின் இறந்த உடல்களை துன்புறுத்தல் மற்றும் சிதைத்தல் என்பவற்றைத் தவிர்த்தல்.


இறந்த உடல்களை சிதைக்கும் செயலானது ஹராமாக்கப்பட்டுள்ளது.

"நீங்கள் சிதைக்க வேண்டாம்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் : 1731)

4- யுத்தங்களில் கலந்து கொள்ளாத அப்பாவிகளை கொலை செய்தல் மற்றும் நிலம், சூழல் போன்றவற்றை சேதப்படுத்தல் என்பவற்றைத் தவிர்த்தல்.

சிரியாவிற்கான படைத்தளபதி உஸாமா இப்னு ஸைத் (றழி) அவர்களை அங்கு அனுப்பி வைக்கும் போது, மிகச் சிறந்த நபித்தோழரும் முஸ்லிம்களின் கலீபாவுமான அபூபக்ர் (றழி) அவர்கள் தளபதிக்கு பின்வருமாறு உபதேசித்தார்கள்: "பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் என்போரைக் கொலை செய்யாதீர்கள். பேரீத்த மரங்களை தறித்து விடவோ அல்லது அவைகளுக்கு தீ மூட்டி விடவோ வேண்டாம். பழம் தரும் மரங்களை வெட்டி விடவேண்டாம். ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றை உணவுக்காகவன்றி வீணாக அறுத்து விடவேண்டாம். மடங்களில் துறவறம் பூண்டிருக்கும் துறவிகளை நீங்கள் தாண்டிச் சென்றால், அவர்களின் நோக்கத்தை அங்கு அவர்கள் நிறைவு செய்வதற்காக அவர்களை அவர்களின் பாட்டில் விட்டுவிடுங்கள்"

(இப்னு அஸாகிர் : 50 / 2)



## நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் முறைகளும் பண்பாடுகளும்



> மனிதர்களுள் நபி(ஸல்) அவர்கள் பண்பாட்டின் சிகரமாக விளங்கினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் உயர்ந்த மனிதப் பண்பாட்டு விழுமியங்களுக்கான சிறந்த உதாரணப் புருஷராகத் திகழ்கின்றார்கள். இதனால் தான், அல் குர்ஆன் இவரின் நற்குணம் மிக உயர்ந்தது என விபரிக்கின்றது.

நபியவர்களின் மனைவி ஆயிஷா (றழி) அவர்களிடம் நபியவர்களின் குணம் பற்றி வினவப்பட்டபோது, அது குறித்து அவர் ஆழமானதொரு பதிலை பின்வருமாறு கூறினார்கள்:

"அவரின் குணம் குர்ஆனாகவே இருந்தது" இதன் பொருள், அல் குர்ஆனின் போதனைகள், அது கூறும் பண்பாடுகள் என்பவற்றின் நடைமுறை விளக்கமாகவே அவர் இருந்தார் என்பதாகும்.

### பணிவு :

- ஒருவர் தனக்காக எழுந்து நின்று மரியாதை செய்வதை நபியவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு செய்யக் கூடாது என்று நபித்தோழர்களைத் தடுத்தார்கள் சஹாபாக்கள் நபியவர்கள் மீது மிகக் கடுமையான நேசம் கொண்டிருந்தும் கூட இவ்வாறு செய்வதை நபியவர்கள் வெறுத்தார்கள் என்பதை அறிந்திருந்த காரணத்தினால், நபியவர்களை அவர்கள் காண்கின்ற போது அவருக்காக அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தவில்லை. (அஹ்மத் : 12345, அல் பஸ்ஸார் : 6637)

- அறேபிய முக்கியஸ்தர்களுள் ஒருவராக இருந்த 'அதீ இப்னு ஹாதம்' என்பவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் நபியவர்களது அழைப்புப் பணியின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் நோக்குடன் நபியவர்களிடம் வந்தார்கள். அதீ கூறுகின்றார்கள்:
"நான் நபியவர்களிடம் வந்தேன். அப்போது அவருடன் ஒரு பெண்ணும் சில பிள்ளைகளும் அவர்களது தேவைகளை அவரிடம் கூறிக்கொண்டிருந்தனர். இவ்வாறு தேவைகளைக் கூறி முடிக்கும் வரை இவர்களுக்காக நபியவர்கள் நின்று கொண்டே இருந்தார்கள். (நபியவர்களுடன் இவர்களுக்கு இருந்த நெருக்கத்தைப் பற்றியே இவர் இங்கு குறிப்பிடுகின்றார்)இவர் கிஸ்ரா அல்லது கைஸர் போன்று நடந்து கொள்ளும் ஒரு மன்னரல்ல என்பதை இதன் மூலம் நான் புரிந்து கொண்டேன்." (அஹ்மத் : 19381)
பணிவாக நடந்துகொள்வதானது நபிமார்கள் அனைவரினதும் பண்பாகும்.

- நபியவர்கள் அவர்களின் தோழர்களுடன் அமர்ந்திருக்கும் போது, அவர்களுள் ஒருவரைப் போன்றே இருப்பார். அவர்களுக்கென்று பிரத்தியேகமானதோர் அமர்விடம் இருக்காது. புதியவரொருவர் அவர் இருக்குமிடத்திற்கு வந்து இவர்தான் நபியென்று புரிந்து கொள்ள முடியாது. உங்களில் யார் முஹம்மத? என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவு மக்களோடு மக்களாகக் கலந்தே இருப்பார்கள். (அல் புகாரி : 63)

- அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்:
"மதீனா அடிமைப் பெண்ணொருத்தி அல்லாஹ்வின் தூதரது கையைப் பிடித்துக்கொண்டு அவள் விரும்பும்

இடமெல்லாம் அழைத்துச் செல்வாள்" (அல் புகாரி : 5724)
"அல்லாஹ்வின் தூதரது கையைப் பிடித்து" என்று கூறப்படும் வாசகத்தின் பொருள்: சிறுவர்களுடனும் நலிவுற்றோருடனும் அன்பாகவும் பணிவாகவும் நடந்துள்ளார்கள் என்பதாகும்.
இங்கு, ஆணை விடுத்து பெண்ணைக் கூறியிருப்பதும் அதேபோன்று சுதந்திரப் பெண்ணை விடுத்து அடிமைப் பெண்ணைக் குறிப்பிட்டிருப்பதும் மேலும், அவள் தனது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக தான் நாடும் இடமெல்லாம் அழைத்துச் செல்கின்றாள் என்பதும் நபியவர்கள் கொண்டிருந்த அதி உச்சகட்டப் பணிவையே காட்டுகின்றது.

- "எவனது உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்குமோ அவன் சுவனம் நுழைய மாட்டான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்:91)

### கருணை :

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அன்பாளர்களுக்கெல்லாம் மிக அன்பாளனான அல்லாஹ் அவர்கள் மீது அன்பு காட்டுவான். மண்ணிலுள்ளவர்களுக்கு நீங்கள் இரக்கம் காட்டுங்கள். விண்ணிலுள்ளவர்கள் உங்களுக்கு இரக்கம் காட்டுவார்கள்" (அத் திர்மிதி : 1924, அபூ தாவூத் : 4941)

நபியவர்களின் அன்பானது, பின்வருவன போன்ற பல்வேறு துறைகளையும் தழுவியதாய்க் காணப்படுகின்றது.

### சிறுவர்களுடனான அன்பு :

- கிராமப் பகுதியைச் சேர்ந்த ஓர் அறேபியர் நபியவர்களிடம் வந்து "நீங்கள் உங்களது பிள்ளைகளை முத்தமிடுகின்றீர்களா ? நாங்கள் அவர்களை முத்தமிடுவதில்லையே எனக் கூறினார். அதற்கு நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:
"அன்பை உனது உள்ளத்திலிருந்து அல்லாஹ் களைந்து எடுத்துவிட்டால் பிறகு, அதனை உன்மனதில் என்னால் இடமுடியுமா" ? (அல் புகாரி : 5652, முஸ்லிம் : 2317)
ஹஸன் இப்னு அலி (றழி) அவர்களை நபியவர்கள் முத்தமிடுவதைப் பார்த்த வேறொரு மனிதர் "எனக்குப் பத்துப் பிள்ளைகள் உள்ளனர். அவர்களுள் ஒருவரைக்கூட நான் முத்தமிட்டதில்லையே என்று கூறிய போது, நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் "பிறர் மீது அன்பு காட்டாதவர்கள் மீது அன்பு காட்டப்படமாட்டாது". (முஸ்லிம் : 2318)



- ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தனது பேத்தியான உமாமா பின்த் ஸைனபை சுமந்த நிலையில் தொழுதார்கள். அவர்கள் ஸுஜூது செய்கின்ற போது குழந்தையை கீழே வைப்பார்கள். நிலைக்கு வருகின்ற போது அவளைத் தூக்கிக் கொண்டு தொழுவார்கள். (அல் புகாரி : 494, முஸ்லிம் : 543)

- நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும் போது, பின்னால் ஒரு குழந்தை அழும் சப்தத்தைக் செவியுற்றால், தொழுகையை சுருக்கமாகவும் அவசரமாகவும் முடித்து விடுவார்கள். நபியவர்கள் கூறியதாக, அபூ கதாதா (றழி) அறிவிக்கின்றார்கள்:
"நான் தொழுகையை நீட்டித் தொழ வேண்டுமென்ற எண்ணத்தில் தொழுகைக்காக நிற்கின்ற போது, குழந்தையொன்று அழும் சப்தம் எனக்கு கேட்குமாயின், எனது இந்தத் தொழுகையை சுருக்கமாக முடித்துவிடுவேன். ஏனெனில், அந்தக் குழந்தையின் தாய்க்கு நான் கஷ்டத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. (அல் புகாரி : 675, முஸ்லிம் : 470)

## பெண்கள் மீதான கருணை :

பெண்பிள்ளைகளை அதிக கரிசணையுடன் கவனித்துக் கொள்ளுமாறும் அவர்களுடன் அன்புடன் பழகுமாறும் நபி (ஸல்) அவர்கள் ஊக்கப்படுத்தியுள்ளார்கள்.
நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறும் வழமையைக் கொண்டிருந்தார்கள்:
"யார் இந்தப் பெண்பிள்ளைகளுக்குப் பொறுப்பாக இருந்து, அவர்களுடன் நன்முறையில் நடந்து கொள்கின்றாரோ, இவர்கள் அவருக்கு நரகின் திரையாக மாறிவிடுவர். (அல் புகாரி : 5649, முஸ்லிம் : 2629)
பெண்களின் உரிமை வழங்கப்படல் வேண்டும். அவர்களது விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தல் வேண்டும். அவர்கள் வாழும் சூழ்நிலைகள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும் என்பன போன்ற விடயங்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அதிக அழுத்தம் கொடுத்துக் கூறியுள்ளார்கள்.
மேலும், இவர்களுடன் முஸ்லிம்கள் இவ்வாறு நன்முறையில் நடந்து கொள்ளுமாறும் ஒருவர் மற்றவருக்கு அறிவுரை கூறிக்கொள்ளுமாறும் நபியவர்கள் அவர்களைப் பணித்தார்கள்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"பெண்களுடன் நன்முறையில் நடந்து கொள்ளுங்கள்". (அல் புகாரி : 4890)
குடும்ப அங்கத்தவர்களுடன் மிகவும் அன்பாக நடக்க வேண்டுமென்பதற்கான மிகச் சிறந்த உதாரணப் புருஷராக நபியவர்கள் வாழ்ந்துள்ளார்கள்.
ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தனது ஒட்டகத்திற்கு அருகாமையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது தனது மனைவி ஸபிய்யா (றழி) அவர்கள் அந்த ஒட்டகத்தில் ஏறுவதற்காக நபியவர்கள் தனது முழங்காலை நட்டி வைத்தார்கள். அதன் மீது ஸபிய்யா (றழி) அவாகள் தனது காலை வைத்து ஒட்டகத்தில் ஏறிப்பயணித்தார்கள். (அல் புகாரி : 2120)
ஒரு முறை நபியவர்களை தரிசிப்பதற்காக தனது மகள் பாதிமா (றழி) அவர்கள் வருகை தந்தபோது, அவரை வரவேற்க நபியவர்கள் எழுந்து சென்று அவரின் கையைப் பிடித்து முத்தமிட்டவராக அழைத்து வந்து அவர் இருந்த இடத்தில் அமரச் செய்தார்கள். (அபூ தாவூத் : 5217)

## நலிவுற்றோர் மீதான அன்பு :

- இதன் காரணமாகவே, அநாதைகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று மக்களை நபி (ஸல்) அவர்கள் தூண்டியிருக்கின்றார்கள்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"நானும் அநாதையை ஆதரிப்பவனும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என தங்களது ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் சமிக்ஞை செய்து அவற்றிற்கிடையே சற்றுப்பிரித்துக்காட்டினார்கள்" (அல் புகாரி : 4998)

- "விதவைகள் மற்றும் ஏழைகளைக் கவனித்துக் கொள்பவர், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்பவர் போன்றவர். மேலும், பகலில் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்குபவர் போன்றவர் ஆவார்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அல் புகாரி : 5661, முஸ்லிம் : 2982)

• சமூகத்திலுள்ள நலிவுற்றோர் மீது அன்புகாட்டுவதும் அவர்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதும் எதிரிகளை வெற்றிகொள்வதற்கும் அல்லாஹ்வின் உதவி கிட்டவும் வாழ்வாதார வசதிகள் கிடைக்கவும் காரணமாக அமையுமென்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"எனக்கு நலிவுற்றவர்களைத்தேடித்தாருங்கள் உங்களிடையே உள்ள நலிவுற்றவர்களின் மூலமே நீங்கள் வாழ்வாதார வசதிகளையும் அல்லாஹ்வின் உதவிகளையும் பெறுகின்றீர்கள்." (அபூ தாவூத் : 2594)

## மிருகங்கள் மீதான அன்பு :

• மிருகங்களுக்கு அன்பு காட்டுதல், சுமக்க முடியாத பாரங்களை அவைகள் மீது ஏற்றிவிடுதல், அவைகளை துன்புறுத்தாதிருத்தல் போன்ற அம்சங்களில் மக்கள் கவனம் செலுத்த வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் மக்களை ஊக்கப்படுத்தியுள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அனைத்து விடயங்களிலும் நன்முறையில் நடந்துகொள்ள வேண்டுமென அல்லாஹ் நிர்ணயம் செய்துள்ளான்.

எனவே நீங்கள் கொன்றால், நன்முறையில் கொள்ளுங்கள். நீங்கள் அறுத்தால், நல்ல முறையில் அறுங்கள். உங்களில் ஒருவர் அவரது கத்தியைக் கூராக்கிக்கொள்ளட்டும். மேலும், அவர் அறுக்கும் மிருகத்திற்கு அவர் சுகத்தைக் கொடுக்கட்டும்." (முஸ்லிம் : 1955)



> இறைவழியில் போராடுபவர் மற்றும் ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் உதவுபவர் ஆகிய இருவரையும் நபி (ஸல்) அவர்கள் சம தரத்தில் வைத்தே நோக்கினார்கள்.



> தனது குஞ்சுகளைத் தேடி அலையும் ஒரு பறவையை நபி (ஸல்) அவர்கள் பார்த்த போது, இந்தத் தாயை விட்டு குஞ்சுகளைப் பிரித்து இதனைத் துன்புறுத்தியவர்கள் யார்? எனக் கேட்டதோடு, அந்தக் குஞ்சுகளை அதன் தாயிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்றும் கூறினார்கள். ( அந்தக் குஞ்சுகளை சில நபித்தோழர்களே எடுத்திருந்தனர்)

• நபித்தோழர்களுள் ஒருவர் கூறுகின்றார்: நபி (ஸல்) அவர்கள் நாங்கள் பற்றவைத்த ஓர் எறும்புக் கூட்டத்தைப் பார்த்து, இவைகளுக்கு தீ மூட்டியவர்கள் யார் ? எனக் கேட்டனர். அதற்கு "நாங்கள் தான்" என நாம் கூறினோம். அதற்கு நபியவர்கள் "நெருப்பின் இரட்சகனைத் தவிர வேறெவரும் நெருப்பினால் வேதனை கொடுக்கக் கூடாது". (அபூ தாவூத் : 2675)

## நீதம் :

• அல்லாஹ்வின் உத்தரவிற்கிணங்க, மிக நெருக்கமான உறவினர்களுக்குக் கூட அல்லாஹ்வின் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கி, நீதியை நிலைநாட்டும் ஒருவராகவே நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசங் கொண்டோரே ! (நீங்கள் சாட்சி கூறினால், அது) உங்களுக்கோ, அல்லது உங்கள் பெற்றோருக்கோ, அல்லது நெருங்கிய

உறவினருக்கோ விரோதமாக இருந்த போதிலும், நீதியை நிலைநிறுத்தியவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (சாட்சி கூறப்படும்). (அந் நிஸா : 135)

•உயர் குலத்தைச் சார்ந்த ஒரு பெண் திருடியதற்காக அவளுக்கு தண்டனை நிறைவேற்றப்படக்கூடாது என்று அவளுக்கு பரிந்து பேசுவதற்காக நபி (ஸல்) அவர்களிடம் சில நபித்தோழர்கள் வந்த நேரத்தில், நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "என் உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக முஹம்மதின் மகள் பாதிமா திருடினால் கூட அவளின் கையையும் நான் துண்டித்துவிடுவேன்".
(அல் புகாரி : 4053, முஸ்லிம் : 1688)

•வட்டி மக்கள் மீது ஹராமாக்கப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் அவரது நெருக்கமான உறவினர் (சாச்சா) "அல் அப்பாஸ்" மூலமே வட்டியை தடுக்க ஆரம்பித்தார்கள்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"நான் தடுத்த முதல் வட்டி, எமது வட்டி அதாவது அல்அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிபினது வட்டியையே ஆகும். ஏனெனில்,அது முழுமையாக மன்னித்து விடப்பட்டுள்ளது".
(முஸ்லிம் : 1218)

•பலவீனமான ஒருவர் தனது உரிமையை பலசாலியிடமிருந்து எதுவிதப் பயமோ தயக்கமோ இன்றி பெறுவதானது, ஒரு சமூகத்தின் நாகரீக வளர்ச்சியை அளவிடும் ஓர் அம்சமாகக் கருதப்பட்டது.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"எந்த சமூகத்தில் நலிவுற்றவர் தனது உரிமையை எதுவிதக் கலக்கமுமின்றிப் பெற்றுக்கொள்ளவில்லையோ, அச்சமூகம் தூய்மைப் படுத்தப்படமாட்டாது". (இப்னு மாஜா : 2426)

## உதவுதலும் தாராளத் தன்மையும் :

•நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு அதிகம் தருமம் செய்பவர்களாக இருந்தார்கள்.
றமழான் மாதத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களைச் சந்திக்கின்ற போது, முன்னரை விட மிகவும் அதிகளவில் தருமம் செய்வார்கள்.



> நபி (ஸல்) அவர்கள் மனிதர்களுள் மிகவும் நீதி மிக்க ஒருவராகவே திகழ்ந்தார்கள். இதில் அவருக்கு உறவினர்கள் மற்றும் எதிரிகள் அனைவரும் சமமாகவே தென்பட்டனர்.

றமழான் மாதம் முடியும் வரை ஒவ்வொரு நாள் இரவும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களைச் சந்தித்து அவர்களுக்கு குர்ஆனை ஓதிக் காண்பிப்பார்கள்.
இவ்வாறு ஜிப்ரீல் (அலை)அவர்கள் நபியவர்களைச் சந்திக்கும் போது புயற் காற்றை விட வேகமாக நபி (ஸல்) அவர்கள் தருமம் செய்வார்கள்.
(அல் புகாரி : 1803, முஸ்லிம் : 2308)

•நபியவர்களிடம் யார் எதனைக் கேட்டாலும் ஒருபோதும் கொடுக்காமல் இருக்கமாட்டர்கள். ஒருநாள் நபியவர்களிடம் ஒருவர் வந்து, ஏதாவது தருமாறு கேட்ட போது, இரண்டு மலைகளுக்கிடைப்பட்ட பகுதி நிரம்பும் அளவுகொண்ட ஆட்டு மந்தையொன்றைக் கொடுத்தார்கள். அவர் தனது சமூகத்திற்குச் சென்று அவர்களை அழைத்து "நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், முஹம்மத் (ஸல்) அவர்கள் வறுமையைப் பயப்படாத நிலையில் அள்ளி தருமம் செய்கின்றார்" என்று கூறினார்கள்.
(முஸ்லிம் : 2312)

•ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் எண்பதாயிரம் திர்ஹம்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

அவைகளை ஒரு விரிப்பின் மேல் வைத்தார்கள். பின்னர் அவை அனைத்தையும் பிரித்து தருமம் செய்து விட்டார்கள். முழுப்பணமும் பங்கிட்டுத் தீரும் வரை கேட்டு வந்த எவரும் வெறுங்கையுடன் எதுவுமின்றி திருப்பி அனுப்பப்படவில்லை. (அல் ஹாகிம் : 5423)

- ஒரு தடவை ஒருவர் நபியவர்களிடம் வந்து ஏதாவது தருமாறு கேட்டார். அதற்கு நபியவர்கள் "தற்பொழுது என்னிடம் எதுவுமில்லை, ஆனால், எமது பெயரில் நீ விரும்பியதை வாங்கிக்கொள், எனக்கு ஏதாவது கிடைத்தால், நான் அதனைச் செலுத்தி விடுவேன்" என்று கூறினார். இதனைக் கேட்ட உமர் (றழி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்கு இயலாத விடயத்தை உங்களுக்கு அல்லாஹ் விதியாக்கவில்லையே" என்று நபியவர்களைப் பார்த்துக் கூறினார்கள். அப்போது அந்த மனிதர் "வறுமையைப் பயப்படாது தருமமாக பணத்தை செலவு செய்யுங்கள். அர்ஷின் சொந்தக்காரனான இறைவன் செல்வத்தைக் குறைத்துவிட மாட்டான்" என்று கூறிய போது, நபியவர்கள் புன்முறுவல் செய்தார்கள். அவரின் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளம் தென்பட்டது. (அல் அஹாதிதுல் முக்தாராத் : 88)

- நபி (ஸல்) அவர்கள் "ஹுனைன்" யுத்தம் முடிந்து திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். அப்போது, அங்கு வந்த புதிதாக இஸ்லாத்தை ஏற்ற கிராமப் பகுதியைச் சேர்ந்த சில அறபிகள் கனீமத் பொருட்களிலிருந்து தங்களுக்கும் அன்பளிப்புக்களைத் தருமாறு கோரியவர்களாக முட்டிமோதி நபி (ஸல்) அவர்களை ஒரு மரத்திற்குள் தள்ளி விட்டார்கள் அது அவர்களின் போர்வையையும் பறித்துக் கொண்டது.
  எனவே, நபி (ஸல்) அவர்கள் அவ்விடத்திலேயே நின்று பின்வருமாறு கூறினார்கள் "எனது போர்வையை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். இங்குள்ள மரச்செடிகளின் எண்ணிக்கை அளவு என்னிடம் ஒட்டகங்கள் இருந்தாலும் கூட, அவை அனைத்தையும் உங்களுக்கிடையே நான் பங்கிட்டுக் கொடுத்துவிடுவேன். பின்னர் என்னை நீங்கள் கஞ்சனாகவோ, பொய்யனாகவோ அல்லது கோழையாகவோ கண்டுகொள்ள மாட்டீர்கள்". (அல் புகாரி : 2979)

பண்பாட்டிற்கு வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் உதாரணப் புருஷராக விளங்கிய நபி (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் அமைதியும் ஏற்படட்டும்.





# எமது புதிய வாழ்வு

# 12

ஒருவன் இஸ்லாத்தில் நுழையும் சந்தர்ப்பமே அவனது வாழ்வின் மிக உன்னதமானதொரு கனப்பொழுதாகும்.

இந்த உலகில் அவன் பிறந்து வாழ்வதற்கான பின்னணியை இதன் பின்னரே அவன் புரிந்து கொள்கின்றான்.

எனவே, இஸ்லாத்தைத் தழுவும் இந்த சந்தர்ப்பமே அவனின் உண்மையான பிறப்பாகும்.

## உள்ளடக்கம்

- இஸ்லாத்தைத் தழுவுவது எவ்வாறு ?
- பாவமன்னிப்புக் கோருதல்.
- தௌபா மற்றும் நேர்வழி போன்ற அருட்கொடைகளைப் பெற்றதற்காக நன்றி செலுத்தல்.
- இஸ்லாத்தின் பால் மக்களை அழைத்தல்
    - அழைப்புப் பணியின் மகிமைகள்
    - அழைப்புப் பணியின் பண்புகள்
    - இஸ்லாத்தின் பால் குடும்பத்தினரை அழைத்தல்
- எமது சூழலும் குடும்பமும்
- இஸ்லாத்தில் நுழைந்ததன் பின்னரான குடும்ப வாழ்வு
    - கணவனும் மனைவியும் ஒரே சமயத்தில் இஸ்லாத்தைத் தழுவுதல்
    - கணவன் மாத்திரம் இஸ்லாத்தைத் தழுவுதல்
    - மனைவி மாத்திரம் இஸ்லாத்தைத் தழுவுதல்
    - சிறுவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதல்
- இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் பெயர் மாற்றம் செய்தல்
- ஸுனனுல் பித்ரா (இயற்கை வழிமுறைகள்)

## > இஸ்லாத்தைத் தழுவுவது எவ்வாறு ?

"கலிமதுஷ் ஷஹாதா" வின் பொருளை அறிந்தவனாக அதனை நம்பி ஏற்று, அதன் விடயங்களுக்குக் கட்டுப்பட்ட நிலையில் மொழிவதன் மூலம், ஒருவன் இஸ்லாத்தில் நுழைந்துவிடுகின்றான்.

"கலிமதுஷ் ஷஹாதா" கொண்டிருக்கும் இரண்டு சாட்சியங்களும் வருமாறு :

1. "அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்" அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படும் இறைவன் வேறுயாருமில்லை, அவனுக்கு இணைவைக்காது அவனை மாத்திரமே வணங்குவேன் என்று நம்பிய நிலையில் நான் சாட்சியம் கூறுகின்றேன்.

2. "வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்" அவனது உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டவனாகவும், அவன் தடுத்தவைகளை விட்டு விலகியவனாகவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்துக்கும் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவார் என்றும்.

   மேலும், அல்லாஹ்வின் போதனைக்கு அமையவும் அவனது தூதரின் வழிகாட்டலுக்கு இணங்கவும் அல்லாஹ்வை நான் வணங்குவேன் என்றும் சாட்சி கூறுகின்றேன். (பார்க்க பக்கம் : 32 - 37)



### குளித்தல் :

ஒருவன் இஸ்லாத்தில் நுழையும் வேளையே அவனது வாழ்வின் அதி உன்னத சந்தர்ப்பமாகும். இதுவே, அவனின் உண்மையான பிறப்பாகும். இதன் பின்னரே, அவன் இந்த உலகில் வாழ்வதற்கான காரணத்தைப் புரிந்து கொள்கின்றான்.

அவன் இஸ்லாத்தைத் தழுவிய உடன் முழு உடலையும் நீரினால் கழுவி குளித்துக் கொள்வது ஷரீஆவின் விதியாகும்.

ஷிர்க் மற்றும் பாவங்கள் என்பவற்றிலிருந்து அவனது உள்ளத்தை சுத்தப்படுத்துவது போன்று தண்ணீரினால் குளிப்பதன் மூலம் அவனது உடலையும் சுத்தப்படுத்திக்கொள்வது "முஸ்தஹப்" ஆகும்.

அறேபியத் தலைவர்களுள் ஒருவர் இஸ்லாத்தை ஏற்க விரும்பிய போது, அவரைக் குளித்துக் கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் பணித்தார்கள். (அல் பைஹகி : 837)

## > பாவமன்னிப்புக் கோருதல்.

பாவமன்னிப்பு (தௌபா) என்பது அல்லாஹ்வை நோக்கி திரும்புவதை அல்லது மீளுவதை குறிக்கும்.
ஒருவர் தனது பாவம் மற்றும் இறைநிராகரிப்பு என்பவற்றை விட்டு விலகி உண்மையான உளநம்பிக்கையுடன் அல்லாஹ்வை நோக்கி முழுமையாகத் திரும்பிய நிலையில், அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருவதே தௌபாவாகும்.
ஒரு முஸ்லிம், தனது வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் பாவமன்னிப்புக்கோர வேண்டிய தேவையுள்ளவனாகவே இருக்கிறான்.
ஏனெனில், மனிதன் பாவம் செய்வது அவனின் இயல்பாகும்.
ஆகவே, பாவம் செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் பாவமன்னிப்புக்கோரி அல்லாஹ்விடம் தௌபா செய்ய வேண்டும்.

### உண்மையான தௌபாவிற்குரிய நிபந்தனைகள் என்ன?

ஷிர்க் மற்றும் இறைநிராகரிப்பு உள்ளிட்ட அனைத்துப் பாவங்களுக்குமான தௌபாவானது, ஏற்று அங்கீகரிக்கப்படுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் அவசியம் இருக்க வேண்டும்.

### 1 பாவத்தை விட்டு விலகுதல்.

தௌபா செய்கின்ற போது, குறித்த அந்தப் பாவத்தை தொடர்ந்து செய்து கொண்டிந்தால், அந்தப் பாவத்திற்கான தௌபா ஏற்று அங்கீகரிக்கப்படமாட்டாது.

உண்மையானதொரு தௌபாவைச் செய்து விட்டு பின்னர் பாவத்தைச் செய்தால், அது முன்னர் செய்த தௌபாவைப் பாதிக்காது. எனினும், இதற்குப் புதியதொரு தௌபாவை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறே ஒவ்வொரு பாவத்தைச் செய்யும் போதெல்லாம் தௌபா செய்தாக வேண்டும்.

### 2 செய்த பாவங்களை எண்ணி வருந்துதல்.

செய்த பாவத்தை நினைத்து ஆழ்ந்த கவலை கொள்ளாவிடின், அந்த தௌபா ஏற்கப்படமாட்டாது.
தன்னால் நடந்த பாவங்களைப் பற்றிக் கதைத்து அதைவைத்து பெருமை அடிப்பவன் ஒரு போதும் அப்பாவங்களை நினைத்து கவலை கொண்டவனாகக் கருதப்படமாட்டான்.
எனவேதான் , நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
"பாவத்தை நினைத்து கவலைப்படுவதே தௌபாவாகும்." (இப்னு மாஜாஹ் : 4252)

### 3 மறுபடியும் பாவங்கள் செய்வதில்லையென திடசங்கற்பம் பூணுதல்.

தௌபாவிற்கு பின்னர் மறுபடியும் அதே பாவத்தைச் செய்வது என்ற எண்ணத்தோடு செய்யப்படும் தௌபா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### மனஉறுதியை பெறுவதற்கான வழிமுறைகள் :

- எவ்வாறானதொரு சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்பட்டபோதும், கண்சிமிட்டுமளவு கூட முன்னர் செய்த பாவத்தை மீண்டும் செய்யாதிருக்க தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ளல்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"பின்வரும் மூன்று பண்புகள் யாரிடம் உள்ளதோ அவர் ஈமானின் சுவையைப் பெற்றுக்கொள்வார்". அவற்றுள் ஒன்றை குறிப்பிடுகின்றார்கள். "இறை நிராகரிப்பிலிருந்து அல்லாஹ் ஒருவரைப் பாதுகாத்ததன் பிறகு, அதற்கு மீண்டும் சென்றுவிடுவதை நெருப்பில் தூக்கி வீசப்படுவதை வெறுப்பதைப் போன்று அவர் வெறுப்பதாகும்". (அல் புகாரி : 21, முஸ்லிம் : 43)

• ஈமானைப் பலவீனப்படுத்தி, பாவங்களின் பால் தூண்டுகின்ற இடங்கள் மற்றும் மனிதர்களிலிருந்து தூர விலகியிருத்தல்.

• மரணம் வரை இந்த மார்க்கத்தில் நிலைத்திருக்க அல்லாஹ்விடம் எந்த மொழியில் எவ்விதத்தில் வேண்டுமானாலும் அதிகமாகப் பிராத்தித்தல்.

குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ள அவ்வாறான துஆக்கள் வருமாறு :


• (அறிவுடைய அவர்கள்) "எங்கள் இரட்சகனே! நீ எங்களுக்கு நேர்வழி காட்டிய பின்னர், எங்களுடைய இதயங்களை (அதிலிருந்து) சறுகிவிடுமாறு செய்து விடாதிருப்பாயாக!
(ஆலு இம்ரான் : 8)

• உள்ளங்களை புறட்டும் இரட்சகனே! எனது உள்ளத்தை உனது மார்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக. (அத் திர்மிதி : 2140)

## தௌபாவின் பின்னர் நடப்பது என்ன ?

ஒருவன் தௌபா செய்தால், அவனின் பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்துவிடுவான்.
அவைகள் எவ்வளவு பெரிய பாரதூரமான பாவங்களாக இருந்தாலும் சரி.
அல்லாஹ்வின் இரக்கம் அனைத்தையும் தழுவியதாகவே உள்ளது.
இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :
"தங்கள் மீது (தாங்களே) அளவு கடந்து (பாவங்கள் செய்து) விட்டோராகிய என் அடியார்களே ! அல்லாஹ்வின் அருளிலிருந்து (அவன் மன்னிப்பை விட்டும்) நிராசையற்றோராக நீங்கள் ஆகிவிடவேண்டாம்; நிச்சயமாக அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் யாவையும் (நீங்கள் பிழை பொறுக்கத் தேடினால்,) அவன் மன்னித்து விடுவான்; (ஏனென்றால்) நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிக்கிறவன், மிகக்கிருபையுடையவன்" (அஸ் ஸுமர் : 53)

ஒருவன் உண்மையான முறையில் தௌபா செய்தால், அவன் எந்தவொரு பாவமும் அற்றவனாக மாறிவிடுவதோடு, தீமைகள் நன்மைகளாகவும் மாற்றப்பட்டுவிடுகின்றன. இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :
(இப்பாவங்களிலிருந்து) எவர் தவ்பாச்செய்து, விசுவாசமும் கொண்டு நற்செயலும் செய்தாரோ அவரைத் தவிர; எனவே அத்தகையோர் அவர்களுடைய தீமைகளை நன்மைகளாக அல்லாஹ் மாற்றிவிடுவான்; மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கிறான். (அல் புர்கான் : 70)
தௌபா செய்த ஒருவனின் நிலை இவ்வாறானதாக இருப்பின், அந்த தௌபாவை பாதுகாப்பது அவனின் பொறுப்பாகும்.
மேலும், ஈமானைப் பாதிக்கக்கூடிய ஷைத்தானின் சதிவலைகளில் விழாதிருக்கவும் முயற்சிக்க வேண்டும்.



> நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போன்று இறைநிராகரிப்புக்குச் செல்வதை ஒரு முஸ்லிம் வெறுத்தால், அவர் ஈமானின் சுவையைப் பெற்றுக் கொள்வார்.

## ஈமானின் சுவை :

அல்லாஹ்வையும் அவன் தூதரையும் அதிகளவில் நேசித்தல், அல்லாஹ்வுடன் கொண்டிக்கும் நெருக்கம் மற்றும் அவனது மார்க்கத்திற்காக செய்யும் அர்ப்பணம் என்பவற்றின் அளவிற்கேற்ப பிறரை நேசித்தல், நெருப்பில் எறியப்படுவதை வெறுப்பது போன்று ஷிர்க், இறைநிராகரிப்பு, வழிகேடு போன்ற முன்பிருந்த நிலைகளுக்கு மீண்டும் செல்வதை வெறுத்தல்: என்பன போன்ற பண்புகளை பெற்றவர்கள் ஈமானின் சுவையைப் பெறுவர்.
இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
"பின்வரும் மூன்று பண்புகள் யாரிடம் உள்ளதோ அவர் ஈமானின் சுவையைப் பெற்றுக்கொள்வார்". அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அவ்விருவரையும் தவிரவுள்ளவைகளைவிட அவருக்கு மிகவும் விருப்பத்துக்குள்ளவர்களாக இருப்பது,அவர் அல்லாஹ்வுக்காகவே ஒரு மனிதனை நேசிப்பது, "இறை நிராகரிப்பிலிருந்து அல்லாஹ் ஒருவரைப் பாதுகாத்ததன் பிறகு, அதற்கு மீண்டும் சென்றுவிடுவதை நெருப்பில் தூக்கி வீசப்படுவதை வெறுப்பதைப் போன்று அவர் வெறுப்பதாகும்". (அல் புகாரி : 21, முஸ்லிம் : 43)

## › *தௌபா மற்றும் நேர்வழி போன்ற அருட்கொடைகளைப் பெற்றதற்காக நன்றி செலுத்துதல்.*

தௌபா மற்றும் நேர்வழி போன்ற அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்த ஒரு முஸ்லிம் மேற்கொள்ள வேண்டிய உன்னத செயல்கள் வருமாறு :

### 1 மார்க்கத்தைப் பின்பற்றல் மற்றும் அதன் போது, ஏற்படும் துன்ப துயரங்களை சகித்துக் கொள்ளல்.



ஒருவர் பெறுமதியானதொரு சொத்தைப் பெற்றிருந்தால், திருடர்கள், அதனை களவாடி விடாதவாறு பாதுகாப்பதோடு, எதுவிதப் பாதிப்புக்களும் ஏற்படாத வண்ணம் வைத்துக் கொள்வதில் கரிசணையுடனும் அக்கறையுடனும் நடந்துகொள்வார்.
இஸ்லாம் மனித சமூகத்திற்கு கிடைத்த அதி உன்னதமானதோர் அன்பளிப்பாகும்.
இது, வெறுமனே சிந்தனா ரீதியானதொரு வழிகாட்டலோ அல்லது மனிதர்கள் விரும்புகின்ற வேளைகளில் மாத்திரம் செயற்படுத்துகின்ற ஒரு பொழுது போக்கு வேலையோ அல்ல.
மாறாக, இது விதிவிலக்கின்றி மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டுகின்ற ஒரு மார்க்கமாகவும் வாழ்க்கை நெறியாகவுமே உள்ளது.
இதன் காரணமாகவே, இஸ்லாத்தையும் அல் குர்ஆனின் போதனைகளையும் எதுவித முரண்பாடுகளுமின்றி பலமாகப் பின்பற்றுமாறு அல்லாஹ் தனது தூதருக்கு பணிப்புரை விடுக்கின்றான். ஏனெனில், இந்த மார்க்கமே நேரான வழியாகும்.
அல்லாஹ் கூறுகின்றான் :
ஆகவே, (நபியே!) வஹீ மூலம் உமக்கு அறிவிக்கப்பட்டதே அத்தகையதைப் பலமாகப் பிடித்துக்கொள்வீராக! நிச்சயமாக நீர் நேரான பாதையின் மீது இருக்கின்றீர். (அஸ் ஸுஹ்ருப் : 43)
இஸ்லாத்தை தழுவியதன் பின்னர் ஒரு முஸ்லிம் துன்ப துயரங்களை எதிர்நோக்கினால், அவன் அதற்காக கவலைப் படவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இது தனது அடியார்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான அல்லாஹ்வின் வழிமுறையாகும்.

எம்மை விட சிறந்தவர்களான நபிமார்கள் கூட மிகக் கடுமையாகச் சோதிக்கப்பட்ட போது, பொறுமையாக இருந்து இறைவழியில் போராடினார்கள்.
உறவினர்கள் எதிரிகள் என்ற வித்தியாசமின்றி அனைவரினாலும் அவர்கள் இவ்வாறான வேதனைகளை அனுபவித்தார்கள்.
இதன் போது, அவர்கள் பலவீனப்பட்டு துவண்டு போய் அவர்களின் கொள்கைகளை மாற்றிக்கொள்ளாமல் திட உறுதியோடு, நிலைகுலையாது நிலைத்து நின்ற கதைகளையெல்லாம் அல்லாஹ் எமக்கு கூறிக்காட்டுகின்றான்.
இது, ஒரு முஸ்லிமின் நம்பிக்கையானது உண்மையானதாகவும் பலமானதாகவும் இருக்கின்றதா? என்பதைப் பரீட்சிப்பதற்கானதோர் அல்லாஹ்வின் சோதனை முறையாகும். எனவே, இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கு முடியுமானளவு முயற்சியை மேற்கொண்டு, சத்திய மார்க்கத்தைப் பலமாகப் பின்பற்றுவதோடு, இதற்காக நபி (ஸல்) அவர்கள் அதிகமாக அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்தனை செய்தது போன்று ஒவ்வொரு முஸ்லிமும் பிரார்த்திக்க வேண்டும்.
"யா முகல்லிபல் குலூப் தப்பித் கல்பீ அலா தீனிக." (அத் திர்மிதி : 2140)
இந்தக் கருத்து தொடர்பாகவே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :
மனிதர்கள் "நாங்கள் விசுவாசங் கொண்டோம்" என்று அவர்கள் கூறுவது கொண்டு (மட்டும்) அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்றும், அவர்கள் சோதனைக்குள்ளாக்கப்படவுமாட்டார் கள் என்றும் எண்ணிக் கொண்டார்களா ?
இவர்களுக்கு முன்னிருந்தோரையும் திட்டமாக நாம் சோதித்திருக்கின்றோம்; ஆகவே, (விசுவாசங் கொண்டோம் என்று கூறும் இவர்களில்) உண்மை சொல்பவர்களை, நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; (அவ்வாறே, இவர்களில்) பொய்யர்களையும் நிச்சயமாக அவன் அறிவான். (அல் அன்கபூத் : 2 - 3)

## 2 அறிவு பூர்வமாகவும் அழகிய உபதேசங்களாலும் இஸ்லாத்தின் பால் மக்களை அழைக்க முயற்சித்தல்.

அழைப்புப் பணியில் ஈடுபடுவதானது, மனிதன் இந்த மார்க்கத்தில் நிலைத்து நிற்கவும் இஸ்லாம் எனும் அருட்கொடையை அவன் பெற்றதற்காக அல்லாஹ்விற்கு தனது நன்றியைத் தெரிவிப்பதற்குமான மிகச் சிறந்ததொரு வழி முறையாகும்.
ஒருவன் மிகக் கடுமையான உயிராபத்துக்கொண்ட பயங்கரமானதொரு நோயினால் பீடிக்கப்பட்டு, பலநாட்களாக அவஸ்தைப்பட்டதன் பின்னர் சரியானதொரு சிகிச்சை முறையைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக குணமடைந்து விட்டால், இவ்வாறான சிகிச்சை முறையை மக்களிடையே பரவலாக அனைவருக்கும் கூறுவான். அதிலும் குறிப்பாக அவனது குடும்பம், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவான் என்பதில் ஐமில்லை.
இந்தக் கருத்தினை பின்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

## › இஸ்லாத்தின் பால் மக்களை அழைத்தல்

### அழைப்புப் பணியின் மகிமைகள்

த.ஃவாப் பணியில் ஈடுபடுவது மிகச் சிறந்த உன்னதமான வணக்க வழிபாடுகளுள் ஒன்றாகும்.

குர்ஆனிலும் சுன்னாவிலும் இதனைச் சிலாகித்துக் கூறும் பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன.

அவற்றுள் சில வருமாறு :

**1** த.ஃவாப் பணியானது, ஈருலகிலும் வெற்றிபெறுவதற்கானதொரு வழி முறையாகும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

இன்னும், (விசுவாசங் கொண்டோரே!) உங்களில் ஒரு கூட்டத்தார் அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பால் அழைக்கின்றவர்களாகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுகின்றவர்களாகவும், தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்குகின்றவர்களாகவும் இருக்கட்டும்; அவர்களே தாம் வெற்றிபெற்றோர். (ஆலு இம்ரான் : 104)

**2** பேச்சுக்களுள் த.ஃவாவில் ஈடுபடுபவரின் பேச்சுக்களே, மிகச் சிறந்ததும் அல்லாஹ்விற்கு மிக விருப்பமானதுமாகும்.

ஓர் அழைப்பாளனின் பேச்சுக்களைப் புகழ்ந்து, அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான் :

எவர் அல்லாஹ் அளவில் (மனிதர்களை) அழைத்து(த் தாமும்) நற்கருமங்களையும் செய்து, நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் உள்ளேன் என்றும் கூறுகின்றாரோ, அவரைவிடச் சொல்லால் மிக்க அழகானவர் யார்? (புஸ்ஸிலத் : 33)

த.ஃவாவில் ஈடுபடுபவரின் பேச்சை விட சிறந்த பேச்சு வேறெதுவும் கிடையாது.

மனிதர்களை படைத்த இரட்சகனை வணங்கும் ஷிர்க் எனும் இருளிலிருந்து வெளியேற்றி ஈமான் எனும் ஒளியின் பால் இட்டுச் செல்லவும் அவர்களை வழிகாட்டுபவரே "தாயி" ஆவார்.

**3** த.ஃவாப் பணியில் ஈடுபடுவது அல்லாஹ்வின் உத்தரவினைப் பின்பற்றும் ஒரு செயலாகும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும், மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின்பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக!.
(அந் நஹ்ல் : 125)

இந்த உயர்ந்த பணியில் ஈடுபடுபவர், அழைக்கப்படும் மக்களின் ஆளுமைகளைப் புரிந்து, அவர்களுக்குப் பொருத்தமான, உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வல்ல தேவையான அழகிய உபதேசங்களைக் கொண்டு அறிவுபூர்வமாக அவர்களை இஸ்லாத்தின் பால் அழைப்பது அவசியமாகும்.

மக்களின் நேர்வழிக்காக, இங்கிதமாகவும் அழகிய வழிமுறைகளைக் கையாண்டும் அவர்களுடன் கலந்துரையாடுதல் வேண்டும்.

**4** த.ஃவாப்பணியானது, அல்லாஹ்வின் அனைத்து இறைத்தூதர்களினாலும் மேற்கொள்ளப்பட்டதொரு வேலையாகும்.

இவர்களுள் முதன்மையானவராக முஹம்மத் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள்.

மனித சமூகத்திற்குரிய சாட்சியாளர்களாகவும், இறைவிசுவாசிகளுக்கு சுவனத்தை நன்மாராயம் கூறுபவர்களாகவும் அவ்வாறே, இறைநிராகரிப்பாளர்களுக்கும் பாவிகளுக்கும் நரகம் மற்றும் தண்டனைகள் கிடைக்குமென்று எச்சரிப்பவர்களாகவும் முழு மானிட சமூகத்திற்கு மத்தியிலும் இறைவனின் பிரகாசத்தைப் பரப்பக்கூடியவர்களாகவும் இவர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

நபியே! நிச்சயமாக நாம் உம்மை (மனிதர்களுக்குச்) சாட்சியாளராகவும், நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கிறோம்.

இன்னும், அல்லாஹ்வின் பால் அவனின் அனுமதி கொண்டு (ஜனங்களை) நீர் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் (உம்மை நாம் அனுப்பியுள்ளோம்.)
(நபியே !) விசுவாசிகளுக்கு அல்லாஹ்விடமிருந்து, நிச்சயமாக அவர்களுக்கு பெரும் பேரருள் உண்டு என்று நீர் நன்மாராயமும் கூறுவீராக! (அல் அஹ்ஸாப் : 45 - 47)

5 அழைப்புப்பணியில் ஈடுபடுவதானது, இடையறாத நன்மைகளைப் பெற்றுத்தரும் ஒரு வழியாகும்.

உமது த.ஃவாவின் காரணமாக ஒருவர் நேர்வழி பெற்றுவிட்டால், அவரது தொழுகை, வணக்க வழிபாடுகள், மக்களுக்கு அவர் செய்யும் போதனைகள் என்பவற்றுக்காக அவருக்குக் கிடைக்கும் அதேயளவு நன்மைகள் உமக்கும் கிடைக்கும்.
த.ஃவாவில் ஈடுபடும் ஒருவருக்கு அல்லாஹ் புரிந்திருக்கும் அருள்கள் எவ்வளவு உன்னதமானது!
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
யார் நேர்வழியின் பால் அழைக்கின்றாரோ அவருக்கு அதனை பின்பற்றுபவர்களுக்கு கிடைக்கும் கூலியளவு கிடைக்கும். ஆனால் அவர்களின் (பின்பற்றுபவர்கள்) கூலிகளிலிருந்து எதுவும் குறைக்கப்படமாட்டாது. (முஸ்லிம் : 2674)

6 அழைப்புப்பணியில் ஈடுபடுபவருக்கு அல்லாஹ் வழங்கவிருக்கும் நன்மைகள், உலகின் சுக போகங்கள் அனைத்தையும் விடவும் சிறந்தது.

அழைப்பாளருக்கான கூலியை அடியார்களிடமிருந்து அல்லாமல் அல்லாஹ்விடமிருந்தே வழங்கப்படுகின்றது. எனவே, இது மகத்தானதொரு கூலியாகவே இருக்கும். ஏனெனில், தாராளத் தன்மை கொண்ட ஒருவன் தனது நேசருக்கு உயர்ந்த கூலியையே கொடுப்பான்.
இதனை அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான் :

"ஆகவே, நீங்கள் (என்னுடைய தூதைப்) புறக்கணித்தால் நான் உங்களிடத்தில் யாதொரு கூலியும் கேட்கவில்லை; என்னுடைய கூலியெல்லாம் அல்லாஹ்வின் மீதே தவிர (மற்றெவரிடமும்) இல்லை; நான் (அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கும்) முஸ்லிம்களில் (உள்ளவனாக) இருக்குமாறே ஏவப்பட்டுளேன்" (என்று கூறினார்). (யூனுஸ் : 72)
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
உங்களின் மூலம் ஒருவருக்கு அல்லாஹ் நேர்வழியைக் காட்டுவதானது உங்களுக்கு சிவப்பு நிற ஒட்டகங்கள் கிடைப்பதனை விட மிகச் சிறந்ததாகும். (அல் புகாரி : 2847, முஸ்லிம் : 2406)



## அழைப்புப் பணியின் பண்புகள் :

த∴வாப் பணியை மேற்கொள்வதற்கான மிகச் சரியானதும் தனித்துவம் மிக்கதுமான வழிமுறைகளைப் பற்றி அல்லாஹ் விளக்கப்படுத்தியுள்ளான்.
அவைகள் வருமாறு :

### 1 அறிவும் தூரநோக்கும் :

அழைப்பாளர், தான் அழைக்கும் சத்திய செய்திகள் பற்றி அறிந்தவராகவும் அவர் முன்வைக்கும் இறைச்செய்திகளை மிகத் தெளிவாகப் புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
இதனை அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான் :
(நபியே !) நீர் கூறுவீராக : இதுவே எனது (நேரான) வழியாகும்; நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்; தெளிவான ஆதாரத்தின் மீதே நானும்,என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கின்றோம். (யூஸுப் : 108)
இதன் பொருள் : இது தான் எமது வழிமுறை என்று நபியே நீர் கூறும். அதாவது அறிவுபூர்வமாக அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது தான் எனது வழியும் என்னைப் பின்பற்றுபவர்களின் வழியும் ஆகும்.
அல்லாஹ்வின் பால் மனிதர்களை அழைப்பதற்கு ஓர் அழைப்பாளர் அதிகமான விடயங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.
எப்போது, புதியதொரு விடயத்தைக் கற்றுக் கொள்கின்றாரோ, அதனை அவர் மக்களுக்கு போதிப்பது அவசியமாகும். உதாரணமாக, அல்லாஹ்விற்கு மாத்திரமே வணக்கம் செய்ய வேண்டுமென ஒருவர் அறிந்தால், அந்தச் செய்தியை உடனடியாக மக்களுக்குப் போதிக்க வேண்டும். அவ்வாறே, இஸ்லாத்தின் அழகிய அம்சங்கள் சிலவற்றைப் பற்றிப் படித்தால் அதனையும் அவர் உடனடியாக மற்றவர்களுக்கு போதிப்பது கட்டாயக் கடமையாகும். குர்ஆனின் ஒரேயொரு வசனத்தைக் கற்றிருந்தாலும் கூட, அதனையும் மக்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.
இதனைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:
"என்னிடமிருந்து ஒரு வசனத்தைப் படித்தால் கூட, அதனையும் மக்களுக்கு எடுத்துக்கூறுங்கள்" (அல் புகாரி : 3274)

இவ்வாறே, நபித்தோழர்கள் நபியவர்களுக்கு முன்னிலையில் இஸ்லாத்தைத் தழுவி, அதன் அடிப்படைகளை சில நாட்களிலேயே கற்று பின்னர் அவர்களது சமூகத்திற்குச் சென்று இஸ்லாத்தின் பால் அவர்களை அழைப்பார்கள். இவர்களின் அழகிய பண்பாடுகளே இஸ்லாத்தை தழுவுவதற்கு மக்களைத் தூண்டும் நல்லதோர் அம்சமாக இருந்தது.

### 2 அழைப்பில் விவேகம் / மதிநுட்பம் :

அல்லாஹ் கூறுகின்றான் :
(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும், மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின்பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக!. (அந்நஹ்ல் : 125)
விவேகம் என்பது, அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யும் பொருத்தமான இடம் காலம் என்பவற்றோடு, இணங்கிச் செல்கின்ற வழிமுறையினூடாக தேவையான தீர்மானங்களையும் நல்ல அறிவுரைகளையும் மேற்கொள்வதனையே குறிக்கும்.
மக்களின் இயல்பு நிலை மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் என்பன ஆளுக்காள் வேறுபட்டே காணப்படுகின்றன.
எனவே, ஒரு தாயி, தனது த∴வாப் பணியில் அவர்களுக்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாள்வதோடு, அவர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள்ளும் எதிர்ப்பார்ப்புடன் எந்நேரமும் காத்திருத்தல் வேண்டும்.
இவை அனைத்தும் இங்கிதமாகவும் அழகிய உபதேசத்தின் மூலமுமே இடம்பெறல் வேண்டும்.
த∴வாவில் ஈடுபடுகின்ற போது, மக்களுடன் அன்பாகவும் இரக்கமாகவும் நடந்துகொள்வதோடு, உள்ளத்தில் தீய எண்ணங்களைத் தூண்டாத, பகை உணர்வுகளை ஏற்படுத்தாத வகையில் நடுநிலையாகவும் அமைதியாகவும் அவர்களுடன் உரையாடுதல் வேண்டும்.
இதன் காரணமாகவே, மக்களுடன் இங்கிதமாகவும் தாராள மனப்பான்மையுடனும் நடந்துகொள்ளும் ஒருவராக நபி(ஸல்) அவர்களை

மாற்றியதன் மூலம் அல்லாஹ் அவர் மீது அவனது அருளைப் புரிந்துள்ளான்.

நபி(ஸல்) அவர்கள் கடின சித்தம் கொண்ட ஒருவராக இருந்திருந்தால், மக்கள் அவரை விட்டு விரண்டோடி இருப்பார்கள்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

(நபியே !) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர்; மேலும், சொல்லில் கடுகடுப்பானவராக, இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால், உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். (ஆலு இம்ரான் : 159)

## இஸ்லாத்தின் பால் குடும்பத்தினரை அழைத்தல் :

இஸ்லாத்தை ஏற்பதற்கு இறையருளைப் பெற்ற ஒருவர், தனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களை இஸ்லாத்தின் பால் அழைப்புக் கொடுப்பதில் பேரார்வம் கொள்வது அவசியமாகும். ஏனெனில், இவர்களே மனிதர்களுள் அவருக்கு மிக நெருக்கமானவர்களும் அன்புக்குரியவர்களுமாவர்.

இவர்களோடு இந்தப் பணியை மேற்கொள்கின்ற போது, எதிர்கொள்ளும் துன்ப துயரங்களைச் சகித்துக்கொள்வதுடன் சத்தியத்தை எடுத்துரைப்பதற்குத் தேவையான அறிவுபூர்வமான அனைத்து வழிமுறைகளையும் பிரயோகித்தல் வேண்டும்.

இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

மேலும், (நபியே!) "நீர் உம் குடும்பத்தினரைத் தொழுகையைக் கொண்டு ஏவுவீராக ! நீரும் அதன் மீது (பொறுமையுடன்) நிலைத்திருப்பீராக!. (தாஹா : 132)

சில அழைப்பாளர்களின் த.்.வாப் பணியை அவர்களது நெருங்கிய உறவினர்கள் நிராகரிக்கின்ற போது, உறவினர்கள் அல்லாத ஏனையவர்களே ஏற்றுக்கொள்வார்கள்.

இது, இவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் அளித்துவிடுகின்றது.

ஆனால், ஒரு வெற்றிகரமான அழைப்பாளர் இவ்வாறான மோசமான எந்தவொரு சூழ்நிலையிலும் அவரது எதிர்பார்ப்பைக் கைவிடாது, அவர்களது நேர்வழிக்காக வித்தியாசமான பல்வேறு நுணுக்கமான அணுகுமுறைகளைப் பயன்டுத்தியும் அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதன் மூலமும் தன்னால் முடியுமான அனைத்து விதமான பிரயத்தனங்களையும் மேற்கொள்வார்.

தனக்கு உதவி செய்த, குறைஷியர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்த பெரிய தந்தை அபூ தாலிபுடன் நபி(ஸல்) அவர்கள் இவ்வாறே நடந்துகொண்டார்கள். ஆனால், இவர் இஸ்லாத்தை ஏற்கவில்லை. இவரது வாழ்வின் அந்திம வேளை வரை நபி(ஸல்) அவர்கள் இவருக்கு அழைப்புக் கொடுக்கும் முயற்சிகளைத் தொடர்ந்தேர்ச்சையாக மேற்கொண்டு வந்தார்கள்.

அபூ தாலிப் மரணப்படுக்கையில் இருந்தபோது கூட, நபியவர்கள் இவரைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள் " எனது பெரிய தந்தையே! நீங்கள் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற இந்தத் திருக்கலிமாவை கூறிவிடுங்கள். இதனைவைத்து மறுமையில் நான் உங்களுக்காக அல்லாஹ்விடம் வாதாடுவேன்" (புஹாரி: 3671,முஸ்லிம்: 24) எனினும், அவர் இதற்கு இணங்காமல் ஓர் இறைமறுப்பாளராகவே மரணித்துவிட்டார். இந்த சந்தர்ப்பத்தில் தான் பின்வரும் இறைவசனம் இறங்கியது :

(நபியே !) நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர்வழியில் செலுத்தி விடமாட்டீர்; எனினும் அல்லாஹ், தான் நாடியோரை நேர் வழியில் செலுத்துகின்றான்; மேலும் நேர்வழி பெறுகிறவர்களை அவனே மிக அறிந்தவன். (அல் கஸஸ் : 56)

எனவே, ஓர் அழைப்பாளர், தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு, இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தல் வேண்டும்.

எனினும், மனித உள்ளங்கள் அல்லாஹ்வின் கையிலேயே உள்ளன. எனவே, அவன் தான் நாடியவர்களுக்கே இந்த நேரான பாதைக்கு வழிகாட்டுவான்.

## › எமது சூழலும் குடும்பமும்



புதியதொரு முஸ்லிம் அவர் இஸ்லாத்தில் நுழைந்தது முதல் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாத உறவினர்கள், தெரிந்தவர்கள் போன்ற அனைவருடனும் பலமான தொடர்பையும் ஆரோக்கியமான உறவையும் உருவாக்கிக்கொள்ளல் வேண்டும். அவர்களுடன் இவ்வாறு பழகுகின்றபோது அழகிய பண்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

சமூக வாழ்விலிருந்து தூர விலகி தனித்து வாழுமாறு இஸ்லாம் எவருக்கும் அழைப்புக்கொடுக்கவில்லை. மக்களுக்கு அன்பு காட்டி, அழகிய சிறந்த பண்பாடுகளுடன் அவர்களோடு நடந்து கொள்வதானது, பண்பாட்டை முழுமைப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட நபி(ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த மார்க்கத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழி முறையாகும்.

சிறந்த பண்பாடுகளையும் நல்ல கௌரவமான நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துவதை ஆரம்பிக்க வேண்டிய முதலிடம் குடும்பமாகும். இவைகள், ஒரு நவ முஸ்லிமானவர் தனது குடும்ப வாழ்வை மேற்கொள்கின்ற போது அவருக்கு தேவைப்படும் சில இஸ்லாமியச் சட்டங்களாகும்.

## › இஸ்லாத்தில் நுழைந்ததன் பின்னரான குடும்ப வாழ்வு

### கணவனும் மனைவியும் ஒன்றாக இஸ்லாத்தை தழுவுதல்

- கணவனும் மனைவியும் ஒன்றாக இஸ்லாத்தை ஏற்றால், இஸ்லாத்திலும் அதே திருமணத்தில்தான் இருப்பார்கள். திருமண ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டிய கடமையில்லை.

பின்வரும் நிலைகள் இந்த விதியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன :

1. ஒருவர், தனக்கு மஹ்ரமானதொரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தால், இஸ்லாத்தில் நுழைந்ததும் அவர்களைப் பிரித்து விடல் வேண்டும். உதாரணமாக : ஒருவர் தனது தாய் அல்லது சகோதரி அல்லது சிற்றன்னை அல்லது மாமி ஆகியோரை திருமணம் செய்வதைக் குறிப்பிடலாம்.

2. ஒருவர் ஒரே சமயத்தில், உடன் பிறந்த இரண்டு சகோதரிகளையோ அல்லது ஒருபெண்ணையும் அவளது சிற்றன்னை அல்லது மாமியை திருமணம் செய்திருத்தல்.

இவ்வாறான நிலையில் இஸ்லாத்தை தழுவினால், இரு மனைவியர்களுள் ஒருவரை "தலாக்" கூறிவிட வேண்டும்.

3. ஒருவர், அவரது நான்குக்கு மேற்பட்ட மனைவியர்களோடு இஸ்லாத்தைத் தழுவினால், இவர்களுள் நான்கு பெண்களுக்கு மேற்பட்டவர்களை மனைவியர்களாக வைத்துக்கொள்ள முடியாது.
இவர்களுள் நான்கு பெண்களை மாத்திரம் தெரிவு செய்துவிட்டு மீதமுள்ளவர்களை விட்டுப் பிரிந்து விடவேண்டும்.

## மனைவி இஸ்லாத்தை ஏற்காத நிலையில், கணவன் மாத்திரம் இஸ்லாத்தை தழுவிக்கொண்டால், அதற்கான சட்டவிதிகள் யாது?

இவ்வாறான சந்தர்ப்பத்தில், இந்த மனைவி சார்ந்திருக்கும் மார்க்கத்தினையே நாம் நோக்க வேண்டும். மனைவி வேதக்கார யஹூதிய பெண்ணாகவோ அல்லது கிறிஸ்தவப் பெண்ணாகவோ அல்லது வேதக்காரி அல்லாத வேறு சமயத்தை சார்ந்த பெண்ணாகவோ இருக்கலாம். உதாரணமாக: சிலை வணக்கத்தில் ஈடுபடுகின்ற பௌத்தம், இந்து போன்ற சமயங்களைச் சார்ந்த பெண்களை அல்லது சமய நம்பிக்கை இல்லாத நாஸ்திகக் கொள்கை சார்ந்த பெண்களைக் குறிப்பிடலாம்.

### 1 வேதக்கார மனைவி :

ஒருவர், இஸ்லாத்தைத் தழுவி, அவரது வேதக்கார மனைவி இஸ்லாத்தை ஏற்கவில்லையானால், அந்தத் திருமணம் அதே நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கும். ஏனெனில், ஒரு முஸ்லிம், வேதக்காரப் பெண்ணைத் திருமணம் செய்வது அனுமதிக்கப்பட்டதாக இருப்பின், ஏலவே, செய்யப்பட்ட திருமண ஒப்பந்தத்தில் தொடர்ந்திருப்பது சாலப்பொருத்தமானதே.

அல்லாஹ் கூறுகின்றான் :

(விசுவாசங் கொண்டோரே!) இன்று (முதல், உணவு வகைகளில்) நல்லவைகள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன; வேதம் கொடுக்கப்பட்டார்களே அத்தகையோரின் உணவும் உங்களுக்கு ஆகுமானதாகும்; உங்களுடைய உணவும் அவர்களுக்கு ஆகுமானதாகும்; விசுவாசங் கொண்ட கற்புடைய பெண்களையும், உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களிலுள்ள கற்புடைய பெண்களையும் (திருமணம் செய்துகொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது.)

(அல்மாயிதா : 05)

எனினும், அப்பெண்ணை இஸ்லாத்தின் பால் அழைப்பதில் அனைத்துவித வழிமுறைகளையும் அவர் பயன்படுத்துதல் அவரின் பொறுப்பாகும்.

### 2 வேதக்காரியல்லாத வேறு சமயத்தைச் சார்ந்த மனைவி :

இவ்வாறானதொரு மனைவி இஸ்லாத்தை ஏற்க மறுக்கும் நிலையில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினால், "இத்தா" காலம் முடியும் வரை தாமதிக்க வேண்டும். ("இத்தா" தொடர்பான விரிவான விளக்கத்தை எதிரே உள்ள அட்டவணையில் காணலாம்.)

- இந்தக்காலப்பகுதியில் அவள் இஸ்லாத்தைத் தழுவினால், அவள் அவனது மனைவியாகவே தொடர்ந்திருப்பாள். புதியதொரு திருமண ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.
- இத்தாவுடைய காலம் முடிவடைவதற்குள் இஸ்லாத்தை ஏற்க மறுத்தால், அந்தத் திருமணம் செல்லுபடியற்றதாக மாறிவிடும்.

இதன் பிறகு, அவள் எப்போது இஸ்லாத்தை தழுவுகின்றாளோ, அப்போது அவர் விரும்பினால், அவளை நெருங்கி திருமணம் செய்துக்கொள்ளுமாறு கோரலாம்.

அல்லாஹ் கூறுகின்றான் :

விசுவாசங் கொள்ளாத அவர்களின் விவாக பந்தங்களை நீங்கள் பற்றிப் பிடிக்கவேண்டாம்.

(அல் மும்தஹினா : 10)

அதாவது, நீங்கள் இஸ்லாத்தை தழுவியதன் பின்னர் உங்கள் பொறுப்பில் வேதக்காரி அல்லாத இறை நிராகரிப்பாளியாகிய ஒரு பெண்ணை மனைவியாக வைத்துக் கொள்ளாதீர்கள் என்பதே இதன் கருத்தாகும்.

| தலாக் விடப்பட்ட பெண்ணுக்கான இத்தா : | |
|---|---|
| 1 | ஒருவர், திருமண ஒப்பந்தத்தை மாத்திரம் செய்துவிட்டு மனைவியோடு உடலுறவு கொள்ளாத நிலையில் அவளைத் "தலாக்" செய்துவிட்டால், இத்தா இன்றி தலாக்கின் மூலம் மாத்திரமே அவள் அவனைப் பிரிந்து விடுவாள்.<br>அல்லாஹ் கூறுகின்றான் :<br>விசுவாசங் கொண்டோரே ! நீங்கள் விசுவாசங் கொண்ட பெண்களைத் திருமணம் செய்து, பிறகு அவர்களை நீங்கள் தீண்டுவதற்கு முன் தலாக் கூறி விட்டால்,(மற்ற விவாகரத்து செய்யப்பட்ட பெண்களுக்காக) நீங்கள் எதைக் கணக்கிடுவீர்களோ அத்தகைய எந்த "இத்தா"வும் அவர்களின் மீது (நிர்ணயிக்க) உங்களுக்கு (உரிமை) இல்லை. (அல் அஹ்ஸாப் : 49) |
| 2 | கர்பிணிப் பெண்ணுக்கான இத்தா :<br>இதற்கான காலம் குழந்தையைப் பிரசவித்தவுடன் நிறைவடையும். பிரசவத்திற்கான காலம் அதிகமாகவோ அல்லது குறுகியதாகவோ எப்படியும் இருக்கலாம்.<br>இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :<br>இன்னும் கர்ப்பமுடையவர்கள் அவர்களின் (இத்தாக் கால) தவணையானது, அவர்களின் கர்ப்பத்தை வைத்தல் (பிரசவித்தல் வரை) ஆகும். (அத் தலாக் : 04) |
| 3 | மாதாந்தம் "மாதவிடாய்" வெளிவரும் கர்ப்பிணி அல்லாத பெண்ணாக இருந்தால், அவளது இத்தாவுக்கான காலம் :<br>"தலாக்" விட்டதன் பின்னர் அல்லது கணவன் இஸ்லாத்தைத் தழுவியதன் பின்னர் மூன்று "ஹைழ்களுக்குரிய காலமாகும்". அதாவது, ஒரு முறை "ஹைழ்"ஏற்பட்டு சுத்தமடைவது முதலாவது ஹைழுக்கான காலமாகும்.<br>இவ்வாறே மூன்று முறை இடம் பெறுவதே "மூன்று "ஹைழ்களுக்குரிய காலமாகும்"<br>ஹைழ்-சுத்தம் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட கால அளவு குறுகியதாகவோ அல்லது நீண்டதாகவோ எப்படியும் இருக்கலாம்.<br>எனவே, மூன்றாவது முறை ஹைழிலிருந்து சுத்தமாகி குளித்ததன் பின்னர் இவளின் இத்தாவிற்கான காலம் முடிவடைந்து விடும்.<br>அல்லாஹ் கூறுகின்றான் :<br>மேலும், 'தலாக்' சொல்லப்பட்ட பெண்கள், தங்களுக்கு மூன்று மாதவிடாய்களை எதிர்பார்த்திருப்பர்.<br>(அல் பகறா : 228) |
| 4 | ஹைழ் (மாதவிடாய்) வெளிவராத பெண்களுக்கான இத்தாக் காலம்:<br>ஹைழ் வெளிவராமைக்கான காரணம், சிறுவயது அல்லது வயது முதிர்ச்சி அல்லது நிரந்தர நோய் போன்ற எதுவாகவும் இருக்கலாம்.<br>இவ்வாறான பெண்களுக்கான இத்தாக் காலம், தலாக் விட்டதன் பின்னர் அல்லது கணவன் இஸ்லாத்தை தழுவியதிலிருந்து மூன்று மாதங்களாகும்.<br>அல்லாஹ் கூறுகின்றான் :<br>(தலாக் சொல்லப்பட்ட மனைவியராகிய) உங்கள் பெண்களில் மாதவிடாயை விட்டு நம்பிக்கையிழந்துவிடுகிறார்களே அத்தகையவர்கள் (அவர்களின் இத்தாவை கணக்கிடுவது பற்றி) நீங்கள் சந்தேகப்பட்டால் அப்போது அவர்களின் இத்தா(வின் தவணை) மூன்று மாதங்களாகும்; (அவர்களில் சிறார்களுக்கும், பருவமடையும் வயதை அடைந்தும் இதுவரையில்) மாதவிடாயே ஏற்படாதவர்களுக்கும் (இவ்வாறே இத்தாவின் தவணை மூன்று மாதங்களாகும்). (அத்தலாக் : 04) |



## மனைவி இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால்

அவள் வேதக்காரப் பெண்ணா? (யஹூதியப் பெண்ணா? அல்லது கிறிஸ்தவப் பெண்ணா?)

**ஆம்** → திருமணம் அதே நிலையில் இருக்கும். புதியதொரு திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தி கணவன், தனது இந்த மனைவியை இஸ்லாத்தின் பால் அழைப்பது அவசியமாகும்.

**இல்லை** → அவள் வேதக்காரப் பெண்ணாக இல்லையென்றால், அவளை இஸ்லாத்தின் பால் அழைக்க வேண்டும். பின்னர் அவள் இத்தாக் காலப் பகுதியில் இஸ்லாத்தைத் தழுவினாளா? என்பதை நாம் பார்க்க வேண்டும். (முன்னால் உள்ள இத்தாவுக்கான அட்டவணையைப் பார்க்கவும்)

**ஆம்** → அவள் இஸ்லாத்தில் அவனது மனைவியாகவே தொடர்ந்தும் இருப்பாள். புதியதொரு திருமண ஒப்பந்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்படாது.

**இல்லை** → இத்தாக் காலம் முடியும் வரையிலான காலப்பகுதியில் இஸ்லாத்தை ஏற்க மறுத்தால், திருமண ஒப்பந்தம் செல்லுபடி அற்றதாக மாறிவிடும்.
அவள் எப்போது இஸ்லாத்தை ஏற்பாளோ அப்போது புதியதொரு திருமண ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதன் மூலம் மறுபடியும் கணவன் மனைவியாக இணைந்து கொள்ளலாம்.

## கணவன் இஸ்லாத்தை ஏற்காத நிலையில் மனைவி இஸ்லாத்தைத் தழுவினால், அதற்கான சட்ட விதிகள் யாது?

இறை நிராகரிப்பாளர்களான கணவன் மனைவி இருவரும் ஒரே சமயத்தில் இஸ்லாத்தைத் தழுவினால், அவ்விருவரும் தொடர்ந்தும் கணவன் மனைவியாகவே இருக்கலாம்.
ஆனால், அவர் அவளது மஹ்ரமான உறவுக்காரராக இருக்கக்கூடாது. உதாரணமாக: அவளது சகோதரனாகவோ அல்லது தாய் அல்லது தந்தையின் சகோதரனாகவோ இருக்கக் கூடாது.
கணவன் இஸ்லாத்தை ஏற்க மறுக்கும் பட்சத்தில் மனைவி மாத்திரம் இஸ்லாத்தை தழுவிக் கொண்டால் :
அவள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதனால் மாத்திரம் இந்தத் திருமண ஒப்பந்தமானது ஆகுமான ஒப்பந்தமாக மாறுகின்றது. இந்நிலையில் மனைவி பின்வரும் அம்சங்களைத் தெரிவுசெய்து கொள்ளலாம் :

- கணவன் இஸ்லாத்தை தழுவுவதை எதிர்பார்த்து காத்திருத்தல்.
அவரின் நேர்வழிக்காக பிரார்த்திப்பதோடு, இஸ்லாத்தைப் பற்றி அவருக்கு விளங்கவைப்பதற்காக பல்வேறு வழிகளிலும் முயற்சித்தல்.
நீண்ட காலத்தின் பின்னர் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாலும் கூட, முதல் திருமண ஒப்பந்தத்தின் படியே அவரைக் கணவராகக் கருதி அவரிடம் மீளச்சென்று விடலாம்.
அவர் இஸ்லாத்தை ஏற்காத நிலையில் அவருடன் உடலுறவு கொள்வது மனைவிக்கு "ஹலால்" ஆகாது.

- அவர் இஸ்லாத்தைத் தழுவுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது எனக் கருதும் பட்சத்தில், மனைவி விரும்பினால்,தன்னைத் தலாக் கூறுமாறு கணவரைக் கோரவோ அல்லது அவள் விரும்பும்வேளை திருமணத்தை "பஸ்க்" செய்து கொள்ளவோ முடியும்.
இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே,இறைநிராகரிப்பாளனாகிய அவளது கணவனை தன்னுடன் உடலுறவு கொள்ளச் செய்வது,அவள் மீது ஹராமாகும்.
இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :
ஆகவே, (நீங்கள் சோதித்ததில்) அவர்களை விசுவாசிகளான பெண்கள் தாம் என்று நீங்கள் அறிந்தால், அவர்களை நிராகரிப்போரிடம் திருப்பி அனுப்பி விடாதீர்கள்; (ஏனென்றால் இஸ்லாத்திற்கு வந்த பெண்களாகிய) அவர்கள், அவர்களுக்கு (மனைவியராக இருக்க) ஆகுமானவர்களல்லர். (அல் மும்தஹினா : 10)



இதனடிப்படையில், அவள் இஸ்லாத்தை தழுவியது முதற்கொண்டு பின்வரும் விடயங்களைச் செய்வது கட்டாயமாகும் :

1. அறிவு பூர்வமாகவும் அழகிய உபதேசங்கள் மூலமும் பல்வேறு வழிமுறைகளினூடாக தனது கணவனை இஸ்லாத்தின் பால் அவசரமாக அழைத்தல்.
2. கணவன் இஸ்லாத்தை ஏற்க மறுத்து இதற்கான பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னரும் அவரை இஸ்லாத்தை ஏற்கச் செய்வதில் வெற்றியடையாது, அதில் நிராசையும் அடைந்து விட்டால், அவரைவிட்டுப் பிரிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கலாம்.
3. "தலாக்" சொல்ல வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்தக்காலப்பகுதியானது (அது நீண்டதொரு காலமாக இருந்த போதும்) அவர்கள் இருவருக்குமிடையிலுள்ள இந்தத் திருமண ஒப்பந்தமானது ஆகுமான ஒப்பந்தக் காலப்பகுதியாகவே கருதப்படும்.
   இக்காலப்பகுதிக்குள் எப்போது அவர் இஸ்லாத்தை தழுவுகின்றாரோ, அப்போது (அது இத்தாவிற்குப் பின்னராக இருந்தாலும் சரி) முதல் ஒப்பந்தத்தின் படியே மனைவியிடம் மீண்டும் சென்று சேர்ந்துக்கொள்ளலாம்.
   பிரிவதற்கான மேற்குறித்த நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டால், திருமண ஒப்பந்தம் செல்லுபடி அற்றதாக மாறிவிடும்.
4. தலாக் கூறவைப்பதற்கான நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்னுள்ள காத்திருக்கும் காலப்பகுதியில் மனைவி கணவனின் வீட்டில் தங்கியிருக்க முடியும்.
   மனைவி இஸ்லாத்தைத் தழுவியது முதற்கொண்டு இறை நிராகரிப்பாளரான தனது கணவனுடன் உடலுறவு கொள்வது "ஹராம்" ஆகும்.

### சிறுவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதல் :

படைக்கப்பட்ட அனைத்து மனிதர்களும் முஸ்லிம்களாகவும் அல்லாஹ்வை நம்பும் இயல்பான மனோநிலையுடனுமே பிறக்கின்றனர்.
பெற்றோர்கள் அவர்களுக்கு வேறு சமயங்களை போதித்து வளர்ப்பதன் காரணமாகவே அவர்கள் பிற சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"ஒவ்வொரு பிள்ளைகளும் அல்லாஹ்வை நம்பி ஏற்றுக்கொள்ளும் இயல்பான மனோநிலையுடனேயே பிறக்கின்றனர். ஆனால், பெற்றோர்களே அவர்களை யஹூதிகளாக அல்லது கிறிஸ்தவர்களாக அல்லது மஜூசிகளாக மாற்றிவிடுகின்றனர்". (அல் புகாரி : 1292, முஸ்லிம் : 2658)
இறை நிராகரிப்பாளர்களது குழந்தைகள் மரணித்து விட்டால், இவ்வுலகில் அவர்கள் இறைநிராகரிப்பாளர்கள் என்றே தீர்ப்பளிக்கப்படுவர். (இரகசியங்களை அல்லாஹ் நன்கறிந்தவன் அவன் யாருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.)
மறுமையில் அவன் அவர்களை பரீட்சித்துப் பார்த்து, அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்ற நிலையில் இருப்பவர்கள் சுவனம் நுழைவிக்கப்படுவர்.
அவ்வாறே, பாவங்கள் செய்திருப்பார்கள் எனும் நிலையில் உள்ளவர்கள் நரகில் நுழைவிக்கப்படுவர்.
இணைவைப்பவர்களது குழந்தைகள் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது, அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள்.
"அல்லாஹ் அவர்களை படைத்த போதே அவர்கள் எவ்வாறான செயல்களை செய்வார்கள் என்பதை அல்லாஹ் நன்கறிவான்". (அல் புகாரி : 1317)

## இறைநிராகரிப்பாளர்களது குழந்தைகள் இவ்வுலகில் வாழும் போது, முஸ்லிம்கள் தான் என்பதை எப்போது நாம் தீர்மானிக்கலாம்?

இதனை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு வித்தியாசமான சந்தர்ப்பங்கள் உண்டு. அவைகளுள் சில :

1. பெற்றோர்கள் இருவரும் அல்லது அவர்களுள் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினால், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் மேற்படி பெற்றோர்களுள் நல்லவரது மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களாகவே கருதப்படுவர்.

2. பெற்றோர்கள் இஸ்லாத்தைத் தழு-வாத நிலையில் இருந்தாலும் கூட, பருவ வயதை அடையாத பகுத்தறிவுள்ள குழந்தையொன்று இஸ்லாத்தைத் தழுவினால், அவர் இஸ்லாமியனாகவே இருப்பார்.
யுஹூதியச் சிறுவன் ஒருவன் நபி (ஸல்) அவர்களுக்கு பணிவிடை செய்து வந்தான். இவன் நோய்வாய்ப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் இவனைக் குசலம் விசாரிக்கச் சென்று இவனது தலைமாட்டில் உட்கார்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கூறினாகள். அப்போது இவன் அங்கிருந்த அவனது தந்தையின் முகத்தைப் பார்த்த வேளையில் “அபுல் காசிமுக்கு நீ கட்டுப்படு” என்று அவர் தனது மகனுக்குக் கூறினார்.
எனவே, அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். நபி (ஸல்) அங்கிருந்து எழும்பிச் செல்லும் போது பின்வருமாறு கூறினார்கள்: “நரகிலிருந்து இவனைக் காத்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்”. (அல் புகாரி : 1290)

பெற்றோர்கள் இருவருமா? அல்லது அவர்களுள் ஒருவர் மாத்திரமா? இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்

ஆம் → முஸ்லிமாக அவர் கருதப்படுவதோடு, அவ்வாறே நடத்தவும் படுவார்.

இல்லை → குடும்பம் இஸ்லாத்தை ஏற்காத நிலையில், தனியாக அவர் மாத்திரம் இஸ்லாத்தினை தழுவினாரா?

ஆம் → அவர் பகுத்தறிவு கொண்ட பருவ வயதை அடைந்த ஒருவராக இருந்தால், இது அவரை மறுமையில் பாதுகாக்கும் என்பதும் உலகில் ஒரு முஸ்லிமாகவே அவர் கணிக்கப்பட வேண்டுமென்பதும் முஸ்லிம் அறிஞர்களினது ஏகோபித்த கருத்தாகும்.

இல்லை → இறை நிராகரிப்பாளர்களது குழந்தைகள் மரணித்து விட்டால், இவ்வுலகில் அவர்கள் இறைநிராகரிப்பாளர்கள் என்றே தீர்ப்பளிக்கப்படுவர். (இரகசியங்களை அல்லாஹ் நன்கறிந்தவன் அவன் யாருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.)
மறுமையில் அவர்களை பரீட்சித்துப் பார்த்து, அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்திருப்பார்கள் என்ற நிலையில் இருப்பவர்கள் சுவனம் நுழைவிக்கப்படுவர். அவ்வாறே, பாவங்கள் செய்திருப்பார்கள் எனும் நிலையில் உள்ளவர்கள் நரகில் நுழைவிக்கப்படுவர்.

## › இஸ்லாத்தை தழுவியதன் பின்னர் பெயர் மாற்றம் செய்வது விரும்பத்தக்கதா?

ஒருவர் இஸ்லாத்தைத் தழுவிய பிறகு அவரது முன்னைய பெயரை எவ்வித மாற்றமும் செய்யாது அவ்வாறே வைத்துக் கொள்வது தான் இஸ்லாத்தின் அடிப்படையாகும்.
நபித்தோழர்களது காலத்தில் இவ்வாறு பெயர் மாற்றம் செய்வது என்ற சம்பிரதாயம் இருக்கவில்லை. அவர்களுள் பலர் இஸ்லாத்தை தழுவிய போது, அறபு மொழி அல்லாத அவர்களது பழைய பெயர்களையே தொடர்ந்தும் பயன்படுத்தினர்.
ஆனால், பெயர்கள் கொண்டிருக்கும் அர்த்தங்கள் மோசமானதாக இருந்த போது, அவைகள் மாற்றப்பட்டன.

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது பெயர் மாற்றம் செய்யப்படல் வேண்டும் :

**1** பெயர் இஸ்லாமிய நம்பிக்கைக்கு முரணான கருத்தை அல்லது அல்லாஹ் அல்லாதவொன்றுக்கு அடிமையென்ற அர்த்தத்தை கொண்டிருத்தல்.

அல்லாஹ் அல்லாதவொன்றுக்கு அல்லது ஒருவனுக்கு அடிமையென்ற அர்த்தத்தைக்கொடுக்கும் பெயர்கள். உதாரணமாக, "அப்துல் மஸீஹ், "அப்துன் நபி" அல்லது இது போன்ற கருத்தில் வைக்கப்படும் பெயர்களைக் குறிப்பிடலாம்.
இஸ்லாமிய நம்பிக்கைக்கு முரணான கருத்தைக் கொடுக்கும் பெயர்கள் உதாரணமாக, "அல்லாஹ்வின் குமாரன்" எனும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படும் "ஷனூதா" எனும் பெயரைக் குறிப்பிடலாம்.
அவர்கள் கூறும் இவ்வாறான நிலையிலிருந்து அல்லாஹ் மிகவும் தூய்மையானவனும் உயர்ந்தவனுமாவான்.
அல்லாஹ்வுக்கும் அவனது பண்புகளுக்கும் சொந்தமான தனித்துவமிக்க பெயர்களுள் ஒன்றை வைக்கவும் அனுமதியளிக்கப்படவில்லை.
அல்லாஹ்வுக்கு மட்டுமுரிய தனித்துவமானதொரு பண்பை ஒருவனுக்கு பெயராக வைத்தல் :
உதாரணமாக, "மலிகுல் முலூக்" போன்ற பெயர்களை வைப்பதனைக் குறிப்பிடலாம்.




**2** நல்லுள்ளம் கொண்ட மக்கள் வெறுக்கும் மோசமான கருத்தைக் கொடுக்கக்கூடிய பெயராக இருத்தல்.

உணவுகள்,குடிபானங்கள் உள்ளிட்ட வாழ்வின் அனைத்து விவகாரங்களிலும் மோசமான கெட்ட விடயங்களை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான்.
எனவே, இஸ்லாத்தை ஏற்றதன் பிறகு மோசமான கெட்ட அர்த்தத்தைக் கொடுக்கும் பெயரை வைப்பதுவும் பொருத்தமாக அமையாது.
இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் : (தீயவற்றைக் குறித்துக் காட்டும்) தீய பெயர் (கூறுவது) மிகக் கெட்டதாகி விட்டது. (அல் ஹுஜ்ராத் : 11)

**3** முஸ்லிம் அல்லாதாரிடையே உள்ள ஒரு சமய அடையாளத்தைக் குறிக்கும் பெயராகவோ அல்லது பிறசமயத்தைச் சார்ந்த மார்க்கப்பற்றுள்ளவர்களுக்கு மத்தியில் பிரபல்யம் பெற்ற அவர்களின் சமயச் சின்னமாகக் கருதப்படும் சொற்களைக் குறிக்கும் பெயராகவோ இருத்தல்.

உதாரணமாக, கிறிஸ்தவர்களிடையே காணப்படும் பின்வரும் பெயர்களைக் குறிப்பிடலாம் பித்ருஸ், ஜர்ஜுஸ்,

யூஹன்னா, பூல்ஸ் போன்றவைகளாகும். இவ்வாறான பெயர்களை அவசியம் மாற்றுதல் வேண்டும்.

ஏனெனில், இவ்வாறான பெயர்களை வைப்பதானது, இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாகும் செயலெனக் கருதப்படுகின்றது. மேலும், இப்பெயர்களைக் கொண்டவர் யார்? என்ற வீணான சந்தேகங்கள் ஏற்படுகின்றது.

எனவே, இவ்வாறான சந்தேகங்கள் கலையப்படவேண்டுமென்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

### பெயர் மாற்றம் செய்வது விரும்பத்தக்கது :

புதிய பெயர்கள் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான பெயர்களாக இருப்பின் உதாரணமாக, அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான், அல்லாஹ்வின் அடிமை என்பதைக் குறிக்கும் பெயர்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பழைய பெயர்களை இப்படியான பெயர்களாக மாற்றிக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

எனினும், ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெயர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

பெயருக்கான பொருள் இஸ்லாத்திற்கும் அதன் நம்பிக்கைக்கும் முரணானதா?

இல்லை | ஆம்

இவ்வாறான பொருளைக் கொண்டிருக்கும் பெயர்கள் அவசியம் மாற்றப்படல் வேண்டும்.

இந்தப் பெயர்கள் வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்களுக்கிடையில் பிரபல்யமான சமய முக்கியத்துவமுள்ள பெயர்களா?

இல்லை | ஆம்

சந்தேகத்தைக் கலையவும் இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாகும் நிலையிலிருந்து தூர விலகவும் இப்பெயர்களை மாற்றுதல் அவசியமாகும்.

நன்மக்களால் அங்கீகரிக்கப்படாத மோசமான கருத்தைக் கொடுக்கும் பெயரா?

இல்லை | ஆம்

இதனை இஸ்லாத்திற்குப் பொருத்தமான அழகான பொருளைக் கொடுக்கக்கூடிய பெயராக மாற்றுவது விரும்பத்தக்கதாகும்.

இது முன்னர் குறிப்பிட்ட எந்தவொரு அர்த்தங்களையும் கொண்டிராத பெயர-ாக இருப்பின், அதனை மாற்றுவது கட்டாயமில்லை.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தில் நுழைந்த அநேகர், மாற்றங்கள் எதுவும் செய்யாது அவர்களது அறபியல்லாத பழைய பெயர்களையே பயன்படுத்தி வந்தனர்.

எதுவிதக் காரணமுமின்றி பொதுவாகவே பெயரை மாற்றலாம். ஆனால், பெயரை "அப்துல்லாஹ்", "அப்துர் ரஹ்மான்" போன்ற அல்லாஹ்விற்கு விருப்பமான பெயர்களாக மாற்றம் செய்வது விரும்பத்தக்கதாகும்

## > ஸுன்னனுல் பித்ரா (இயற்கை வழிமுறைகள்)



> ஒரு முஸ்லிம் தனது புறத்தோற்றத்தை அழகிய முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை இஸ்லாம் விரும்புகின்றது.

### "ஸுன்னனுல் பித்ரா" எனும் சொற்றொடரின் பொருள் யாது ?

அல்லாஹ் மனிதனில் இயல்பாக வைத்திருக்கும் பழக்க வழக்கங்களையே இது குறிக்கின்றது. இவைகளை மேற்கொள்வதன் மூலம் ஒரு முஸ்லிம் முழுமையடைகின்றான். அவன் சிறந்த பண்புகளும் அழகிய தோற்றமும் கொண்டவனாக மாறிவிடுகின்றான்.

ஒரு முஸ்லிமின் அகமும் புறமும் ஒருங்கே நல்லதாக அமைவதற்கு, அவனை முழுமைப்படுத்தி அழகுபடுத்துகின்ற அனைத்துத்துறைகளிலும் இஸ்லாம் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"இயல்பான வழிமுறைகள் ஐந்து: விருத்தஷேனம் செய்தல், மறைவிடங்களிலுள்ள முடிகளை அகற்றுதல், மீசையைக் கத்தரித்தல், நகங்களை வெட்டுதல், கமக்கட்டின் முடிகளை பிடுங்குதல்". (அல் புகாரி : 5552, முஸ்லிம் : 257)

விருத்தஷேனம் செய்தல் :

ஆணுப்பின் நுனிப்பகுதியை மூடியுள்ள தோலை அகற்றுதல். இது பொதுவாகவே, குழந்தை பிறந்த ஆரம்ப நாட்களிலேயே செய்யப்படும்.

இஸ்லாத்தில் இது விரும்பத்தக்கதொரு செயலாகவும் ஆண்களோடு தொடர்பான இயல்பான பழக்கங்களுள் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இதனைச் செய்வதனால், பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளை அடைந்து கொள்ளலாம்.

ஆனால், இது இஸ்லாத்தில் நுழைவதற்கு நிபந்தனை அல்ல. மேலும், பயத்தின் காரணமாகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ ஒரு முஸ்லிம் விருத்தஷேனம் செய்யவில்லையாயின், அவர் பாவியாகக் கருதப்படமாட்டார்.

மறைவிடங்களில் வளருகின்ற முடிகளை சவரம் செய்தோ அல்லது வேறு வழிகளிலோ அகற்றுதல்.

மீசையைக் கத்தரித்தல் :

மீசையை வளர்ப்பது அனுமதிக்கப்பட்டதாகும். ஆனாலும், விரும்பத்தக்கது அல்ல.

எனினும், ஒரு முஸ்லிம் மீசையை வளர்க்க விரும்பினால், அதனை அளவுக்கதிகமாக வளரவிடாது கத்தரித்துக் கொள்ளல் வேண்டும்.

தாடியை வளர்த்தல் :

ஆணின் முகத்திலுள்ள இரு தாடைகள் மற்றும் நாடி போன்ற பகுதிகளில் வளரும் முடிகளையே தாடி எனப்படும்.

இதனை வளர்க்குமாறு இஸ்லாம் மனிதனை ஊக்கப்படுத்தியுள்ளது.

தாடியை வளர்ப்பது என்பதன் பொருள் : தாடியை சவரம் செய்யாது, நபியவர்களின் வழிமுறையைப் பின்பற்றிய நிலையில் அதனை முழுமையாக வளர்ப்பதனையே குறிக்கும்.

நகங்களை வெட்டுதல் :

ஒரு முஸ்லிம் தனது நகங்களை கட்டையாக வெட்டிக் கொள்வது அவசியமாகும். இவ்வாறு செய்வதன் மூலம் நகங்களில் அழுக்குகள் தேங்கிய நிலையில் இருப்பதைத் தவிர்க்கலாம்.

கமக்கட்டிலுள்ள முடிகளை அகற்றுதல் : கமக்கட்டுப் பகுதியிலிருந்து வெளிவரும் துர்நாற்றங்களைத் தடுப்பதற்காக, அந்தப் பகுதிகளிலுள்ள முடிகளை பிடுங்குவதன் மூலமோ அல்லது வேறு சாதனங்களைப் உபயோகிப்பதன் மூலமோ அகற்றுதல் வேண்டும்.



# முடிவுரை




### உமது அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் ?

இந்தப் புத்தகத்தை நீங்கள் முழுமையாக வாசித்து முடித்து விடுவதானது, உங்களது மார்க்கம் தொடர்பான அடிப்படை அம்சங்களைப் பற்றிப் படிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகும்.

இங்கு படித்த விடயங்களை உங்களது வாழ்வில் யதார்த்தபூர்வமாக நடைமுறைப்படுத்துவதில் பேரார்வத்துடன் செயற்படுவது உங்களது பொறுப்பாகும். ஏனெனில், நடைமுறை வாழ்வில் பிரயோகிக்கப்படாத அறிவானது, அவ்வறிவைச் சுமந்த அந்த மனிதருக்கு மறுமையில் பாதகமாகவே அமைந்துவிடும்.

அவ்வாறே, இந்தப் புத்தகத்தில் இடம்பெறாத உங்களது நாளாந்த வாழ்வில் உங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் படிப்பதற்கு முடியுமான பிரயத்தனங்களை மேற்கொள்வதும் உங்களது கடமையாகும்.

ஒரு முஸ்லிமுக்கு அவரது ஈமான் எவ்வளவு தூரம் பலமாக இருந்தபோதும் கூட, நேர்வழியின் பால் அவருக்குள்ள தேவை எப்போதுமே உண்டு.

எனவேதான், ஒரு முஸ்லிம் தனது தொழுகைகளின் போது நாளாந்தம் பல்வேறு தடவைகள் குர்ஆனிலே இடம்பெற்றுள்ள மிக உன்னதமான "பாதிஹா" சூராவிலுள்ள "நேரான பாதையின் பால் எமக்கு வழிகாட்டு" (அல்பாதிஹா:6) எனும் கருத்தைக் கொடுக்கும் வசனத்தை மீட்டி மீட்டி ஓதுகின்றான்.

### உங்களுக்கு முடியுமான அளவு அல்லாஹ்வை நீங்கள் பயந்துகொள்ளுங்கள் :

இந்த புத்தகத்திலோ அல்லது வேறு புத்தகங்களிலோ, நீங்கள் எதிர்கொள்கின்ற அனைத்து சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாது.

எனவே, மார்க்க அறிஞர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்துகொள்ளல் வேண்டும்.

இதற்கப்பால், அவர்களிடம் கேட்டறிந்து கொள்ள முடியாத நவீனகால நிகழ்வுகள் மற்றும் நாளாந்த செயற்பாடுகளோடு தொடர்பான விவகாரங்களில் பின்வரும் இறை வசனத்தில் குறிப்பிடப்படுவதற்கிணங்க உங்களால் முடியுமான அளவு அல்லாஹ்வை அஞ்சி நடப்பதற்கு முயற்சிக்க வேண்டியதும் உங்களின் மற்றுமொரு பொறுப்பாகும்.

"உங்களுக்கு முடியுமான அளவு நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்".
(அத் தகாபுன் : 16)

## உமது முஸ்லிம் சகோதரர்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணுவதற்கு உம்மால் முடியுமான முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும் :

உமது முஸ்லிம் சகோதரர்களுக்கு நெருக்கமாக இருந்துகொள்ளுங்கள். இஸ்லாமிய நிலையங்களுக்கு அடிக்கடி சென்றுபாருங்கள். முஸ்லிம்களின் சுக, துக்கங்களில் பங்கெடுத்து அவர்களுடன் இணைந்து வாழுங்கள்.

மனிதர்களுள் உன்னதமான ஈமானைப் பெற்று வாழ்ந்த நபி (ஸல்) அவர்களைக் கூட நல்லவர்களின் சகவாசத்தில் இருப்பதற்கு முயற்சிக்குமாறும் அதன் போது ஏற்படும் கஷ்ட துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறும் அல்லாஹ் அவரைப் பணிக்கின்றான்.

இதனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

(நபியே!) தங்கள் இரட்சகனைக் காலையிலும், மாலையிலும் அழைத்துக் கொண்டு அவனுடைய (மேன்மையான) முகத்தையும் நாடுகின்றார்களே அத்தகையோருடன் உம்மை நீரும் (ஆக்கிக்) கட்டுப்படுத்திக் கொள்வீராக!. (அல் கஹ்ப் : 28)

அவ்வாறே, முஸ்லிம் சமூகத்தினது சகவாசத்தை விட்டு தூர விலகி வாழ்வதனையும் நபி (ஸல்) அவர்கள் கண்டித்துள்ளார்கள்.

ஏனெனில், மந்தையை விட்டு விலகிச் சென்று விடுகின்ற ஆட்டுக்கு ஓநாயினால் ஏற்படும் ஆபத்து பாரியதாக அமையும் என்பது போல, சமூகத்தை விட்டு ஒதுங்கி வாழ்வது ஒருவரின் வழிகேட்டிற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒருவர் மற்றவரோடு இணைந்து கூட்டாக இருங்கள். ஏனெனில், மந்தையை விட்டுத் தனித்துச் செல்லும் ஆட்டையே ஓநாய் சாப்பிடுகின்றது" (அல் முஸ்தத்ரக் : 567)

எனவே, ஒரு முஸ்லிம் தனது முஸ்லிம் சகோதரர்களை நெருங்கி, கலந்து, ஒன்றித்து வாழ்வதானது, அவன் இந்த மார்க்கத்தில் நேர்வழியைப் பெற்று நிலையாக இருப்பதற்கான மிகச் சிறந்தவொரு வழிமுறையாகும்.

நேரான பாதையில் செல்வதற்கு உதவியும் ஆதரவும் அதிகளவில் தேவைப்படும் நவ முஸ்லிம் ஒருவனைப் பொறுத்த வரையில் இவ்வாறு நடந்துகொள்வது மிக அவசியமாகும்.

அல்லாஹ் உமக்கு வழிகாட்டுவானாக, அவனது மார்க்கத்தில் உம்மை நிலைத்திருக்கச் செய்வானாக, மேலும் அவனது அருளை உமக்கு சொரிந்தருள்வானாக...




دليل المسلم الجديد

The New Muslim **Guide**

**Guide** du converti musulman

ለአዲስ ሰለምቴዎች መመሪያ

**Ang Gabay** Para sa Bagong Muslim

**Vodič** novom muslimanu

新改宗者のためのガイドブック

**La guida del nuovo musulmano**

새내기 무슬림을 위한 지침서

**Handbuch für den neuen Muslim**

नव मुस्लिम मार्गदर्शिका

**Guia para o novo muçulmano**

新穆斯林指南

**Руководство** для принявшего ислам

**Guía para el Nuevo Musulmán**

U.K -Birmingham
B11 1AR
Tel : +441214399144

K.S.A-Riyadh
Tel : +966114486000
Fax: +966114482181

www.newmuslimguide.com
www.guide-muslim.com
info@modern-guide.com

எமது நம்பிக்கை



எமது சுத்தம்



எமது தொழுகை



எமது நோன்பு



எமது ஸகாத்



எமது ஹஜ்



எமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்



எமது உணவு



எமது ஆடை



எமது குடும்பம்



எமது பண்பாடுகள்



எமது புதிய வாழ்வு



9 660000 040201
ISBN. 978-603-01-6398-4

# நவ முஸ்லிம் வழிகாட்டி

இந்த வழிகாட்டல் நூலானது, (மனித இனத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த அருட்கொடையான) இந்த மார்க்கத்தைப் பற்றிக் கற்பதற்கான பூர்வாங்க வாய்ப்பினை உமக்கு வழங்குகின்றது.

இது உமது வாழ்வின் அநேகமான துறைகளுக்கு வழிகாட்டுகின்றது. அவசரமான உமது கேள்விகளுக்கான பதில்களையும் இதில் பெற்றுக் கொள்ளலாம்.

நூலாசிரியா

எம்மைச் சூழவுள்ள மக்களோடு யதார்த்தபூர்வமாக நாம் நடந்துகொள்வதற்கு எமக்கு உதவுவதோடு, அல் குர்ஆன், அஸ் ஸுன்னாவிலிருந்து பெறப்பட்ட நம்பகமான உறுதிமிக்க தகவல்களைத் தெளிவாகவும் இலகுவாகவும் முன்வைக்கின்றது.

இந்தப் புத்தகம் வாசிப்பதற்கும் படிப்பதற்கும் சுவையானதும் விரிவான தகவல்கள் அடங்கிய வழிகாட்டல் நூலாகவும் இருக்கின்றது. எமக்கொரு மார்க்கப் பிரச்சினை அல்லது ஒரு சர்ச்சை தொடர்பாக அல்லாஹ்வின் தீர்வு பற்றி அறிய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டால், மிக இலகுவாக இந்த நூலில் குறித்த பிரச்சினை தொடர்பான விரிவான தகவல்களை சென்று பார்ப்பதற்கான உஷாத்துணை நூலாகக் கூட இது காணப்படுகின்றது.

www.newmuslimguide.com

MODERN GUIDE
Tel: +441214399144
uk@modern-guide.com

NEW MUSLIM GUIDE